# இறையனார் அகப்பொருள்

மூலம்

(நக்கீரனார் உரையுடன்)

ராவ்பஹதூர்-ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்

எப்-ஆர்-எச்-எஸ் (லண்டன்). எம்-ஆர்-ஏ-எஸ் (லண்டன்).

பதிப்பித்தது.

சென்னை :

1916

[காபிரைட் ரிஜிஸ்தர் செய்தது.]

அந்தமு மாதியு மவ்வுனவ் வுங்கின் றமலன்றந்த
சேந்தமி ழென்னுந் திறங்காட்டி யீதைந் திணையகநூல்
வந்தன யாவும் வளரன்பின் மேனவென் வாய்மைக்கன்றே
முந்துமன் பின்முத லாய்மேன வென்று முடிந்ததுவே.

...யென்பது இந்நூல் இன்ன எல்லையுள் நடக்கு... இந்நூல் எவ்வெல்லையுள் நடக்குமோவெனின், ...த வேங்கடம், தெற்குக் குமரி, கிழக்குமேற்குங் கடல் ...லையாக நடக்கு மென்பது. என்னை?

"வடக்குந் தெற்குங் குடக்குங் குணக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றந்நான் கெல்லை யகவயிற் கிடந்த
* நூலதின் முறையே வாலிதின் விரிப்பின்"

...னவும்

"† வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத், தமிழ்கூறு நல்லுலகத்து"

எனவுங் காக்கைபாடினியாருந் தொல்காப்பியனாருஞ்சொல்... னாராகலின் என்பது.

நூற்பெயரென்பது நூலதுபெயர் என்றவாறு. நூல் பெயர் பெறுமிடத்துப் பல்விகற்பத்தாற் பெயர் பெறும்... என்னை? செய்தானாற் பெயர்பெறுதலுஞ், செய்வித்தானாற் பெயர்பெறுதலும், இடுகுறியாற் பெயர்பெறுதலும், அ... வினாற் பெயர்பெறுதலுஞ், சிறப்பினாற் பெயர்பெறுதலு மென. செய்தானாற் பெயர்பெற்றன, அகத்தியம், தொல் காப்பியமென இவை; செய்வித்தானாற் பெயர் பெற்றன, சாதவாகனம், இளந்திரையமென இவை; இடுகுறியா... பெயர்பெற்றன, நிகண்டு, ‡ நூல், கலைக்கோட்டுத்தண்டென்...

---

* 'நான்முதன் முறைமை' எனவும் பாடம்.

† தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் பாடிய பாயிரம்.

‡ 'நூல்' என்று பெயர் பெற்றதோர் நூல் உண்டென்பது ... யார்க்கு நல்லார் சிலப்பதிகாரவுரைப்பாயிரத்து "'ஆயிரநரம்பிற் ... புலவர்' என நூலுள்ளும்" என்றலானும், அரங்கே... காதை யுரைக்கண் "ஆடிட முக்கோல் ஆட்டுவார்க் கொருகோல் என்று நூலிற் கூறின முறைமை" என்றலானும் உண... ரற்பாற்று. மயிலைநாதரும் நன்னூல் உரைக்கண் 'இடுகுறியாற் பெயர்பெற்றன நிகண்டு, நூல், கலைக்கோண்டுத்தண்டு' என உரைத்... தார். (தலைக்கோட்டுத் தண்டு எனவும் பிரதி பேதம் உண்டு.)

நன்மை என்றவாறு; கோடன்மரபு என்பது அவ
முறைமை என்றவாறு. அவையெல்லாம் விரித்து
பெருகும்; முடிந்த நூலிற் கண்டுகொள்க.

இனிச் சிறப்புப்பாயிரம் எட்டுவகைப்படும்.
பாவையோவெனின், ஆக்கியோன் பெயரும் வழியும்
யும் நூற்பெயரும் யாப்பும் நுதலியபொருளுங் கேட்டோ
பயனுமென இவை. என்னை?

> "ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
> நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
> கேட்டோர் பயனோ டாயெண் பொருளும்
> வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே."

என்றாராகலின்.

காலமும் களனும் காரணமும் கூட்டிப் பதினொன்
றென்பாரும் உளர். என்னை?

> "காலங் களனே காரண மென்றிம்
> மூவகை யேற்றி மொழிநரு முளரே."

என்பவாகலின்.

இனி, ஆக்கியோன் பெயரென்பது நூல்செய்த ஆசிரி
யன் பெயர் என்றவாறு. இந்நூல்செய்தார் யாரோ
வெனின், மால்வரைபுரையு மாடக்கூட லாலவாயிற் பால்
புரை பசுங்கதிர்க் குழவித்திங்களைக் குறுங்கண்ணியாக
உடைய அழலவிர்சோதி அருமறைக் கடவுளென்பது.

வழியென்பது இந்நூல் இன்னதன்வழித்து என்பது.
து *'வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவ'னாற்
செய்யப்பட்டமையால் வழிநூலென்று சொல்லப்படாது,
முதனூலெனப்படுமென்பது.

---

* 'வினையினீங்கி விளங்கிய அறிவின்—முனைவன் கண்டது
முதனூலாகும்' என்பது தொல்-பொருள்-மரபியல்-94.

இவை ; அளவினாற் பெயர்பெற்றது பன்னிருப[illegible]ரும், தோல்
பது; சிறப்பினாற் பெயர்பெற்றது களவிய[illegible]மோசியும், [illegible]ராயன்
என்னை? களவு கற்பு என்னுங் கைகோளிரண்டனுள் [illegible]க்
வினைச் சிறப்புடைத்தென்று வேண்டும் இவ்வாசிரியன்.
என்னை?

"முற்படப் புணராத சொல்லின் மையிற்
கற்பெனப் படுவது களவின் வழித்தே." (இறை-கசு.)

என்று வேண்டுதலின். கற்புக் களவுபோல ஒருதலையான அன்பிற்றன்று.

இனி யாப்பென்பது நூல்யாப்பு. நூல் யாக்கு மிடத்து நான்கு வகையால் யாக்கப்படும்; தொகுத்தும் விரித்துந் தொகைவிரியாகவும் மொழிபெயர்த்துமென. என்னை?

"தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்த்
ததர்ப்பட யாத்தலோ * டனைமர பினவே"
(தொல் - பொ - மர - கஎ.)

என்றாராகலின்.

அவற்றுள் இது தொகுத்தியாக்கப்பட்டது; என்னை? உலகத்து நடக்கும் அகப்பொருட்செய்யுளிலக்கணமெல்லாம் இவ்வறுபது சூத்திரத்துள்ளே தொகுத்தானாதலின் என்பது.

இனி நுதலியபொருளென்பது நூற் பொருளைச் சொல்லுதலென்பது. இந்நூல் என்னுதலிற்றோவெனின் தமிழ்நுதலிய தென்பது.

கேட்போர் என்பது இன்னார் கேட்டார் என்பது. இந்நூல் †கேட்டார் யாரோவெனின், குற்றமுடைய நூலா

---

* 'அனைவகைப் படுமே' எனவும் பாடம்.

† 'யார் கேட்டாரோவெனின்' எனவும் பாடம்.

முறைமை
பெருகும் குற்றமின்மை ஆராயவேண்டுவது? *இது முனை
செய்யப்பட்ட நூலாகலாற் ‡குற்றமின்றாயினமை
கேட்டாரையின்றென்பது. இன்றெனினும், உரை
ந்துவாராநின்றமை ||நோக்கக் கேட்டாரையுமுடைத்
தென்பது. கேட்டார் யாரோவெனின், மதுரை உப்பூரிகுடி
கிழார் மகனுவான் §உருத்திரசன்மன் என்பது. அவன்
கேட்டற்குக் காரணஞ் சொல்லுதும்.

தலைச்சங்கம் இடைச்சங்கங் கடைச்சங்கமென மூவ
கைப்பட்ட சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள்
தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாருந், திரிபுரமெரித்த விரி
சடைக்கடவுளுங், குன்றெறிந்த முருகவேளும், முரஞ்சியூர்
முடிநாகராயரும், நிதியின்கிழவனு மென இத்தொடக்கத்
தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவ
ருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்
மர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பட்டன எத்துணை
யோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியா
விரையுமென இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து
நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தாரென்ப.
அவர்களைச் சங்கமிரீஇயினார் காய்சினவழுதி முதலாகக்
கடுங்கோனீறாக எண்பத்தொன்பதின்மரென்ப. அவருட் கவி
யரங்கேறினார் எழுவர் பாண்டியரென்ப. அவர் சங்கமிருந்து
தமிழாராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரையென்ப.
அவர்க்கு நூல் அகத்தியம்.

---

* 'முனைவன்றன்னால்' எனவும் பாடம்.

† 'சொல்லப்பட்ட' எனவும் பாடம்.

‡ 'குணமின்மை யின்மையின்' எனவும் பாடம்.

|| 'நோக்கி' எனவும் பாடம்.

§ இவரே அகநானூறு தொகுத்தவராவர்.

இனி இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழியும், மோசியும், வெள்ளூர்க்காப்பியனும், சிறு பாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக்கோனும், கீரந்தையுமெனஇத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்தெழுநூற்றுவர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பட்டன கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலையகவலுமென இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமும் மாபுராணமும் இசைநுணுக்கமும் பூதபுராணமுமென இவை யென்ப. அவர் மூவாயிரத்தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தாரென்ப. அவரைச் சங்கமிரீஇயினார் வெண்டேர்ச்செழியன் முதலாக முடத்திருமாறனீறாக ஐம்பத்தொன்பதின்மரென்ப. அவருட் கவியரங்கேறினார் ஐவர் பாண்டியரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப. அக்காலத்துப்போலும்* பாண்டியனாட்டைக் கடல் கொண்டது.

இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியரும், †சேந்தம்பூதனாரும் அறிவுடையரனாரும், ‡பெருங்குன்றூர்க்கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல்லந்துவனாரும், மருதனிளநாகனாரும், கணக்காயனார்மகனார் நக்கீரனாருமென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகைநானூறும், நற்றிணை நானூறும் புறநானூறும், ஐங்குறு நூறும், பதிற்றுப்பத்

* 'அக்காலம்போலும்' எனவும் பாடம்.

† 'சேந்தன் பூதனாரும்' எனவும் பாடம்.

‡ 'பெருங்குடிகிழார்' எனவும் பாடம்.

தும், நூற்றைம்பதுகலியும், எழுபதுபரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையு மென்று இத்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமு மென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது *ஆயிரத்தெண்ணூற்றைம்பதிற்றியாண்டு என்ப. அவர்களைச் சங்கமிரீஇயினார் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த †முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி யீறாக நாற்பத்தொன்பதின்மரென்ப. அவருட் கவியரங் கேறினார் மூவர் பாண்டியரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரையென்ப.

அக்காலத்துப் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லப், பசிகடுகுதலும், அரசன் சிட்டரை யெல்லாங்கூவி "வம்மின், யான் உங்களைப் புறந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர்போய் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயினஞான்று என்னையுள்ளி வம்மின்" என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயினபின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டுகழிந்தது. கழிந்தபின்னர், நாடுமலிய மழைபெய்தது. பெய்தபின்றை அரசன் இனி நாடு நாடாயிற்றாகலின் நூல்வல்லாரைக் கொணர்க வென்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேமென்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, "என்னை? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம்

---

* ஆயிரத்துத் தொள்ளாயிரத்தைம்பதென்பாரும் உளர்.

† கடைச்சங்கமிரீஇய முதற்பாண்டியன் வங்கியசேகரனென்பது திருவிளையாடற் புராணமுடையார் கூற்று.

ஐபேறமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்" எனச்சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயில் அழனிறக்கடவுள் சிந்திப்பான் : " என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடையதாகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்" என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப்பிதழகத்தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

இட்ட பிற்றைஞான்று, தேவர்குலம் வழிபடுவான் தேவர் *கோட்டத்தை எங்குந் துடைத்து, நீர் தெளித்துப், பூவிட்டுப் பீடத்தின்கீழ்ப் பண்டென்றும் அலகிடாதான் அன்று தெய்வத் தவக்குறிப்பினான் அலகிடுவனென்று உள்ளங்குளிர அலகிட்டான். இட்டாற்கு அவ்வலகினோடும் இதழ்போந்தன. போதரக் கொண்டுபோந்து நோக்கினாற்கு வாய்ப்புடைத்தாயிற்றோர் பொருளதிகாரமாய்க்காட்டிற்று. காட்டப், பார்ப்பான் சிந்திப்பான் : " அரசன் பொருளதிகாரம் இன்மையிற் கவல்கின்றானென்பது பட்டுச் செல்லா நின்றதுணர்ந்து நம்பெருமான் அருளிச் செய்தானாகும்" என்று, தன் அகம்புகாதே கோயிற் றலைக்கடைச் சென்று நின்று கடைக்காப்பார்க்குணர்த்தக் கடைக்காப்பார் அரசர்க்குணர்த்த, அரசன் புகுதருகவென்று பார்ப்பானைக் கூவச் சென்றுபுக்குக் காட்டக் கொண்டு நோக்கி, "இது பொருளதிகாரம்! நம்பெருமான் நமது இடுக்கண்கண்டு அருளிச்செய்தானாகற்பாலது" என்று, அத்திசை நோக்கித் தொழுதுகொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவித்து, "நம்பெருமான் நமது இடுக்கண்கண்டு அருளிச்செய்த பொருளதிகாரம்! இதனைக் கொண்டுபோய்ப் பொருள்காண்மின்" என அவர்கள் அதனைக் கொண்டுபோந்து கன்மாப்

* 'குலத்தை' எனவும் பாடம்.

பலகை ஏறியிருந்தாராய்வுழி, எல்லாருந் தாந்தாம் உரைத்த உரையே நன்றென்று சிலநாளெல்லாஞ் சென்றன. செல்ல நாம் இங்ஙனம் எத்துணையுரைப்பினும் ஒருதலைப்படாது; நாம் அரசனுழைச்சென்று நமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டுமென்று கொண்டுபோந்து, அவனாற் பொருளெனப் பட்டது பொருளாய் அன்றெனப்பட்டது அன்றா யொழியக் காண்டுமெனா, எல்லாரும் ஒருப்பட்டு அரசனுழைச்சென்றார். செல்ல அரசனும் எதிர் எழுந்து சென்று, "என்னை? நூற்குப் பொருள் கண்டீரோ?" என, "அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்" எனப், "போமின், நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று, நுமக்கு நேராவார் ஒருவர் இம்மையினின்றே" என்று அரசன் சொல்லப் போந்து பின்னையும் கன்மாப்பலகை ஏறியிருந்து "அரசனும் இது சொல்லினன், யாங் காரணிகனைப் பெறுமாறு என்னை கொலென்று சிந்தித்திருப்புழிச், சூத்திரஞ்செய்தான் ஆலவாயி லவிர்சடைக்கடவுளன்றே! அவனையே காரணிகனையுந் தரல்வேண்டுமென்று சென்று வரங்கிடத்தும்" என்று சென்று வரங்கிடப்ப, இடையாமத்து, "இவ்வூர் உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசன்மன் என்பான், பைங்கண்ணான் புன்மயிரன் ஐயாட்டைப் பிராயத்தான் ஒரு மூங்கைப்பிள்ளை உளன்; அவனை அன்னனென் றிகழாது கொண்டுபோந்து ஆசனமேலிரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தாற் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரைகேட்டவிடத்து; மெய்யல்லா உரைகேட்டவிடத்து வாளா இருக்கும்; அவன் குமாரதெய்வம்; அங்கோர் சாபத்தினாற் றோன்றினான்" என மும்முறையிசைத்தகுரல் எல்லார்க்கும் உடன்பாடாயிற்று;

எழுந்திருந்து தேவர் குலத்தை வலங்கொண்டுபோந்து, உப்பூரிகுடிகிழாருழைச் சங்கமெல்லாஞ் சென்று, இவ் வார்த்தையெல்லாஞ் சொல்லி ஐயனாவான் உருத்திரசன்மனைத் தரல்வேண்டுமென்று வேண்டிக் கொடுபோந்து, வெளியதுடீஇ, வெண்பூச்சூட்டி, வெண்சாந் தணிந்து, கன்மாப்பலகைபேற்றி இரீஇக் கீழிருந்து சூத்திரப்பொரு ளுரைப்ப, எல்லாரும் முறையே உரைப்பக்கேட்டு வாளா இருந்து, மதுரைமருதனிளநாகனார் உரைத்தவிடத்து ஓரோவழிக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் நிறுத்திப், பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்த விடத்துப் பதந்தொறுங் கண்ணீர் வார்ந்து * மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து மெய்யுரை பெற்றாம் இந்நூற்கென்றார்.

அதனால், உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசன்ம னாவான் செய்தது இந்நூற்குரையென்பாருமுளர்; அவர் செப்பிலர், மெய்யுரை கேட்டாரென்க. மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்டநூற்கு நக்கீரனரால் உரை கண்டு, குமாரசுவாமியாற் கேட்கப் பட்டதென்க. இனி உரை நடந்து வந்தவாறு சொல்லுதும்.

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம்மகனார் கீரங்கொற்றனார்க்குரைத்தார்; அவர் தேனூர்கிழார்க்குரைத் தார்; அவர் படியங்கொற்றனார்க்குரைத்தார்; அவர் செல் வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்குரைத்தார்; அவர் மணலூ ராசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்க்குரைத்தார்; அவர் செல்லூராசிரியர் ஆண்டைப்பெருங் குமாரனார்க் குரைத்தார்; அவர் திருக்குன்றத்தாசிரியர்க் குரைத்தார்;

* 'கண்ணீர் வீழ்த்தி' என்பதும் பாடம்.

அவர் மாதவளனார்* இளநாகனார்க்குரைத்தார்; அவர் முசிறி யாசிரியர் நீலகண்டனார்க் குரைத்தார். இங்ஙனம் வருகின் றது உரை.

இனிப் பயனென்பது இதுகற்க இன்னது பயக்கும் என்பது. இதுகற்க இன்னது பயக்குமென்பதறியேன், யான் நூற்பொருள் அறிவலென்னுமே யெனிற், சில்லெழுத் தினான் இயன்ற பயனறியாதாய், பல்லெழுத்தினான் இயன்ற நூற்பொருள் எங்ஙனம் அறிதியோ பேதாய் எனப்படுமாக லின், இன்னது பயக்குமென்பது அறியல் வேண்டும். என் பயக்குமோ இதுகற்கவெனின், வீடுபேறு பயக்குமென்பது. என்னை? இது களவியலன்றே? இதுகற்க வீடுபேறு பயக்கு மாறென்னை? களவு கொலை காமம் இணைவிழைச்சு என்பன வன்றே சமயத்தாரானும் உலகத்தாரானுங் கடியப்பட்டன? அவற்றுள் ஒன்றன்றாலோ இது? எனின்; அற்றன்று, களவெனுஞ் சொற்கேட்டுக் களவுதீதென்பதூஉங் காமமெனுஞ் சொற்கேட்டுக் காமந்தீதென்பதூஉமன்று; மற் றவை நல்லவாமாறுமுண்டு: என்னை? ஒருபெண்டாட்டி தம ரொடுகலாய்த்து நஞ்சுண்டுசாவலென்னும் உள்ளத்தளாய் நஞ்சுகூட்டி வைத்து, விலக்குவாரில்லாதபோழ் துண்ப லென்று நின்றவிடத்து, அருளுடையானொருவன் அதனைக் கண்டு இவளிதனையுண்டு சாவாமற் கொண்டுபோ யுகுப் பலென்று அவளைக்காணாமே கொண்டுபோ யுகுத்திட்டான்; அவளுஞ் சனநீக்கத்துக்கண் நஞ்சுண்டு சாவான்சென்று அதுகாணளாய்ச் சாக்காடுநீங்கினாள். அவன் அக்களவினான் அவளை உய்யக்கொண்டமையான் நல்லுழிச்† செல்லு மென்பது. மற்றும் இதுபோல்வன களவாகா, நன்மை பயக்கு மென்பது.

---

* 'மாதளவனார்' என்பதும் பாடம்.

† 'நல்லூழின்' என்பதும் பாடம்.

இனிக் காமம் நன்றுமாறுண்டு. சுவர்க்கத்தின்கட் சென்று போகந்துய்ப்பலென்றும் உத்தரகுருவின்கட் சென்று போகந்துய்ப்பலென்றும் நன்ஞானங்கற்று வீடு பெறுவலென்றுந் தெய்வத்தை வழிபடுவலென்றும் எழுந்த காமங் கண்டாயன்றே? மேன்மக்களானும் புகழப்பட்டு மறுமைக்கும் உறுதிபயக்குமாதலின் இக்காமம் பெரிதும் உறுதி யுடைத்தென்பது. உறுதி உடைத்தாமாறு: அறுவகைப்பட்ட பாசாண்டிகரும் இணைவிழைச்சு தீதென்ப. அஃது உண்டாமிடத்துச் சுற்றத்தொடர்ச்சி உண்டாம்; உண்டாகவே, கொலையே களவே வெகுளியே செருக்கே மானமே என்றித்தொடக்கத்துக் குற்றம்மிகுமென்பது. அது கேட்கவே, தலையாயினார் அதன்கணின்று நீங்குவர். இனி இடையாயினார் பெண் என்பது எற்புச்சட்டகம், மூடைக்குரம்பை, புழுப்பிண்டம், 'பைம்மறியாநோக்கப் பருந்தார்க்குந் தகைமைத்து'; ஐயும் பித்தும் வளியுங் குடருங் கொழுவும் புளியும் நரம்பும் மூத்திரபுரீடங்களும் என்ற இவற்றதியைபு; பொருளன்று; பொருளாயிற், பூவே சாந்தே பாகே எண்ணெயே அணிகலனே என்றிவற்றாற் புனையவேண்டாவன்றே தான் இயல்பாக நன்றாயின்? என்று, அதன் அசுபத்தன்மை உரைப்பக்கேட்டுநீங்குவர். கடையாயினார் எத்திறத்தானு நீங்கார்; என்னை? பல்பிறப்பிடை ஆணும் பெண்ணுமாய்ப் பயின்று போகந்துய்த்து வருகின்றமையின் அவர்க்கு இது காட்டப்பட்டது. என்னை? பேதையைக் காதல்காட்டிக் கைவிடுக்க என்பதனால் அவன் தாழப்பட்ட இணைவிழைச்சினுள்ளே மிக்கதொன்று காட்டப்பட்டது. என்னான்றும் மூப்புப் பிணி சாக்காடில்லது நிச்சநிரப்பிடும்பை யில்லது; இவனும் பதினாறாட்டைப் பிராயத்தானாய் இவளும் பன்னீராட்டைப் பிராயத்தாளாய் ஒத்த

பண்பும் ஒத்த நலனும் ஒத்த அன்பும் ஒத்தசெல்வமும் ஒத்தகல்வியும் உடையராய்ப் பிறிதொன்றிற் ஊனமின்றிப் போகந்துய்ப்பாரென்று காட்டப்பட்டதென்பது. என் போலவோ வெனின், கடுத்தின்னாதானைக் கட்டிப் பூசிக் கடுத்தீற்றியவாறு போலவுங், கலங்கற்சின்னீர் தெருளாமையான் உண்பானை, அறிவுடையா னொருவன் பேய்த்தேரைக் காட்டி, உதுக்காணாய் நல்லதொருநீர் தோன்றுவ, அந்நீர் பருகாய், இச்சேற்றுநீர் பருகி என்செய்தி? என்று கொண்டுபோய் நல்லதொருநீர் தலைப்படுவித்து ஊட்டியதுபோலவுந், தான் ஒழுகாநின்றதோர் இணைவிழைச்சினுள்ளே மிக்கதோர் ஒழுக்கங் காட்டினான். காட்ட அதுபெறுமாறு என்னை கொல்லோ எனும்; எனவே மக்கட்பாட்டினானும் வலியானும் வனப்பானும் பொருளானும் பெறலாவதன்று, தவஞ் செய்தார்க்குப் பெறலாம் என்னை?

"வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்" (குறள்-தவம்-௫.)

என்பதாகலான் என்பது. அது கேட்டு, யானுந் தவஞ் செய்து இதனைப் பெறுவனென்று அதன்மாட்டு வேட்கையால் தவஞ்செய்யும்; செய்யாநின்றானைப் பாவீ இதன் *பரத்ததோ வீடுபேற்றின்பமென்று வீடுபேற்றின்பத்தை விரித்துரைக்கும். அதுதான் பிறப்புப் பிணி மூப்புச் சாக்காடு அவலக்கவலைக் கையாற்றினீங்கி மணியினது ஒளியும் †மலரினது நாற்றமுஞ் சந்தனத்துத் தட்பமும்போல உண்ணின்றெழுதருமொரு பேரின்ப ‡வெள்ளத்ததென்பது கேட்டு, அதனைவிட்டு வீடுபேற்றின்கண்ணே அவாவின்று தவமும்

* 'பாகத்ததோ' என்பதும்பாடம்.

† 'அணிமலர் நாற்றமும்' என்பதும்பாடம்.

‡ 'வெள்ளத்ததென, அதுகேட்டு' என்பதும் பாடம்.

ஞானமும் புரிந்து வீடுபெறவானுமென்பது. அவனை வஞ்சித்துக்கொண்டுசென்று நன்னெறிக்கண் நிறீஇயினமையிற் களவியலென்னுங் குறிபெற்றது.

இனிப் புகழ் பொருள் நட்பு அறனென்னும் நான்கினையும் பயக்கும் இது வல்லனுக; என்னை? கற்றவல்லன் என்பதனின் மிக்க புகழ் இல்லை, உலகத்தாரானுஞ் சமயத்தாரானும் ஒருங்கு புகழப்படுமாகலான் என்பது. இனிப் பொருளும் பயக்கும்; என்னை? பொருளுடையாரும் பொருள் கொடுத்துக் கற்பவாகலின் என்பது. இனி நட்பும் பயக்கும்; என்னை? கற்றுரைச்சார்ந்து ஒழுகவே நமக்கும் அறிவு பெருகுமென்று பலருஞ் சார்ந்து ஒழுகலின் என்பது. இனி அறனும் பயக்கும்; என்னை? ஞானத்தின் மிக்க கொடை இன்மையான் என்பது. இது பயன்.

இனிக் காலமென்பது கடைச்சங்கத்தார் காலத்துச் செய்யப்பட்டது. இனிக் களமென்பது உக்கிரப்பெருவழுதியார் அவைக்கள மென்பது. காரணமென்பது அக்காலத்துப் பாண்டியனுருஞ் சங்கத்தாரும் பொருளிலக்கணம்பெறுது இடர்ப்படுவாரைக்கண்டு ஆலவாயிற் பெருமானடிகளால் வெளிப்படுக்கப்பட்டது. பாயிரம் முற்றும்.

இனிப் பாயிரம் உரைத்தபின்றை நூலாயாறும் உரைக்கற்பாலது. அதுதான் நான்குவகையான் உரைக்கப்படும். அவை யாவையோவெனின், நூனுதலியதுரைத்தலும் நூலுள் அதிகாரநுதலியதுரைத்தலும் அதிகாரத்துள் ஓத்து நுதலியதுரைத்தலும் ஓத்தினுட் சூத்திரநுதலியதுரைத்தலுமென இவை. அவற்றுள், நூனுதலிய துரைக்குமிடத்து நூலாமாறும் நூலென்றசொற்குப் பொருளாமாறும் உரைத்துரைக்கற்பாற்று.

அவற்றுள் நூலாமாறு உரைக்குமிடத்து நூல்தான் மூன்றுவகைப்படும், முதனூலும் வழிநூலுஞ் சார்புநூலு மென; என்னை?

* "முதல்வழி சார்பென நூன்மூன் றாகும்"

என்றாராகலின். அவற்றுள் முதனூலாவது வரம்பிலறிவன் பயந்ததாகும்; என்னை?

* "வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்"
(தொல் - பொ - மர - கச.)

எனவும்,

* "முதல்வ னூற்குப் பிறன்கோட் கூறாது"

எனவும்,

* "தந்திரஞ் சூத்திரம் விருத்தி மூன்றற்கு
முந்துநூ லில்லது முதனூ லாகும்"

எனவுஞ் சொன்னாராகலின். இனி அந்நூலோடு ஒத்த † மரபிற்றாய் ஆசிரியமதவிகற்பம்படக் ‡ கிளப்பது வழிநூ லெனப்படும்; என்னை?

* "முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
யழியா மரபினது வழிநூ லாகும்"

என்றாராகலின். இவ்விரு நூலுள்ளும் § ஒரு வழி முடிந்த பொருளை ஒருபகார நோக்கி ஒருகோவைப்பட வைப்பது சார்புநூலாகும்; என்னை?

---

* இக்குறியிட்ட சூத்திரங்கள் யாப்பருங்கலக்காரிகையுரையில் வந்த சில குறிப்புகளைக்கொண்டு பாடலனார் என்னும் ஆசிரியரால் செய்யப்பட்டனவாயிருக்கலாமென்றும், அவற்றையே பிற்காலத்தில் நன்னூலாசிரியர் தம்முடையவாக எடுத்து ஆண்டு கொண்டனரென்றும் கருதற்கு இடமுண்டு.

† 'முடிவிற்றாய்' என்பதும் பாடம்.

‡ 'இடப்பது' என்பதும் பாடம்.

§ 'கொண்டுமுடிந்த' என்பதும் பாடம்.

"இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடை நூலாகும்"

என்றாராகலின்.

எதிர்நூல் என்பதும் ஒன்றுண்டு. அது யாதோ வெனின், முதனூலின் முடிந்தபொருளை ஒருவன் யாதானும் ஒரு காரணத்தாற் பிறழவைத்தால் அதனைக் கருவியால் திரிவுகாட்டி ஒருவாமை வைத்தற்கு ஒள்ளியான் ஒருபுலவனால் உரைக்கப்படுவது; என்னை?

"தன்கோ ணிறீஇப் பிறன்கோண் மறுப்ப
தெதிர்நூ லென்ப ரொருசா ரோரே"

என்றாராகலின்.

அல்லதூஉம்,

"நூலெனப் படுவது நுதலிய பொருளை
யாதிக் கண்ணே யறியச் சுட்டி
யோத்துமுறை நிறுத்துச் சூத்திர நிரைஇ
முதல்வழி சார்பென மூவகை மரபிற்
றொகைவகை † விரியின் வகையறத் தெரிந்து
ஞாபகஞ் செம்பொரு ளாயிரு வகையிற்
பாவமைந் தொழுகும் பண்பிற் றாகிப்
புணர்ச்சியி னமைந்து பொருளகத் தடக்கித்
தனக்குவரம் பாகித் தான்முடி வதுவே"

எனவுஞ் சொன்னாராகலின். அன்றியும், ‡ நூலெனப் படுவது நுதலிய பொருளை முதலிற்கூறி முதல் நடுஇறுதி

* இச்சூத்திரம், யாப்பருங்கலக்காரிகை யுரையில் வந்த சில குறிப்புகளைக்கொண்டு பாடலனார் என்னும் ஆசிரியராற் செய்யப் பட்டதா யிருக்கலாமென்று கருதற்கு இடமுண்டு.

† 'விரியும்' என்பதும் பாடம்.

‡ இவ்வுரைப்பகுதி முன் அச்சுப்பிரதியி லில்லை; வேறோர் ஏட்டுப்பிரதியிற் கண்டது.

2

மாறுகோள் இன்றித் தொகைவகை விரிபடப் பொருள் வைத்துப் பொழிப்பு அகலம் நுட்பம் நூலெச்சம் என்னும் உரையிற் பொருள்விளங்கு நுண்மைக்கு வரம்பாக நோக்குடையது; என்னை?

“ நூலெனப் படுவது நுவலுங் காலை
நுதலிய பொருளை முதலிற் கூறி
முதனடு விறுதி மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
புண்ணின் றமைந்த வுரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே”

என்றாராகலின்; இவ்வகை சொல்லப்பட்டது நூலென்ப.

இனி நூலென்ற சொற்கும் பொருளுரைக்கப்படும். நூல்போறலின் நூலென்ப; பாவைபோல்வாளைப் பாவை யென்றாற்போல. நூல்போறலென்பது : நுண்ணிய பலவாய பஞ்சி நுனிகளெல்லாம் கைவன்மகடூஉத் தனது *செய்ந் [illegible] ழுப்படுத்தலாம் உலகத்து நூனூற் றென்பது; அவ்வாறே †சுரந்து பரந்த சொற்பரவைகளா பொருள்களைத் [illegible] உணர்வுமாட்சியிற் பிண்டம் படல ஒத்துச் சூத்திரமென்னும் யாப்பு நடைபடக் கோத்தல் முலகத்து நூல்செய்தலாவது; அவ்வகை நூற்கப்படுதலின் நூலெனப்பட்டது. இனி ஒரு சாரார் நூல்போலச் செய்யுஞ்செய்தலின் நூலென்ப. இனித் தந்திர மென்னும் வடமொழிப் பொருளை நூலெனவழங்குதல் தமிழ் வழக் கெனக்கொள்க. இது நூலென்ற சொற்குப் பொருள்.

இனி நூனுதலியதூஉம் உரைக்கற்பாலது. அது பாயிரத்துள்ளே உரைத்தாம்; தமிழ்நுதலியதென்பது

* ‘செயற்கை நலந்தோன்ற’ என்பது முன் அச்சுப்பிரதியிற் கண்ட பாடம்.

† ‘சுகிர்ந்து’ என்பதும் பாடம்.

தமிழ்தான் நான்கு வகைப்படும், எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்புமென.

அவற்றுள் இவ்வதிகாரம் என்னுதலி எடுத்துக்கொள்ளப்பட்டதோவெனின், பொருளாராய்தலை நுதலி எடுத்துக் கொள்ளப்பட்டது. * அதிகாரம் நுதலியதூஉம் அதிகாரத்துப் பெயர் உரைப்பவே விளங்கும். இனி அதிகாரம் நுதலியதெல்லாம் அதிகாரத்துள் ஒத்து நுதலாவன்றே, பல ஒத்துக்கொண்டது ஓர் அதிகாரமாதலான்; இதனுள் இவ்வோத்து என்னுதலி எடுத்துக்கொள்ளப்பட்டதோ வெனின், ஒத்தினது பன்மையின்மையின் ஒத்தின் றென்பது.

இனிச் சூத்திரம் நுதலியது முரைக்கற்பாலது. சூத்திரம் உரைக்கின் அது நான்கு வகையான் உரைக்கப்படும். அஃதுரைக்குமாறு: கருத்துரைத்துக் கண்ணழித்துப் பொழிப்புத்திரட்டி அகலங்கூறலென.

இச்சூத்திரத்தின் கருத்தென்னையோ வெனின், இவ்வதிகாரத்து ளுரைக்கின்ற பொருள் இன்னதென்பதூஉம் இன்னதனோ டொக்கு மென்பதூஉம் உணர்த்துதனுதலிற்று. அன்னதாதல் இச்சூத்திரங் கண்ணழிப்ப விளங்கும். கண்ணழித்தல் என்பது பதப்பொருள் சொல்லுதல்.

இதன்பொருள் :—அன்பின் ஐந்திணைக் களவு எனப்படுவது—அன்பினுடைய ஐந்திணையுட் களவு எனப்பட்ட ஒழுக்கம்; அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள்—அந்தணர் என்பார் பார்ப்பார், அருமறை என்பது வேதம், மன்றல் என்பது மணம், எட்டு என்பது அவற்றது

* இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை; வேறோரேட்டுப்பிரதியிற் கண்டது.

தொகை; கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்—கந்தருவ வழக்கத்தோடு ஒக்கும் *ஒழுக்கினைக் களவென்று சொல்லுவர் கற்றுவல்லோர் என்றவாறு.

இனிப் பொழிப்புத்திரட்டல் என்பது, அன்பினுடைய ஐந்திணையிற் களவெனப்பட்ட ஒழுக்கம் பார்ப்பார் வேதத்துக்கண் மகட்கோடலாறென்னும் எட்டினுட் கந்தருவர் ஒழுகலாறொப்பது. அதனைக் களவென்று சொல்லுவர் கற்றுவல்லோர் என்றவாறு.

இனிச் சூத்திரத்துப் பொருளைத் தூய்மைசெய்தற்குக் கடாவிடை யுள்ளுறுத்து உரைக்கும் உரையெல்லாம் அகலவுரை யெனக்கொள்க. 'அன்பின் ஐந்திணை' என்றவிடத்து அன்பு அறிந்தேனுயினன்றே அன்பினுடைய ஐந்திணையும் அறிவதெனின், அது குடத்துள் விளக்குந் தடற்றுள் வாளும் போல் இதுகாண் அன்பென்று தந்து காட்டலாகாது. அன்புடையரான குணங்கண்டவிடத்து இவை உண்மையான் ஈங்கு அன்புண்டென்று அனுமித்துக்கொள்ளற்பாற்று. அன்புடையரான குணம் யாவையோவெனின், சாவிற்சாதல், நோவினோதல், ஒண்பொருள்கொடுத்தல், நன்கினிதுமொழிதல், புணர்வுநனிவேட்டல், பிரிவுநனியிரங்கல் என இவை. என்றார்க்கு, இவை திரிபுடைய: என்னை இவை திரிபுடையவாமாறெனின், சாவிற்சாதல் என்பது அன்பினானே நிகழ்வதன்று, பிணியுடையளாய் வாழ்க்கையை முனிந்துசெல்வாள் இது தலைக்கீடாகச் சாவலென்று சாவவும் பெறும்; இனிக், கண்டீரன்றே, குடுமிக்கூந்தலில் நறுநெய் பெய்து, கொண்டானிற் பின்னையுமிருந்து, சோறு தின்று வாழ்கின்றாளோ, ஓ! கொடியளோகாணென்று

* 'வழக்கினை' என்பதும் பாடம்.

வித்தல் பழிதூற்றப்பட்டிருந்து, *பின்னுமே ஒரு நாட் சாவன், அதனான் இன்றே சாவனெனச் சாவவும் பெறும்; அதுவன்றிப் †புகழ்வேண்டியும் கணவனொடு செத்தார் சுவர்க்கம் புகுவரென்னும் உரைகேட்டு அது வேட்கை யானுஞ் சாம்; அப்பரிசன்றி அன்பினானுஞ் சாம்; அஃது ஒருதலையாக நிகழ்வதன்றென்பது. இனி நோவினோத லென்பது ‡மெய்ந்நோ என்றறியலாகாது; அதுவுந் திரிபுடைத்து; அன்புள்வழியும் அன்பில்வழியுந் தோன்று மென்று மறுக்கப்படும். ஒண்பொருள் கொடுத்த லென்பது கணிகையர் கூட்டம் பொருளானும்; ஆதலின் அதுவும் அன்பன்று. நன்கினிது மொழித லென்பது, நன்கினிது சொல்லிப் பகைவருந் தங்கருமம் முடிப்பாராதலின் அதுவும் அன்பன்று. புணர்வு நனி வேட்டலென்பது அச்சங் காரணத்தானும் புணர்வு வேட் டோர்போலப் புணர்வராதலின் அதுவும் அன்பன்று. பிரிவு நனியிரங்கலென்பது நீரும் ஆடார் பூவுஞ் சூடார் சாந் தும் அணியாராய்ப் பிரிந்திருந்தார் போல் வாடியிருப் பர் அன்பிலாதாருமாகலின், அதுவுந் திரிபுடைத்து. இனித் திரிபின்றி இக்குணங்கள் நிகழ்ந்தவழி அன்புண் டெனக்கொள்க. அஃதெங்ஙனம் நிகழுமோவெனின், அவன் இறந்து பட்டவாறே தானும் இறந்துபட்டவழி அன்பி னானே ஆயிற்றெனக்கொள்க. அல்லனவும் இவ்வகையாற் றிரிபில்லன அன்பினானே ஆயிற்றென் றுணர்ப. அல்ல தூஉம், அன்பெனப்பட்டது தான் §வேண்டப்பட்ட பொரு

* 'பின்னுமொருநாட் சாவராதலின்' என்பதும் பாடம்.

† 'புகழ்வேண்டிச் சாவவும்பெறும்' என்பதும் பாடம்.

‡ 'இன்னநோ' என்பதும் பாடம்.

§ 'வேட்ட வேட்ட' என்பதும் பாடம்.

வின்கண் தோன்றும் உள்ளநிகழ்ச்சி. அதனைக் காட்டிக் காண்க என்னுனன்றே! தான் அறிந்தபொருளாகலின்; என்னை? மாணுக்கன் நீர்வேட்ட வேட்கையைக் காட்டுக என்னுன், தான் அறிந்தபொருளாகலின்; காட்டுக என்னுமே யெனின், வஞ்சித்தானும். அவனை ஆசிரியன் அறிவிக்க லுறுமேயெனிற் பேதையாயினுனும். அல்லதூஉம், உல கத்துப் பொருள்தான் இரண்டுவகையான் உணர்த்தப்படும், உண்மைமாத்திரை உணர்த்திப் பிழம்பு உணர்த்தப்படா தனவும், உண்மையும் பிழம்பும் உணர்த்தப்படுவனவுமென. அவற்றுள், உண்மையுணர்த்திப் பிழம்பு உணர்த்தப்படா தன காமமும் வெகுளியும் மயக்கமும் இன்பமுந் துன்பமும் முதலாகவுடையன; என்னை?

"ஒப்பு முருவும் வெறுப்பு மென்று
கற்பு மேரு மெழிலு மென்று
சாயலு நாணு மடனு மென்று
நோயும் வேட்கையு நுகர்வு மென்றுங்
காவயின் வரூஉங் கிளவி யெல்லா
நாட்டிய மரபி னெஞ்சுகொளி னல்லது
காட்ட லாகாப் பொருள வென்ப"

(தொல் - பொ - பொரு - ருஉ.)

என்றாராகலின். இனி உண்மையும் பிழம்பும் உணர்த் தப்படுவன 'மாடக்கூடல்' 'மாநிலத்' தொடக்கத்தன என்று கொள்க. அன்பென்பது உண்மைமாத்திரையல்லது பிழம்பு உணர்த்தப்படா தென்பது; என்றார்க்கு, அன்பென் பது தான்கருதப்பட்ட பொருளின்கண் தோன்றும் வேட்கையன்றே ஈண்டு நம்மால் அன்பென்று விகற்பிக்கப் படாநின்றது; அஃது யாதோவெனின், நாணுச் சுருங்கப் புணர்வு வேட்கை பெருக ஒருவனோடு ஒருத்தியிடை நிகழும் அன்பு விசேட இலக்கணமுடைத்தென்று கொள்க.

அஃதேயெனின், அன்பு அறிந்தேன். 'ஐந்திணை'யாவன யாவையோவெனின், குறிஞ்சி நெய்தல் பாலை முல்லை மருதமென இவை. ஆயின், ஐந்திணை என்றதல்லது அவற்றது பெயரும் முறையும் இலக்கணமும் அறியச் சொல்லிற்றிலரேயெனின், இது சுருக்கநூலாகலிற் சொல்லிற்றிலர்; அவை முடிந்தநூலிற் கொண்டுரைக்கப்படும். உரைக்குமிடத்து முதல் கரு உரிப்பொருளென மூன்றுவகையான் உரைக்கப்படும்; என்னை?

"முதல்கரு வுரிப்பொரு ளென்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே."
(தொல் - பொ - அகத் - ௩.)

என்றாராகலின்.

அவற்றுள் முதல் இரண்டுவகைப்படும், நிலமும் பொழுதுமென; என்னை?

"முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டி
னியல்பென மொழிப வியல்புணர்ந்தோரே."
(தொல் - பொ - அகத் - ச.)

என்றாராகலின்.

குறிஞ்சிக்கு நிலம் மலையும் மலைசார்ந்த இடமும்; பொழுது கூதிரும் யாமமும் முன்பனியும்; நெய்தற்கு நிலம் கடலுங் கடல்சார்ந்த இடமும்; பொழுது எற்பாடு; பாலைக்கு நிலமில்லை; என்னை?

"நடுவ ணைந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே."
(தொல் - பொ - அகத் - உ.)

என்றார் தொல்காப்பியனாராகலின். பொழுது நண்பகலும் வேனிலும், பின்பனியும் உரித்து. நிலமின்றிப் பொழுதினை

னேயுந் திணையாமோவெனின், குறிஞ்சியும் முல்லையும் அடுத்த நிலமே காலம்பற்றிப்பாலையாமென்பது. முல்லைக்கு நிலம் காடுங் காடுசார்ந்த இடமும்; பொழுது காரும் மாலையும். மருதத்திற்கு நிலம் பழனமும் பழனஞ் சார்ந்த இடமும்; பொழுது வைகறையாமம். அஃதென்னை பெறுமாறெனின்,

"மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய * பெருமண லுலகமு
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே."
(தொல் - பொ - அகத் - ரு.)

"காரு மாலையு முல்லை குறிஞ்சி
கூதிர் யாம மென்மனார் புலவர்."
(தொல் - பொ - அகத் - சு.)

"பனியெதிர் பருவமு முரித்தென மொழிப."
(தொல் - பொ - அகத் - எ.)

"வைகுறு விடியன் மருத மெற்பாடு
நெய்த லாதன் மெய்பெறத் தோன்றும்."
(தொல் - பொ - அகத் - அ.)

"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே."
(தொல் - பொ - அகத் - கூ.)

"பின்பனி தானு முரித்தென மொழிப."
(தொல் - பொ - அகத் - கO.)

* 'பெரும்புன லுலகமும்' என்றும் வேறுபாடமுண்டு.

மருதத்திற்கும் நெய்தற்கும் பெரும்பொழுது சொல் லிற்றின்மையின் அறுவகை யிருதுவும் உரியவெனக்கொள்க. இவை முதல்.

இனிக் கரு என்பன தெய்வமும் உணாவும் மாவும் மர மும் புள்ளும் பறையுஞ் செய்தியும் யாழின்பகுதி முதலாக வுடையன; என்னை?

"தெய்வ முணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
யவ்வகை பிறவுங் கருவென மொழிப."

(தொல் - பொ - அகத் - கஅ.)

என்றாராகலின். அம்முறையானே சொல்லுதும்.

குறிஞ்சிக்குத் தெய்வம் முருகவேள்; உணா ஐவன நெல்லுந் தினையும்; மா புலியும் பன்றியும் யானையும்; மரம் அகிலும் ஆரமுந் திமிசுந் தேக்கும் வேங்கையும்; புள் கிளியும் மயிலும்; பறை வெறியாட்டுப்பறையுந் தொண் டகப்பறையுங் குரவைப்பறையும்; செய்தி தேனழித்தலுங் கிழங்ககழ்தலுங் குன்றமாடுதலுந் தினைக்கிளிகடிதலும்; யாழ் குறிஞ்சியாழ். பிறவுமென்றதனால் தலைமகன்பெயர் சிலம்பன் வெற்பன் பொருப்பன்; தலைமகள்பெயர் கொடிச்சி குறத்தி; நீர் அருவிநீருஞ் சுனைநீரும்; ஊர் சிறுகுடியுங் குறிச்சியும்; பூ குறிஞ்சியுங் காந்தளும் வேங்கையுஞ் சுனைக் குவளையும்; மக்கள்பெயர் குறவர் இறவுளர் குன்றவர்.

நெய்தற்குத் தெய்வம் வருணன்; உணா மீன்விலையும் உப்புவிலையும்; மா சுறவும் முதலையும்; மரம் புன்னையும் ஞாழலுங் கண்டலும்; புள் அன்னமும் அன்றிலு மகன்றி லும்; பறை மீன்கோட்பறையும் நாவாய்ப்பறையும்; செய்தி மீன்விற்றலும் உப்புவிற்றலும் அவைபடுத்தலும்; யாழ் விளரியாழ். இனிப் பிறவுமென்றதனால் தலைமகன்பெயர்

துறைவன் கொண்கன் சேர்ப்பன்; தலைமகள்பெயர் நுளைச்சி பரத்தி; நீர் *மணற்கிணறும் உவர்க்கழியும்; பூ வெள்ளிதழ்க் கைதையும் நெய்தலும்; ஊர் கலமேறுபட்டினமுஞ் †சிறுகுடியும் பாக்கமும்; மக்கள்பெயர் பரதர் பரத்தியர் நுளையர் நுளைச்சியர்.

தொல்காப்பியனார் பாலைக்கு நிலம் வேண்டிற்றிலர்; வேண்டாமையின் தெய்வமும் வேண்டிற்றிலர். பிறர் பகவதியையும் ஆதித்தனையுந் தெய்வம் என்று வேண்டுவர்; உணா ஆறலைத்தனவும் சூறைகொண்டனவும்; மா வலியழிந்த யானையும் புலியுஞ் செந்நாயும்; மரம் இருப்பையும் ஓமையும்; புள் கழுகும் பருந்தும் புறவும்; பறை பூசற்பறையும் ஊரெறிபறையும் நிரைகோட்பறையும்; செய்தி நிரைகோடலுஞ் சாத்தெறிதலுஞ் சூறையாடலும்; பண் பஞ்சுரம். பிறவு மென்றதனால் தலைமகன்பெயர் மீளி விடலை காளை; தலைமகள்பெயர் எயிற்றி பேதை; பூ மராம்பூவுங் குராம்பூவும் பாதிரிப்பூவும்; நீர் வறுநீர்க்கூவலும் அறுநீர்ச்சுனையும்; மக்கள்பெயர் எயினர் எயிற்றியர் மறவர் மறத்தியர்; ஊர் கொல்குறும்பு.

முல்லைக்குத் தெய்வம் வாசுதேவன்; உணா வரகுஞ் சாமையும்; மா முயலுஞ் சிறுமானும்; மரம் கொன்றையுங் குருந்தும்; புள் கானங்கோழியும் மயிலுஞ் சிவலும்; பறை ஏறுகோட்பறையும் முரசும்; செய்தி வரகு களைகட்டலும் அவை யறுத்தலுங் கடாவிடுதலும் நிரைமேய்த்தலும் ஏறு கோடலும்; பண் முல்லை. பிறவுமென்றதனால் தலைமகன் பெயர் குறும்பொறைநாடன்; தலைமகள்பெயர் கிழத்தி

---

* 'மணற்கேணி' என்பதும் பாடம்.

† 'துறைசேர்குடி' என்பதும் பாடம்.

மனைவி ; இப்பெயர் மருதநிலத்துத் தலைமகட்கும் உரிய : பூ முல்லையுந்தோன்றியும் ; நீர் கான்யாறு ; ஊர் பாடியுஞ் சேரியும் ; மக்கள்பெயர் இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்.

மருதத்துக்குத் தேய்வம் இந்திரன்; உணா செந்நெல்லும் வெண்ணெல்லும்; மா எருமையும் நீர்நாயும்; மரம் வஞ்சியுங் காஞ்சியும் மருதும்; புள் நீர்க்கோழியுந் தாராவும்; பறை மணமுழவும் நெல்லரிகிணையும்; செய்தி நெல்லரிதலும் அவை கடாவிடுதலும் பயிர்க்குக் களைகட்டலும்; யாழ் மருதயாழ். பிறவுமென்றதனால் தலைமகன்பெயர் ஊரன் மகிணன்; தலைமகள்பெயர் கிழத்தி மனைவி; பூ தாமரைப்பூவுஞ் செங்கழுநீர்ப்பூவும் ; நீர் மனைக்கிணறும் பொய்கையும் யாறும் ; ஊர் பேரூர் எனப்படும்; மக்கள்பெயர் கடையர் கடைச்சியர் உழவர் உழத்தியர்.

இக்கூறப்பட்ட கரு மயங்கியும் வரப்பெறும் ; என்னை?

"உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே"

(தொல் - பொ - அகத் - கங.)

"எந்நில மருங்கிற் பூவும் புள்ளு
மந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்."

(தொல் - பொ - அகத் - கக.)

என்றாராகலின்.

இனி உரிப்பொருளாவது திணைக்கு உரியபொருள் என்றவாறு. அவை யாவையோவெனின், புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல், அவற்றினிமித்தம் என இவை ; என்னை ?

"புணர்தல் பிரித லிருத்த லிரங்க
லூட லிவற்றி னிமித்த மென்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே."
(தொல் - பொ - அகத் - கச)

என்றாராகலின்.

அவற்றுட் புணர்தலும் புணர்தனிமித்தமுங் குறிஞ்சி; பிரிதலும் பிரிதனிமித்தமும் பாலை; இருத்தலும் இருத்தனிமித்தமும் முல்லை; இரங்கலும் இரங்கனிமித்தமும் நெய்தல்; ஊடலும் ஊடனிமித்தமும் மருதம். புணர்தலை யெல்லோ குறிஞ்சியெனிற் புணர்தலையன்று; பிரிவச்சமும், வன்புறையுந், தலைமகனீங்கினவும், பாங்கற்குரைத்தனவும், பாங்கன் கழறினவுந், தலைமகன் எதிர்மறுத்தனவும், பாங்கன் எதிர்ந்தனவும், நீங்கினவும், தலைமகளைக் கண்டனவும், ஆற்றானாயினவும், தலைமகற்கு வந்துரைத்தனவும், தலைமகன் சென்றனவும், தலைமகன் தலைப்பெய்தனவும் இத்தொடக்கத்தனவெல்லாந் தலைமகட்குந் தோழிக்கும் இவ்வகையானே நோக்கி விகற்பிக்க இறப்பவும் பலவாம். அவையெல்லாம் புணர்தலும் புணர்தனிமித்தமுமாய் அடங்கும். ஏனையவற்றிற்கும் இவ்வாறே கொள்க.

இனி ஒழுக்கத்தினைத் திணையென்பாரும் நிலத்தினைத் திணையென்பாருமென இருபகுதியர் ஆசிரியர். அது பொருந்தாது; ஒழுக்கமே திணையெனப்படும். குறிஞ்சியாகியஒழுக்கம் நிகழ்ந்த நிலமுங் குறிஞ்சியெனப்பட்டது; என்னை? விளக்காகியசுடர் இருந்த விடனும் விளக்கெனப்பட்டதுபோல என்பது. இனி ஒருசாரார் ஒழுக்கத்தினையுந் திணையென்ப, நிலத்தினையுந் திணையென்ப, ஆகலானன்றே 'அன்பினைந் திணை'யென்றது, ஐந்திணையாடை ஐந்திணைமஞ்சிகை என்றதுபோல என்ப; அது பொருந்தாது. அஃதே கருதிய

தெனின், முன்னர்த் 'திணையே கைகோள்' (இறையனார்-நுசு.) என்னானன்றே, 'இணையே கைகோள்' என்னுமன்றே, இணையென்று கருதினாயினெனின்பது. அஃதேயெனின், 'ஐந்துதிணை'யென்னும், ஐந்துசாண் ஐந்துகணம் என்றது போலவெனின், அறியாது கடாவினாய்; ஐந்துதலையுடைய நாகத்தை ஐந்தலைநாகமுமென்ப ஐந்துதலைநாகமுமென்ப; இருமுடிபுமுடைத்து; என்னை? குற்றியலுகரப்புணரியலுள்,

> " முதனிலை யெண்ணின்முன் வல்லெழுத்து வரினு
> ஞநமவத் தோன்றினும் யவவந் தியையினு
> முதனிலை யியற்கை யென்மனார்புலவர். "
> (தொல் - எழுத் - குற் - எங.)

என்றாராகலின்.

அஃதேயெனின், அன்பினாய ஒழுக்கத்தை அன்பின் வேறென்று கொள்வன், தச்சனாய மாடந் தச்சனின் வேறாயதுபோல என்றார்க்கு, அதுவன்று; பொன்னினாய குடம் பொன்னின் வேறல்லதுபோலக் கொள்க என்பது. மூன்றாம் வேற்றுமை காரணகாரியத்தை வேறுணரவும் நிற்கும், வேறன்றியுணரவும் நிற்கும்; வேறன்றியுணர நிற்கும் பகுதிகொள்க. அஃதேயெனின் ஐந்திணை யென்பதன் முன்னர்க் 'களவு' என்னுஞ் சொல் எத்திறத்தால் வந்தது? ஒரு சொன்முன் ஒருசொல் வருங்காற் பயனிலை வகையானுந் தொகைநிலை வகையானும் எண்ணுநிலைவகையானுமென் மூன்றனுள் ஒன்று பற்றியன்றே வருவது? அவற்றுள், இஃது எவ்வகையான் வந்ததோவெனின், தொகைநிலைவகையான் வந்ததென்பது. தொகைதாம்பல; அவற்றுள் இஃது எத்தொகையான் வந்ததோவெனின், வேற்றுமைத்தொகையான் வந்ததென்பது. அவ்வேற்று

றுமைத்தொகைதாம் பல; அவற்றுள் இஃது எவ்வேற் றுமைத்தொகையோவெனின்,ஏழாம் வேற்றுமைத் தொகை யென்பது. ஏழாம் வேற்றுமையுருபுதாம் பல; அவற்றுள் யாது தொக்கதெனின், உள்ளென்பது தொக்கது. ஐந் திணையுட் களவென்பதாயின், ஐந்திணையுள்ளுங் களவு வேருகாதோ குடத்துள் விளக்குந் தடற்றுள் வாளும் அவ்விடத்தின் வேருயதுபோல வெனின், அதுவன்று, ஏழாம்வேற்றுமை இடத்தையும் இடத்து நிகழ்பொரு ளையும் வேறுணரவும் நிற்கும் வேறன்றியுணரவும் நிற்கும். அவற்றுள், வேறுணரநின்றவழிக் காட்டிக் கடாவினுய்; வேறன்றியுணர நின்றவழிக் காட்டியக்கால் அதுபோலக் கொள்க. அரங்கினுள் அகழ்ந்தான், மாடத்தினுள் அகழ்ந் தான் என்றதுபோல, ஐந்திணையுள்ளுங் களவுவேறன்றென் பது. அஃதேதுமெனின், 'அன்பினைந்திணைக் கள வந்தண ரரு மறை' யென அமையாதோ? 'எனப்படுவது' என்றது எற்றிற் கெனின், செய்யுளின்பத்தின்பொருட்டு வந்ததென்னும் ஒருவன்; அற்றன்று, அதனான் ஒருபொருளுரைப்பனென் னும் ஒருவன். அதனான் ஒருபொருளுரைப்பான் பக்கம் வலியுடைத்து. அஃதியாதோவெனின், களவென்றற்குச் சிறப்புடைத்தென்றவாறு. 'ஊரெனப்படுவதுறையூ'ரென்ற விடத்துப் பிறவும் ஊருண்மைசொல்லி அவற்றுளெல்லாம் உறையூர் சிறப்புடைமை சொல்லுப. இங்குப் பிறவுங் கள வுண்மைசொல்லி அக்களவுகட்கெல்லாம் இக்களவு சிறப் புடைமைசொல்லும், துறக்கம் வீடுபேறுகளை முடிக்குமாக லான் எனப்படுவதென்று சொல்லிச் சிறப்பிக்கப்பட்டது. அது பாயிரத்துள்ளும் உரைத்தாம். மற்று உலகத்துக் களா வாயினவெல்லாங் கைகுறைப்பவுங் கண்சூலவுங் கழுவேற்ற வும் பட்டுப், பழியும் பாவமுமாக்கி, நரகத்தொடக்கத் தீக்

கதிகளில் உய்க்கும். இது மேன்மக்களாற் புகழப்பட்டு ஞானவொழுக்கத்தோடொத்த இயல்பிற்றாகலானும் பழி பாவமின்மையானும் எனப்படுவதென்று விசேடிக்கப் பட்டது.

இனி 'அந்தணரருமறை மன்றலெட்டனுள்' என்பது: அந்தணரென்பார் பார்ப்பார்; அருமறையென்பது வேதம்; மன்றலென்பது மணம்; எட்டென்பது அவற்றது தொகை.கொடுத்துச் சொன்னவாறு. அவை யாவையோவெனின், பிரமம், பிரசாபத்தியம், ஆரிடந், தெய்வங், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் எனவிவை: என்னை?

"அறநிலை யொப்பே பொருள்கோ டெய்வம்
யாழோர் கூட்ட மரும்பொருள் வினையே
யிராக்கதம் பேய்நிலை யென்றிக் கூறிய
மறையோர் மன்ற லெட்டிவை யவற்றுட்
டுறையமை நல்லியாழ்த் துணைமையோ * ரியல்பிதன்
பொருண்மை யென்மனார் புலமை யோரே."

என்பதன் பொருளென் றுணர்வது. பிரமம் என்பது நாற்பத் தெட்டியாண்டு பிரமசரியங் காத்தாற்குப் பன்னீராட்டைப் பிராயத்தாளை அணிகலனணிந்து கொடுப்பது. கொடாவிடின், ஓரிருதுக்காட்சி ஒருவனைச் சாராது கழிந்தவிடத்து ஒரு பார்ப்பனக்கொலையோடு ஒக்குமென்பது; அதனை அறநிலையென்பது. பிரசாபத்தியம் என்பது மைத்துன கோத்திரத்தான் மகள்வேண்டிச் சென்றால் மறாது கொடுப்பது; அதனை ஒப்பென்பது. ஆரிடம் என்பது ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து † அவற்றிடை நீரிற்கொடுப்பது; அதனைப்

* 'புணர்ப்பிதன்' என்பதும் பாடம்.

† 'அவற்றோடு' என்பதும் பாடம்.

பொருள்கோளென்பது. தேய்வம் என்பது, வேள்வியாசிரியற்கு வேள்வித்தீமுன் வைத்துக் கொடுப்பது ; * அதனைத் தெய்வமென்று வழிபடப்பட்டது. காந்தர்வம் என்பது இருவர் ஒத்தார் தாமே கூடுங்கூட்டம்; அதனை யாழோர் கூட்டமென்ப. அசுரம் என்பது, கொல்லேறு கொண்டான் இவளையெய்தும், வில்லேற்றினான் இவளையெய்தும், திரிபின்றி எய்தான் இவளையெய்தும், மாலை சூட்டப்பட்டான் இவளையெய்தும் இன்னதொருபொருள் தந்தான் இவளை யெய்துமென இவ்வாறு சொல்லிக்கொடுப்பது : அஃது அரும்பொருள் வினைநிலையென்பது. இராக்கதம் என்பது அவள் தன்னினுந் தமரினும் பெறாது வலிந்து கொள்வது. பைசாசம் என்பது மூத்தாண்மாட்டுந் துயின்றாண்மாட்டுங் களித்தாண்மாட்டுஞ் சார்வது : அது பேய் நிலையெனப்படும். இவ்வெட்டுமணமும் மன்றல் எட்டென்று சொல்லப்பட்டன என வுணர்க.

இனிக் கந்தருவவழக்கம் என்பது, கந்தருவரென்பார் ஈண்டுச்செய்த நல்வினைப்பயத்தால் ஒருவர் கொடுப்பாரும் அடுப்பாருமின்றி இருவரும் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுப்புணர்வது. அது கந்தருவமணம். அதனை ஒப்பதனைக் களவென்று வேண்டும் இவ்வாசிரியன். அஃதேயெனின், கந்தருவவழக்கம் போல்வது என்னாது 'கந்தருவவழக்க' மென்றமையான் அதனைக் களவென்று கொள்ளாமோவெனின், கொள்ளாம். நூற்கிடக்கை அவ்வியல்பிற்றன்றாகலாற் போல்வது என்றே கொள்ளற்பாலது. போறல் என்பது சிறிதொத்துச் சிறிதொவ்வா தொழிவது ; என்னை ? குவளைப்பூப்போலுங்கண் என்றால் நீலமாத்திரையொக்கும்,

* 'அது தெய்வமென்று வழிபடும்' என்பது வேறொரு பிரதியிற்கண்ட பாடம்.

மற்றொருவ்வாப்புடை பெரிது; பவளம்போலும்வாய் என்றாற் செம்மைமாத்திரை யொக்கும், மற்றொருவ்வாப்புடை பெரிது. இங்கும் ஏகதேசத்துக் கொடுப்பாரும் அடுப்பாருமின்றிப் புணர்தலும், ஒத்த குலத்தினராகலும், ஒத்த அன்பினராகலுமென்னும் இத்துணையே ஒப்பிக்கப் பட்டது; மற்றப்புடையெல்லாம் ஒவ்வா. அஃதேயெனின், கந்தருவவழக்கம் போல்வதெனவேண்டாவோ சூத்திரத்துள்ளெனின்; வேண்டா. உவமந்தொகுத்தவாறு சொல்லுதும்! பசுப்போல்வானைப் பசு என்றலும் பாவை போல்வாளைப் பாவை என்றலும் என்பது. அஃதேயெனின், அவையெட்டும் அதனையொத்த இதுவுமென மணம் ஒன்பதாகற்பாலபிறவெனின், அதுவன்று; அவ்வெட்டும் *உலகினுள்ளன; இஃது அன்னதன்று, இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கமாகலின் இதனை உலகவழக்கினோடு இயையானென்பது. அஃதேயெனின், இதனை முதனூலென்று புகுந்தமையாற் கந்தருவ வழக்கமென்றே மொழியற்பாற்று, என்மனார் புலவரென்று சொல்லற்பாற்றன்று; அது வழிநூல் வாய்பாடாகலான் என்பது கடா. அதற்கு விடை: பிறநூல்களெல்லாம் ஆசிரியப் பகுதிப்படும், இதுவும் அவையேபோல ஆசிரியப் பகுதிப்படுங் கொல்லோவெனிற் படாது. கந்தருவ வழக்கம் போல்வது களவாதல் மூன்றுகாலத்துப் புலவர்க்கும் ஒப்ப முடிந்தமையான் அவ்வகை சொன்னானென்பது. அஃதேயெனின் தன்னோடொத்த புலவரில்லையன்றே! தான் தலைவனாகலான், எல்லாம் உணர்ந்தானாகலானெனின்; அஃதே கருத்து, அறிந்திலை; தன்னானே உரைக்கப்பட்டதெனினும், பிறவற்றையெல்லாந் திரியவுந் திரியாமையுங் கொண்

* 'உலகியல்' என்பதும் பாடம்.

டார், இதனைத் திரியாமையேகொண்டார் *எல்லாருமென் றற்கு அவ்வாறு உரைக்கப்பட்டது. தன்மதம் உணர்ந்தா ரையும் புலவரென்றான், அறிபொருளுக்கு ஏனோரும் புலவ ராகலின்.

இனி 'என்மனார்' என்பது, 'என்ப' என்னும் முற்றுச் சொற் 'குறைக்கும்வழிக் குறைத்தலும்' என்பதனாற் பகரங் குறைத்து, 'விரிக்கும்வழி விரித்தல்' என்பதனான் 'மன்' 'ஆர்' என்பன இரண்டிடைச்சொற் பெய்து விரித்து, 'என்மனார்' என்றாயிற்று. என்மனார் என்பது புலவர் என்னும் பெயர்கொண்டு முடிந்தது; முற்றுச்சொல் எச்சப் பெயர்கொண்டு முடியுமாகலினென்பது.

உ அதுவே, தானே யவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி யிருவயி னொத்தல்.

என்பதென்னுதலிற்றோவெனின், மேற் கந்தருவ வழக்கத் தோடொக்கும் ஒழுக்கங் களவென்று வேண்டிற்றல்லது இன்ன இலக்கணத்ததென்றிலாதார் அதனை உணர்த்துத னுதலிற்று. †இச்சூத்திரத்துட் கருதியபொருள் மேலதனோ டியையும்.

இதன் பொருள் அதுவே—பண்டறிசுட்டு, மேற் சொல்லப்பட்ட கந்தருவவழக்கம்போலுங் களவு; தானே அவளே-தானே அவள், அவளே தான்; என்பது என் சொல்லியவாறோவெனின், தான் அவள் என்னும் வேற் றுமையிலர், என்றவாறு.

இங்ஙனம் வாசகம் வேறுபடச் சொல்லப்பட்டாராயி னும் அன்பினானுங் குணத்தினானுங் கல்வியினானும் உருவி

---

* 'எல்லாருமென்றவ்வகையே' என்பதும் பாடம்.

† 'இச்சூத்திரங் கருதியதூஉம்' என்பதும் பாடம்.

ஞானுந் திருவினானுந் திரிவிலர் ஒருவரொருவரின்என்பதாம். அஃதென்போலவோ வெனின்: உருளரிசி கொத்தமுரி என்றாற்போலவெனின், அது பொருந்தாது; என்னை காரணமெனின், கந்தருவ வழக்கத்தோடு ஒக்குமெனவே வேற்றுமையின்மை முடிந்தது, அவர் வேற்றுமையிலராக லின்; இன்னுமொருகால் வாசகம் வேறுபடுத்து அப்பொருளை சொல்லப் புனருத்தமாம்; என்னை? ஒரு பொருளை வேறுபட்ட வாய்பாட்டாற் பல்காற் சொல்லுவது புனருத்த மாகலின்.

(இனி ஒருவன் சொல்வது: இவனும் பற்பன்னூரு யிரவர் கூர்வே லிளைஞரொடு திரிதரினன்றித் தமியனாதலி லன், பெரியனாதலால்; இவளும் பற்பன்னூருயிரவர் ஆய மகளிர் புடைசூழத் திரிதரினன்றித் தமியளாதலிலள், பெரியளாதலால்; இங்ஙனமில்லாதான் இவனும் இளைஞரி னீங்கித் தானேயாய், இவளும் ஆயத்தினீங்கித் தானே யாய், இங்ஙனம் *புணர்வரென்ப. இவனை இளைஞரினீக்கி யும் இவளை ஆயத்தினீக்கியும் பிரித்துக்கோடற்குத் தானே அவளே என்று சொல்லப்பட்டதென்னும்? இவ்வுரையும் பொருந்தாது; என்னை காரணமெனின், கந்தருவ வழக்கத் தோடு ஒக்குமெனவே, தமியராய்ப் புணர்தன் முடிந்தது; இன்னுமொருகால் அப்பொருளையே சொல்லப் புனருத்த மாமென்பது.) மற்றென்னை உரையெனின்; தானே அவளே என்பது, ஆண்பால்களுள் இவனோடு ஒத்தாரு மில்லை, மிக்காருமில்லை, குறைபட்டாரல்லது; எக்காலத் தும் எவ்விடத்தும் ஞானத்தானுங் †குணத்தானும் உரு

* 'புணர்வரோ அன்று இவனை யிளைஞருள் நீக்கியும்' என் பதும் பாடம்.

† 'ஒழுக்கத்தானும் ஆள்வினையானும் பொருளினானும்' என் பதும் பாடம்.

வினானுந் திருவினானும் பொருவிலன் தானே என்பது. இவளும் அன்னளெனவே, இருவரும் பொருவிறந்தாரென் பதனைப் பயக்கும். நின்ற ஏகாரம் ஐந்து ஏகாரத்துள்ளும் என்ன ஏகாரமோவெனின், ஆண்குழுவின் * இவனையே பிரித்து வாங்கினமையானும், பெண்குழுவின் இவளையே பிரித்து வாங்கினமையானும் பிரிநிலையேகாரமெனப்பட்டது. †பலவற்றுள் ஒன்று பிரிப்பது பிரிநிலை யேகாரமெனப்படுமாகலா னென்பது. அஃதேயெனின், கந்தருவ வழக்கத்தோடு ஒக்குமெனவே எத்திறத்தானுங் குறைபாடின்மை முடியாதோவெனின், முடியாது; கந்தருவர்க்கும் ஞானக்குறைபாடுந் தருமக்குறைபாடும் ஆள்வினைக் குறைபாடும் உண்டு. இச்சொல்லப்பட்டன ‡சிறிதேயென்றே ஒப்பித்து, அது பொருவிறப்புச் சூத்திரத்தாற் சொல்லவேண்டுமென்பது.

தமியர் காண—தம்முணர்வின ரன்றி எதிர்ப்பட, என்றவாறு.

அஃதேயெனின், இவர் தம்முணர்வினர் அல்லராகின்றது காணுமுன்னுபவோ, கண்டபின்னுபவோ, காட்சியோடுடனுபவோ; காணுமுன் தம்முணர்வினரல்லராபவெனிற், காட்சி காரணமன்றாயிற்றும் தம்முணர்வினர் அல்லராதற்கு; அல்லதூஉங், காரணமின்றியாகலான் எப்பொழுதுந் தம்முணர்வினர் அல்லராகல் வேண்டும். இனிக் கண்டபின் தம்முணர்வினரல்லாரெனிற், காட்சியது நீக்கத்

---

* 'இவனையே பெருமைக்கட்பிரித்து' என்பதும் 'இவளையே பெருமைக்கட் பிரித்து' என்பதும் பாடம்.

† இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை.

‡ 'சிறியதேயன்றே யொப்பது பொருவிறப்பிற் சூத்திரத்தால்' என்பதும் பாடம்.

துக்கண்ணுந் தம்முணர்வினரல்லராகல் வேண்டும்; உண்டபின் வந்தான் சாத்தன் என்றால் உண்டற்கருமக் கழிவின்கண் வந்ததுபோல வென்பது. அல்லதூஉங், கண்டபின் தம்முணர்வினர் அல்லராகவே கண்ட சமவாயத்துத் தம்முணர்வினராகல் வேண்டும். ஆகவே, கண்டும் தம்முணர்வினராய் நின்றார் பின்னை மயங்குதற்குக் காரணமென்னையோ என்பது.) (இனிக் காட்சியுந் தம்முணர்வினரல்லராகலும் உடனிகழுமேயெனிற், காட்சியென்னுங் காரணத்தால் தம்முணர்வினரல்லராதற்றன்மை நிகழற்பாற்றன்று. ஒருகாலத்து ஓரிடத்து ஒருங்கு தோற்றின பொருள் ஒன்றனையொன்று முடித்தன எனப்படாமை காண்டும், ஆவிற்கு இருகோடுபோல என்பது. அதனால், மூன்றல்லது நான்காவது காலம் இன்மையின், இவர் காட்சியானே தம்முணர்வினரல்லரென்பது முடிக்கல்வேண்டும்.) எங்ஙனம் முடிக்குமாறெனின், காணுமுன்னே தம்முணர்வினரல்லராகற் றன்மையுடையராதலினென்பது. என்னை? ஏனுதிமோதிரஞ் செறித்த திருவுடையானொருவன் ஏனுதிமோதிரஞ் செறிக்கும் அத்திரு அவன் செறிக்கின்றபொழுதே உண்டாயிற்றன்று; * முற்கொண் டமைந்துகிடந்தது. அரசு வீற்றிருந்த திருவுடையானொருவன் அரசு வீற்றிருக்கும் அத்திரு அவன் அரசு வீற்றிருக்கின்றபொழுதே உண்டாயிற்றன்று; முற்கொண்டமைந்துகிடந்தது. அது பின்னையொருகாலத்து ஓரிடத்து ஒருகாரணத்தான் எய்துவிக்கும். அதுபோலே, இன்னநாள் இன்னபக்குவத்து இன்னபொழுது இன்னவிடத்து இவள் காரணமாக இவன் தன்னுணர்வினனல்லனும் என்பதூஉம், இவன்காரணமாக இவள் தன்னுணர்வினளல்லளாம் என்பதூஉம் முன்னே

* இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியிலில்லை.

முடிந்து *கிடந்தன. அது பின்னுங் கொணர்ந்தெய்துவிக்கும்; என்னை? "ஒளிப்பினு மூழ்வினை யூட்டாது கழியாது" என்பதாகலான். [காட்சி துணைக்காரணம், அவ்வினை பயத்தற்கு; வித்து முளைத்தற்கு நிலனும் நீரும் இருதுவுந் துணைக்காரணமாயிற்றுப்போலவுஞ், சோறுதலியல்பிற்றாகிய அரிசி சோறுதற்கு அடுவானைத் தொடக்கமாகவுடைய காரணந் துணைக்காரணமாயிற்றுப் போலவுமென்பது. அஃதேயெனின், காட்சி துணைக்காரணம்பிற வெனின், காட்சியின் முற்கிளர்ந்ததோ பிற்கிளர்ந்ததோ உடன் கிளர்ந்ததோ? †உள்ளத்துத்தான் கிளர்கின்றதெனின், முன்னைக் கடா வந்து எய்துமால். என்னையோவெனின், ‡காட்சியோடுடனே கிளரும்; என்னை? இருட்டகத்து விளக்குக்கொண்டு புக்கால் விளக்கு வாராத முன்னரும் இருள் நீங்காது; விளக்கு வந்த பின்னரும் இருள் நீங்காது; விளக்குவருதலும் இருணீக்கமும் உடனே நிகழும். அதுபோலக், காட்சியும் ஞானவொழுக்கக் குணங்களது தன்மையழிவும் உடனே நிகழும். விளக்கினைக் காட்சியாகக்கொண்டு ஞானவொழுக்கங்களை இருளாகக்கொள்க.]

இனிக் 'காமப்புணர்ச்சி'யென்பது தலைமகனுந் தலைமகளுந் தமியராய் ஒருபொழிலகத்து எதிர்ப்பட்டுத் தம்முணர்வினரன்றி வேட்கைமிகலினாற் புணர்வது.

ஆயின் இவர், மேற் பொருவிறந்தார் தலைமகனுந் தலைமகளுமென்றமையான், அவனுங் கற்கந்தும் ‖எய்போத்துங்

* 'கிடந்தவாகக், கிடந்ததே' என்பதும் பாடம்.

† 'உள்ளதுதான்' என்பதும் பாடம்.

‡ 'காட்சியோ டடன்கிளருங் கிளருமிடத்து' என்பதும் பாடம்.

‖ 'எறிபோத்தும்' என்பதும் பாடம்.

கடுங்கண் யானையுந் தறுகட்பன்றியுங் கருவரையும் இருநில னும் பெரு விசும்புமனையார், ஆளிமொய்ம்பினர், அரிமான் றுப்பினர், பற்பன்னூறாயிரவர் கூர்வேலிளைஞர் தற்சூழச் செல்வனென்பது முடிந்தது. (அவளும் உடன்பிறந்து, உடன் வளர்ந்து, நீர் உடனாடிச், சீர் உடன்பெருகி, ஓல் உடனாட் டப், பால் உடனுண்டு, பல் உடனெழுந்து, சொல் உடன் கற்றுப், பழமையும் பயிற்றியும் பண்பும் நண்பும் விழுப்ப மும் ஒழுக்கமும் மாட்சியும் உடையார், பற்பன்னூறாயிரவர் கண்ணும் மனமும் கவரும் ஒண்ணுதன்மகளிர் தற்சூழத் தாரகைநடுவண் தண்மதிபோலச் செல்வாளென்பது முடிந் தது. முடியவே, தமியராய்ப் புணர்ந்தார் என்பதனொடு மாறுகொள்ளுமெனின், மாறுகொள்ளாது; என்னை? அவள் ஆயங்களும் பொழிலிடம் புகுதலும் விளையாட்டு விருப்பி னாற்பிரியும். என்னை பிரியுமாறெனின், *ஒன்றொருவரின் முன்னந் தழைவிழைதக்கன தொடுத்துமென்றுங், கண்ணி தண்ணறுநாற்றத்தன செய்துமென்றும், போது மேதக்கன கொய்துமென்றும், மயிலொடு †மாறாடுதுமென் றுங், குயிலொடு மாறு கூவுதுமென்றும், ‡அருவியாடி அஞ் சுனை குடைதுமென்றும், வாசமலர்க்கொடியின் ஊசலாடுது மென்றும் பரந்து, அப்பாலுள்ளார் இப்பாலுள்ளார் கொல் லோவென்றும், இப்பாலுள்ளார் அப்பாலுள்ளார் கொல் லோவென்றும் இவ்வகை நினைத்துப் பிரிபவென்பது.)

---

* 'ஒன்றொருவர் முன் - ஒருவரொருவர் முன்னாக வென்று கொள்ளின், "ஒன்றொருவரின்முன்னந் தழை விழை தக்கன கொய்தும்" என்றது போலும்' என்பது, புற-வெ-மாலை-பொதுவியற் படலம்-கக-ஆவது வெண்பா உரை.

† 'மாறிகலுதும்' என்பதும் பாடம்.

‡ 'அருவியாடுதும்' என்பதும் பாடம்.

இவ்வகை அவளைத் தமியளாக்கிப் பிரிபவோவெனின், எட்டியுஞ்சுட்டியுங் காட்டப்படுங் குலத்தளல்லளாகலானும் பான்மையும்அவ்வகைத்தாகலானும் பிறவாறுவினையார்பிரிப வென்பது. ஆயின், இவ்வகைப்பட்ட ஆயத்திடை மேனாட் பிரிந்து பயின்றறியாதாள் தமியளாய் நிற்குமோவெனின், நிற்கும்; தான் பயின்ற இடம் தன் ஆயத்தினோடு ஒக்கு மாகலானென்பது. யாங்ஙனம் நிற்குமோவெனின், சந்தன முஞ் சண்பகமுந் தேமாவுந் தீம்பலவும் ஆசினியும் அசோ கமுங் கோங்கும் வேங்கையுங் குரவமும் விரிந்து, நாகமுந் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவ லொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பாவைஞாழலும் பைங் கொன்றையொடு பிணியவிழ்ந்து, பொரிப்புன்கும் புன்னாக மும் முருக்கொடு முகைசிறந்து, வண்டறைந்து, தேனார்ந்து, வரிக்குயில்கள் *இசைபாடத், தண்டென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவுசெய்யும் பொழிலது நடுவண், ஒரு மாணிக்கச் செய்குன்றின்மேல், விசும்பு துடைத்துப் பசும் பொன் பூத்து வண்டு துவைப்பத் தண்டேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்; கண்டு பெரிய தோர் காதல் †களிகூர்ந்து தன் செம்மலர்ச் சீறடிமேற் சிலம்பு கிடந்து சிலம்பு புடைப்ப, அம்மலரணிக் கொம்பர் நடை கற்பதென நடந்து சென்று, ‡நறைவிரி வேங்கை நாண்மலர் கொய்தாள்; கொய்தவிடத்து, மரகதமணி விளிம்படுத்த மாணிக்கச்சுனை மருங்கினதோர் மாதவிவல்லி மண்டபத்துப், போதுவேய்ந்த பூநாறு கொழுநிழற்கீழ்க் கடிக்குருக்கத்தி கொடிப்பிடித்துத் தகடுபடு பசும்பொற்

* 'வரிபாட' என்பதும் பாடம்.

† 'கழிகூர' என்பதும் பாடம்.

‡ 'நறுமலர் வேங்கை' என்பதும் பாடம்.

சிகரங்களின் முகடுதொடுத்து ஞான்று வந்து இழிதரும் அருவி, பொன்கொழித்து மணிவரன்றி மாணிக்கத்தொடு வயிரமுந்தி அணிகிளரருவி ஆடகப் பாறைமேல் அதிர்குரன் முரசின் கண்ணிரட்ட, வண்டுந் தேனும் யாழ்முரல, வரிக் குயிலுங் கிளியும் பாடத், தண்டாது தவிசுபடப் போர்த்த தோர் பளிக்குப்பாறை மணித்தலத்துமிசை, நீல ஆலவட் டம் விரித்தாற்போலத் தன்கோலக் கலாவங்கொளவிரித்து, முளையிளஞாயிற்று *இளவெயில் எறிப்ப ஓர் இளமயில் ஆடு வது நோக்கி நின்றாள். அப்பால், தலைமகனும் பற்பன்னூறு யிரவர்கூர்வேலிளைஞரொடு நளிர்மாமலைச்சாரல் வேட்டம் போய் விளையாடுகின்றான், ஆண்டெழுந்ததோர் கடுமானின் பின் ஓடிக், காவலிளைஞரைக் கையகன்று, நெடுமான்றே ரொடு பாகனை நிலவுமணற் கானியாற்று நிற்கப் பணித்துத், தொடுகழல் அடியதிரச் சுருளிருங்குஞ்சி பொன்ஞாணிற் பிணித்துக், கடிகமழ் நறுங்கண்ணிமேல்கொண்டு வண்டு மணமயர, அஞ்சாந்தின் நறுநாற்றம் அகன்பொழிலிடைப் பரந்து நாற, †அடுசிலையொடு கணை ஏந்தி வடிவுகொண்ட காமன்போலச் சென்று அவள் நின்ற இரும்பொழில் புகும். அஃதியாங்ஙனமோவெனின், வடகடலிட்ட ஒரு நுகம் ஒரு துளை தென்கடலிட்ட ஒருகழி சென்று கோத்தாற்போல வும், வெங்கதிர்க்கனலியுந் தண்கதிர்மதியமுந் தங்கதிவழு வித் தலைப்பெய்தாற்போலவுந் தலைப்பெய்து, ஒருவரொருவ ரைக் காண்டல் நிமித்தமாகத் தமியராவர்.)

தமியராதலென்பது தம்முணர்வினரல்லராதல். தம் முணர்வின ரல்லராதலென்பது என்னோவெனின், தலை மகற்கு அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடி என்பன குணம். அறிவென்பது என்னோவெனின்,

---

* 'இளவிரிகதிர்' என்பதும் பாடம்.
† 'வரிசிலை' என்பதும் பாடம்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (குறள் - 36-5.)

என்றாராகலின், எப்பொருளாயினும் அப்பொருட்கண் நின்று அம்மெய்ம்மையை அறிவது. நிறையென்பது என்னையெனின், காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம். ஓர்ப்பென்பது ஒருபொருளை *ஆராய்ந்து உணர்தலென்பது. கடைப்பிடியென்பது கொண்டபொருண் மறவாமை. இந்நான்மையுந் தலைமகற்கு வேட்கையான் மீதூரப்பட்டுப் † புனலான் மீதூரப்பட்ட புற்போலச் சாய்ந்துகிடப்பது.

இனித் தலைமகட்கு நாண் மடம் அச்சம் பயிர்ப்பென் பன குணம். அவற்றுள், நாணென்பது பெண்டிர்க்கு இயல் பாகவே உளதொரு தன்மை. மடமென்பது கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. அச்சமென்பது பெண்மை யில் தான் காணப்படாததோர் பொருள் கண்டவிடத்து அஞ்சுவது. பயிர்ப்பென்பது பயிலாத பொருட்கண் அரு வருத்து நிற்கும் நிலைமை. இந்நான்மையும் புனல் ஓடுவழியிற் புற்சாய்ந்தாற்போல வேட்கையான் மீதூரப்பட்டுச் சாய்ந்து கிடப்பது.

வேட்கையென்பது என்னையெனின், ஒருவரொரு வரை இன்றியமையாமை. அவ்வின்றியமையாது நின்ற வேட்கை எல்லா உணர்வினையும் நீக்கித் தானேயாய் நாண் வழிக் காசுபோலவும் நீர்வழி மிதவைபோலவும் பான்மை வழியோடி இருவருயிரையும் புணர்விக்கும் என்பது. ஆத லால், தமியராய்ப் புணர்தல் தலைமையொடு மாறுகொள்ளா தென்பது.

---

* 'உணர்ந்து ஆராய்ந்துகொள்வது' என்பதும் பாடம்.

† 'புனல் ஓடுவழிப் புற்சாய்ந்தாற்போல' என்பதும் பாடம்.

காமப்புணர்ச்சி என்பது. இதனை ஓராசிரியன் உள்ளத்தானே புணர்ந்தாரென்னும்; என்னை? மெய்யுறு புணர்ச்சி பொருவிறந்தாரென்பதனோடு மாறுகொள்ளும். யாங்ஙனம் மாறுகொள்ளுமெனின், ஏகதேசத்துப் பிறர்க்குரிய பொருளை வௌவினானைப் பெருமைசொல்லப்படாது. அதுபோல இவனுங் கொடுப்ப அடுப்ப எய்தற்பாலான் ஏகதேசத்துத் தலைப்பட்டுச் சென்றெய்தி முயங்கினமையின். என்னை? பிறர்க்குரிய பொருள் எளிதாகச் செய்யப்படாமையினும் பெரியனாய்ச் சென்றது. அங்ஙனமாகில் உலகத்துப் *பன்மக்களெல்லாம், பெரியர் சீராத பொழுது பிறருடைமை கொள்ளாது சீர்த்த பொழுது வௌவுதலால்.

இனி, இவளுங் குரவரது பணியாற் சென்று அவனை வழிபடற்பாலாள் ஏகதேசத்துத் தலைப்பட்டு மயங்கிவழிப்பட்டமையாற் பெருமையிலள்; என்னை? தேர்ந்து காணாது உள்ளம் ஓடினவழி ஓடுதலான். உள்ளத்தான் வேட்கப்படாத பொருளில்லை யன்றே; அவ்வேட்கப்பட்டவற்றுக்கணெல்லாம் அறத்தின் வழாமையும் பொருளின் வழாமையுந் தனக்குத் தகவும் ஆராயாது உள்ளம் ஓடினவழி ஓடுதல் தக்கதன்றென்பதனால் அது மாறுகொள்ளுமென்பது.

மற்றென்னையோ உரைக்குமாறெனின், அவர் தம்முண் மெய்புற்றுப் புணர்ந்திலர்; இருவர்தங் காமமுமே தம்முட் புணர்ந்தன, என்றிங்ஙனம் உள்ளங்களானின்று புணர்வது புணர்ச்சி; இது பிறரொருவருணர நெடுங்காலம் புணர்தலாகாதென நீங்கு நீக்கம் பிரிவு; அப்பிரிவின்கட் சொல்லுவது மெய்யுறு புணர்ச்சிக்குச் சொல்லுவன எல்லாஞ் சொல்ல அமையும். பாங்கற்கூட்டத்தின்கண்ணுந்

* 'நன்மக்களெல்லாம் பெரியராயிராதபொழுது' என வேறோர் ஏட்டுப்பிரதியிற் காணப்படுகின்றது.

தோழியிற்கூட்டத்தின்கண்ணும் எல்லாம் இதுவே வரைந்தெய்திய ஞான்று மெய்யுறுபுணர்ச்சி உண்டாவதென்ப. அது பொருந்தாதென்று மெய்யுறுபுணர்ச்சி வேண்டுவார் சொல்லுவது: மெய்யுறுபுணர்ச்சி தக்கின்றென்றாகாதே உள்ளப்புணர்ச்சி வேண்டுவது? அங்ஙனங் கருதிற் பிறர்க்குரிய பொருட்கண் உள்ளத்தை ஓடவிடுதல் தக்கின்றென்று மீட்க அமையாதோவென்பது. அல்லதூஉம், உள்ளத்தான் வேட்கை செல்லினும் மெய்யுற்றாராயிற்று. அதன்கண் இருபுடைகருதி ஆகாதே; ஆகவே, இவட்குக் கற்பழியும் பிறரொருவரை வழிபட; இனி உள்ளஞ் சென்ற பொழுதே அமைந்துஇரண்டாவதில்லையென்றுகருதினனே யெனினும் மெய்யுறவே; குற்றம் என்னேவென்பது. அல்லதூஉம் மெய்யும் மொழியுமென்பன உள்ளத்தின் வழிய வன்றே? அஃதிறந்தபின்னை இறவாது நின்றதென்னோ என்பது. அல்லதூஉம், பார்ப்பான் பாதகமாயிற்றென்று நினைக்குமாயிற் பிராயச்சித்தத்திற்கு உரியனும்; அதனாற் செய்கையும் நினைப்புமொக்கும் என்பது; அல்லதூஉம், மெய்யுறுவதாகாதென்னுந் தெரிந்துணர்ச்சியுண்டாயின் தமியரென்பதனொடு மாறு கொள்ளுமென்பது.

அல்லதூஉங், கந்தருவர் உள்ளத்தாற் புணர்ந்தாராயின் இவரும் உள்ளத்தாற் புணர்பவென்பது; என்னை? கந்தருவ வழக்கத்தோடு ஒக்குமென்றமையினென்பது. அல்லதூஉந் தெரிந்துணர் வுண்டாமேயெனின் அன்பினன் நிறைந்தாரென்பதும் அமையாது. என்னை? நிறைந்திருந்ததோர் கொள்கலம் பிறிதொன்றற்கு இடங் கொடாதது போல வென்பது. இருவரும் உத்தமராகலான் உள்ளத்தானே புணரப் போகம்முடியுமெனிற், பின்னையும் எஞ்ஞான்றும் மெய்யுறவுவகை கூடாதாம். புத்திரலாபத்திற்கு

மெய்யுறுபவேயெனிற், கருமப் பொருட்டன்றி வேட்கை யில்லை என்பதனுல் உள்ளப்புணர்ச்சி உரையன்றென்று, மெய்யுறுபுணர்ச்சியே வேண்டப்பட்டது.

இனி ஒருசாரார் உரைக்குமாறு: மெய்யுறுபுணர்ச்சி தக்கது, இன்சொல்லுங் கூற்றுமின்றிப் பசுப்போலப் புணர்ந்தாரென்பதாகாது, சொற்படு கான் முறைமையான் நிகழ்ந்து புணர்தல் தகவுடைத்து. அவை யாவையோ வெனின், காட்சி, ஐயந், தெளிதல், தேறலென இவை.

அவற்றுட் காட்சி யென்பது இருவருந் தம்முட் கண்ணுறுவது. அதற்குச்செய்யுள் வருமாறு:

பூமரு கண்ணிணை வண்டாப் புணர்மென் முலையரும்பாத்
தேமரு செவ்வாய் தளிராச் செருச்செந் நிலத்தைவென்ற
மாமரு தானையெங் கோன்வையை வார்பொழி லேர்கலந்த
காமரு பூங்கொடி கண்டே களித்தவெங் கண்ணிணையே. (க)

ஐயம் என்பது கண்ணுற்றபின் ஐயப்படுவது. எங்ஙனமோவெனின், வரையரமகள் கொல்லோ, வானரமகள் கொல்லோ, நீரரமகள்கொல்லோ, சூரரமகள்கொல்லே இத் துணைமேதகவுடையாள்! அன்றி மக்களுள்ளாள் கொல்லோ! என்று ஐயப்படுவது. அதற்குச் செய்யுள் வருமாறு:

உரையுறை தீந்தமிழ் வேந்த னுசிதன்றென் னுட்டொளிசேர்
விரையுறைபூம்பொழின் மேலுறைதெய்வங்கொ லன்றிவிண்டோய்
வரையுறை தெய்வங்கொல் வானுறை தெய்வங்கொ னீர்மணந்த
திரையுறை தெய்வங்கொ லையந் தருமித் திருநுதலே. (உ)

இவளும் அவனை ஐயப்படும். கடம்பமர் கடவுள்கொல்லோ இயக்கன்கொல்லோ அன்றி மக்களுள்ளான் கொல்லோ வென்று இங்ஙனம் ஐயப்படும்.

இவ்வகை நினைந்தபின்னைத் தெளிவு வருமாறு: ஆடை மாசுண்டலானுங், கால் நிலந்தோய்தலானுங், கண் இமைத்த

லானுங், கண்ணி வாடுதலானுஞ், சாந்து புலர்தலானுமென்று இங்ஙனந்தெரியும். தெரிந்தபின்னைத் துணியுமென்பது. அதற்குச் செய்யுள் வருமாறு :

பாவடி யானைப் பராங்குசன் பாழிப் பகைதவிர்த்த
தூவடி வேன்மன்னன் கன்னித் துறைச்சுரும் பார்குவளைப்
பூவடி வாநெடுங் கண்ணு மிமைத்தன பூமிதன்மேற்
சேவடி தோய்வகண் டேன்றெய்வ மல்லளிச் சேயிழையே. (ரு)

இவளும் அவனை அவ்வாறு தெரிந்து மக்களுள்ளானென்பது துணியும். துணிந்தபின்னை இருவருக்கும் வேட்கைமிகத் தம்முட்கூடுவது. இவ்வாறுபுணரப் பெரிதும் வனப்புடைத்தாய்க் காட்டுமென்பது. இவ்வுரை பொருந்தாது. என்னை காரணமெனின், இது கைக்கிளை இலக்கணம். தெய்வங்கொல்லோ மகடூஉக்கொல்லோ என ஐயமுற்ற ஐயநிலையுந், தெய்வ இலக்கணந் தீண்டாவாகலின் ஐயந்தெளிந்து மகடூஉவாதல் துவர உணர்ந்த அத்துணிவு நிலையுமெனக் கைக்கிளையிலக்கணமாகச் சொல்லப்பட்டமையின். ஈங்கு அகத்திணையுள் அஃதுரைப்பது திணைமயக்கமாகலின் மேலதே பொருள். காமப்புணர்ச்சியென்றமையிற் காமத்தின் வேறு புணர்ச்சியாகல் வேண்டும்பிற, வாளாற்கொண்ட கொடியென்றதுபோலவெனின்; அற்றன்று, பொன்னாற்செய்த மஞ்சிகை, மண்ணாற்செய்த குடமென்பதுபோல வேறன்றி நிற்புழிக்கொள்க. இஃது இயற்கைப் புணர்ச்சி யெனப்படும், புலவராற்கூறப்பட்ட இயல்பினாற் புணர்ந்தாராகலானுங் கந்தருவ வழக்கத்தோடொத்த இயல்பினாற் புணர்ந்தாராகலானு மென்பது. இனித் தெய்வப் புணர்ச்சியெனவும்படும், இருவருந் தெய்வத்தன்மையாற் புணர்ந்தாராகலினென்பது. அல்லதூஉம், முயற்சியும் உளப்பாடுமின்றி ஒருவற்கு ஒரு கருமங் கைகூ

டினவிடத்துத் தெய்வத்தினான் ஆயிற்றென்பது. அதுபோல இருவர்க்கும் முயற்சியும் உளப்பாடுமின்றிப் புணர்வு முடிந்தமையானுந் தெய்வப்புணர்ச்சி யெனப்பட்டது. இதுவே முன்னுறுபுணர்ச்சி யெனவும்படும், இவள் நலம் இவனானே முன்னுற எய்தப்பட்டமையானும், இவன் நலம் இவளானே முன்னுற எய்தப்பட்டமையானுமென்பது.

மற்றுந் தெய்வப்புணர்ச்சி, முன்னுறுபுணர்ச்சி, இயற்கைப் புணர்ச்சியென இவற்றுள் ஒன்று சொல்லாது காமப்புணர்ச்சியென்றே கூறிய காரணமென்னை யெனின், இவற்றுள் ஒன்றே சொல்லினுமொக்கும்; அல்லது அவையெல்லாம் அன்பினானே நிகழுமாகலிற் காமப்புணர்ச்சி யென்றாரென்பது. பலகாரணத்தினாயபொருளை ஒரு காரணத்தினாற் சொல்லுப சிறப்புடைமை நோக்கி; என்னை? நிலனும் நீருங் காலமும் வித்துமென இவற்றது கூட்டத்தினானாயமுளையை நென்முளையென்ப. நென்முளைக்கு நெல் சிறப்புடைக்காரணம், நிலனும் நீரும் முதலாகவுடையன பொதுக்காரணம், அவை பயற்றுமுளை முதலாகவுடையனவற்றிற்குங் காரணமாதலொக்குமாகலான். அதுபோல ஈண்டுந் தெய்வமும் இயற்கையும் முன்னுறவும் பொதுக்காரணமும், காமம் சிறப்புக் காரணமுமாகலாற் காமப்புணர்ச்சி யெனப்பட்டது.

இனி இருவயினொத்தல் என்பது என் சொல்லியவாறோவெனின், புணராதமுன் நின்ற அன்பு புணர்ந்தபின்னும் அப்பெற்றியே நிற்குமென்றவாறு. ஆயின் உலகினோடொவ்வாது பிற, உலகினிற் புணராத முன் நின்ற *வேட்கை புணர்ந்தபின்றைத் தவிர்தலானும் உண்ணாதமுன் நின்ற

* 'அன்பு' என்றும் வேறு பாடம் உண்டு.

வேட்கை உண்டபின்றைத் தவிர்தலானுமென்பது. என்றூற்கு, அறியாது சொல்லுதி, இஃது *உலகத்துள்ளபான்மை முன்னே கேட்டாயன்றே, இல்லது இனியது நல்லதென்று புலவரால் நாட்டப்பட்டதென நூல் எடுத்துக் கோடற்கண்ணே சொல்லிப்போந்து, இனி ஒருகால் உலகினோடொவ்வாதெனல் வேண்டுமோவென்பது. ஆயின் உலகினுள் அன்பன்றாக; புணராதமுன் நின்ற வேட்கை புணர்ந்தபின்னும் அப்பெற்றியே நிற்குமெனிற் புணர்ச்சியானுய பயமில்லையாம்பிற, உண்பதன்முன்னின்ற வேட்கை உண்டபின்றையும் தவிராது அப்பெற்றியே நிற்குமாயின் உண்டதனுய பயமில்லை, அதுபோல என்றாற்கு, அது வன்று: புணராதமுன் நின்ற வேட்கை புணர்ச்சியுட் குறைபடும்; அக்குறைபாட்டைக் கூட்டத்தின்கண் தம்முட்பெற்ற செய்குணங்களானுய அன்பு நிறைவிக்கும்; பின்னும் முன்னின்ற அன்பு கூட்டத்திற் குறைபடும், அதற்கிடையின்றியே குணத்தினுய அன்பு நிறைவிக்கும்; நிறைவித்தபின் முன்னின்ற அன்பு கூட்டத்திற் குறையாது எஞ்ஞான்றும் ஒரு பெற்றியேயாய் நிற்குமென்பது.

இனி, அவ்வகை புணராதமுன்னும் புணர்ந்தபின்னும் ஒத்த அன்பினனாய் நின்ற தலைமகன் பிரியுமென்றுமோ? பிரியானென்றுமோ? பிரியுமென்றுமேயெனின், அன்பிலனாயினனாம்; என்னை? பிரிவு அன்பிற்கு மறுதலையாகலான். இனிப்பிரியானேயெனினும், அன்பிலனாயினனாம். என்னை? பிரியாதிருப்ப இவ்வொழுகலாறு பிறர்க்குப் புலனாம், ஆகவே இவள் இறந்துபடும், அவள் இறந்து பாட்டிற்குப் பரியானாயினனாம். ஆகவே மூன்றாவது செய்யப்படுவது இல்லையாலோவெனில், பிரியுமென்பது. ஆயின் அன்பின்மை

* 'உலகிலுள்ள தன்மை' என்பதும் பாடம்.

தங்காதோவெனில், தங்காது. பிரிவும் அன்பினுனே நிகழுமாறு சொல்லுதும்.

தெய்வப்புணர்ச்சிபுணர்ந்த தலைமகன் இயற்கையன்பினுனுஞ் செயற்கையன்பினுனுங் கடாவப்பட்டுத் தனது நயப்புணர்த்தும். இயற்கையன்பென்பது காரணமின்றித் தோன்றும் அன்பு; செயற்கையன்பென்பது அவடன் குணங்களால் தோன்றிய அன்பு. அவ்விரண்டினுனுங் கடாவப்பட்டு நின்று தலைமகன் சொல்வது நயப்பு என்பது.

நயப்பென்பது தலைமகன் வண்டிற்கு உரைப்பானுய்த் தலைமகள் கேட்பத் தன் நயப்புணர்த்தியது.

நயப்பு. எங்ஙனமெனின், அவள்கையினைச் செங்காந்தளெனவுங் கண்ணினைக் கருங்குவளையெனவும் வாயினை அரக்காம்பலெனவுஞ் சென்று தடுமாறிக், குழன்மேலுங் கோதைமேலுஞ் சுழல்வாய், இவள் செவ்வாயது நறுநாற்றம் அறிதியன்றே! இனி நீர்ப்பூ நிலப்பூக் கோட்டுப்பூக் கொடிப்பூவென்று இப் பல்வேறு வகைப்பட்ட பூவின்மேலுஞ் செல்வாய், ஆம்பற்பூவினது நாற்றம் அறிதியன்றே! அறிவாய்! இவ்வகைப்பட்டாள் செவ்வாய்போல நாறுந் தகைமைய உளவே ஆம்பல் நறுமலர்? என்னுல் தேறப்படும் வண்டே உரையாயென உணர்த்தினுனென்பது. அதற்குச் செய்யுள் வருமாறு :

வேறு மெனநின் றிகன்மலைந் தார்விழி ஞத்துவிண்போ
யேறுந் திறங்கண்ட கோன்றென் பொதியி லிரும்பொழில்வாய்த்
தேறுந் தகையவண் டேசொல்லு மெல்லியல் செந்துவர்வாய்
நாறுந் தகைமைய வேயணி யாம்ப னறுமலரே. (௪)

என்றது, வேறுமெனநின்று இகன்மலைந்தார் விழிஞத்து விண்போயேறுந் திறங்கண்ட கோன் தென்பொதியில்

இரும்பொழில்வாய் வண்டாதலால் தேறுந் தகைமைய தென்றவாறு.

இதனாற் போந்த பொருள்: வெல்லுவது கருதி விழுந்துக் கடற்கோடியுள் மலைந்த பல்வேந்தரையும் படுத்து இவரென் பகைஞரென நினையாது அவர்க்குத் தவத்தானுந் தானத்தானுமன்றிப் புகலாகாச் சுவர்க்கங் கொடுத்த பெருந்தன்மையானது நிலத்து வண்டாதலின் நீயும் பெருந்தன்மையை; ஆகலின் தெளியப்படுதி. அல்லதூஉம் பொதியிலென்பது எல்லாத் தேவர்க்கும் பொதுவாகிய இல் என்றவாறு; அத்தேவர்களுடைய வனம் அவ்விரும்பொழிலென்றவாறு; அப்பொழில்வாழ்வாய் நீயும் அத்தன்மையையன்றே! ஆகலானுந் தெளியப்படுதி. அன்றாய் நீ பொய்யுரையாய்; இவள் வாய்போல நாறும் ஆம்பற் பூவும்உளவோ வென்றவாறு. என்றதனால் தன் நயப்புணர்த்தினான். இனி மெல்லியலென்பது மென்மையைத் தனக்கு இயல்பாகவுடைய ளென்றவாறு. மென்மையென்பது பெண்டிர்க்கு மிக இயல்பு; அதனைத் தனக்குச் செய்துகோளன்றி இயல்பாக உடையாளென்றவாறு: எனவுந் தன் நயப்புணர்த்தினான். இனிச் செந்துவர்வாயென்பது செம்மையைத் தனக்கு மிகவுடைய வாயென்றவாறு. செம்மையுடையாரென்பது உலகத்துத் தங்குணங்களை மறையாது ஒழுகுவாரை. இவள் வாயுந் தன்குணமாகிய வடிவும் மொழியும் நறுநாற்றமுமென்று இவற்றான் விளங்கிப் பொலிந்து தோன்றுவதென்றவாறு: என்றதனானுந் தன் நயப்புணர்த்தினானும். இனி நாறுந் தகைமையவேயென்பது, ஐந்து ஏகாரத்துள்ளும் இவ்வேகாரம் வினாவின்கண்வந்த ஏகாரமெனக்கொள்க.

"தேற்றம் வினாவே பிரிநிலை யெண்ணே
யீற்றசை யிவ்வைந் தேகா ரம்மே" (தொல்-சொல்-இடை-௯.)

என்பவாகலின். அணி ஆம்பல் நறுமலரென்பது அழகிய ஆம்பல் நறுமலரென்றவாறு. அணியாம்பனறுமலரென்றதனாற் போந்தபொருள் அழகியாரின் குணங்களும் பெரும்பான்மையும் அழகியவாகலால் அவ்வாம்பற்கண்ணும் நறுநாற்றமிக்கதென்றற்குச் சொல்லப்பட்டது. அவ்வகை நறுநாற்றம் மிகவுடைய ஆம்பல் இவள்வாய்போல நாறுமேயென்றவாறு. மலரேயென்று நின்ற ஏகாரம் ஈற்றசையேகாரம்.

இனி இதனைச் சோதிக்குமாறு: 'செந்துவர்வாய் நாறுந்தகைமையவே' என்றதல்லது, போலவென்றதில்லையாலோவெனின், உவமந் தொக்குநின்றதென்றுகொள்க. என்னை?

"வேற்றுமைத் தொகையே யுவமத் தொகையே
வினையின் றொகையே பண்பின் றொகையே
யும்மைத் தொகையே யன்மொழித் தொகையென்
றவ்வா றென்ப தொகைமொழி நிலையே."

(தொல்-சொல்-எச்-கசு.)

என்றோதினமையின்.

ஆயின் உவமந் தொகுக; உவமிக்கும் முறைமையன்றி உவமித்தீர். உலகத்துப் பெண்பால்கள் வாயது நறுநாற்றத்திற்கு உவமையாவது ஆம்பலென்றன்றே?—என்னை? "ஆம்பனாறுந் தேம்பொதி கிளவி" என்பவாகலின். அவ்வாறன்றி இவள் வாய்போல நாறும் ஆம்பலுளவேயென இவள் வாயை உவமையாக்கி ஆம்பலை உவமிக்கப்படும் பொருளாகச் சொல்லுதல் குற்றம்பிறவெனின்; அறியாது சொல்லினாய், உலகத்து இவை உவமை இவை உவமிக்கப்படும்பொருளென்று நிலைபெற்றன உளவேயில்லை. *உரைக்குங் கவியது குறிப்பி

* 'புணர்க்குங் கவியது குறிப்பினான்' என்பதும் பாடம்.

ளுன் உவமையும் உவமிக்கப்படும் பொருளாம். உவமிக்கப் படும் பொருளும் உவமையாகவும் அமையும். என்னை?

“பொருளது *புரைவே புணர்ப்போன் குறிப்பின்
மருளற வரூஉ மரபிற் றென்ப”

என் றோதினமையாற், **“கண்போனெய்தல் போர்விற் பூக்கும்” எனவுங், “கண்ணென மலருங் குவளை” எனவுங், “குவளை யுண்க ணிவளும் யானும்” எனவும் “நெய்த லுண் கண் பைதல் கூர” எனவும் † இருவகையானுஞ் சொல்லு பவாகலின், இருவகையானும் உவமிக்க அமையுமென்பது.

இனி, மருதநிலத்து ஆம்பலைக் குறிஞ்சிநிலத்ததாகச் சொல்லுதல் திணைவழுவாம்பிறவெனின், ஆகாது; குறிஞ்சி நிலத்து வண்டு குறிஞ்சிநிலத்தே திரிதருவனவல்ல, எல்லா நிலத்துஞ் சென்று எல்லாப்பூவும் ஊதுமாகலானும் அமை யும். அல்லதூஉம்,

“எந்நில மருங்கிற் பூவும் புள்ளு
மந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்.”
(தொல் - பொ - அகத் - கக.)

என்பதாகலானும் அமையும். இனிச் சுனைக்குவளையுஞ் சுனையாம்பலும் உண்மையானும் அமையும். அது பெருங் குறிஞ்சியிற் கண்டுகொள்க.

இனித் தலைமகனென்னுஞ் சொல்லொடு மாறுகொள் ளும், பிறனொரு தலைமகனிலத்துப் புணர்ந்தானென்றமை யினுனெனின், மாறுகொள்ளாது; என்னை? நின்ற ஒருவனைய பாண்டியனது பொதியிலிடமாகச் சொன்னமையான்.

---

* ‘புணர்ப்பே’ என்பதும் பாடம்.
** நற்றிணைநானூறு, அ-வது செய்யுள்.
† ‘இவ்வகையானும்’ என்பதும் பாடம்.

என்னை? அக்குலத்துள் தோன்றுவார் தேவர்களேயாகலான் நம்மால் வேண்டப்பட்ட தலைமகன் தேவருண் மிக்கானெனப்படான், மக்களுண் மிக்கானுயதல்லது. ஆகலின் இவன் நிலத்துப் புணர்ந்தானென்பது தலைமையொடு மாறு கொள்ளாதென்பது. அல்லதூஉம்,

“மழைவளந் தரூஉ மாவண் டித்தன்
பிண்ட நெல்லி னுறந்தை யாங்கட்
கழைநிலை பெறாஅக் காவிரி நீத்தங்
குழைமா ணொள்ளிழை நீவெய் யோளொடு
வேழ வெண்புணை தழீஇப் பூழியர்
கயநா டியானையின் முகனமர்ந் தாஅங்
கேந்தெழி லாகத்துப் பூந்தார் குழைய
நெருந லாடினை புனலே”

என்றும்,

“பகுவாய் வராஅற் பல்வரி யிரும்போத்து”

என்றுங் கிளவித்தலைமகனைப் பாட்டுடைத் தலைமகனிலத்துப் புனலாடினனென்றும் புணர்ந்தானென்றும் பிறசான்றோர் செய்யுளுள்ளுஞ் சொல்லப்பட்டதாகலானும் அமையுமென்பது. இப்பாட்டினுல் தன்கண் நின்ற அன்பு வெளிப்படுத்துத் தலைமகனைப் புகழ்ந்து நயப்புணர்த்திற்றுயிற்றுப் போந்தபொருள். இன்னுஞ் செய்யுள்:

“தாவுண்டை வண்டினங் காள்வம்மின்சொல்லுமின்றுன்னிநில்லாக்
கோவுண்டை கோட்டாற் றழிவித்த கோன்கொங்க ராடடசெங்கே
மாவுண்டை வாட்டிய நோக்கிதன் வார்குழல் போற்கமழும் [ழ்
பூவுண்டை தாமுள வோநுங்கள் கானற் பொழிலிடத்தே.” (ரு)

“இருங்கழல் வானவ னுற்றுக் குடியிகல் சாய்ந்தழியப்
பொருங்கழல் வீக்கிய பூழியன் மாறன்றென் பூம்பொதியின்
மருங்குழ லுங்களி வண்டினங் காளுரை யீர்மடந்தை
கருங்குழ லுறுமென் போதுள வோநுங் கடிபொழிலே.” (சு)

"விண்டே யெதிர்ந்ததெவ் வேந்தர் படவிழி ஞத்துவென்ற
வொண்டே ருசிதனெங் கோன்கொல்லிச் சார லொளிமலர்த்தா
துண்டே யுழல்வா யறிதியன் றேயுள் வேலுரையாய்
வண்டே மடந்தை குழல்போற் கமழு மதுமலரே." (எ)

"பொருங்கழல் வானவற் காயன்று பூலந்தைப் போர்மலைந்தா
ரொருங்கழ லேறவென் றான்கொல்லிச் சாரலொண் போதுகடம்
மருங்குழல் வாய்நீ யறிதிவண் டேசொல் லெனக்குமங்கை
கருங்குழல் போலுள வோவிரை நாறுங் கடிமலரே." (அ)

"தேற்றமில் லாததெவ் வேந்தரைச் சேவூர்ச் செருவழித்துக்
கூற்ற மவர்க்காய வன்கொல்லிச் சாரல்கொங் குண்டுழல்வாய்
மாற்ற முரைநீ யெனக்குவண் டேமங்கை வார்குழல்போ
னாற்ற முடைய வுளவோ வறியு நறுமலரே." (கூ)

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோநீ யறியும் பூவே." (குறுங்-உ.)

இவையும் அப்பாற்படுத்துக்கொள்க.

அவ்வகை தன்னைப் புகழத் தலைமகள் ஆற்றாளாயினாள். என்னை? சிறியவருந் *தம்முன்னின்று தம்மைப் புகழ்ந்த விடத்து நாணிவருந்துபவாகலால் தான் பெருமையும் பெரு நாணும் உடையாள் தலைமகன் முன்னின்று தன்னைப் புகழ ஆற்றாளாவது சொல்லவேண்டுமோ? அவ்வகை ஆற்றாளாயினாளது ஆற்றாமை தலைமகற்குப் புலனாயிற்று. புலனாக, அதனைக்கண்டு நீருடைநிலத்து நிவந்த நீண்மணமரம் வெப்பத்தால் தெறப்படாததுபோல, யானுழையேனாக இவ்வேறுபாடு இவட்காகாதன்றே! இஃது எற்றினானாயிற்றுக்கொல்லோவென நினைந்தான். நினைந்து, அறிந்தேன், தன்னையான்

* 'தம்முன் நின்று புகழப், புகழ்ந்தவிடத்து' என்பதும் பாடம்.

...ாதன்மிகவின்றப் பாராட்டப்போலுமென உணர்ந்து யான் தன்னை முன்னின்று பாராட்ட இவ்வகை மெலிவுசென்ற பெருநாணுடையாள் புறத்து ஒருவர் இவ்வொழுக்கத்தை உணர்வார் கொல்லோவென்று உட்கொண்ட ஞான்று இவள் இறந்துபடும்போலுமெனப் பெரியதோர் ஆற்றுத் தன்மையனாயினன். ஆற்றுத்தன்மையன் என்பது எவ் வுணர்வுமின்றி அவ்வாற்றுமை தானேயாவது. இவ்வகை ஆற்றாய தலைமகனது ஆற்றுமைக்குக் கவன்று * முன் நாணிற்சென்றெய்திய ஆற்றுமை நீங்கித் தலைமகள் ஆற் றுளாயினள், †வேலேறுபடத் தேளேறு மாய்ந்தாற்போல. அது தலைமகற்குப் புலனாயிற்று. புலனாக, இவள் எவ் விடத்துந் தன்றன்மையென்பது ஒன்றிலள், என்றன்மை யளே; யான் ஆற்ற ஆற்றி யான் ஆற்றுதுவிடத் தானும் ஆற்றுளாம்: ஆகலான், யான் பிரிந்துவிடத்து என்குறிப் பன்றி இறந்துபடாள்; அல்லதூஉம், யான் பிரியாதுவிடப் புறத்தார் உணர்வர். புறத்தாருணரவே இவள் ஆற்று ளாம். ஆகலான், யான் பிரியவே புறத்தார் உணரார். ஆகவே, இவள் ஆற்றுமெனக் கருதி அவள் கருங்குழற் கற்றை மருங்கு திருத்தி, அளகமும் நுதலுந் தகைபெற நீவி, ஆகமுந் தோளும் அணிபெறத் தைவந்து, குளிர்ப்பக் கூறித், தளிர்ப்ப முயங்கிப் பிரிவலென்று வலித்தான். வலித்துப் பிரிவச்சமென்பதொன்று சொல்லும்.

பிரிவச்சம். பிரிவச்சமென்பது, தான் பிரிவு அஞ்சிற்றும் பிரிவச் சம்; அவளைப் பிரிவு அஞ்சுவித்ததும் பிரி வச்சம்; ஆதலிற் பிரிவச்சமெனப்படும். அது யாங்ஙனஞ் சொல்லுமோவெனின்,

* 'முன்நாணினாகிய ஆற்றுமை' என்பதும் பாடம்.

† 'வேலேறுபெற்றுத் தேளேறு தீர்ந்தாற்போல' என்பதும் பாடம்.

நின்னிற் பிரியேன், பிரியினும் ஆற்றேனென்னும். அதற்குச் செய்யுள்:

மின்னிற் பொலிந்தசெவ் வேல்வலத் தான்விழி ஞத்தெதிர்ந்த
மன்னிற்கு வானங் கொடுத்தசெங் கோன்மன்னன் வஞ்சியன்னாய்
நின்னிற் பிரியேன் பிரியினு மாற்றே னெடும்பணைத்தோட்
பொன்னிற் பசந்தொளி வாடவென் னாங்கொல் புலம்புவதே. (௧௦)

அணிநிற நீண்முடி வேந்தரை யாற்றுக் குடியழியத்
துணிநிற வேல்வலங் காட்டிய *மீனவன் றொண்டியன்ன
பிணிநிற வார்குழற் பெய்வளைத் தோளிநின் னிற்பிரியேன்
மணிநிறம் பொன்னிற மாகவென் னாவி வருந்துவதே. (௧௧)

பொன்னார் புனைகழற் பூழியன் பூலந்தைப் பூவழிய
மின்னா ரயில்கொண்ட வேந்தன் விசாரிதன் வெண்டிரைமேன்
முன்னாண் முதலறி யாவண்ண நின்ற பிரான்முசிறி
யன்னாய் பிரியேன் பிரியினு மாற்றே னழுங்கற்கவே. (௧௨)

இவ்வாறிவைகேட்ட தலைமகள் எம்பெருமான் நின்னிற் பிரியேன், பிரியினும் ஆற்றேன் என்கின்றானால். பிரிவென்பதும் ஒன்று உண்டுபோலும்; கேட்ட தகைமையால் அது தங்காதலரைக் காணாதுங் கேளாதுங் கையினகன்று மெய்யினீங்குவதெனக் கலங்கிக், கார்மருங்கின் மின்னுப்போலவும் நீர்மருங்கிற் கொடிப்போலவும் தளிரும் முறியுந் ததைந்து குளிரும் நளிருங் கவினி எழாநின்றதோர் கவின்பெறு கொடிப்போலுங் காரிகை, கண்ணாடி மண்டிலத்து ஊது ஆவிபோலக் காணக்காண ஒளிமழுங்கிக், கனல் முன்னிட்ட மெழுகு பாவைபோல மனமுருகிப் பசந்து காட்டினாள். காட்டியும் ஆற்றினாள், யான் ஆற்றாதிறந்துபடில் எம்பெருமானும் இறந்துபடுமென. அங்ஙனம் ஆற்றினாளது நீர்மையைக்கண்டு இவள் எவ்விடத்தும் எக்காலத்துந் தன்றன்மையென்பது ஒன்று இல்ள், என்றன்மையளே போலுமெனப்

* ‘தென்னவன்’ என்பதும் பாடம்.

பெரியதோர் கழியுவகை மீதூர நின்று வன்புறையென்ப தோர் சொற்சொல்லும்.

வன்புறையென்பது வற்புறுத்துவது. அஃதியாங்ஙன மோவெனின் அணித்து எம்மிடமென் பது. அதற்குச் செய்யுள்:

வன்புறை.

பாவணை யின்றமிழ் வேந்தன் பராங்குசன் பாழிவென்ற
வேவணை வெஞ்சிலை யான்வஞ்சி யன்ன வினையலெம்மூர்த்
தூவண மாடச் சுடர்தோய் நெடுங்கொடி துன்னிநம்மூ
ராவண வீதியெல் லாநிழற் பாயநின் றண்வருமே. (கந)

திணிநிற நீடோ ளரசுகத் தென்னறை யாற்றுமின்னார்
துணிநிற வேல்கொண்ட கோன்றெண்டி யன்னாய் துயரலெம்மூர்
மணிநிற மாடத்து மாட்டிய வான்சுடர் மாலைநம்மூ
ரணிநிற மாளிகை மேற்பகல் பாரித் தணவருமே. (கச)

ஒன்றக் கருதா வயவர் நறையாற் றுடனழிந்து
பொன்றப் படைதொட்ட கோன்புன னாடனை யாய்நுமர்கள்
குன்றத் திடைப்புனங் காவல ரிட்ட சுரூஉச்சுடரெம்
மன்றத் திடையிரு ணீக்கும் படித்தெங்கள் வாழ்பதியே. (கரு)

சேலங் குளர்வயற் சேவூ ரெதிர்நின்ற சேரலனை
மாலங் கடைவித்த மன்னன் வரோதயன் வஞ்சியன்ன
வேலங் கமழ்குழ லேழையெம் மூரெழின் மாடத்துச்சிச
சூலந் துடக்குநும் மூர்மணி மாடக் குதிர்கொடியே. (கசு)

என அங்ஙனங் கேட்ட தலைமகள் எம்பெருமான் அணித் தெம்மிடமென்கின்றானல், அணியதற்கு அருமையில்லை என்கின்றானும்; அருமையில்லையென்றதனாற் போந்த பொருள், பல்காலுங் கேட்கவுங் காணவுமாமென்றவாறு போலும்; பல்காலுங் கேட்பாருங் காண்பாரும் ஆற்றியுள ராவரன்றே; அதனால் எம்பெருமான் என்னைக் காண்டற்குங் கேட்டற்கும் ஆற்றியுளனும் போலுமென ஆற்றியுள்ளாம்.

அங்ஙனம் ஆற்றுதலை அறிந்தபின்னைப் பிரிவானும். இனி இவளும் பெருநாணினள், யான் பிரியாதுவிட இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனாம். புலனாகவே இவள் ஒரு தலையாக இறந்துபடுமென இவ்வகை பிரிவச்சமும் வன்புறையுஞ் சொல்லிப் பிரியுமாகலிற் பிரிவும் அன்பினானே நிகழ்ந்ததென்பது.

அருமையறிதல்

இவ்வாற்றால் தலைமகளை ஆற்றுவித்துப் பிரிந்த தலைமகன் அவளைத் தமியளாகவிட்டு நீங்குமோவெனின், நீங்கான். அவள் தன்னைக் காணாமல் தான் அவளைக் காண்பதோர் அணிமைக்கண் மழைக்கொண்டலின் மின்னுப்புக் கொளித்தாற்போல ஒரு *தழைப்பொதும்பரிடை மறைந்துநிற்கும். நிற்கத், தலைமகளுந் தன் குழற்கற்றையுங் கோதையுந் துயல்வரக், கொடியிடை நடுவுதளரப், பரவையல்குற்றுகிலசையப், பைம்பொற்றோடு மின்னுப் படைப்ப, †வரிவண்டறையுந் தாமரையகவிதழ் புரையும் அஞ்செஞ்சீறடிமேற் பைம்பொற் சிலம்பரற்ற, அன்னம்போல மெல்லமெல ஒதுங்கிக், காமவல்லியுங், கற்பகக் கொழுந்தும் நடைகற்பதென நடந்துசென்று, அணிவரைச்சார லருகினதோர்மணியருவி மருங்கோலுறுத்தப் பளிங்குவிளிம்படுத்தநீலப் பைஞ்சுனை மருங்கினதோர் மரகதச் சிலாவட்டத்தயல் மாணிக்கச் சதுரப்பாறைமேல், தாது தவிசு அடுத்த மாதவிப் பந்தர்ப் போதுவேய்ந்த பூநாறு கொழுநிழலிருந்தாள். இருந்தாளாகத், தாதுந் தளிரும் போதும் மேதக்கனவற்றாற் குறுங் கண்ணியும், நெடுங் கோதையும்,

---

* 'தனிப்பொதும்பர்' என்பதும் பாடம்.

† 'அரவவண்டு' என்பதும் பாடம்.

விரவுத்தழையுஞ், *சூட்டுக் கத்திகையும், மோட்டு வலய முூம், பிறவுமாகப் புனைந்து, வண்டுந் தேனும் புடை மருட்ட அடியுறை ஏந்திப், பிரிந்த ஆயம் †புடைமருவப் பெயர்ந்தெய்திப், போற்றும் பல்லாண்டுங் கூறிநின்றார். சிற்ப, அவளுந் தாரகைநடுவண் தண்மதிபோல்வதோர் பொலிவினளாய்க் காட்டினாள். காட்டினாளைக் கண்டு, இவளை யான் எய்தினேனெனக் கருதினன்! எய்தியதுண்டேற் கனாப்போலும்! நனவேயாயினும் இவள் எனக்கு எய்து தற்கு அரியளாமென ஆற்றானாயினான். அதற்குச் செய் யுள்:

சினவேல் வலங்கொண்டு செந்நிலத் தேற்றதெவ் வேந்தர்கள்போ
யினவேய் நரல்குன்ற மேறவென் றோனிருந் தண்‡சிலம்பிற்
புனவே யனையமென் றோளிதன் னாகம் புணர்ந்ததெல்லாங்
கனவே நனவாய் விடினுமெய் தாதினிக் கண்ணுறவே. (கஎ)

இருநிலங் காரண மாக நறையாற் றிகன்மலைந்த
பொருநில வேந்தரைப் பொன்னுல காள்வித்த பூமுகவேற்
பெருநிலங் காவலன் றென்புன னாடன்ன பெண்ணணங்கின்
றிருநலஞ் சேர்ந்ததெல் லாங்கன வேயென்று சிந்திப்பனே. (கஅ)

கையேர் சிலைமன்ன ரோடக் கடை யற்றன் கண்சிவந்த
செய்யே ரயில்கொண்ட நேரியன் கொல்லி நெடும்பொழில்வாய்
மையேர் தடங்கண் மடந்தைமெல் லாகம் புணர்ந்ததெல்லாம்
பொய்யே யினிமெய்ம்மை யாயினு மில்லைப் புணர்திறமே. (கக)

என இவ்வகையான் அவளது அருமைநினைந்து இவ்வொழுக் கங் கைகூடாதெனக் கருதுவானாயின் வரையும்; இனி யான் இவ்வகையாளைப் புணருமாறு என்னைகொல்லோ வென்று

* 'சூட்டுங்குருக்கத்தியும்' என்பதும் பாடம்.

† இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியிலில்லை; வேறொரு பிரதியிற் கண்டது.

‡ 'பொதியில்' என்பதும்பாடம்.

கருதுவானாயிற் கூட்டத்திற்கே முயல்வானும். அவ்வகை நினைந்து நீங்குவான் ஆயத்தோடுஞ் செல்லாநின்ற தலைமகளை நோக்கிச் சொல்லும். அதற்குச் செய்யுள்:

தேயத் தவருயி ரைப்புல னன்றென்பர் செந்நிலத்தைக்
காயக் கனன்றெதிர்ந் தார்மரு மத்துக் கடுங்கணைகள்
பாயச் சிலைதொட்ட பஞ்சவன் வஞ்சிப்பைம் பூம்பொழில்வா
யாயத் திடையிது வோதிரி கின்றதென் னாருயிரே. (உ0)

இன்னுயிர் கண்டறி வாரில்லை யென்ப ரிகன்மலைந்தார்
மன்னுயிர் வான்சென் றடையக் கடையலுள் வென்றுவையங் [வா
தன்னுயிர் போனின்று தாங்குமெங் கோன்கொல்லித் தாழ்பொழில்
யென்னுயி ராயத் திடையிது வோநின் றியங்குவதே. (உக)

என இவ்வாறுசொல்லி ஆற்றாயினான். அவ்வாற்றாமை ஆற்றுவதொன்றனைப் பற்றும். அஃது யாதோவெனின் தானெய்திய ஆரணங்காகிய அவ்வுருவினை நினைந்து தானெய்தும் உபாயமாவது தன்காதற் றோழனை இது கொண்டு முடிக்குங் கொல்லோவென்பது. அது பற்றுக்கோடாக ஆற்றி நீங்குமென்பது. (உ)

௩. ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன் றன்வயிற்
பாங்க னோரிற் குறிதலைப் பெய்தலும்
பாங்கிலன் றமியோ ளிடந்தலைப் படலுமென்
றாங்கவ் விரண்டே தலைப்பெயன் மரபே.

என்ப தென்னுதலிற்றோ வெனின், இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன் அதன் பின்னே தெருண்டுவரைதல் தலை; *தெருளானாயின் இவ்வா றொழுகுமென்று அவன் ஒழுகுந்திறன் உணர்த்துதல் நுதலிற்று. என்னை? வழி

* இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை; வேறோர் ஏட்டுப்பிரதியிற் கண்டது.

போகாநின்றுணெருவன் *இழுக்கிச் சேறுனுஞ் சாணக மானும் மிதித்தவிடத் தப்பொழுதே காலைக்கழீஇப் பாதுகாத்துத் தன் இல்லம் புகும்; அதுபோல் இவனும் ஞானவொழுக்கக் குணங்களின்வழியே செல்லாநின்றுன் இழுக்கின், அவ்விழுக்கினை இழுக்காவதறிந்து அதன்க ணின்று மீடன் மிக்கது; மீண்டு நிற்கலானெனின் இவ்வா றெழுகும் என்பது.

இதன் பொருள்: ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன் —அவ்வாறு கூடிப்பிரிந்த தலைமகன்—தன்வயிற் பாங்கனோ ரிற் குறி தலைப்பெய்தலும்'—தன் பாங்கனுற் குறியிடத்துத் தலைப்பெயலும்; பாங்கிலன் தமியோள் இடந்தலைப்பட லும்—பாங்கனையின்றித் தனியாளை இடத்தெதிர்ப்படுத லும்; 'ஆங்க' என்பது அசைச்சொல்: 'இரண்டு' என்பது தொகை; தலைப்பெயல் மரபே—தலைப்பெய்தற்கு இலக் கணம், என்றவாறு.

அவ்வாறு புணர்ந்து நீங்கிய தலைமகன் பிற்றைஞான்று தன் பாங்கனுற் குறியிடத்துத் தலைப்பெய்தலும் பாங்கனை யின்றித் தமியாளை இடத்தெதிர்ப்படுதலுமென அவ் விரண்டினுள் ஒன்றே தலைப்பெய்தற்கு இலக்கணம் என்ற வாறு.

'ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன்' என்பது தெய்வம் இடைநிற்கப் பான்மையால் †உய்க்கப்பட்டு யாருமில் ஒரு சிறைத் தலைப்பெய்த தலைமகனென்றவாறு. ‡எனவே அவ்

* 'பிழைத்துச் சென்றுனுஞ் சாணகமானும்' என்பது முன் அச்சுப்பிரதியிற் கண்ட பாடம்.

† 'ஊக்கப்பட்டான்' என்பதும் பாடம்.

‡ 'அவ்வாறு புணர்ந்தான் தலைமகனெனப்படும்' என்பதும் பாடம்.

வாறு புணரப்பட்டாள் தலைமகளெனப்பட்டது. கிழமையுடைமையிற் கிழவோனெனப்படும்; தலைமையுடைமையின் தலைவனெனப்படும். அவட்கும் அவ்வாறே கொள்க.

இனிப் பாங்கற்கூட்டமாமாறு சொல்லுதும்: இயற்கைப் புணர்ச்சிபுணர்ந்து ஆற்றுவித்துப் பாங்கற் கூட்டம். பிரிந்த தலைமகன் * பிரிந்தன்று வார்த்தையெல்லாம் நினைக்கும். நினைக்குமாறு யாதோவெனின், நின்னிற்பிரியேன் பிரியினாற்றேனெனச் சொல்லிப் பிரியப்பட்டாள் தன்னைக்காணாத என்னிலைமை நினைந்து † ஆற்றுங்கொல்லோ ஆற்றாள்கொல்லோ வெனவும், ஆற்றாளாகி நின்றாள் தனது வேறுபாட்டைப் புறத்தாரறியாமை ‡ மறைக்குமாறறியுங்கொல்லோ அறியாது வருந்துங்கொல்லோவெனவும் இவை முதலாயின நினைந்து ஆற்றானாம். ஆற்றாநிலைமையானைப் பிற்றைஞான்று சிறுகாலே தலைப்படும் பாங்கன்; தலைப்பட்டு அடியிற்கொண்டு முடிகாறும் நோக்குவான், புதையிருளிரியல்போகப் பொன்றாழருவி மணிநெடுங்கோட்டுதயமென்னும் மணிவரையுச்சி உலகுதுயில் $ பெயர்த்துத் தோன்றிய வளர் ஒளி இளமூனாயிற்றின் வனப்பழித்த திருவொளி மழுங்கியது நோக்கி என்னைகொல்லோ எம்பெருமாற்கு இற்றை வேறுபாட்டு வாட்டமென்னும். அதற்குச் செய்யுள்:

நீடிய பூந்தண் கழனிநெல் வேலி நிகர்மலைந்தா
ரோடிய வாறுகண் டொண்சுடர் வைவே லுறைசெறித்த
வாடியல் ‖ யானை யரிகேசரிதெவ்வர் போலழுங்கி
வாடிய காரண மென்னைகொல் லோவுள்ளம் வள்ளலுக்கே. (௨௨)

---

* 'ஆங்குப்பட்ட' என்பதும் பாடம்.
† இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை.
‡ இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியிலில்லை.
$ 'பேர்வந்து நாறிய' என்பதும் பாடம்.
‖ 'தானை' என்றும் பாடம் உண்டு.

வண்டுறை வார்பொழில் சூழ்நறை யாற்றுமன் னேட்டைவேல்
கொண்டுறை நீக்கிய தென்னவன் கூடற் கொழுந்தமிழி
னெண்டுறை மேலுள்ள மோடிய தோவன்றி யுற்றதுண்டே
தண்டுறை வாசிந்தை வாடியென் னுங்கொல் தளர்கின்றதே. (௨௩)

தெவ்வா யெதிர்நின்ற சேரலர் கோனைச் செருக்கழித்துக்
கைவா னிதியமெல் லாமுட னேகடை யற்கவர்ந்த
நெய்வா யயினெடு மாறன் பகைபோ னினைந்துபண்டை
யொவ்வா வுருவு மொழியுமென் னேவள்ள லுள்ளியதே. (௨௪)

உற்றது உரைத்தல். இவ்வகை பாங்கன் தலைமகனை வினவானாயின் தலைமகற் குற்றதுகடைப்பிடியாது விட்டானும். இவ்வகை கடைப்பிடித்து வினயின பாங்கற்கு நெருநல் இவ்வகையார் ஒருவரைக் கண்டேற்கு என்னுள்ளம் பள்ளத்துவழி வெள்ளம்போல ஓடி இவ்வகைத்தாயிற்றென்று சொல்லும். அதற்குச் செய்யுள்:

அளையா ரரவின் குருளை யணங்க வறிவழிந்து
துளையார் நெடுங்கைக் களிறு நடுங்கித் *துயர்வதுபோல்
வளையார் முளையெயிற் றூர்மன்னன் மாறன்வண் கூடலன்ன
விளையா ரொருவ ரணங்கநைந் தால்யா னினைகின்றதே. (௨௫)

அலையார் கழன்மன்ன ராற்றுக் குடியழ லேறச்செற்ற
கொலையா ரயிற்படைக் கொற்றவன் கூடலன் னாரொருவர்
முலையாய் முகிழ்த்துமென் றோளாய்ப் பணைத்து முகத்தனங்கன்
சிலையாய்க் குனித்துக் குழலாய்ச் சுழன்றதென் சிந்தனையே. (௨௬)

பொருநெடுந் தானைப்புல் லார்தம்மைப் பூலந்தைப் பூவழித்த
பருநெடுந் திண்டோட் பராங்குசன் கொல்லிப் பனிவரைவாய்த்
திருநெடும் பாவை யனையவள் செந்தா மரைமுகத்துக்
கருநெடுங் கண்கண்டு மீண்டின்று சென்றதென் காதன்மையே.

---

* 'சுழல்வதுபோல்' என்பதும் பாடம்.

"சிறுவெள் ளரவி னவ்வரிக் குருளை
கான யானை யணங்கி யாஅங்
கிளையள் முளைவா ளெயிற்றள்
வளையுடைக் கையளெம் மணங்கி யோளே."

(குறுந்தொகை - ௧௧௧)

"எலுவ சிறாஅ ரேமமுறு நண்ப
புலவர் தோழ கேளா யத்தை
மாக்கட னடுவ ணெண்ணாட் பக்கத்துப்
பசுவெண் டிங்க டோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற்றா லெம்மே."

(குறுந்தொகை - ௧௨௯)

இவ்வாறு சொல்லக்கேட்ட பாங்கன் கழறும். கழறுத லென்பது அன்புடையார்மாட்டுத் தீயன கண்டால் அவ்வன்பிற் றலைப்பிரியாத சொற்களால் நெருங்குவது.

கழறியுரைத்தல்.

கழறுமாறு: குன்றம் உருண்டாற் குன்றிவழியடையாகாதவாறு போலவும், யானை தொடுவுண்ணின் மூடுங்கலம் இல்லது போலவுங், கடல்வெதும்பின் வளாவுநீ ரில்லதுபோலவும், எம்பெருமான் நின் உள்ளம், அறிவு நிறை யோர்ப்புக் கடைப்பிடியின் வரைத்தன்றிக் கைம்மிக்கோடுமேயெனின் நின்னைத்தெருட்டற்பால நீர்மையாரும் உளரோ, நீ பிறரைத் தெருட்டினல்லது? அப்பெற்றியாய நீ இன்னதோரிடத்து இன்னதோருருவுகண்டு என்னுணர்வொழியப் போந்தே னென்றல் தக்கின்றென்னும். அதற்குச் செய்யுள்:

ஆய்கின்ற தீந்தமிழ் வேந்த னரிகே சரியணிவான்
றோய்கின்ற முத்தக் குடைமன்னன் கொல்லியஞ் சூழ்பொழில்வா
யேய்கின்ற வாயத் திடையோ ரிளங்கொடி கண்டெனுள்ளந்
தேய்கின்ற தென்ப தழகிய தொன்றோ சிலம்பனுக்கே. (௨௮)

தண்டே னறைநறுந் தார்மன்ன ராற்றுக் குடிதளரத் [ல்வாய்
திண்டேர் கடாஅய்ச்செற்ற கொற்றவன் கொல்லிச் செழும்பொழி
வண்டேய் நறுங்கண்ணி யாயங்கொர் மாதர் மதிமுகநீ
கண்டே தளரினல் லாரினி யாரிக் கடலிடத்தே. (உகூ)

இவ்வாறு பாங்கன்கழறத் தலைமகன் ஆற்றானாய்க் கழற்றெதிர்மறை. சொல்லுஞ் சொற்கள் கழற்றெதிர்மறை யென்பது. அதற்குச் செய்யுள்:

விண்டார் படவிழி ஞக்கடற் கோடியுள் வேல்வலங்கைக் [கும்
கொண்டான் குடைமன்னன் கொல்லிக் குடவரைக் கொம்பரொக்
வண்டார் குழன்மட மங்கை மதர்வைமென் னோக்கமென்போற்
கண்டா ருளரே லுரையார் *பிறவின்ன கட்டுரையே. (நo)

†விண்டலங் கெஃகொடு கோட்டாற்றி னின்றவெவ் வேந்தழித்திம்
மண்டலங் காக்கின்ற மான்றேர் வரோதயன் வஞ்சியன்னார்
குண்டலஞ் சேர்ந்த மதிவாண் முகத்த கொழுங்கயற்கண்
கண்டிலிர் கண்டா லுரையீர் கழறிய கட்டுரையே. (நக)

மண்கொண்டு வாழ ‡வலித்துவந் தார்தம் மதனழித்துப்
புண்கொண்ட நீர்மூழ்கப் பூலந்தை வென்றான் புகாரனைய
பண்கொண்ட சொல்லம் மடந்தை முகத்துப்பைம் பூங்குவளைக்
கண்கண்ட பின்னை யுரையீ ருரைத்தவிக் கட்டுரையே. (நஉ)

"அம்ம வாழி கேளிர் முன்னின்று
கண்டனி ராயிற் கழறலிர் மன்னோ
நுண்டாது பொதிந்த செங்காற் கொழுமுகை
முண்டகங் கெழீஇய மோட்டுமண லடைகரைப்
பேஎய்த் தலைஇய பிணரரைத் தாழை
யெயிறுடை நெடுந்தோடு ||காப்பப் பலவுடன்

* 'உரைத்தவிக் கட்டுரையே' என்பதும் பாடம்.

† இச்செய்யுள் முன் அச்சுப் பிரதியில் விடுபட்டிருக்கின்றது; வேறோர் ஏட்டுப்பிரதியிற் கண்டமையின் இங்கே சேர்க்கப்பட்டது.

‡ 'வலித்துடன் றார்தம்' என்பதும் பாடம்.

|| 'காய' என்பதும் பாடம்.

*வயிறுடைப் போது வாலிதின் † விரைஇப்
புலவுப் பொருதழித்த பூநாறு ‡ பரப்பி
னிவர்திரை தந்த வீர்ங்கதிர் முத்தங்
கவர்நடைப் புரவிக் கால்வடுத் தபுக்கு
நற்றேர் வழுதி கொற்கை முன்றுறை
வண்டுவாய் திறந்த வாங்குகழி நெய்தற்
போது புறக்கொடுத்த வுண்கண்
மாதர் வாண்முக மதைஇய நோக்கே." (அகம் - கஙo.)

"இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
$ நிறுக்க லாற்றினோ நன்று மற்றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையி லூமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே." (குறுந்-ருஅ)

இவ்வாறு தலைமகன் தனதாற்றாமையிற் கழற்றெதிர் மறுத்துரைப்பதுகேட்ட பாங்கன், எம்

கவன்றுரைத்தல். பெருமான் தானே தகாதனவற்றைத் தகா வென்றுணரற்பாலான், யான் எம்பெருமாற் குத் தக்கதோ இவ்வாறு உண்மெலிவெதெனவுந் தெருண்டி லன்; தெருளானாயது தான் காணப்பட்ட உருவும் அந்நீர் மைத்தாகவே; அன்றாயின் தெருளுமன்றேயெனக் கவன் றான். கவற்சிக்குச் செய்யுள் :

வன்றாட் களிறு கடாஅயன்று வல்லத்து ‖மன்னவியச்
சென்றான் கருங்கயல் சூட்டிய சென்னிச்செம் பொன்வரைபோ

---

* 'வயிறிடைப் போது' என்பதும் பாடம்.
† 'விரிந்து' என்பதும் பாடம்.
‡ 'வரைப்பின்' என்பதும் பாடம்.
$ 'நிறுக்க லாற்றி னொன்று மற்றில்லை' என்பதும் பாடம்.
‖ 'மன்னிரிய' என்பதும் பாடம்.

னின்று னிறையு மறிவுங் கலங்கி நிலைதளரு
மென்றாற் றெருட்டவல் லாரினி யாரிவ் விருநிலத்தே. (டுடு)

இவ்வகை சிந்தித்து இவனை இடனன்றிக்கழறினன், என்பாக்கியம்பிற கழற்றெதிர் மறுத்துச் இயலிடங்கேட்டல். சொல்வானாயிற்று, சொல்லாது இறந்துபட்டானாயினுஞ் செய்வதில்லை, பெரியதோர் இழுக்கஞ் செய்தேனென ஆற்றானாயினான். அவ்வாற்றாமை ஆற்றுவதொன்றனைப் பற்றும்; யான் இறந்து பட்டவிடத்து இவனை இஃதெய்துவிக்கலாகாது; யான் இறந்து படாது ஆற்றுவதே பொருளென இறந்துபடானாய்நின்று எவ்விடத்து எத்தன்மைத்து நின்னாற் காணப்பட்ட உருவென்னும். அதற்குச் செய்யுள் :

வல்லிச் சிறுமருங் குற்பெருந் தோண்மட வார்வடிக்கண்
புல்லிப் பிரிந்தறி யாதமந் தாரத்தெங் கோன்புனனாட்
டல்லித் தடந்தா மரைமல ரோவவன் றன்னணியார்
கொல்லிக் குடவரை யோவண்ணல் கண்டதக் கொம்பினையே. (டுச)

கண்டார் மகிழுங் கடிகமழ் தாமரை யோகடையல்
விண்டார் விழுநிதிக் குப்பையும் வேழக் குழாமும்வென்று
கொண்டான் மழைதவழ் கொல்லிக் குடவரை யோவுரைநின்
னொண்டா ரகல மெலிவித்த மாத ருறைவிடமே. (டுரு)

அங்ஙனங் கேட்ட தலைமகன் கோடையால் தெறப்பட்டு வாடி நின்ற சந்தனமரம் மழைபெற்றுத் இயலிடங்கூறல். தளிர்த்தாற்போலப் பெரியதோர் கழியுவகைமீதூர இவ்விடத்து இத்தன்மைத்து என்னாற் காணப்பட்ட உருவமென்னும். அதற்குச் செய்யுள்:

அடிவண்ணந் தாமரை யாடர வல்கு லரத்தமங்கை [கரும்பின்
கொடிவண்ண நுண்ணிடை கொவ்வைச்செவ் வாய்கொங்கை கோங்

படிவண்ணஞ்செங்கோற்பராங்குசன் கொல்லிப்பைம் பூம்பொழில்
வடிவண்ணவேற்கண்ணினுலென்னை வாட்டியவாணுதற்கே. [வாய்

திருமா முகந்திங்கள் செங்கய லுண்கண்செம் பொற்சுணங்கோர்
வருமா முலைமணிச் செப்பிணை வானவன் கானமுன்னக்
குருமா நெடுமதிற் கோட்டாற் றரண்கொண்ட தென்னன்கன்னிப்
பெருமான் வரோதயன் கொல்லியஞ் சாரலப் பெண்கொடிக்கே.

கடித்தடம் விண்ட கமல முகங்கம லத்தரும்பேர்
பொடித்தடங் காமுலை பூலந்தைத் தெம்மன்னர் பூவழிய
விடித்தடங் காவுரு மேந்திய கோன்கொல்லி யீர்ம்பொழில்வாய்
வடித்தடங் கண்ணிணை யாலென்னை வாட்டிய வாணுதற்கே.(நஅ)

*நிணங்கொள் புலாலுணங்க னின்றுபுள் ளோப்புத றலைக்கீடாகக்
கணங்கொள்வண் டார்த்துலாங் கன்னி நறுஞாழல் கையி †லேந்தி
மணங்கமழ் பூங்கானன் மன்னிமற் றாண்டோ
ரணங்குறையு மென்பதறியே னறிவேனே லடையேன் மன்னே.

இவ்வாறுணர்த்தப்பட்ட பாங்கன் நீ இனையையாகல், என்னினுவதுண்டேற் காண்பெனென்று தலைமகனை ஆற்றுவித்து, அவன் சொன்ன இடம் நோக்கிச் செல்வானுவது.

இது தலைமகனிலைமை.

இனித் தலைமகளது நிலைமை: பிற்றைஞான்று தன் ஆயவெள்ளத்தொடும் வந்து தான் விளையாடும் இடம்புகுதலுடையாள், நெருநலைநாளால் நின்னிற்பிரியேன் பிரியின் ஆற்றேனென்று சொல்லினுர் ஆயத்துள்ளே வருவார் கொல்லோவென்னும் பெருநாணினுனும், ஆற்றுமையான் இறந்துபட்டார் கொல்லோவென்னும் பேர்அச்சத்தினுனும் மீதூரப்பட்டுத் தன்றன்மையளன்றித் தன் ஆயங்கள் புடை

*சிலப்பதிகாரம், கானல்வரி, கூ-வது செய்யுள்.

†'லூன்றி' என்பதும் பாடம்.

பெபருமாறு புடைபெயர்ந்துவருகின்ருள், நெருநலை நாளால் தலைமகனை வழிப்பட்ட இடம் எதிர்ப்படும். எதிர்ப்பட்டுத் தலைமகனைக் கண்டாளே போன்ருள். என்னை? இனியா ரொடு தலைப்பெய்த இடங்கண்டாலும் அவ்வினியாரைக் கண்டாலேபோல்வது உலகத்துத்தன்மை. அவ்வாறு நிற்ப, ஆயங்களும் நெருநலைநாளாற் பிரிந்தாற்போலத் தழைவிழை தக்கன *தொடுத்து மென்றுங், கண்ணி தண்ணறுநாற்றத் தனசெய்துமென்றும், போது மேதக்கன கொய்துமென் றும், இவ்வாறு விளையாட்டு விருப்பினுற் பிரியும். பிரிய நின் ருள் எப்பெற்றி நின்ருளோவெனின், ஆயத்துள்ளே வரு வான்கொல்லோவென்னும் நாண் நீங்கிற்று. என்னை? ஆயங் கள் நீங்கினமையான். இனி இறந்துபட்டான் கொல்லோ வென்னும் அச்சத்தினுன் மீதூரப்பட்டு நின்ருள். நின்ற நிலைமைக்கட் பாங்கன் சென்று அவள் தன்னைக் காணுமல் தான் அவளைக் காண்பதோர் அணிமைக்கட் காணும். கண்டு இவ்விடமே அவனுற் காணப்பட்ட இடமும், இவ்வுருவே அவனுற் சொல்லப்பட்ட உருவுமெனத்துணியும். அதற்குச் செய்யுள் :

தண்டா தலர்கண்ணி யண்ணறன் னுள்ளந் தளர்வுசெய்த
வண்டார் குழலிவ ளேயவள் மானீர் மணற்றிமங்கை
விண்டா ருடற்குன்ற மேறி விழிகட்†கழுகுறங்கக்
கண்டான் பொதியி லிதுவே யவன்சொன்ன கார்ப்புனமே. (ங௯)

சினமு மழிந்து செருவிடைத் தோற்றதெவ் வேந்தர்கள்போய்க்
கனவும் படிகடை யற்செற்ற வேந்தன் கணங்குழலார்
மனமும் வடிக்கண்ணுந் தங்குமந் தாரத்து மன்னன்கொல்லிப்
புனமு மிதுவிவ ளேயவன் ருன்கண்ட பூங்கொடியே. (சo)

---

* 'கொடுத்து மென்றும்' என்பதும் பாடம்.

† 'கழுதுறங்க' என்பதும் பாடம்.

என நினைந்துநின்று இவ்வுருவினைக்கண்ட எம்பெருமான்
* ஆற்றாகாமைக்குக் காரணமென்னை?
தலைவனை வியந்துரைத்தல். பெரியவர்க்கே ஆகாதே! அரியனதாங் கற்று வல்லன் அவனாகலான் ஆற்றினான்.
பிறராயின் இறந்துபடுப. இறந்துபடாது என்காறும் †வந்த இருந்துணைப் பெருந்தக்கானை யான் பெரியதோரிடனன்றிக் கழறினேனென நினைக்கும். அதற்குச் செய்யுள்:

இருநெடுந் தோளண்ண லேபெரி யான்வல்லத் தேற்றதெவ்வர்
வருநெடுந் தானையை ‡வாட்டிய கோன்கொல்லி மால்வரைவாய்த்
திருநெடும் பாவை யனையவள் செந்தா மரைமுகத்துக்
கருநெடுங் கண்கண்டு மாற்றிவந் தாமென்னைக் கண்ணுற்றதே.

பெரிய நிலைமை யவரே பெரியர் பிறையெயிற்றுக்
கரிய களிறுந்தி வந்தா ரவியக் கடையல்வென்ற
வரிய சிலைமன்னன் மான்றேர் வரோதயன் வஞ்சியன்னா
ளரிய $மலர்நெடுங் கண்கண்டு மாலண்ண லாற்றியதே. (சஉ)

மற்றிவ்வகையுஞ் சிந்திக்கும்.

‖துறைமேய் வலம்புரி தோய்ந்து மணலுழுத தோற்ற மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து நுண்டாது போர்க்குங்கானல்
நிறைமதி வாண்முகத்து நேர்கயற்கண் செய்த
வுறைமலியுய்யாநோயூர்சுணங்குமென்முலையே தீர்க்கும்போலும்.

"மணங்கமழ்குழலிவள்வடிக்கண்செய்தமம்மர்வெங்நோய்
சுணங்கணிவனமுலையல்லது தீர்க்கலா"

---

* 'ஆற்றுதற்கு' என்பதும் பாடம்.
† 'வருந்துணைப் பெருந்தக்கானை' என்பதும் பாடம்.
‡ 'மாற்றிய' என்பதும் பாடம்.
$ 'கயல்நெடுங்கண்" என்பதும் பாடம்.
‖ சிலப்பதிகாரம், கானல்வரி அ-வது செய்யுள்.

என நினைந்து ஆற்ருனாயினும், இறந்துபடானாயினன், அவனை அஃதெய்துவிக்குந் திறமென்னை
உண்டமைகூறல். கொல்லோ வென்பதனன். அவ்வகை நினைத்துத் தலைமகனைச்சென்றெய்தி, யான்கண்ட
இடம் மேதக்கதேகாண்;

இரவோ ரன்ன கொழுநிழற் ருஅய்
நிலவோ ரன்ன வெண்மண லொழுகி
வண்டுந் தேனும் வரிக்கடைப் பிரசமுங்
கொண்டு புணர்நரம் பென்று முரன்று
விழைவு விடுத்த விழுமி யோர்க்கும்
விழைவு தோற்று விக்கும்

பண்பிற்றென்னும். அதற்குச் செய்யுள்:

மின்னே ரொளிமுத்த வெண்மணன் மேல்விரை நாறுபுன்னைப்
பொன்னேர் புதுமலர்த் தாய்ப்பொறி வண்டு முரன்றுபுல்லா
மன்னே ரழிய மணற்றிவென் ருன்கன்னி வார்துறைவாய்த்
தன்னே ரிலாத தகைத்தின் றியான்கண்ட தாழ்பொழிலே. (சந)

களிமன்னுவண்டுளர்கைதை*வளாஅய்க்கண்டல்விண்டுதண்டேன்
றுளிமன்னு வெண்மணற் பாயினி தேசுட ரோர்மருமா
னளிமன்னு செங்கோ †லதிரிய ஞற்றுக் குடியுள்வென்ற
வொளிமன்னு முத்தக் குடைமன்னன் கன்னி யுயர்பொழிலே. ()

தேனுறை பூங்கண்ணிச் சேரலன் சேவூ ரழியச்செற்ற
வூனுறை வைவே லுசிதன்றன் வையை யுயர்மணன்மேற்
கானுறை புன்னைப்பொன் னேர்மலர் சிந்திக் கடிகமழ்ந்து
வானுறை தேவரு மேவும் படித்தங்கொர் வார்பொழிலே (சரு)

என்பது சொல்லி, நீயாகாதே இவ்வகை மேதக்கன எய்தற்பாலா யெனத் தலைமகனும் அவ்விடம்

---

* 'விராய்' என்பதும் பாடம்.

† 'அதிசயன்' என்பதும் பாடம்.

மொழிபெற வருந்தல். நோக்கிச் செல்லும். சென்றவிடத்துத் தனி யளாய்நின்ற தலைமகளை எதிர்ப்படும். எதிர்ப் படவே, தலைமகள் காணும். காணவே, ஆற்றாமையான் இறந்துபட்டான் கொல்லோ வென்னும் அச்சம் நீங்கிற்று. நீங்கத் தன்றன்மையளாயினாள். தன்றன் மை யென்பது நாண் மடம் அச்சம் பயிர்ப்பென்னு மிவற் றொடு கூடி நிற்பது. அத்தன்மையளாய் நிற்பத் தலைமகளது குறிப்பறியாமைச் சாரலாகாமையின் ஆற்றானாயினான் தலை மகன். ஆற்றாமையாவது பிறிதெவ்வுணர்வுமின்றி அவ்வாற் றாமைதானேயாவது. அவ்வாற்றாமை ஆற்றுவதொன்றனைப் பற்றும். ஆற்றுவது பிறிதின்மையின் ஒருசொற்சொல்லும். என்சொல்லுமோவெனின், நின்னை யான் இப்பொழிலுறை தெய்வமென ஐயுறுவல், அல்லையாயின் வாய்திறவாய். ஆவி சென்றபின்னைப் பெயர்ப்பதரிதன்றே யென அவ்வகை போல்வன சொல்லும். அதற்குச் செய்யுள் :

மேவியொன் னாரைவெண் மாத்துவென் றான்கன்னிவீழ்*பொழில்வா
தேவியென் றுநின்னை யானினைக் கின்றது சேயரிபாய் [ய்த்
காவிவென் றாயகண் ணாயல்லை யேலொன்று கட்டுரையா
யாவிசென் றாற் † பின்னை யாரோ பெயர்ப்ப ரகலிடத்தே. (௬௬)

திரையுறை வார்புனற் சேவூர்ச் செருமன்னர் சீரழித்த
வுரையுறை தீந்தமிழ் வேந்த னுசிதனொண் பூம்பொதியில்
வரையுறை தெய்வமென் றேற்கல்லை யேலுன்றன் வாய்திறவாய்
விரையுறை கோதை யுயிர்செல்லின் யார்பிறர் மீட்பவரே. (௬௭)

---

* 'துறை' என்பதும் பாடம்.

† 'பெயர்ப்பாரினியா ரிவ்வகலிடத்தே' என்பது முன் அச்சுப் பிரதியிற் கண்ட பாடம்.

என்றான் தலைமகனோவெனின் அல்லன்; தலைமகனிடனாகப் பிறந்த ஆற்றாமை. அதுவுந் தலைமகனெனவேபடும். அச்சொற் கேட்டலும் இறந்துபட்டானெனக் கவன்று நோக்கி உண்மை கண்டாட்குக் கெடுத்துத் தேடு நன்கலம் எடுத்துக் கொண்டாற் போலப் பெரியதோர் * உவகையாயிற்று; ஆக அவ்வுவகை ஒரு மூரன் முறுவல் தோற்றிற்று; தோற்ற எம்பெருமான் முன்னர்ப் பெரியதோர் நாணின்மை செய்தேனென ஆற்றாளாயினாள். யான் முன் என்றன்மையேனாய் நிற்ப ஆற்றானாயினான் எம்பெருமான்; எனதாற்றாமை கண்டவிடத்து இறந்துபடும்பிற வென ஆற்றாமை நீங்கும். நீங்க, நாண்வந்தடையும். அடைய, மறைவது காணாது மாதுபடுநோக்கி தன் மணிக்காந்தண் மெல்விரலாற் போதுபுரைநெடுங்கண் புதைத்தாள். புதைப்ப, இனிச் சார் வாற்றுமென நினைந்து நின் கருநெடுங்கண் புதைத்தது இவற்குப் பெரியதோர் ஆற்றாமை செய்யுமென்றாகாதே? அவற்றின் பரத்தவோ சுரும்புடைக்கோதை நின் கரும்புடைத்தோளென்னும். அதற்குச் செய்யுள் :

மருங்கணைதல்.

அரும்புடைத் தொங்கற்செங் கோலரி கேசரி கூடலன்ன
சுரும்புடைக் கோதைநல் லாயிவற் குத்துயர் செய்யுமென்றான்
பெரும்புடைக் கண்புதைத் தாய்புதைத் தாய்க்குநின்பேரொளிசேர்
கரும்புடைத் தோளுமன் றேவென துள்ளங் கலக்கியதே. (சஅ)

---

* இச் சொற்றொடர்கள் முன்னச்சுப்பிரதியில் இல்லை; வேறோர் ஏட்டுப்பிரதியிற் காணப்பட்டன: இவைகள் இல்லாமையான் முன் னச்சுப்பிரதியில் இப்பகுதி பொருட்பேறின்றிக் கிடக்கின்றது. ஈண்டுச் செய்யப்பட்ட ஏனைய திருத்தங்களும் வேறோர் ஏட்டுப்பிரதிக்கு இணங்கவே செய்யப்பட்டிருக்கின்றன.

தேந்தண் பொழிலணி சேவூர்த் திருந்தார் திறலழித்த
வேந்தன் விசாரிதன் றெவ்வரைப் போன்மெலி விக்குமென்றூன்
பூந்தடங் கண்புதைத் தாய்புதைத்தாய்க்குன்பொருவில்செங்கேழ்க்
காந்தள் விரலுமன்றே வெம்மை யுள்ளங் கலக்கியதே. (சுக)

"சொல்லிற் சொல்லெதிர் கொள்ளா யாழநின்
றிருமுக மிறைஞ்சி நாணுதி கதுமெனக்
காமங் கைம்மிகிற் றாங்குத லெளிதோ
கொடுங்கே ழிரும்புற நடுங்கக் குத்திப்
புலிவிளை யாடிய புலவுநாறு வேழத்தின்
றலைமருப் பேய்ப்பக் கடைமணி சிவந்தநின்
கண்ணே கதவ வல்ல நண்ணா
ரரண்டலை மதில ராகவு முரசுகொண்
டோம்பரண் கடந்த *வடுபோர்ச் செழியன்
பெரும்பெயர்க் கூட லன்னநின்
கரும்புடைத் தோளு முடையவா லணங்கே."

(நற்றிணை-நகக.)

என்பதுசொல்லி அவள் குழலுங் கோதையுந் திருத்து வானாய்ச் சென்று சாரும்.//

இது பாங்கற்கூட்டமாயினவாறு.

//இனிப் பாங்கிலன் தமியோள் இடந்தலைப்படுமாறு:

பொழிலிடைச் சேறல்.

யான் இவளையெய்திற்று விதியானே; இன்னும் அவ்விதி கைதருமேற் காண்பலெனப் பாங்கற்குச் சொல்லாதே தான் முன்னெதிர்ப்பட்ட இடமேநோக்கிச் செல்லும்.

அதற்குச் செய்யுள்:

ஆமா றறிபவர் யாரே விதியையந் தீந்தமிழ்நர்
கோமான் குலமன்னர் கோனெடு மாறன்கொல் லிச்சிலம்பி
லேமாண் சிலைநுத லேழையை முன்னெதிர்ப் பட்டணைந்த
தூமா ணிரும்பொழி லேயின்னும் யான்சென்று துன்னுவனே. (கூo)

---

* 'திண்டேர்ச்செழியன்' என்பதும் பாடம்.

பெரும்பான் மையுமறி தற்கரி தாம்விதி பேணிநில்லாப்
பொரும்பா ரரசரைப் பூலந்தை *வாட்டிய கோன்பொதியிற்
கரும்பார் மொழிமட மாதரைக் கண்ணுற்று முன்னணைந்த
சுரும்பாரிரும்பொழி லேயின்னும் யான்சென்று துன்னுவனே. (௫௧)

என நெருநலைநாளால் அவளைக் கண்ணுற்ற பொழிலே புக்கான். புக்காற்கு, அப்பொழில் பெரியதோர் சார்வாயிற்றாக, ஆற்றாமை நீங்கினான். என்னை? இனியாரொடு தலைப்பெய்த இடங் கண்டாலும் அவ்வினியாரைக் கண்டாலே போலும் என்னும். அதற்குச் செய்யுள் :

பொழில்கண்டு உவத்தல்.

துனிதா னகலமண் காத்துத் தொடுபொறி யாயகெண்டை
பனிதாழ் †வடவரை மேல்வைத்த பஞ்சவன் பாழிவென்ற
குனிதாழ் சிலைமன்னன் கூடலன் னாளது கூடலைப்போ
லினிதா யெனதுள்ள மெல்லாங் குளிர்வித்த தீம்பொழிலே. (௫௨)

தேர்மன்னு தானை பரப்பித்தென் சேவூர்ச் செருமலைந்த
போர்மன்னர் தம்மைப் புறங்கண்டு நாணிய பூங்கழற்கா
லார்மன்னு வேலரி கேசரி யந்தண் புகாரனைய
வேர்மன்னு கோதையைப் போலினி தாயிற்றிவ் வீர்ம்பொழிலே.

என்று முன் பாங்கற்கூட்டத்துச் சொன்னவாறே சென்றுநின்ற தலைமகளை ஆங்குச்சொன்னவாறே சொல்லித் தலைமகன் புணர்வது. இது பாங்கிலன் தமியோள் இடந் தலைப்படுமாறு.

"பாங்கற்கூட்டம் நிகழின், இடந்தலைப்பாடு நிகழாது; இடந்தலைப்பாடு நிகழின், பாங்கற்கூட்டம் நிகழாது. என்னை? அத்துணை எளியள் அல்லளாகலான். அஃதே யெனின், 'பாங்கிலன் தமியோள் இடந்தலைப்படலும் பாங்க

* 'ஓட்டிய' என்பதும் பாடம்.
† 'பருவரை' என்பதும் பாடம்.

ஞரிற் குறிதலைப்பெய்தலு' மென்று எழற்பாற்றுச் சூத்திரம் ; என்னை ? இடந்தலைப்பாடு தெய்வப்புணர்ச்சியோடு ஒக்குமாகலான். என்றார்க்கு அதுவே அங்ஙனஞ் சொன்னனேயெனினும் மொழிமாற்றிக்கொள்கவென்பது. அது பொருந்தாது; மொழி மாற்றுதல் என்பது செய்யுள் கிடந்தவாறுசெய்யலாகாதவழிச்செய்வது. அவ்வாறு செய்யுஞ் சூத்திரம் இனிதாய்க்கிடப்புழி மொழிமாற்றுச் சூத்திரமாகச் * சொல்ல வேண்டுமோ என்பது. பெரும்பான்மையும் பாங்கனுமென்பது சிந்திக்குஞ், சிறுபான்மை விதியினனுமென்பது சிந்திக்கும். அதனால் அவன் சிந்திக்குமாற்றாலே சூத்திரஞ்செய்யப்பட்டது. மொழிமாற்றுச் சூத்திரம் அன்றென்பது. அல்லதூஉம் உலகத்தோர் இடுக்கணுற்றால் விதியானே தீருமென்றிரார், முன்னந் தீர்த்தற்குச் சுற்றத்தாரையும் நட்டாரையும் நினைப்பர் ; ஆகலானும் அவ்வாறே சொல்லப்பட்டது. அஃதேயெனின், புறத்தார் உணர்ந்தாருளரென்பது உணர்ந்த ஞான்று இவள் இறந்து படுமென்னுங் கருத்துடையான் பிற்றை ஞான்றே சென்று பாங்கற்குணர்த்தற்பாலனே வெனின், குற்றங் குணமென்பது தெருளாதுணர்த்துமென்னும் ஒருவன். அது பொருந்தாது. அங்ஙனந் தெருளாதுணர்த்திற் பாங்கற்கே உணர்த்தக் கடவனே வழிப்போவார்க்கு உணர்த்த அமையாதோவென்பது. மற்றென்னேவெனின், தான் உணர்ந்தானன்றே இவ்வொழுக்கத்தினை ! தான் உணர்ந்ததனே டொக்குமன்றே இவன் உணர்ந்தது! அவனைத் தன்னின் வேறல்லனென்று கருதினமையானமையும் என்பது.

---

* இப்பகுதி முன்னச்சுப்பிரதியிற் பொருட் பொருத்த மின்றாய்ப் பலவாறு பிறழ்ந்து கிடக்கின்றது; ஆதலின் வேறொரு பிரதி நோக்கி இங்கே பலதிருத்தங்கள் செய்யப்பட்டன.

இனிப் பாங்கனுற் குறிதலைப்பெய்தலும் என்றொரு மைப்படச் சூத்திரஞ்செய்யாது 'பாங்கனோரி'னென்று பன்மைப்படக்கூறிய தெற்றிற்கு, அவனொருவனுலோவெனின், பாங்கன் பார்ப்பானுகலிற் பன்மைவாசகத்தாற் சொன்னுரென்பது. அல்லதூஉம், இருமுது குரவராலும் இவனை எம்போற் கொண்டொழுகென்று தலைமகற்குக் காட்டிக் கொடுக்கப்பட்டான் பாங்கனென்பதூஉம், நீயும் எம்போலத் *தீயனகண்டு பண்பானவிடத்து அடக்குவாயாகென்று பாங்கற்குக் காட்டிக்கொடுக்கப்பட்டான் தலைமகனென்பதூஉம் போதரல்வேண்டி இவ்வாறு பன்மைவாசகம்படச் சொன்னுரென்பது. அஃதேயெனின், இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பிற்றைஞான்று இவளது வேறுபாடு கண்டு தாய் இற்செறிக்கில் என் செய்புமோவெனின், பார்ப்பார் சான்றோரை முன்னிட்டு அருங்கலங்களோடு பாங்கன் சென்று வரைந் தெய்துவிக்கும். அங்ஙனங் கிடந்ததே விதியென்னின், அன்று; இவ்வாற்ருற் புணர்தன்முறைமையாக்கும் விதியெனில் தாய்க்கு அது புலனுகாமைக்கொள்ளு மென்பது. அஃதேயெனின், ஆயங் கழிக்கானலிடையே கொண்டு புகுதாது மற்றொரு கானலிடமே கொண்டு புக்கவிடத்துத் தலைமகன் குறியும் பிழைக்கும், பாங்கன்சென்ற செலவும் பிழைக்கும்; இவையெல்லாமாம் பிறவெனின், அதுவன்று; அவ்வாறு படினும் வரைந்துபுகும்; அதுவன்றிப் பிற்றைஞான்று இக்கூட்டம் நிகழ்விப்பான் நின்ற விதி பிறிதோர் கானலிடங்கொண்டுபுக உள்ளம் பிறப்பிக்குமோவென்பது. அஃதேயெனின், இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த பிற்றை ஞான்று பாங்கன் தலைமகனைக்கண்டு

---

* ஈண்டைப் பொருட்கு இன்றியமையாத இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை.

எற்றினானாயிற்று நினக்கு இவ்வேறுபாடென்று வினவினவாறுபோல, அன்றேயானும் பிற்றைஞான்றேயானுந் தலைமகளது வேறுபாடு கண்டு நினக்கு இஃதெற்றினானாயிற்றென்று தோழி வினவாமைக்குக் காரண மென்னையோ வெனின், தலைமகளது வேறுபாட்டை விதி தோழிக்குப் புலனாகாமைக் காக்குமென்பது. ஆயின் தலைமகன் மாட்டு வேறுபாட்டையும் விதி பாங்கற்குப் புலனாகாமைக் கொள்ளற்பாற்று, அன்றாகிற் காரணங் கூறற்பாற்றெனின், விதிக்குக் காரணங் கூறற்பாற்றன்றென்பது; காரணங் கூறினும் பாங்கற்குப் புலனாகலானாய பயனுண்டு; அக்கூட்டம் பாங்கனறிந்து வினவமுடியும். தோழி தலைமகண்மாட்டு வேறுபாடுகண்டறிந்து வினவப் பாங்கற்கூட்டம் முடியாமையின் தோழி தன்னா லாவதும் இல்லை. இது காரணமென்பது. அஃதேயெனின், 'ஆங்கவிரண்டே தலைப்பெய'லென அமையாதோ, 'மரபு' என்றது எற்றிற்கோவெனின், தலைப்பெயற்கு இலக்கணமென்றவாறு. மரபெனினும் இலக்கணமெனினும் எல்லாம் ஒருபொருட் பன்மொழி யென்றவாறு.

௪. அவ்வியல் பல்லது கூட்டக் கூட
லெவ்விடத் தானுங் களவிற் கில்லை.

என்ப தென்னுதலிற்றோ வெனின், இந்நூலகத்துக் களவினது இலக்கணத்தையுங் கற்பினது இலக்கணத்தையுந் தொகுத்துணர்த்துதனுதலிற்று.

சூத்திரக்கிடக்கை நான்குவகைப்படும், ஆற்றொழுக்கமும் அரிமாநோக்கமுந் தவளைப்பாய்த்தும் பருந்து வீழ்க்காடுமென. அவற்றுள் ஆற்றொழுக்கென்னுஞ் சூத்திரக்கிடக்கை ஆற்றுநீர் தொடர்பறாது ஒழுகுமாறு போலச் சூத்திரங்களுந் தம்முள் இயைபுபட்டொழுகுவது. சிங்க

நோக்கென்பது முன்னோரையும் பின்னோரையும் நோக்குஞ் சிங்க நோக்கம், அதுபோல இறந்ததனோடும் எதிர்வதனோடும் இயைபுபடக்கிடப்பது. தவளைப்பாய்த்தென்பது தவளைபாய்கின்றுழி இடையிடை நிலங்கிடப்பப்பாயும், அதுபோலச் சூத்திரம் *இடையிட்டுப்போய் இயைபுகொள்வது. பருந்தின் வீழ்க்காடென்பது தான் கருதினபொருளை எங்கானும் வீழ்ந்து கொண்டுபோம் பருந்து போல இதுவுந் தான் கருதிமுடிக்கும் பொருளை முடித்துப்போம் இயைபின்றியேயென்பது. இஃது அவற்றுட் சிங்கநோக்கென்றுகொள்க. என்னை காரணமெனின், இறந்த பாங்கற்கூட்டத்தினையும் நோக்கி வருகின்ற தோழியிற்கூட்டத்தினையுங் கற்பினையு மெல்லாம் நோக்கிற்றாகலானென்பது.

இதன் பொருள்: அவ்வியல்பல்லது—மேற்கூறப்பட்ட இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த இயல்பல்லது; கூட்டக்கூடல்—ஒருவர் இடை நின்று புணர்ப்பாருளராகப் புணர்தல்; எவ்விடத்தானுங் களவிற்கு இல்லை—எந்நேரத்துக்கண்ணுங் களவெனப்பட்ட ஒழுக்கத்திற்கில்லை, என்றவாறு.

எனவே, உலகினுள் ஒருவனோ டொருத்தியிடை நிகழும் ஒழுக்கமன்று, கூட்டவும் நிகழ்ந்து கூட்டாமையும் உலகினுள் நிகழ்தலுடைமையால்; இது புலவரால் நாட்டப்பட்ட ஒழுக்கமென்பது அறிவிக்கப்பட்டதென்பது. 'கூட்டக்கூடல் எவ்விடத்தானுங் களவிற் கில்லை' யெனவே †கூட்டாமைக் கூடல் கற்பினுக்கில்லையென்பதாம். தலைமகன் உலாப்போயின இடத்துப் பரத்தையர்மாட்டுப் பிரிந்தானென்றுகருதி ஒரு சிவப்புண்டாம். அச்சிவப்பு நீக்கி வாயில்

---

* 'இடைவிட்டுக் கொள்வது' என்பதும் பாடம்.

† இங்கே முன் அச்சுப்பிரதியிலுள்ள பாடம் பொருட்கு இயைபில்லதா யிருக்கின்றது.

கள் கூட்டவே கூடுமென்பது. அஃதேயெனின் இஃதன்றே நெடுந்தொகைப்பாட்டினுட் "*கூர் முண் முள்ளி" கூட்டாமற் கூடிற்றெனின் அதுவுங் கூட்டவே கூடிற்று என்பது. ஆயின் எவ்வாயிலாற் கூடினானோவெனின், ஆற்றாமைவாயிலாற்கூடினான். கூடினவாறு அதனுரையகத்துக் கண்டுகொள்க. அஃதேயெனின், களவினுட் 'கூட்டக் கூடலில்லை' யென்றதெற்றாற்கோ? அங்கு ஆற்றாமை கூட்டக் கூடுப வென்றாமோவெனின், அங்கு ஆற்றாமை கூட்டுமே யெனினும் வாயிலிலக்கணமின்று. இங்கு வாயில் இலக்கணமுடைத்து; என்னை? வாயில்களும் அவளதுபொறாமை நீக்குவதன்றே செய்வது. இதுவும் அவளது பொறாமை நீக்கினமையின் அமையாதோவெனின் அமையாது; இங்கு வாயிலிலக்கண முடைத்தாகலின் அமையுமென்பது.

---

* 'கூர்முண் முள்ளிக் குவிகுலைக் கழன்ற-மீன்முள் ளன்ன வெண்கான் மாமலர்-பொய்தன் மகளிர் விழவணிக் கூட்டும்-அவ்வயனண்ணிய வளங்கே ழூரனைப்-புலத்தல் கூடுமோ தோழி யல்கற்-பெருங்கதவு பொருத யானை மருப்பி-னிரும்புசெய் தொடியி னேரவாகி-மாக்க ணடைய மார்பகம் பொருந்தி-முயங்கல் விடாஅ லிவையென மயங்கி-யானோ மென்னவு மொல்லார் தாமற்-றிவைபா ராட்டியப்ருவமுமுளவே-யினியே,புதல்வற் றடுத்த பாலொடு தடைஇத்-திதலை யணிந்த தேங்கொண் மென்முலை - நறுஞ்சாந் தணிந்த கேழ்கிள ரகலம் - வீங்க முயங்கல் யாம்வேண் டினமே - தீம்பால் படுதலு ருமஞ் சினரே-யாயிடைக், கவவுக்கை நெகிழ்ந்தமை போற்றி மதவுநடைச் - செவிலி கையென் புதல்வனை நோக்கி - நல்லோர்க் கொத்தனிர் நீயி ரிஃதோ-செல்வற் கொத்தனம் யாமென மெல்லவென்-மகன்வயிற் பெயர்தந் தேனே யதுகண் - டியாமுங் காதலமவற்கெனச் சாஅய்ச்-சிறுபுறங் கவையின னாக வுறுபெயற் - றண்டுளிக் கேற்ற பலவுழு செஞ்செய்-மண்போ னெகிழ்ந்தவற் கலுழ்ந்தே-நெஞ்சறை போகிய வறிவி னேற்கே'—அகநானூறு—உசா.

'அவ்வியல்பல்லது கூட்டக்கூடல் களவிற்கில்லை'யென அமையாதோ? 'எவ்விடத்தானும்' என்றதென்னோ வெனின், உணர்த்த உணர்தல் ஓரிடத்துண்டென்றற்குச் சொல்லினார். யாருணர்த்த உணர்பவோவெனின், தோழி புணர்ந்தமை தலைமகனுணர்த்தத் தலைமகளுணரு மென்பது. அஃதாமாறு: பகற்குறிவந் தொழுகாநின்ற தலைமகன் புணர்ச்சி யிறுதிக்கண் ஒருகால் தலைமகளைக் கோலஞ்செய்தான். செய்ய அவள் இறப்ப நாணினாள். நாணத், தலைமகன் கருதுவான், யான்செய்கின்றது இயற்கைக் கோலமல்லது போலும் என்றும் இவள் வேறுபடுகின்றதென உணர்ந்து அவளை ஆற்றுவித்தற்கு நின்றோழி செய்யுமாறே கோலஞ் செய்தேனெனச் சொல்லும். சொல்ல, ஒக்கும், இவர் என்றோழியொடு தலைப்பெய்துடையர்போலுமென உணர்வாளாவது. அவ்வாறு உணர்ந்தாள் பெருநாணினளாதலின் இறந்துபடாளோவெனின், இறந்துபடாள். இவளைத் தன்னின் வேறன்றிக் கருதுமாகலின். வேறன்றி உணரின், இவ்வொழுக்கந்தன்னை உணர்த்த அமையாதோவெனின், உணர்த்தாள், யான் காவற்குற்றப்பட்டேனெனத் தோழி கவலுமாகலின். *தலைமகன் உணர்த்தியதனாற் பயனென்னோ வெனின் நெடுங்கால மொழுகக் கருதுவான் யான் பிரிந்த பொழுது இவளை ஆற்றுவித்துக்கொண் டிருக்கு மென்பதனானும் மேல் தான் ஒருநாள் இதனை யறியும், அறிந்தக்காற் கதுமென ஆற்றாளாங்கொல்லோ வென்பதனானும், இவ்வாறுணர்த்த ஆற்றுதற்குக் காரணமா மென்பதனானும் உணர்த்தும். இது பொருந்தாதென்ப ஒருசாரார்; என்னை? பகற்குறிக்கண் இது நிகழுந்துணையும் நடவாது. இவ்வகை

---

* பொருட்கு இன்றியமையாத இச்சொற்றொடர் முன் அச்சுப் பிரதியில் இல்லை.

வந்த சான்றோர் செய்யுளும் இல்லை. ஆகலான், 'எவ்விடத்தானும் இல்லை' யென்பது நன்றுமறுத்தற்குச் சொல்லப்பட்டதாம், மிகையன்றென்பது. இனிக் 'கூட்டக்கூடல் களவிற்கில்லை' யென்றிராற், பாங்கற்கூட்டந் தோழியிற் கூட்டமென்று பேரிட்ட தெற்றிற்கோவெனின், அவர் துணையாயினமையின் அவ்வாறு சொல்லப்பட்டது. துணையாயினாரைக் கூட்டினாரென்னாமோவெனின், என்னும்; கூடும் இருவரும் அக்கருத்தின ரல்லராகலானென்பது. (௪)

௫. புணர்ந்த பின்றை யாங்ஙன மொழுகாது
பணிந்த மொழியாற் றோழி தேஎத்
திரந்துகுறை யுறுதலுங் கிழவோன் மேற்றே.

என்பதென்னுதலிற்றோவெனின், பாங்கனானும் தமியாளை இடத்தெதிர்ப்பட்டானும் புணர்ந்த தலைமகன் தான் பின்னைத் தெருண்டு வரைதல் தலை; அல்லாதுவிடின், இவ்வாறொழுகும் என்று அவனொழுகுந்திற முணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: புணர்ந்த பின்றை—பாங்கனானுந் தமியாளை இடத்தெதிர்ப்பட்டானும் புணர்ந்தபின்றை; ஆங்ஙனம் ஒழுகாது—பிற்றைஞான்றும் அப்பெற்றியே ஒழுகாது; பணிந்தமொழியால்—இழிந்தசொற்களான்; இழிந்த சொல்லென்பது ஒலிவாய்பாட்டின்னாமை நோக்கிப் பணிந்த மொழி யெனப்பட்டது. பணிந்த மொழியாமன்றே இத்தழைநல்ல இக்கண்ணிநல்ல வென்று இங்ஙனங் கையுறை பாராட்டிச் சென்றுநிற்றல்; தனக்குத்தகாதன்றே இழிந்தார்க்கன்றே அஃதுரியதென்பது. தோழி தேஎத்து—தோழிமாட்டு; இரந்து குறையுறுதலும் கிழவோன் மேற்

றே—இரத்தலுங் குறையுறுதலுஞ் செய்து நிற்றல் தலைமகற்குரித்து என்றவாறு.

இரத்தலென்பது குறையுடையார் செய்யுஞ் செய்கை செய்தொழுகுவது. குறையுறுதலென்பது இக்குறையிழைச்சியமையானென்பது படப் பசைந்தொழுகுதல்; இங்ஙனம் யெனின், அவளால் இக்குறை முடியுமென்றிரப்பாருட் முடியாதென் றிரக்குமோ வெனின், முடியுமென்றிலைமைக் யெனின் இவளை இகழ்ந்து மதித்தானும்; தோழியெஃ திறப குற்றேவல் மகள், அவளா லெய்தலாமென்று கருதினமை யானென்பது. இகழ்ந்து மதிப்பவே, அருமையும் பெருமையுங் காவலுமுடையாள், இவளை எத்திறத்தானும் எய்துவ தரிதென்று கருதினு னென்பதனொடு மாறுகொள்ளுமென் பது. இனி, முடியாதென்றிரக்குமேயெனின், இரத்தலானே பயமின்று. * ஒருவரால் ஒரு கருமம் ஆகாமையறிந்தே அவருழைச்சென்று அக்கருமத்திற்கு முயல்வார் நெறியறியாதாரன்றேயென்பது. மற்றென்னேவெனின், முடியும் முடியாதென்று சீர்தூக்கிக்கொண்டு இரப்பானல்லன், தனதாற்றாமை மீதூரப்பட்டிரக்குமென்பது. அஃதேயெனின், இவளால் முடியும் முடியாதென்று கருதானுகலாற் பிறரானும் முடியும் முடியாதென்று கருதானுகல்வேண்டும்; ஆகலாற் பிறரையும் இரக்க அமையாதோவெனின், என்றூர்க்கு அதுவன்று; இது முடியுஞான்று இவளாலே முடிவதாய்க் கிடந்ததாகலான் அவ்விதி இவளுழையே செல்லு முளம் பிறப்பிக்கு மென்பது. அதுவன்றே உலகத்தார்க்குப் பண் பின்வழியே † ஊக்கம் நிகழுமென்பது.

---

* 'ஒரு கருமம் ஆகாமையறிந்தே யதன்கண் முயல்வார் நெறியறியாதாரன்றே வென்பது' என்னும் பாடம் எட்டுப் பிரதியிற் காணப்படுகின்றது.

† 'ஒழுக்கம் நிகழுமென்பது' எனவும் பாடமுண்டு.

இவள் எப்பெற்றி கருதுமோ இதனையெனின் ஐயப் பட்டுநிற்கும். இவனொரு குறையுடையான்போலும், அக் குறையின்றியமையான்; அஃதென்மாட்டதென்று கருதுகளவாயின் இறப்பப் பெருந்தன்மையனாகலின் இறப்பச் சுட்டனுழை வேண்டுங் கருமமிலனன்றே! அதனால் என் துணையாமிதனவுமாகாது, யாரறிவார் சிறியாராற் பெரியார் யாயினுவை கருமங்களுமுள, அதனால் என்கண்ணதென்பதன் கூடும்ணும் ஐயமேயாம். இனி எம்பெருமாட்டி கண்ண தென்று கருதுவேனாயின் அவ ளொருவராற் சுட்டவுஞ் சொல்லவும்படுந் தன்மையளல்லளாகலான் அவள் கண்ண தென்றுங் கருதலாகாது. யாரறிவார்? இவர்தாமும் அவ டுணைப் பெருந்தன்மையராகலான் அவள் கண்ணது கொல் லோவெனவும் ஐயமேயாம். இனி இவ்வாயத்துள் ஒரு வர்கண்ணதே கொல்லோ வெனவும் ஐயமேயாம். பேரா ராய்ச்சியளாகலாற் கதுமெனத் துணியாளன்றே ஒன்றன் திறத்து. இனி அருள்காரணமாகக்கொல்லோ இத்தழை யுங் கண்ணியுங் கொண்டுவருவதெனவுமாகாது. ஆற்றாத இயல்பினனாய் வருமாதலான் இதன் கண்ணும் ஐயமே யாம் என்பது. அதற்குச்செய்யுள் 'முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்' (இறையனார்-எ) என்னுஞ் சூத்தி ரத்துட் காட்டுதும். அஃதேயெனின், இவளை அவட்குச் சிறந்தமை அவன் அறியுமாறென்னை? பிறர்சொல்லி னாரும் இல்லையாலோவெனின்; அறிந்தானன்றே! இயற் கைப் புணர்ச்சி புணர்ந்தபின்னைத் தன்னை அவள் காணா மைத் தான் அவளைக்காண்பதோர் அணிமைக்கண் நின்றான். நின்றானாக, மற்றையோரெல்லாந் தலைமகட்குச் செய்யும் வழி பாடும், இவள் விசேடத்தாற்செய்யும் வழிபாடும், எல்லார்க் குந் தலைமகள் செய்யும் அருளிச்செய்கையும், இவட்கு

விசேடத்தாற் செய்யும் அருளிச்செய்கையுங் கண்டமை யான் இவளாம் அவட்குச் சிறந்தாள்; இதுவும் எனக்கோர் சார்பென்பதனை உணர்ந்தான். உணர்ந்தமையான் இவ ளுழையே செல்லுமென்பது. அஃதேயெனின் இவளுழைச் *செல்கின்றாயங்கள் ஐயுறுவோவெனின், ஐயுறு. எங்ஙனம் ஐயுறுதவாறெனின்; தழையுங் கண்ணியுங் கோடற்பொருட் டாக † வேறோரிடத்துத் தனியளாய் நின்ற நிலைமைக் கட் செல்லுமென்பது. இவள் இன்னணந் தனியளாய் நிற்ப தறிந்துசெல்லுமோவெனின், செல்லான்; விதிகொண்டு சென்று தலைப்படுக்கு மென்பது. (ரு)

அஃதேயெனின், 'இரந்துறுதல் கிழவோன் மேற்றே' யென்னாது 'குறையுறுத' லென்றது எற்றிற்கோவெனின், இரத்தலென்பது குறையுடையார்செய்யுஞ் செய்கை செய் தொழுகுதல்; குறையுறுதலென்பது இக்குறை இவனின்றி யமையானென்பதுபடப் பசைந்தொழுகுவது. அஃதே யெனின், 'இரந்து குறையுறுத'லென அமையாதோ இரந்து குறையுறுதலுமென்று உம்மைகொடுத்தது எற்றிற்கோ வெனின், தெருண்டுவரைதல் சிறப்புடைத்து; தெருளாது ஒழுகில் இவ்வாறொழுகுதலென்பதற்குச் சொல்லப்பட்டது.

இனி ஒருசாரார் சொல்லுவது, புணர்ந்தபின்றையென்பது இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தபின்றை என்றவாறு.

---

* செல்கின்றாயங்கள்—செல்கின்ற ஆயங்கள்; செல்கின்ற என்னும் பெயரெச்சம் ஈறுகெட்டது.

† 'வேறோரிடத்தினளாய் நின்ற நிலைமைக்கட் செல்லுமென்பது; அஃதேயெனின் இவள் அந்நிலையளாய் நிற்கு நிலைமை யறிந்து' என்பதும் பாடம்.

'ஆங்ஙனம் ஒழுகா'தென்பதற்குப் பாங்கனானுந் தமியாளை இடத்து எதிர்ப்பட்டானும் புணர்ந்தொழுகாது தோழியை இரந்து பின்னிற்றற்கண்ணே முயலுமென்பாரும் உளர். அதுபொருந்தாது. என்னைகாரணமெனின், தன் பாங்கன் தனக்குச் சிறந்ததுணை அவள் பாங்காயதோழி சிறக்குமாறுண்டோவென்பதனான். அப்பொழுது அவளை நினையான் தன் பாங்கனையே நினைக்குமென்பது. (ரு)

**சா. இரந்துகுறை யுறாது கிழவியுந் தோழியு
மொருங்கு தலைப்பெய்த செவ்வி நோக்கிப்
பதியும் பெயரும் பிறவும் வினாஅய்ப்
புதுவோன் போலப் பொருந்துபு கிளந்து
மதியுடம் படுத்தற்கு முரிய னென்ப.**

என்பதென்னுதலிற்றோவெனின், மதியுடம்படுக்குந் திறனிதுவென்ப துணர்த்துதனுதலிற்று. மேற்சூத்திரத்தினோடு இதற்கு இயைபென்னையோவெனின், மேற் பணிந்த மொழியால் தோழியை இரந்து பின்னிற்குமெனப்பட்டது. அங்ஙனம் இரந்து பின்னின்றவிடத்து எத்திறத்துக்கொல்லோ இவனுடைய குறையென்று ஐயப்பட்டு நிற்பதல்லது இன்னதென்றுணராளன்றே! உணராமையால் என் குறை இன்னதென்றறிவித்து இரந்து பின்னிற்பனென்னுங் கருத்தினால் இதுசெய்யுமென்பது மேற்சூத்திரத்தோடு இயைபு.

இதன் பொருள்: இரந்து குறையுறாது—இரந்துவைத்துக் குறையுறவு தோன்றாமை; கிழவியுந் தோழியும்—கிழவி யெனப்படுவாள் தலைமகள், தோழியெனப்படுவாள் செவிலித்தாய்மகள், என்னை? *"தோழி தானே செவிலி மகளே"



குந் * தொல்காப்பியம் - களவியல் - நுச.

என்றாராகலின்; அவ்விருவரும்: ஒருங்கு—ஓரிடத்தராதல்; தலைப்பெய்தல்—கூடியிருத்தல்; செவ்விநோக்கி—அன்னதோர் பதநோக்கிச் சென்றுநிற்றல்; அங்ஙனம் நிற்பாற்கு ஒருசொற்படுகால் முறைமைவேண்டும்; பதியும் பெயரும் பிறவும் வினாஅய்—பதிவினாதலென்பது எவ்வூரீரென்பது, பெயர்வினாதலென்பது என்னபெயரீரென்பது, பிறவினாதலென்பது இங்கே சில * மா போந்தனவுளவே, இளையர் போந்தாருளரே, யானை போந்தனவுளவே † என்று இத்தொடக்கத்தன வினாதல். அதற்குச் செய்யுள்:

பதியும் பெயரும் வினாதல்.

‡ நீரின் மலிந்தசெவ் வேனெடு மாறனெல் வேலியொன்னார்
போரின் மலிந்தவெந் தானை யுரங்கொண்ட கோன்பொதியிற்
காரின் மலிந்தபைம் பூம்புனங் காக்கின்ற காரிகையீர்
ஊரின் பெயரு நும் பேரு மறிய வுரைமின்களே. (ருரு)

நிதியின் கிழவ னிலமகள் கேள்வனெல் வேலியொன்னார்
கதியின் மலிந்தவெம் மாவுங் களிறுங் கவர்ந்துகொண்டான்
பொதியின் மணிவரைப் பூம்புனங் காக்கும் புனையிழையீர்
பதியின் பெயருநும் பேரு மறியப் பகர்மின்களே. (ருகூ)

அறையார் கழன்மன்ன ராற்றுக் குடியமர் சாய்ந்தழியக் [வான்
கறையா ரயில்கொண்ட கோன்கொல்லிக் கார்ப்புனங் காக்கின்ற
பிறையார் சிறுநுதற் பெண்ணா ரமிழ்தன்ன பெய்வளையீர்
மறையா துரைமி னெமக்குநும் பேரொடு வாழ்பதியே. (ருஎ)

கறையின் மலிந்தசெவ் வேல்வலத் தாற்றென் கடையல்வென்ற
வறையுங் கழலரி கேசரி யந்தண் புகாரனைய
பிறையின் மலிந்த சிறுநுதற் பேரமர்க் கண்மடவீர்
துறையும் பதியுநும் பேரு மறிய வுரைமின்களே. (ருஅ)

---

* 'மான்போந்தனவுளவே' என்பதும் பாடம்.

† 'மயில்போந்தனவுளவே' 'நாய்போந்தனவுளவே' என்பவும் வேறோர் ஏட்டுப்பிரதியிற் காணப்படுகின்றன.

‡ இச்செய்யுள் முன் அச்சுப்பிரதியில் விடுபட்டது.

பிறவுமென்றதனல் இவையுஞ் சொல்லிச் சென்று நிற்கும். அவையிற்றிற்குச் செய்யுள் :

வேழம் வினுதல்.

வருமால் புயல்வண்கை மான்றேர் வரோதயன் மண்ணளந்த
திருமா லவன்வஞ்சி யன்னவஞ் சீரடிச் சேயிழையீர்
கருமால் வரையன்ன தோற்றக் கருங்கைவெண் கோட்ட செங்கட்
பொருமால் களிறொன்று போந்ததுண் டோநும் புனத்தயலே. ()

கலைமான் வினுதல்.

சினமாண் கடற்படைச் சேரலன் றென்னறை யாற்றுவந்து
மனமாண் பழியவை வேல்கொண்ட கோன்வையை நாடனைய
கனமாண் வனமுலைக் கையார் வரிவளைக் காரிகையீ
ரினமான் புகுந்தது வோவுரை யீர்நும் மிரும்புனத்தே. (சுO)

சிலைமாண் படைமன்னர் செந்நிலத் தோடச் செருவிளைத்த
கொலைமா ணயின்மன்னன் றென்புன லூடன்ன கோல்வளையீ
ரிலைமாண் பகழியி னேவுண்டு தன்னினத் திற்பிரிந்தோர்
கலைமான் புகுந்ததுண் டோவுரை யீர்நுங்கள் கார்ப்புனத்தே. (சுக)

வழி வினுதல்.

வெல்லுந் திறநினைந் தேற்றூர் விழிஞத்து விண்படரக் [றேன்
கொல்லின் மலிந்தசெவ் வேல்கொண்ட கோன்கொல்லிச் சாரலின்
புல்லும் பொழிலிள வேங்கையின் கீழ்நின்ற பூங்குழலீர்
செல்லு நெறியறி யேனுரை யீர்நுஞ் சிறுகுடிக்கே. (சுஉ)

மொழிபெறுது கூறல்.

தன்னும் புரையு மழையுரு மேறுதன் றுளைமுன்னுற்
றுன்னுங் கொடிமிசை யேந்திய கோன்கொல்லிச் சூழ்பொழில்வாய்
மின்னுங் கதிரொளி வாண்முகத் தீரென் வினவுரைத்தான்
மன்னுஞ் சுடர்மணி *போந்தரு மோநுங்கள் வாயகத்தே. (சுங)

---

* 'போதருமோ' என்பதும் பாடம்.

வேழம் வினாதல்.

கண்ணுற் றெதிர்ந்தசெவ் வேந்தர் படக்கடை யற்கொடிமேல்
விண்ணுற்ற கோளுரு மேந்திய வேந்தன் வியன்பொதியிற்
பண்ணுற்ற தேமொழிப் பாவைநல் லீரோர் பகழிமூழ்கப்
புண்ணுற்ற மாவொன்று போந்ததுண் டோநும் புனத்தயலே. ()

முடியுடை வேந்தரு மும்மத யானையு மொய்யமருட்
பொடியிடை வீழத்தென் பூலந்தை வென்றான் புகாரனைய
வடிவுடை வேனெடுங் கண்மட வீர்நுங்கள் வார்புனத்திற்
பிடியொடு போந்ததுண் டோவுரை யீரோர் பெருங்களிறே. (௯௫)

என்பன கொள்க.

புதுவோன்போல—எஞ்ஞான்றும் அந்நிலத்துச் சென்றறியாதானும் அவரைக் கண்டறியாதானும் போல; பொருந்துபு கிளந்து—அந்நிலத்திற்கும் அவரை வினாதற்கும் பொருந்துவன சொல்லி; மதி உடம்படுத்தற்கும் உரியனென்ப—மதியென்பது அறிவு; அவ்வறிவினை ஒருப்படுத்தற்கும் உரியன் என்றவாறு.

யாரறிவையோவெனில் தோழியறிவையெனக் கொள்க. அவளது அறிவினை ஒருப்படுக்குமெனவே முன் கவர்ந்தமை பெற்றாம். எங்ஙனம் கவர்ந்ததோவெனின், இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த ஞான்று தற்கொண்டு கண்சிவந்து நுதல் வேறுபட்டுக் காட்டிற்று, இவட்கு இவ்வேறுபாடு தெய்வத்தினாயிற்றுக் கொல்லோவெனவும், * மக்களினாயிற்றுக் கொல்லோவெனவும், இனி இவனும் அதற்கொண்டு தழையுங் கண்ணியுங் கொண்டு பின்னிலை முனியாது இரந்து பின்னிற்கின்றான், இவனுடைய குறை யார்மாட்டது கொல்லோவெனவும் எனக்கொள்க. அங்

* இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியிலில்லை; வேறோர் ஏட்டுப்பிரதியிற் கண்டது.

நனங் கவர்ந்த தோழி இவள் வேறுபட்டது இவன் காரண மாகப்போலும், இவன் இரந்து பின்னின்றது இவள் காரணமாகப்போலுமென ஒருங்கு கண்ணி வேறாக வகுத் துணரு மென்பது. அதற்குச் செய்யுள்:

இருவர்நினைவு மொருவழியுணர்தல்.

விரையா டியகண்ணி வேந்தன் விசாரிதன் கொல்லிவிண்டோய்
வரையா டியபுனங் காவலு மானின் வழிவரவு
நிரையா டியகுழ லாட்கு மிவற்கு நினைப்பினில்லை
யுரையா டுவர்கண்ணி ஞானுள்ளத் துள்ளது மொன்றுளதே. (கசு)

பொருங்கண்ணி சூடிவந் தார்படப் பூலந்தைப் பொன்முடிமே
லிருங்கண்ணி வாகை யணிந்தான் பொதியி லிரும்பொழில்வாய்
மருங்கண்ணி வந்த சிலம்பன்றன் கண்ணுமிவ் வாணுதலாள்
கருங்கண்ணுந் தம்மிற் கலந்ததுண் டாமிங்கொர் காரணமே. (கஎ)

என இத்தொடக்கத்தன கொள்க. அஃதேயெனின் 'இரந்து குறையுறுது கிழவியுந்தோழியுந் தலைப்பெய்த செவ்வி நோக்கி' யெனவமையாதோ? 'ஒருங்கு' எனல் வேண்டியதென்னை? களவுகாலத்துத் தலைமகன் தேரொடும் *மருங்கு செல்ல அமையுமென்றதற்கு வைத்தார்; என்னை? சான்றோர்செய்யுளுள் அங்ஙனம் வந்ததாகலான். அது வருமாறு:

நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டே
ரூர்ந்த வழிசிதைய வூர்ந்தாய்வாழி கடலோத
மூர்ந்த வழிசிதைய வூர்ந்தாய்மற் றெம்மொடு
தீர்ந்தாய்போற் றீர்ந்திலையால் வாழி கடலோதம்.
(சிலப்பதிகாரம் - கானல்வரி, நகூ.)

என்றித் தொடக்கத்தனவெனக் கொள்க. 'மதியுடம் படுத்தற்கும் உரிய'னென்ற உம்மை யாதோவெனின், வரைந்

* 'ஒருங்கு' என்பதும் பாடம்.

தெய்துதல் மிக்கதே யென்பது போதர ஆங்ஙனம் உரைத்தார். (௬)

எ. முன்னுற வுணர்தல் குறையுற வுணர்த லிருவரு முள்வழி யவன்வர வுணர்தலென் றம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி.

என்பதென்னுதலிற்றோவெனின், தோழி யுணர்ச்சியைப் பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: முன்னுறவுணர்தல்—இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பிற்றைஞான்று அவள் கண் சிவப்பும் நுதல்வேறுபாடுங் கண்டு கரவு நாடி உணர்வது:

எங்ஙனம் உணருமோவெனின், எம்பெருமாட்டிக் சுனையாடல் கூறி குப் பண்டைத்தன்மைத்தன்றால் இவ்வேறு நகைத்தல். பாடு; *இஃது எற்றினான் ஆயிற்றுச், சொல்லுநீ யென்னும். என, நெருநல் நின்னை நீங்கி மேதக்க தோர் சுனைகண்டு நெடுங்காலமும் ஆடினேற்கு ஆயிற்று, ஆகாதே கண்சிவப்பும் நுதல்வேறுபாடு மென்னும். என, என்னை! சுனையாடினார்க்கெல்லாம் இக்காரிகை நீர்மை பெற லாமெனின் யானும் அதுவே செய்துகாணேனோ! என்னும்.

அதற்குச் செய்யுள்:

தேர்மன்னு வாட்படை செங்கிலத் தோடச் செருவிளைத்த
போர்மன்னன் றென்னன் பொதியிற் புனமா மயில்புரையு
மோர்மன்னு காரிகை யெய்தலுண் டாமெனின் யானுநின்போ
னீர்மன்னு நீல நெடுஞ்சுனை யாடுவ னேரிழையே. (௬அ)

---

* இங்கிருந்து ஆறுவரிகளில் ஏட்டுப்பிரதியை நோக்கிப் பல திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

புண்டா மருநிறத் துற்றுத்தென் பூலந்தைப் போர்மலைந்த
வொண்டா ரரசர் குழாமுட னேயொளி வானடையக்
கண்டான் பொதியின் மயிலன்ன காரிகை யெய்தனின்போ
லுண்டா மெனிற்றையல் யானுஞ்சென் றுடுவ ணெஞ்சனையே. (௩)

"பையுண் மாலைப் பழுமரம் படரிய
ரொவ்வுப்பறை வாவ ஞென்சிறை யேய்க்கு
மடிசெவிக் குழவி தழீஇப் பையாந்
திடுகுகவுண் மடப்பிடி யெவ்வங் கூர
வெந்திற லாளி வெரீஇச் சந்தின்
பொரியரை மிளிரக் குத்தி வான்கே
ழுருவ வெண்கோ டுயக்கொண்டு கழியுங்
கடுங்கண் யானை காலுற வொற்றலிற்
கோவா வாரம் வீழ்ந்தெனக் குளிர்கொண்டு
* பேஎ நாளுந் தாழ்நீர்ப் பனிச்சுனை
கோனேஎ ரெல்வளை தெளிர்ப்ப நின்போல்
யானு மாடிக் காண்கோ தோழி
வரைவயிறு கிழித்த நிழறிகழ் நெடுவேற்
றிகழ்பூண் முருகன் றீம்புன லலைவாய்க்
கமழ்பூம் புறவிற் கார்பெற்றுக் கலித்த
வொண்பொறி மஞ்ஞை போல்வதோர்
கண்கவர் காரிகைபெறுதலுண் டெனினே."

எனக்கேட்டுத் தலைசாய்த்து நிலங்கிளையாநிற்பப் புணர்ச்சி உண்டென்று உணர்ந்து கொள்வாளாவது. அல்லதூஉம், அங்ஙனம் வேறுபாடு கண்டு ஐயுற்றுநின்றாள் அந்திவான்கட் செங்கோட்டு மதர்வைக் குழவித்திங்களைக் கண்டு தான் தொழுது நீயுந் தொழுதுகா ணென்னும். அதற்குச் செய்யுள்:

பிறைதொழு கென்றல்.

திருமா லகலஞ்செஞ் சாந்தணிந் தன்னசெவ் வான்முகட்டுக் [ணோர்
கருமா மலர்க்கண்ணி கைதொழத் தோன்றிற்று காண்வந்தொன்

* 'பாலி னாலும்' என்பதும் பாடம்

செருமா லரசுகச் செங்கிலத் தட்டதென் றீந்தமிழ்நர்
பெருமான் றனது குலமுத லாய பிறைக்கொழுந்தே. (எ0)

முன்னுந் தொழத்தோன்றி முள்ளெயிற்று யத்திசையே
யின்னுந் தொழத்தோன்றிற் றீதேகாண்—மன்னும்
பொருகளிமால் யானைப் புகழ்க்கிள்ளி பூண்போற்
பெருகொளியான் மிக்க பிறை.

எனக்கேட்டுத் தலைமகள் தொழாதேநிற்குங் கற்பழியு வேறுபடுத்துக் மென்பதனுன்; அதுகண்டு புணர்ச்சியுண் கூறல். மைஅறிந்துகொள்ளுமென்பது அஃதன்றி அவளை வரையணங்காகவுஞ்சொல்லும். அதற்குச்செய்யுள்:

மண்டா னிறைந்த பெரும்புகழ் மாறன்மந் தாரமென்னுந்
தண்டா ரவன்கொல்லித் தாழ்சுனை யாடிய தானகன்று
ளொண்டா மரைபோன் முகத்தவ ணின்னே டுருவமொக்கும்
வண்டார் குழலவள் வந்தா லியங்கு வரையணங்கே. (எக)

இங்ஙனமுஞ் சொல்லும்:

புணர்ச்சியுரைத்தல்.

ஆனெடுந் தானையை யாற்றுக் குடிவென்ற கோன்பொதியிற்
சேனெடுங் குன்றத் தருவிநின் சேவடி தோய்ந்ததில்லை
வானெடுங் கண்ணுஞ் சிவப்பச்செவ் வாயும் விளர்ப்பவண்டார்
தானெடும் போதவை சூட்டவற் றேவத் தடஞ்சுனையே. (எஉ)

இவை நாண நாட்டம்.

இனி நடுங்க நாடுமாறு: நம்புனத்துள் உதிரம் அளைந்து கோட்டதோர் களிறுகண்டேனென்னும். அதற்குச் செய் யுள்:

நடுங்கநாட்டம்.

கலவா வயவர் களத்தா ரவியக் கணைபுதைத்த
*குலவார் சிலைமன்னன் கோனெடு மாறன்றென் கூடலன்ன
விலவார் துவர்வாய் மடந்தைநம் மீர்ம்புனத் தின்றுகண்டேன்
புலவார் குருதி யளைந்தவெங் கோட்டொர் பொருகளிறே. (எங)

---

* 'கொலையார்சிலை' என்பதும் பாடம்.

பொருதிவ் வுலகமெல் லாம்பொது நீக்கிப் புகழ்படைத்தல்
கருதிவந் தாருயிர் வான்போ யடையக் கடையல்வென்ற
பரிதி நெடுவேற் பராங்குசன் கொல்லிப்பைம் பூம்புனத்துக்
குருதிவெண் கோட்டது கண்டேன் மடந்தையொர் குஞ்சரமே. ()

பண்டிப் புனத்துப் பகலிடத் தேனலுட்
கண்டிக் களிற்றை யறிவன்மற் - றிண்டிக்
கதிரன் பழையனூர்க் கார்நீலக் கண்ணா
யுதிர முடைத்திதன் கோடு.

அதுகேட்டுப் பல்காலும் இவ்விடத்துவந்து இயங்கு வான் எம்பெருமானாதலான் அவனைக் களிறு ஏதஞ்செய்தது கொல்லோவென்று நடுங்கும். அதுகண்டு கூட்டமுண்மை உணரும். அது பொருந்தாது, நாணவும் நடுங்கவும் நாடுதல் அகத்திணையிலக்கணமன்றென்க. என்னை?

"நாணவு நடுங்கவு நாடா டோழி
காணுங் காலைத் தலைமக டேஎத்து."

என்பதாகலான். அல்லதூஉம், இவள் பெருநாணினளாக லானும் பேரச்சத்தினளாகலானும் இறந்துபடுமாகலான் அவளேதத்திற்குக் கவலாளாயினளுமாம். அல்லதூஉம், அவளை அவமதித்துக் கருதினளுமாம். அவளது குறிப்பறி யாது உரைத்தமையான் ஆசாரம் அறியாளுமாமென்பது. இக்குற்றமெல்லாந் தங்கும் அவ்வகை உரைப்பார்க்கு.

மற்றென்னோ உரையெனின், முன்னுறவுணர்தலென் பது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தபின்னை அவளது வேறு பாடு தெய்வத்தினானயிற்றுக் கொல்லோ மற்றொருவாற்றயி ற்றுக்கொல்லோவென ஐயுற்று நிற்பது. அதற்குச் செய்யுள்:

வாட்டம் வினாதல்.

கந்தா ரடுகளி யானைக் கழனெடு மாறன்கன்னிக்
கொந்தா டிரும்பொழில் வாய்ப்பண்ணை யாயத்துக் கோலமென்பூம்

பந்தா டவினிடை நொந்துகொல் பைங்குழல் வெண்மணன்மேல்
வந்தா டலினடி நொந்துகொல் வாணுதல் வாடியதே. (எரு)

பொருந்திய பூந்தண் புனமுன் குடைந்துகொல் பொற்கயிற்றுத்
திருந்திய வூசல்சென் றாடிக்கொல் சேவூர்ச் செருவடர்த்த
பருந்திவர் செஞ்சுடர் வென்வேற் பராங்குசன் *பற்றலர்போல்
வருந்திய காரண மென்னைகொல் லோமற்றிவ் வாணுதலே. (எசு)

இனிக்'குறையுறவுணர்த' லென்பது: அவன் தழையுங் கண்ணியுங்கொண்டு பின்னிலைமுனியாது குறையுறவுணர்தல். நிற்ப,ஒக்கும் இவன் இரந்து பின்னின்றது அவள் காரணமாகப்போலு மென உணர்வது. அது பொருந்ாதன்றே. யாரானு மொருவர் தன்னுழை ஒரு குறையுடையராய்ச் சென்றவிடத்து அவள் கண்ணதென்று கருதுவாளாயின் அவளை அவமதித்துக் கருதினளுமாம், அவளது பெருமையொடும் மாறுகொள்ளு மென்பது. மற்றென்னோ குறையுற வுணருமாறெனின், இவன் இரந்து பின்னிற்கின்றது எற்றிற்குக் கொல்லோ வென உணர்வதாயிற்று. அதற்குச் செய்யுள்:

மழையும் புரைவண்கை வானவன் மாறன்மை தோய்பொதியில்
வழையுங் கமழு மணிநெடுங் கோட்டுவண் சந்தனத்தின்
றழையும் விழைதகு கண்ணியு மேந்தியித் தண்புனத்தி
னுழையும் † பிரிய லுருனறி யேனிவ னுள்ளியதே.

திண்பூ முகநெடு வேன்மன்னர் சேவூர்ப் படமுடிமேற்
றண்பூ மலர்த்தும்பை சூடிய தார்மன்ன னேரியென்னும்
வண்பூஞ் சிலம்பின் வரைப்புன நீங்கான் வருஞ்சுரும்பா
ரொண்பூந் தழையுந் தருமறி யேனிவ னுள்ளியதே. (எஅ)

இவை இரண்டும் ஐயவுணர்வே, துணிபில.

---

* 'தன்பகைபோல்' என்பதும் பாடம்.

† 'பிரியகில்லான்' என்பதும் பாடம்.

இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் என்பது: அவ்வைய வுணர்வொடு நின்றாள் இருவரும் உள்வழி அவன் வந்துநின்று பதியும் பெயரும் பிறவும் வினவத் துணிந் துணருமெனக்கொள்க. அதற்குச் செய்யுள்:

இருவருமுள்வழி யவன்வரவுணர்தல்.

செறிந்தார் கருங்கழற் றென்னவன் செந்நிலத் தைச்செருவின்
மறிந்தார் புறங்கண்டு நாணிய கோன்கொல்லிச் சாரல்வந்த
நெறிந்தார் கமழ்குஞ்சி யானோ டிவளிடை நின்றதெல்லா
மறிந்தேன் பலநினைந் தென்னையொன் றேயிவ ராருயிரே. (எக)

வண்ண மலர்த்தொங்கல் வானவன் மாறன்வை வேன்முகமுங்
கண்ணுஞ் சிவப்பக் கடையல்வென் றான்கட னுடனைய
பண்ணும் புரைசொல் லிவட்கு மிவற்கும் பலநினைந்திங்
கெண்ணுங் குறையென்னை யொன்றே யிருவர்க்கு மின்னுயிரே. ()

"ஏனல் காவ லிவளு மல்லண்
மான்வழி வருகுவ னிவனு மல்ல
னரந்தங் கண்ணி யிவனோ டிவளிடைக்
கரந்த வுள்ளமொடு கருதியது பிறிதே
நம்மு னுணுவர் போலத் தம்முண்
மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல
வுள்ளத் துள்ளே மகிழ்ப
சொல்லு மாடுப கண்ணி னானே."

இதனை மதியுடம்பாடென்றமையானும் முன்னையறிவு கவர்ந்து நின்றதென்பது பெற்றாம், துணிவுணர்வு பெற்றில மென்பது. அஃதேயெனின், 'அம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி' என்று மூன்றினையும் உணர்ச்சி யென்றே சொன் னமையால் துணிவுணர்வே ஆகற்பாலதெனின், துணிவுணர் வும் உணர்வே யெனப்படும், ஐயவுணர்வும் உணர்வேயெனப் படும், உணர்வென்னும் பொதுமைநோக்க; சந்தனமுங் காஞ் சிரையும் மரமெனப்பட்டதேபோல. இவ்வாறாகவே தோழி

ஆராய்ச்சி யுடைமையும் ஆசாரமுடைமையும் ஏதத்திற்குக் கவறலும் நன்கு மதித்தலும் வெளிப்படுமென்பது. அஃதே யெனின், 'அம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி'யென்ற தென்னை? மூன்றுமே யென்று துணிந்தாயின் உம்மை கொடுத்துச் சொல்லவேண்டும்; என்னை ?

"இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்"

(தொல் - சொல் - கிளவி - நந.)

என்றாராகலின். அஃதே, உம்மை ஈண்டுத் தொகுத்துக் கூறினார், அஃது அங்ஙனந் தொகுத்தற்கு இலக்கணம் உண்மையான். ஆயின் 'இருவரும் உள்வழி அவன் வரவு' என்றாகாது, அவன் செலவு என்பதன்றி; என்னை ?

"தருசொல் வருசொ லாயிரு கிளவியுந்
தன்மை முன்னிலை யாயீ ரிடத்த"

(தொல் - சொல் - கிளவி - உகூ.)

"ஏனை யிரண்டு மேனை யிடத்த"

(தொல் - சொல் - கிளவி - நo.)

என்றாராகலின். அஃது அறியாது சொன்னாய்,

"செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும்"

(தொல் - சொல் - கிளவி - உஅ.)

என்னுஞ் சூத்திரத்துள் இலேசினான் முடியும். ஆகலினன்றே, "* தூண்டில் வேட்டுவன்வாங்க வாராது" என்று சொல்லினார் சான்றோர் என்பது.

---

*"பகுவாய் வராஅற் பல்வரி யிரும்போத்துக் - கொடுவா யிரும்பின் கோளிரை துற்றி - யாம்பன் மெல்லடை கிழியக் குவளைக் - கூம்புவிடு பன்மலர் சிதையப் பாய்ந்தெழுந் - தரில்படு வள்ளை யாய்கொடி மயக்கித் - தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது - கயிறிடு கதச்சேப் போல மதமிக்கு - நாட்கய முழக்கும் பூக்கே ழூர - வரு

அ. ஆங்குணர்ந் தல்லது கிழவோ டேஎத்துத்
தான்குறை யுறுத றோழிக் கில்லை.

என்ப தென்னுதலிற்றோவெனின், இதுவுந் தோழிக்குரியதோர் இலக்கண முணர்த்துதனுதலிற்று.

இதன்பொருள்: ஆங்கு உணர்ந்து அல்லது—அங்ஙனம் உணர்ந்தபின்றையல்லது; கிழவோள்தேஎத்து—தலைமகள்மாட்டு; தான் குறை உறுதல் தோழிக்கு இல்லை—தான் குறையுற்று *முடிப்பலென்று நிற்குந்தன்மை தோழிக்கில்லை என்றவாறு.

எனவே, என்சொல்லப்பட்டதாம்? கரவு நாடி வேண்டுவாரையும் மறுக்கப்பட்டதாம். அஃதேயெனின், 'குறையுறுதல் தோழிக்கு' என அமையாதோ, 'தான்' என்றது எற்றிற்கோவெனின், பின்னையுந்தானல்லள் குறைநயப்புக் கூறுவாள் அவனது ஆற்றாமையைத் தன்கட்கொண்டு நின்றமையால் அவனே யெனப்படும். (அ)

---

புனல் வையை வார்மண லகன்றுறைத்-திருமரு தோங்கிய விரிமலர்க் காவி-னறும்பல் கூந்தற் குறுந்தொடி மடந்தையொடு-வதுவையயர்ந்தனை யென்பவலரே-கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழிய-ஞலங் கானத் தகன்றலை சிவப்பச்-சேரல் செம்பியன் சினங்கெழுதிதியன்-போர்வல் யானைப் பொலம்பூ ணெழினி-நாரரி நறவி னெருமையூரன்-றேங்கமழ கலத்துப் புலர்ந்த சாந்தி-னிருங்கோ வேண்மானியறேர்ப் பொருநனென் - றெழுவர் நல்வல மடங்க வொருபகன் - முரசொடு வெண்குடை யகப்படுத் துரைசெலக் - கொன்றுகளம் வேட்ட ஞான்றை - வென்றிகொள் வீர ரார்ப்பினும் பெரிதே." (அகம்-நகூ.)

* 'முடிப்பல் என்னுஞ் சொல்' எனவும் பாடமுண்டு.

## ௯. முன்னுற வுணரினு மவன்குறை யுற்ற பின்ன ரல்லது கிளவி தோன்றாது.

என்பது என்னுதலிற்றோ வெனின், தலைமகன் முன்னின்று தோழி சொல்லாடுந் திறன் உணர்த்துதனுதலிற்று.

இதன்பொருள்: முன்னுறவு உணரினும்—மதியுடம் படுப்பக் கூட்டமுண்மை உணர்ந்தாளாயினும்; அவன்குறை யுற்ற பின்னர் அல்லது—அவன் இரந்து பின்னின்ற பின்னர் அல்லது; அவன் இரந்து பின்னிற்குமாறு 'குறையுறுங் கிழவனை யுணர்ந்த தோழி' (இறையனார்-௧௨.) என்னும் சூத்திரத்துட் சொல்லுதும்: கிளவி தோன்றாது—முடிப்பல் என்னுஞ் சொல் தோன்றாது என்றவாறு.

அஃதாமாறு, மதியுடம்படுத்துத் தன்கருத்தறிவித்துப் பின்னைத் தழையுங் கண்ணியுங்கொண்டு பின்னிற்கும். நின்றானொடு முடிப்பக்கருதுவாள் தன்கண் நாணுக் கெடுந் துணையுங் குறியாடும். ஆட, அற்றைக்கன்று ஆற்றாமை அவற்குப் பெருகும். பெருகுவதுகண்டு அற்றைக்கன்று இவட்கு நாணுச் சுருங்க இரண்டுந் துலாத்தலைப்பட்டு எடாநின்றன. நின்றுழி, அவனது ஆற்றாமையும் இதனினாங்குப் பெருகுமாறில்லையெனப் பெருக்கத்துக்கு வரம்பெய்தி நின்றது. இவளது நாணும்இதனினாங்கு நுணுகுமாறில்லையென நுணுக்கத்திற்கு வரம்பெய்தி நின்றது. நின்ற நிலைமைக்கண் தலைமகன் ஒரு சொற்சொல்லும். என்சொல்லுமோ வெனின், * இதனினாங்கெல்லாம் இக்கருமம் நின்னான்முடியுமெனக் கருதிவந்து † உழந்தேன்; இனி நின்னான் முடியாமை உணரப்பட்

மடற்றிறம்.

* 'இன்றினாங்கெல்லாம்' என்பதும் பாடம்.

† 'முயன்றேன்' என்பதும் பாடம்.

டது; பட்டமையின் இளிவந்தன செய்தாயினும் முடிப்பல்; இதனை இன்றியமையேனாகலாமெனனும். இனி இளிவந்தன செய்து முடித்தலென்பது, மடலூர்வதாயினும் வரைபாய்வதாயினும் என்றவாறு. அதற்குச் செய்யுள்:

படலே றியமதின் மூன்றுடைப் பஞ்சவன் பாழிவென்ற
வடலே றயின்மன்னன் *றெம்முனை போன்மெலிந் தாடவர்கள்
கடலே றியகழி காமம் பெருகக் கரும்பனையின்
மடலே றுவர்மற்றுஞ் † செய்யா தனவில்லை மாநிலத்தே. (௮௪)

பொருநெடுந் தானைப்புல் லார்தம்மைப் பூலந்தைப் போர்தொலைத்த
செருநெடுஞ் செஞ்சுடர் வேனெடு மாறன்றென் னாடனையா
யருநெடுங் காமம் பெருகுவ தாய்விடி னாடவர்கள்
கருநெடும் பெண்ணைச்செங் கேழ்மட லூரக் கருதுவரே. (௮௫)

"மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே." (குறுந்-௧௭.)

என்றான் தலைமகனேயெனின், அல்லன், தலைமகனிடனாகப் பிறந்த ஆற்றாமை. அதுகேட்டலும் முன் குறைபாட்டின்கட்சென்று நின்ற நாண் உண்டன்றே, அது கெடும்: கெட, அவனது ஆற்றாமையைத் தன்கட்கொண்டு தலைமகனை ஆற்றுவிப்பதோர் சொற்சொல்லும். அஃதியாதோவெனின், அரியன தாங்கலன்றே பெரியாரது பெற்றிமை; நீயிர் இதன்திறத்தின ராகன்மின், யானும் அதன் திறத்து என்னின் ஆவதுண்டேற் காண்பனென்னும். என, அவனது ஆற்றாமை நீங்கும்: அது நீங்கத், தலைமகனது நிலைமை நோக்கி இவனிறந்துபடா னென்பது உணர்ந்து இவை சொல்லும். அவை யாவையோவெனின், மடலேறுவன்

* 'தெவ்வர்' என்பதும் பாடம்.

† 'செய்யா தனசெய்வர்' என்பதும் பாடம்.

என்றிரால்; மடலேறுதல் இயையாது

அருளாலரிதென விலக்கல். அருளாலரிதென கொல்லோ; என்னை? நீர் பேரருளினர் ஆகலானென்னும். அதற்குச் செய்யுள்:

பலமன்னு புள்ளினம் பார்ப்புஞ் சினையு மவையழிய
வுலமன்னு தோளண்ண லூரக் கொளாய்கொல் லொலிதிரைசூழ்
நிலமன்ன னேரியன் மாறனெடுங்களத் தட்டதிங்கட்
குலமன்னன் கன்னிக் குலைவளர் பெண்ணைக் கொழுமடலே. (அரு)

"வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே
யவையினும் பலவே சிறுகருங் காக்கை
யவையினு மவையினும் பலவே குவிமட
லோங்கிரும் பெண்ணை மீமிசைத் தொடுத்த
தூங்கணங் குரீஇக் கூட்டுள சினையே"

அன்றியும் மடலேறுவன் என்றிரால், மடலேறப்

அவயவமெழுதலரிதென விலக்கல். படுவார் உருவெழுதிக் கொண்டன்றோ ஏறுவது. நுமக்கு அவ் வுருவெழுதலாமோ வென்னும். அதற்குச் செய்யுள்:

*அண்ண னெடுந்தேரரிகேசரியகன் ஞாலமன்னன்
வண்ண மொருவா றெழுதினு மாமணி வார்ந்தனைய
தண்ணென் கருங்குழ னூற்றமு மற்றவ டன்னடையும்
பண்ணென் மொழியு மெழுத வுளவே படிச்சந்தமே. (அச)

களிசேர் களிற்றுக் கழனெடு மாறன் கடையல்வென்ற
தெளிசே ரொளிமுத்த வெண்குடை மன்னன்றென் னூடனையாள்
கிளிசேர் மொழியுங் கருங்குழ னூற்றமுங் கேட்பினைய
வெளிதே யெழுத வெழுதிப்பின் னூர்க வெழின்மடலே. (அரு)

அல்லதூஉம், எழுதின ஞான்று இங்ஙனமோ நீர்எழுதுவதென்று சொல்லும். அதற்குச் செய்யுள்:

---

* இச்செய்யுள் முன் அச்சுப்பிரதியில் இல்லை; வேறோர் ஏட்டுப் பிரதியிற் கண்டது.

விற்று னெழுதிப் புருவக் கொடியென்றிர் தாமரையின்
முற்று முகைநீ ரெழுதி முலையென்றிர் மொய்யமருட்
செற்றார் படச்செங் நிலத்தைவென் றான்றென்னன் கூடலன்னாள்
சொற்று னெனக்கிள்ளை யோநீ ரெழுதத் துணிகின்றதே. (அசு)

அது கேட்டுத் தலைமகன் பெயர்த்தும் ஆற்றானும்; ஆக இறந்துபடல் ஆகாதென்று, நீர் இங் உடம்பட்டுவிலக்கல். நீரராகன்மின், நமக்கு இக்குறை முடித் துத்தருவன்; நம்மாற் கருதப்படுவாள் என்மாட்டுப் பெரிதும் அருளுடைய ளாயினாளிப்பருவமென் னும். அதற்குச் செய்யுள்:

ஓங்கும் பெரும்புகழ்ச் செங்கோ லுசித னுறுகலியை
நீங்கும் படிநின்ற கோன்வையை வாய்நெடு நீரிடையான்
றாங்கும் புணையொடு தாழுந்தண் பூம்புனல் வாயொழுகி
ஞங்கும் வருமன்ன தாலின்ன நாளவ ளாருளே. (அஎ)

காடார் கருவரை யுங்கலி வானுங் கடையலன்று
கூடார் செலச்செற்ற கோனெடு மாறன்றென் கூடலன்ன
வேடார் மலர்க்குழ லாளெங்கு நிற்பினு மென்னையன்றி
யாடாள் *புனலுமெல் லூசலு மீதவ ளாரருளே. (அஅ)

"தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளுங்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்
புணைகை விட்டுப் புனலோ டொழுகி
னாண்டும் வருகுவள் போலு மாண்ட
மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வெரி நுறழுங் கொழுங்கடை மழைக்கட்
டுளிதலைத் தலைஇய தளிரன் னோளே." (குறுந்-உஉஉ.)

அது கேட்டுத் தலைமகன் இவள் இனி எனக்கு இக் குறை முடிக்குமென முன்னின்ற ஆற்றாமை நீங்கி ஆற்று

* 'சுனையும்' என்பதும் பாடம்.

மென்பது. என்னை? உலகத்து ஒருபொருள் முடியா தெனக் கவன்றுநின்றார் முடிப்பதோர் உபாயங்கண்ட ஞான்று அப்பொருள் எய்தினாரே போல மகிழ்வாரா தலின்; இவனுந் தன்னுடைய குறை எய்தினானேபோலப் பெயர்ந்தான். இது கொண்டுநிலைகூற்றென்று சொல் லுவது. என்னை? தலைமகன் இறந்துபடுவானை அச்சொல் தாங்கிக்கொண்டு நின்றமையினென்பது. இது சொல்லி இவனை ஆற்றுவித்துத் தலைமகன்மாட்டுச் சென்று அக் குறை முடிக்கும் உபாயம் ஆராய்வாளாவது. (௯)

**௧௦. உள்ளத் துணர்ச்சி தெள்ளிதிற் கரந்து கிழவோ டேஎத்துக் குறையுறாஉ முளவே குறிப்பறி வுறாஉங் காலை யான.**

என்பதென்னுதலிற்றோ வெனின், தலைமகற்குக் குறை நேர்ந்ததோழி தலைமகளைக் குறை நயப்பிக்குமாறு உணர்த் துதல் நுதலிற்று.

இதன் பொருள்: உள்ளத்து உணர்ச்சி தெள்ளிதிற் கரந்து—தன் உள்ளத்து நின்ற உணர்ச்சியை நன்கு புலப் படாமை மறைத்து; கிழவோள் தேஎத்து—தலைமகண் மாட்டு; குறையுறாஉம் உளவே—குறைவேண்டலும் உள; குறிப்பு அறிவுறாஉங் காலைஆன—தலைமகனது ஆற்றாமைக் குறிப்பினை அறிவுறுத்துமிடத்து என்றவாறு.

'உள்ளத்துணர்ச்சி'யென்பது யாதோவெனின், கூட்ட முண்மை உணர்ந்த உணர்ச்சியென்றுமாம்; அல்லதூஉம் அவர் இக்குறையினை இன்றியமையாரென உணர்ந்த உணர்ச்சி யென்றுமாம்; யான் குறையுற அவள் இதனை ஆற்றுங்கொல்லோவென உணர்ந்த உணர்ச்சியென்றும்மா

அல்லது என்னினைய கூட்டம் முடியாதுவிடின் இவன் இறந்துபடுமாகலின் அவளைக் குறை நயப்பித்துக் கொண்டு முடிக்கலாங் கொல்லோவென உணர்ந்த உணர்ச்சியென்றுமாம்.

‘தெள்ளிதிற் கரந்து கிழவோள் தேஎத்துக் குறையுறாஉம் உளவே’ என்பது இவள் *கூட்டமுண்மை உணர்ந்தாள்போன்று குறை யுறுகின்றாளெனத் தலைமகட்குப் புலனாகாமை நன்று மறைத்துக் குறையுறாஉங் குறையுறவும் உடையள் தலைமகண்மாட்டுக் குறைநயப்புக் கூறுமிடத்து என்றவாறு.

உண்டென்னாது ‘உள’வென்ற பன்மைச்சொல் எற்றிற்கோவெனின், குறையுறுதல்தாம் பலவென்றற்குச்சொல்லப்பட்டது. அவை யாவையோவெனின், மெலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தலும் வலிதாகச்சொல்லிக் குறை நயப்பித்தலுமென இவை.

மென்மொழியாற் கூறல்.

இவற்றுள் மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பிக்குமாறு: இங்கு வந்து ஒழுகாநின்றான் ஒரு தோன்றல் உளன்; அவன் என்னினையதொரு குறையுடையான்போலும்; ஒருவராலும் ஒரு குறைகொள்ளுந் †தன்மையானும் அல்லன், ஒருவர்க்கு ஒரு குறைமுடிப்பினல்லது; அதனாற் குறை இன்றியமையாமை நோக்கி யான் முடிப்பனென்று பொய்த்தேன். பொய்ப்பலென்று பொய்த்

* ‘கூட்டமுண்மை உணர்ந்து உணராதாள் போன்று குறையுறுகின்றாளென’ என்பதும் பாடம்.

† ‘தகைமையானும்’ என்பதும் பாடம். இங்கிருந்து ஐந்து வரிகளில் வேறோர் ஏட்டுப் பிரதிக்கிணங்கப் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

தேனுமல்லேன்; இப்பொழுதைக்குள்ளாய் அப்பொய்யினாற் பின்னுமோர் உபாயத்தான் முடித்துக்கொள்ளப் பொரு ரோவென்று பொய்த்தேன். என்னை? *உயிருடையா ரெய்தா ஒரு பொருளில்லை என்பவாகலான்; அவ்வாறு கருதிப் பொய்த்தேற்கு அவர் அதனை மெய்யென்று கருதிக் கைக்கொண்டுசென்றார், தாம்பொய்யறியாமையின். அன்னார் இன்றும் வருவர்; வந்தால் குறை முடியாமையிற் பொய்யென உணர்வராகாரோ வென்னும். அதற்குச் செய்யுள்:

பாமாண் டமிழுடை வேந்தன் பராங்குசன் கொல்லிப்பைம்பூந்
தேமாந் தழையொடு கண்ணியுங் கொண்டிச் செழும்புனத்தி
லேமாண் சிலையண்ணல் வந்துநின் றார்பண்டு போலவின்று
பூமாண் குழலா யறியே னுரைப்பதோர் பொய்ம்மொழியே. (அகூ)

அல்லதூஉம்,

கொடியார் நெடுமதிற் கோட்டாற் றரண்கொண்ட கோன்பொதியிற்
கடியார் புனத்தயல் வைகலுங் காண்பல் கருத்துரையா
னடியார் கழல னலங்கலங் கண்ணியன் மண்ணளந்த
நெடியான் சிறுவன்கொல் லோவறி யேனோர் நெடுந்தகையே. (கூO)

நண்ணிய போர்மன்னர் வான்புக நட்டாற் றமர்விளைத்த
மண்ணிவர் செங்கோல் வரோதயன் வையைநன் னாடனையாய்
கண்ணியன் றண்ணந் தழையன் கழலன் கடுஞ்சிலைய
னெண்ணிய தியாதுகொல் லோவக லானிவ் விரும்புனமே. (கூக)

பன்னிய தீந்தமிழ் வேந்தன் பராங்குசன் பாழிவென்ற
மன்னிய சீர்மன்னன் கொல்லிநம் வார்புனங் கட்டழித்துத்
தின்னிய வந்த களிறு † தடிந்த சிலம்பன் றந்த
பொன்னியல் பூண்மங்கை வாடுப வோமற்றிப் பூந்தழையே. (கூஉ)

* 'உயிருடையதா ஒரு பொருளில்லை' என்னும் முன் அச்சுப் பிரதியிற் கண்ட பாடம் பொருட்பேறின்று.

† 'கடிந்த' என்பதும் பாடம்.

அரைதரு மேகலை யன்னமன் னாய்பண் டகத்தியன்வா
யுரைதரு தீந்தமிழ் கேட்டோ னுசிதனெண் பூம்பொதியில்
வரைதரு வார்புனங் கையக லான்வந்து மாவினவும்
விரைதரு கண்ணியன் யாவன்கொ லோவோர் விருந்தினனே (கூ௩)

பொரும்பா ரரசரைப் பூலந்தை வாட்டிய கோன்பொதியி[ற்கலான்
லரும்பார் தழையுங்கொண் டியான்சொன்ன பொய்யைமெய் யென்
பெரும்பான் மையுமின்று வாரா விடான்வரிற் பேரமர்க்கட்
சுரும்பார் கருங்குழ லாயறி யேனினிச் சொல்லுவதே. (கூச)

தெம்மாண் பழிந்துசெந் தீமூழ்கச் சேவூர்ச் செருவினன்று
வெம்மாப் பணிகொண்ட வேந்தன்றென் னாடன்ன மெல்லியலா
யிம்மாந் தழைய னலங்கலங் கண்ணியன் யாவன்கொல்லோ
கைம்மா வினாய்வந் தகலா னமது கடிப்புனமே. (கூரு)

சிலையுடை வானவன் சேவூ ரழியச் செருவடர்த்த
விலையுடை வேனெடு மாறன் கழலிறைஞ் சாதவர்போ
னிலையிடு சிந்தைவெந் நோயொடிந் நீள்புனங் கையகலான்
முலையிடை நேர்பவர் நேரு மிடமிது மொய்குழலே. (கூசா)

இலைசூழ்செங் காந்த ளெரிவாய் முகையவிழ்த்த வீர்ந்தண்வாடை
கொலைவே னெடுங்கட் கொடிச்சி கதுப்புளருங் குன்றநாட
னுலைவுடை வெந்நோ யுழக்குமா லந்தோ
முலையிடை நேர்வார்க்கு நேரு மிடமிது மொய்குழலே. (கூஎ)

என இவ்வகை கூறக்கேட்டு நின்னிற்பிரியேன் பிரி யின் ஆற்றேனென்ற எம்பெருமான் இவளை வந்து இரந்து பின்னின்றமையான் இறந்துபட்டிலனென்று ஏமாப்பாளா வது.

இனி வலிதாகச்சொல்லிக் குறை நயப்பிக்குமாறு:

வன்மொழியாற் கூறல்.

இங்குவந்து ஒழுகாநின்றான் ஒரு தோன்றல் உளன்; என்னினாவதொரு குறையுடை யான் போலும்; ஒருவரானும் ஒரு குறை கொள்ளுந் தன்மையனுமல்லன், தான் பிறர்

குறை முடிப்பினல்லது. *அதனால் குறை இன்றியமை யாமை நோக்கி குறை முடிப்பனெனப் பொய்த்து ஒழுகி னேன்; ஒழுக, நெருநலைநாளால் இக்கானலுள்வந்து என்னை எதிர்ப்பட்டுத் தன் துணைப் புறந்தருவதோர் அலவனைக் கண்டு இதுவாகாதே அறிவும் ஆண்மையுமுடையதென அதனை நன்குமதித்து ஆற்றாளாய் என்னையும் நோக்கி அல வனையும் நோக்கி உணர்வினை என் கண்ணும் அவ்வலவன் கண்ணும் ஒழியப்போயினான்: எத்தன்மையனாயினான் கொல்லோ இன்று வந்திலன் என்னும். அதற்குச் செய் யுள்:

பாடுஞ் சிறைவண் டறைபொழிற் பாழிப் பற்றாவரச
ரோடுந் திறங்கண்ட கோன்கன்னிக் கான லுறைதுணையோ
டாடு மலவற் புகழ்ந்தென்னை நோக்கி யறிவொழிய
நீடு நினைந்துசென் றானென்ன லாங்கொர் நெடுந்தகையே. (கூஅ)

பொன்றா விரிபுகழ் *வானவன் பூலந்தைப் பூவழிய
வென்றான் வியன்கன்னி யன்னந்தன் மென்பெடை மெய்யளிப்ப
நன்றா மிதன்செய்கை யென்றென்னை நோக்கி நயந்துருகிச்
சென்றா ரொருவர்பின் வந்தறி யாரிச் செழும்புனத்தே. (கூகூ)

புணர்துணையோ டாடும் பொறியலவ னோக்கி
யிணர்ததைபூங் கான லென்னையு நோக்கி
யுணர்வொழியப் போன வொலிதிரைநீர்ச் சேர்ப்பன்
வணர்சுரியைம் பாலோய் வண்ணமுணரேனால்.

(சிலப்பதிகாரம் - கானல்வரி, நக.)

"ஒருநாள் வாரல னிருநாள் வாரலன்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியென்

---

* வேறோர் ஏட்டுப்பிரதி நோக்கி இப்பகுதியிற் பல திருத்தங் கள் செய்யப்பட்டன.

† 'தென்னவன்' என்பதும் பாடம்.

னன்னர் நெஞ்ச நெகிழ்ந்த பின்றை
வரைமுதிர் தேனிற் போகி யோனே
யாசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
வேறுபுல னன்னாட்டுப் பெய்த
வேறுடை மழையிற் கலுழுமென் னெஞ்சே" (குறுந் - ௧௭௬.)

இதுகேட்டு இறந்துபடாளாயிற்று எற்றிற்கோ வெனின், இறந்து படாளன்றே, இவன் உளனாயினும் இறந்து படும்பிற யான் இறந்துபடி னென்றதனான். (௧0)

௧௧. **தன்னுட் குறிப்பினை யருகுந் தோழிக்கு
முன்னுறு புணர்ச்சியி னருகலு முண்டே.**

என்பதென்னுதலிற்றோ வெனின், அங்ஙனங் குறை நயப்புக் கூறப்பட்ட தலைமகள் இன்னதன்மையளென்ப துணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: தன் உள் குறிப்பினை—தோழி தன் உள்ளத்துக் குறிப்பினை; அருகுந் தோழிக்கு—சார்த்துறுந் தோழிக்கு; முன்னுறு புணர்ச்சியின்—இயற்கைப் புணர்ச்சி, அங்கு நின்னிற்பிரியேன் பிரியினாற்றேனென்றது உண்டன்றே, அதனின்; அருகலும் உண்டு—தலைமகள் தனது தன்மையைச் சார்த்தலும் உடையள், என்றவாறு.*

மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்த விடத்து எம்பெருமான் தனக்குத் தகாத †இளிவுபட ஒழுகாநின்று

---

* 'என்ப தென்சொன்னவாறெனின், அறியநிற்றலு முடையள், அறியாமை நிற்றலுமுடையள், என்றவாறு.' என்னும் ஒரு சொற்றொடர் ஈண்டுளதென்பது வேறோர் ஏட்டுப் பிரதியாற் றெரிகின்றது; இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை.

† 'இழிவர' என்பதும் பாடம்.

னெனக் கவற்சி உண்டன்றே, அது புலப்படாமை நிற்கும். வலிதாகச் சொல்லிக் குறை நயப்புக் கூறினவழி நெருநல் வரானுயினுன் என்றமையின் இறந்துபட்டானென ஆற்ருமை பெரிதாய், அங்குப் புலப்பட நிற்குமென்பது.

இனி ஒருதிறத்தார் வேண்டுவது, சொல் நிகழ்தலு முண்டு சொல்நிகழாமையுமுண்டென்பது. அஃதாமாறு: மெலிதாகச் சொல்லிக் குறைநயப்புக் கூறியவழி முன் இறந்துபட்டான்கொல்லோ எனக்கருதி ஆற்ருமையொடு நின்ருள் உண்மைகேட்ப ஆற்ருமை நீங்கி நாணுவந்து அடையத், தோழி முன்னர் நிற்கலாது வேங்கைப்பூக் கொய்வாம்; மயிலாடுமாறு காண்பாம்; * குயில் கூவுமாறு கூறுவாம் அருவி ஆடுவாமென ஒன்றன்மேலிட்டு நீங்கும். அதற்குச் செய்யுள்:

கணிநிற வேங்கையுங் கொய்துங் கலாவம் பரப்பிநின்று
மணிநிற மாமயி லாடலுங் காண்டும்வல் லத்துவென்ற
துணிநிற வேன்மன்னன் றென்னர் பிரான்சுடர் தோய்பொதியி
னணிநிற மால்வரைத் தாநீ ரருவியு மாடுதுமே. (கoo)

விரைவளர் வேங்கையுங் காந்தளுங் கொய்தும் வியலறைமே
னிரைவளர் மாமயி லாடலுங் காண்டு நிகர்மலேந்தார்
திரைவளர் பூம்புனற் சேவூர்ப் படச்செற்ற தென்னன்கொல்லி
வரைவளர் மாநீ ரருவியு மாடுதும் வாணுதலே. (கoக)

எனச் சொல் நிகழ்ந்தவாறு. வலிதாகச் சொல்லிக் குறைநயப்புக்கூறினவழி நெருநல் வரானுயினுன் ஆதலின் இறந்துபட்டானென † ஆற்ருமையது பெருமையாற் சொற்பிறவா தெனக் கொள்க.

---

* 'இச்சொற்ருெடர் முன் அச்சுப்பிரதியில் விடுபட்டது.

† 'ஆற்ருமை நிகழ்ந்து பெருமையால்' என்னும் முன் அச்சுப்பிரதியிற்கண்ட பாடம் பொருட்பேறின்று.

இனி ஒருசாரார் சொல்வது: இயற்கைப்புணர்ச்சிபுணர்ந்ததற்கு இடையின்றியே இற்செறிக்கப்பட்ட தலைமகள் தோழிக்கு அறத்தொடுநிற்குமாறு உணர்த்துதனுதலிற்றென்ப. அவர் கூறும் பொருளாமாறு: தன்னுட் குறிப்பினை அருகுந் தோழிக்கு—தன்கண் வேறுபாட்டை அறியலுறுந் தோழிக்கு; முன்னுறு புணர்ச்சியின் அருகலும் உண்டு—முன்னுறு புணர்ச்சி காரணமாகச் சார்தலும் உண்டு, என்றவாறு. என்னை?

"முற்படு புணர்ச்சியிற் * கற்படு கிழத்தி
மெய்ப்பாட் டவலம் புரியுந் தோழிக்
கேதீ டாக வெண்ணிய முறையாற்
†கூறவும் படூஉங் குறிப்பொடு புணர்ந்தே
கற்புக்கடை காக்குங் கருத்தி னனை."

இதன் பொருட்டுத் தலைமகள் தோழிக்கு அறத்தொடு நின்றதென்ப. அஃது இங்குச் சொல்லவேண்டுவதில்லை. போக்கி,

"அந்நா விடத்து மெய்ந்நா ணொரீஇ
யறத்தொடு நிற்ற றோழிக்கு முரித்தே." (இறையனார்-உக.)

என்பதன்கட் சொல்லுதும். ஒருவர்க்கு ஒரு சொற்சொன்னவிடத்து அச்சொல்லப்பட்டார் இன்னநிலைமையராயினா ரென்பது சொல்லவேண்டுமன்றோ? மேற்சூத்திரத்துத் தோழி தலைமகளைக் குறையுறுமென்றார், இச்சூத்திரத்துக் குறையுறப்பட்ட தலைமகள் இன்ன நிலைமையளாயினாளென்பது சொல்லவேண்டுமென்பதனான் மேலதே உரை. இவ்வகை குறைநயப்புக்கூறப்பட்ட தலைமகள் தலைமகனைக் காணலுறவினளாம். அக்குறிப்பு உணர்ந்த தோழி தலை

---

* 'கடிபடுகிழத்தி' என்பதும் பாடம்.

† 'கூறவும் பெறாஉம்' என்பதும் பாடம்.

மகள் குறைநேர்ந்தாளென்பது தலைமகற்கு அறியநிற்கும் என்பாருமுளர். அதற்குச் செய்யுள்:

தழைவிருப்புரைத்தல்.

சிலைமிசை வைத்த புலியுங் கயலுஞ்சென் றேங்குசெம்பொன்
மலைமிசை வைத்த பெருமான் வரோதயன் வஞ்சியன்னாண் [ல்சேர்
முலைமிசை வைத்துமென் றோண்மேற் கடாய்த்தன்மொய் பூங்குழ
தலைமிசை வைத்துக்கொண் டாளண்ண னீதந்த தண்டழையே.
கழுது குருதி படியக் கலிநீர்க் கடையல்வென்ற
விழுது படுநெடு வேன்மன்ன னீர்ம்புனற் கூடலன்னா
டொழுது தலைமிசை வைத்துக்கொண் டாள்வண்டுந் தும்பியுந்தேன்
கொழுது மலர்நறுந் தாரண்ண னீதந்த கொய்தழையே. (கO௩)

கஉ குறையுறுங் கிழவனை யுணர்ந்த தோழி
சிறையுறக் கிளந்து சேட்பட நிறுத்தலு
மென்னை மறைத்த லெவனா கியரென,
முன்னுறு புணர்ச்சி முறைமுறை செப்பலு
மாயப் புணர்ச்சி யவனொடு நகாஅ
நீயே சென்று கூறென விடுத்தலு,
மறியாள் போறலுங் குறியாள்கூறலும் [ளலு,
படைத்துமொழிகிளவியுங் குறிப்புவேறுகொ,
மன்ன பிறவுந் தலைப்பெயல் வேட்கை
முன்னுறு புணர்ச்சிக் குரிய வென்ப.

என்ப தென்னுதலிற்றோ வெனின், தலைமகளைக் குறை நயப்பித்து அவளது குறிப்புணர்ந்து தன்னினுங்கூட்டங் கூட்டலுறுந் தோழி தலைமகன் தெருண்டு வரைந்தெய்தல் வேண்டி இவையிவையெல்லாங் கூறிச் சேட்பட நிறுத்தப் படுமென்பதுணர்த்துதல் நுதலிற்று. மதியுடம்படுத்துப் பின்னின்றானாகத் தான் இதனை முடிக்கக்கருதுவாள் தன்

கன் நாணுக் கெடுந்துணையுங் குறியாடிக்கொண்டு ஒழுகு மாறுணர்த்துதல் நுதலிற்றெனவுமமையும்.

இதன்பொருள்: குறையுறுங்கிழவனை உணர்ந்ததோழி —குறையுறுந் தலைமகனைக் கடைப்பிடித்ததோழி: கடைப்பிடியாது சென்ற காலமும் உளவாதலால், இனி அன்ன தன்றென்றவாறு. அல்லதூஉங், 'குறையுறுங் கிழவனை உணர்ந்த தோழி' என்பது குறையுறவினான் ஆற்றானாகிய தலைமகனை உணர்ந்த தோழியென்றுமாம். அல்லதூஉம், இரத்தலுங் குறையுறுதலுஞ் செய்து ஆற்றானாகிச் செல்லாநின்ற தலைமகனைத் தன்னினாங்கூட்டம் முடியாதுவிடின் ஆற்றானுமென்பதனைத் திரிவின்றி உணர்ந்த தோழியென்றுமாம். சிறையுறக் கிளந்து சேட்பட நிறுத்தலும்—சிறையென்பது காப்பு, உறவென்பது மிக, கிளத்தலென்பது சொல்லுதல், சேணென்பது அகற்றல், படவென்பது நிகழ்தல், நிறுத்தலென்பது தழீஇக்கோடல்; காப்புமிகுதி சொல்லி அகற்றித் தழீஇக்கோடலும் என்றவாறு: ஆற்றாத தன்மைக்கண் நிறுத்தலென்னுஞ் சொல் தழீஇக் கொள்ளுமென்பது. எனவே, தலைமகனை ஆற்றாமை செய்வனபோன்று ஆற்றுவிப்பன சொல்லுமென்பதும் போந்தது. நிறுத்தலென்னுஞ் சொல்லால் தழீஇக் கொள்ளுமென்பதன்று, * நீக்கிநிறுத்தார் உய்ந்துவிட்டார் போக்கிவிட்டார் என்பனபோல ஒருசொல் விழுக்காடுபட நின்றது என்பாருமுளர். அங்ஙனங் காப்புமிகுதி சொல்லுமாறு: இவ்விடம் மிக்க காவலுடைத்து, நீயிர் வரற்பாலிரல்லீர் என்னும். அதற்குச் செய்யுள்:

---

* "நீக்கிநின்றார்ற்றார், ஆய்ந்துவிட்டார் என்றாற்போல" என்பதும் பாடம்.

காப்புடைத்தென்று மறுத்தல்.

மண்ணிவர் செங்கோல் வரோதயன் வல்லத்து மாற்றலர்க்கு
விண்ணிவர் செல்வம் விளைவித்த வேந்தன்விண் டோய்பொதியிற்
கண்ணிவர் பூந்தண் சிலம்பிடை வாரன்மின் காப்புடைத்தாற்
பண்ணிவர் வண்டறை சோலை வளாயவெம் பைம்புனமே. (கO௪)

புல்லா வயவர் நறையாற் றழியப் பொருதழித்த
வில்லான் விளங்குமுத் தக்குடை மன்னன் வியனிலத்தா
ரெல்லா மிறைஞ்சுசின் றூன்கொல்லி மல்லலஞ் சாரலிங்கு
நில்லா தியங்குமின் காப்புடைத் தையவி நீள்புனமே. (௪Oரு)

பூவலர் தண்பொழிற் பூலந்தைப் புல்லா வரசழித்த
மாவலர் தானை வரோதயன் கொல்லி மணிவரைவா
யேவலர் திண்சிலை யாரெமர் நீங்கா ரிருபொழுதுங்
காவல ராய்நிற்பர் வாரன்மி னீரிக் கடிப்புனத்தே. (கOசு)

இவ்வாறு தோழிசொல்லத் தலைமகன் ஆற்றினவா றென்னையோவெனின், அச்சொல்லே ஆற்றுவிக்கும்; இவள் இவ்விடத்து நிலைமையை மறையாது எனக்கு உரைப்பாளாயது என்கட்கிடந்த பரிவினாலன்றே! இத்துணை என்கட் பரிவுடையாள் *எனக்கு இது முடியாமையில்லை யென ஆற்றுவானும். இனி இப்படி அருமைத்தாகலின் இவளின் ஆகாதென்று உணர்வானாயின் வரைந்தெய்துவானும். இவள் இவையெல்லாந் தலைமகனைச் சொல்லுதற்குக் காரணமென்னெனின், தன் ஆற்றாமையால் யான் முடிக்கின்றஅதனை எளிதென உணரும், அது படாமை அரிதென உணர்வானாக என்றற்கு. இனி அச்சொல்லே ஆற்றுவித்த காரணமென்னையெனின், இது முடியாதென உணரின் இறந்துபடுவான்கொல்லோ வென்னும் அச்சம் என்பது. இதனை இச்சூத்திரத்துள் எங்குந் தந்துரைக்க.

* 'என் குறை முடியாதவாறில்லை' என்பதும் பாடம்.

(4) என்னை மறைத்தல் எவனாகியரென—ஆற்றாநின்ற தலைமகனை இஃதிறப்ப இவன் இறந்துபடுமென நின்ற தோழி, என்னை! நீர் இவ்வகையில் திரிதற்குக் காரண மென்னையென்னும். எனது ஆற்றாமை இன்னதினாயதென அதனை அறிந்திலள், அறியாதாட்கு இன்னது என் குறை யென்பேனாயின் இவள் மறுக்கவும் பெறும்; இவளை இன் னும் பல்கால் நெகிழ ஒழுகின், தானே அறிந்து முடிக்கும் எனவுணர்ந்து, இன்னது என்குறை யென் மறைத்தமைகூறி னாதானை நுங்குறை என்னை மறைத்தால் நகைத்துரைத்தல். நுமக்காவதென்னை என்னும்.

அதற்குச் செய்யுள்:

மின்னை மறைத்தசெவ் வேல்வலத் தால்விழி ஞத்துளொன்னார்
மன்னை மறைத்தவெங் கோன்வையை சூழ்பௌவ நீர்ப்புலவந்
தன்னை மறைத்திள ஞாழல் கமழுந்தண் பூந்துறைவா
*வென்னை மறைத்திவ் விடத்திய லாதுகொ லெண்ணியதே. (க0எ)

திண்டேர் வயமன்னர் சேவூ ரகத்துச் செருவழியக்
கண்டே கதிர்வேல் செறித்தவெங் கோன்கொல்லிக் கார்ப்புனத்து
வண்டேய் நறுங்கண்ணி கொண்டே குறையுற வந்ததனா
னுண்டே முடித்த லெனக்கு மறைப்பினு முள்ளகத்தே. (க0அ)

† எனவே, மறையாது விட்டவிடத்து முடிவுண்டு என்றாளென்பது.

(5) முன்னுறு புணர்ச்சி முறை முறை செப்பலும்—முன் னுறு புணர்ச்சியென்பது இயற்கைப்புணர்ச்சி, அதன்

---

* 'என்னை மறைத்த விடத்தியை யாதுகொ லெண்ணியதே' என்பதும் பாடம்.

† 'எனவே என்சொல்லப்பட்டதாம், மறையாது விட்ட விடத்து ஆமென்பதும் உண்டு என்றாளாம்' என்பது வேறோர் ஏட்டுப்பிரதியிற் கண்டபாடம்.

முறையென்பது பாங்கற்கூட்டம், அதன் முறையென்பது தோழிதன்னினாயகூட்டம்; அஃது என்னை மறையாது விட முடிப்பன் என்றுளாம். அதனான் என்குறை அறிந்திலள், அறிந்த ஞான்று முடித்துத் தருமென ஆற்றுவானும்.

மாயப் புணர்ச்சி அவனொடு நகாஅ நீயே சென்று கூறென விடுத்தலும்—அவன் இரந்து பின்னின்றவிடத்து மாயமான புணர்த்துச் சொல்லுகின்றது உலகத்து நிகழ்வதொன் றன்றாலோவென்று அவனொடு நகாநின்றே, யாரறிவார்? அது நிகழவும்பெறும் நிகழாமையும் பெறுமே எனினும், யாங் குற்றேவன் மகளிராதலாற் சொல்லகில்லேம்; அவளுக்கு நீயேசென்று நின் குறை சொல்லென்னும்.

நீயே கூறென்று துணிந்து அவள் குறிப்பறியாது மறுத்தல்.

அதற்குச் செய்யுள்:

சேயே யெனநின்ற தென்னவன் செந்நிலத் தேற்றதெவ்வர்
போயே விசும்பு புகழ்ச்செற்ற கோனந்தண் பூம்பொதியில்
வேயே யனையமென் றோளிக்கு நின்கண் மெலிவுறுநோய்
நீயே யுரையாய் விரையா ரலங்க னெடுந்தகையே. (க0௯)

புரைத்தா ரமர்செய்து பூலந்தைப் பட்டபுல் லாதமன்னர்
குரைத்தார் குருதிப் புனல்கண்ட கோன்கொல்விப் பாவையன்ன
நிரைத்தார் கருமென் குழலிக்கு நீயே நெடுந்துறைவா
வுரைத்தா லழிவதுண்டோசென்று நின்றுநி னுண்மெலிவே. (கக0)

என்னும். என்றவிடத்து ஆற்றானும்; என்னை? உலகத்தார் ஒருவரை இக்குறை முடித்துத்தரல்வேண்டுமென்று இரந்தவிடத்து என்னின் ஆகா, நீரே சென்று முடித்துக்கொண்மினென்றால் எத்துணையும் இன்னாதன்றே, அதுபோல என்பது. அவ்வகை ஆற்றானாய் நின்றானது ஆற்றாமை ஆற்றுவதொன்றனைப் பற்றும். என்னை? நகாநின்றான்

றே சொல்லியது. அந்நகை ஒன்றுடைத்தென ஆற்றா வாறுவது. இனி,

அறியாள் போறலும்—தலைமகன் தழையுங் கண்ணியுங்கொண்டு பின்னின்றவிடத்தும் நும்மூறிவனவுகேட்டல். மாற்சொல்லப்படுவாளை அறியேனாலோ வென்னும். அதற்குச் செய்யுள்:

பொறிகெழு கெண்டை * வடவரை மேல்வைத்திப் பூமியெல்லா
நெறிகெழு செங்கோ னடாநெடு மாறனெல் வேலிவென்றான்
வெறிகமழ் பூங்கன்னிக் கானல் விளையாட் டயர்கின்ற
செறிகுழ லார்பலர் யார்கண்ண தோவண் ணல் சிந்தனையே. (கககூ)

இளையா வெதிர்நின்ற தெம்மன்னர் சேவூர் படச்சிறுகட்
டுளையார் கருங்கைக் களிறுந்தி னன்றெண்டிச் சூழ்துறைவாய்
வளையார் வனமுலை யார்வண்ட லாடும் வரிநெடுங்கண்
ணிளையார் பலருளர் யார்கண்ண தோவண்ண லின்னருளே. (ககஉ)

என்னும். இதுகேட்டு ஆற்றானாய்நின்று என்குறை இன்னார் கண்ணதென்று அறிந்திலள், அறிந்தனாள் முடித்துத் தருமென ஆற்றுவானாவது.

குறியாள் கூறலும்—இத்தழை நல்ல, இக்கண்ணி நல்ல, இவை கொள்ளற்பாலவென்று கையுறை பாராட்டி நின்ற நிலைமைக்கண் அவற்றை ஏற்றுக்கொள்ளாது மற்றொன்று சொல்லி நீங்குவது. அதற்குச் செய்யுள்:

குறியாள் கூறல்.

மன்னன் வரோதயன் வல்லத்தோ னார்கட்கு வான்கொடுத்த
தென்னன் றிருமால் குமரியங் கானற் றிரைதொகுத்த
மின்னுஞ் சுடர்ப்பவ ளத்தரு கேவிரை நாறுபுன்னைப்
பொன்னந் துகள்சிந்தி வானவிற் போன்றதிப் பூந்துறையே. (ககங)

* 'பொன்மால்வரை' என்பதும் பாடம்.

காரணி சோலைக் கடைய லிடத்துக் கறுத்தெதிர்ந்தார்
தேரணி தானை சிதைவித்த கோன்கன்னித் தென்றுறைவாய்
நீரணி வெண்முத்தி னுலிந் நெடுமணன் மேலிழைத்த
வேரணி வண்டல் சிதைக்கின்ற தாலிவ் வெறிகடலே. (ககச)

என்பது கேட்டு இவள் இக்குறை முடியாள், அவத்த மே வருந்தினேன், யான் சொல்லியது இருப்ப ஏதில தொன்று சொல்லினமையினென்று * ஆற்றாளாயினான். அவ்வாற்றாமை ஆற்றுவதொன்றனைப்பற்றும்; ஆற்றுவ தியாதோவெனின், இவள் பிறிதொன்றிற்குப் புடைகவ ன்று நின்ற நிலைமைக்கண் வந்தேன், அல்லாக்கால் மறுமாற் றந் தாராமை இல்லை, இவள் கவன்றுநில்லா நிலைமைக்கண் வருவெனென அந்நசையால் ஆற்றும்.

படைத்துமொழி கிளவியும்—† இவன் இத்தழை நல்ல, இக்கண்ணி நல்ல, இம்முத்து நல்ல, இவை கொள்ளற்பால வென்று கையுறை பாராட் டி நின்ற நிலைமைக்கண் இங்ஙனஞ் சொல் லும்: யாதோவெனின், இவ்விடம் என் னையரானுந் தன்னையரானும் பல்காலும் புகுதரப்படுமால்; அவர் நுட்மைக்கண்டால் ஏதஞ்செய்வர், கூற்றினுங் கடுஞ் சினத்த ராதலான்; நீர் உடையதோர் குறை உண்டே யெனின், அகன்று நின்று முடித்துக்கொள்ளற்பாற் றெனு னும். அதற்குச் செய்யுள்:

படைத்துமொழி யான் மறுத்தல்.

பொன்னயர் வேங்கையம் பூந்தழை யேந்திப் புரிந்திலங்கு
மின்னயர் பூணினை வாரற் சிலம்ப விழிஞத்தொன்னார்
மன்னயர் வெய்தவை வேல்கொண்ட வேந்தனம் மாந்தையன்னா
டன்னயர் தீயர் பல்கால் வருவாரித் தண்புனத்தே. (ககரு)

---

* 'அவ்வாற்றால்தான் ஆற்றாளுயினான்' என்பதும் பாடம்.

† 'இவனித்தழையு மிக்கண்ணியும்நல்ல, இம்முத்து மிவ்விப்பீ யும் நல்ல' என்பதும் பாடம்.

பூட்டிய மாநெடுந் தேர்மன்னர் பூலந்தைப் பூவழிய
வோட்டிய திண்டே ருசிதன் பொதியி னுயர்வரைவா
யீட்டியர் நாயினர் வீணயர் வாளிய ரெப்பொழுதுங்
கோட்டிய வில்லர் குறவர்நண் ணன்மினிக் கொய்புனத்தே. (ககசு)

இது படைத்து மொழிகிளவி ஆயினவாறு என்னையோ வெனின், பெரியார்களிடமெனப்படுவன பெண்பால்கட்கு உரியவழி ஆண்பால்கள் புகுதலும் ஆண்பால்கட்கு உரிய வழிப் பெண்பால்கள் புகுதலுஞ் செய்யப்படாதன. அவற்றை இல்லது படைத்துமொழிந்தமையாற் படைத்துமொழி கிளவி யெனக்கொள்க. அதுகேட்டு ஆற்றாளும்; என்னை? இவள் ஒருதிறத்தின் நீக்குதற்கு இவ்வாறு சொல்லுகின்றாளென ஆற்றாளாயினள்.

அவ்வாற்றாமை ஆற்றுவதொன்றனைப்பற்றும்; என் பற்றுமோவெனின் இவ்வகை என்கண் ஏதத்திற்குக் கவல்வாள் யானெய்தாது விடின் உளதாம் ஏதத்திற்குங்கவலுமென ஆற்றுவாளும்.

(ஈ) குறிப்பு வேறு கொளலும்—தான் கூட்டம் வேண்டுங் குறிப்பினளாயினுஞ் சொல்லுங் கூற்றும் இன்றி வேண்டாத குறிப்பினளாய்க் காட்டுவது; அது கண்டும் ஆற்றாளும். என்னை? இவள் என்குறை முடியாள், அவத்தமே வருந்துகின்றேனென. இது தானே ஆற்றுதற்குக் காரணம் ஆமாறு: ஒக்கும், பிறிது ஒன்றற்குப் புடைகவன்று நின்ற நிலைமைக்கண் வந்தேன், அப்புடைகவற்சியில்லா நிலைமைக்கண் வந்தால் ஒரு மாற்றஞ் சொல்லும் பிறவென ஆற்றிப்பெயரும். அஃதேயெனின், மேலனவும் எல்லாங் 'குறிப்பு வேறுகொள'லேயல்லவே? *இதனையே

---

* இங்கிருந்து நான்கு வரிகள் வேறொரு ப்ரதியிற் காணப்படவில்லை.

குறிப்பு வேறுகொளலெனச் சொல்லியது எற்றிற்கோ வெனின், அவை எல்லாஞ் சொன்னிகழ்ச்சியுடைய, இது சொன்னிகழ்ச்சியின்றிக் கூட்டம் வேண்டாக் குறிப்பின ளாவது எனக்கொள்க. இனிப் பிறர் 'குறிப்பு வேறுகொள லும்' என்பதனைச் சொல்லுமாறு: 'தன்குறிப்பினளன்றி' நின்றாட்கு என் சொல்லிச் செல்கேன் என்னும். அதற்குச் செய்யுள்:

தலைவி தன்குறிப்பினளல்ல ளென்றல்.

ஆடியன் மாநெடுந் தேர்மன்ன ராற்றக் குடியழியக்
கோடிய திண்சிலைக் கோனெடு மாறன்றென் கூடலன்ன
ணீடிய வார்குழ லீலமுஞ் சூடா ளினைந்துநின்றா
டோடியல் பூந்தொங்க லாயறி யேன்சென்று சொல்லுவதே. (ககள)

நெறிநீ ரிருங்கழி நீலமுஞ் சூடாள்
பொறிமாண் வரியலவ னாடலு மாடாள்
சிறுநுதல் வியர்வரும்பச் சிந்தியா நின்றாட்
கெறிநீர்த்தண் சேர்ப்பயா னென்சொல்லிச் செல்கோ.

என இவ்வாறு சொல்ல ஆற்றானாயினன், அச்சொல்லே பற்றுக்கோடாக ஆற்றுமென்பது. அவள் தன் குறிப்பின ளன்றி நின்றாளெனச் சொல்லினமையின் தன் குறிப்பின ளாய் நின்ற பொழுது சொல்லுமென ஆற்றுவானும்.

அன்ன பிறவுந் தலைப்பெயல் வேட்கை முன்னுறு புணர்ச்சிக்கு உரிய என்ப—அன்ன மற்றுமுள முன்னுறு புணர்ச்சியைப் போலத் தலைப்பெய்விப்ப லென்னும் உள் ளத்தாள் சொல்லுதற்கு உரிய கிளவிகளெனக் கொள்க. அங்ஙனம் ஓதுவான்புகப் பெருகுவது கண்டு சிலவோதிச் சிலபுறனடுத்தார், அஃது இலக்கண மாகலானென்பது. 'அன்ன பிறவும்' என்றதனான் இங்ஙனமுஞ்சொல்லும்: நீயிர் விருந்தினிராகலான் அவளது அருமை பெருமை அறி யீரன்றே, அவள் தாமரைக்கொட்டையின் அல்லியே

போலக் கிளி புறங்காப்பச் செல்வாள், இந்நிலத்து மிக்காள் ஒருதலைமகள், எமக்குக் கண்கூடாகச் செல்வதோர் தெய்வமல்லளோ? அவளைக் கண்ணிற்கண்டு கையிற்கூப்பித் தலையிற் பணிந்து வழிபடச் செல்வதல்லது எம்போல்வார்களால் ஒரு குறைவுணர்த்துந் தன்மையளோ என்று சொல்லும். அதற்குச் செய்யுள்:

அருமைசாற்றல்.

புட்புலம் பும்புனற் பூலந்தைப் போரிடைப் பூழியர்கோ,
னுட்புலம் போடு செலச்செற்ற வேந்த னுறந்தையன்னாள்
கட்புல னாச்செல்லுந் தெய்வங்கண் டாய்கமழ் பூஞ்சிலம்பா
வட்கில னாகியெவ் வாறு மொழிவனிம் மாற்றங்களே. (௧௧அ)

"நெருநலு முன்னா ளெல்லையு மொருசிறைப்
புதுவை யாகலிற் கிளத்த னாணி
நேரிறை வளைத்தோ ணின்றோழி செய்த
*வாரஞர் வருத்தங் களையா யோவென
வெற்குறை யுறுதி ராயிற் சொற்குறை
யெம்பதத் தெளிய ளல்ல ளெமக்கோர்
கட்காண் கடவு ளல்லளோ பெரும
வாய்கோன் மிளகின் மலையங் கொழுங்கொடி
துஞ்சுபுலி வரிப்புறந் தைவரு
மஞ்சுசூழ் மணிவரை மன்னவன் மகளே."

இனி இவ்வகையுஞ் சொல்லும்: நீயிர் பெரியீர், யாஞ் சிறியேம், நும்மோடு எம்மிடைக் கட்டுரை பொருந்தாதென்னும். அதற்குச் செய்யுள்:

குலமுறை கூறி மறுத்தல்.

நடைமன்னு மென்றெம்மை நீர்வந்து நண்ணன்மி னீர்வளநாட்
டிடைமன்னு செல்வர் நுமரெமர் பாழி †யிகலழித்த

---

* 'ஆருயிர் வருத்தம் களைமா யோவென' என்பதும் பாடம்.
† 'இகன்மலைந்த' என்பதும் பாடம்.

யடைமன்னன் *றென்குல மாமதி போற்பனி முத்திலங்குங்
குடைமன்னன் கோடுயர் கொல்லியஞ் சாரற் குறவர்களே. (ககக)

உற்றவ ரேநுமக் கொண்புன னாட்டுறு † செல்வர்சொல்லின்
மற்றெம ராய்விடின் வானவன் றானுடை மானிலேயச்
செற்றமர் சேவூர்ப் புறங்கண்ட திங்கட் டிருக்குலத்துக்
கொற்றவன் மாறன் குடக்கொல்லி வாழுங் குறவர்களே. (கஉ0)

இழைவளர் பூணண்ண லீர்ம்புன னாடனே நீயெமரோ
மழைவளர் மானக் ‡ களிறுந்தி மாநீர்க் கடையல்வென்ற
தழைவளர் பூங்கண்ணி மூன்றுடை வேந்தன்றண் ணம்பொதியிற்
குழைவள ராரத் தருவியஞ் சாரற் குறவர்களே. (கஉக)

" இவளே, கான நண்ணிய காமர் சிறுகுடி
நீனிறப் பெருங்கடல் கலங்க வுள்புக்கு
மீனெறி பரதவர் மகளே நீயே
நெடுங்கொடி நுடங்கு நியம மூதூர்க்
$ கடுந்தேர்ச் செல்வன் காதன் மகனே
நிணச்சுறா வறுத்த வுணக்கல் வேண்டி
யினப்பு ளோப்பு மெமக்குநல னெவனோ
புலவு நாறுதுஞ் செலநின் றீமோ
பெருநீர் விளையுளெஞ் சிறுநல் வாழ்க்கை
நும்மொடு புரைவதோ வன்றே
யெம்ம னோரிற் செம்மலு முடைத்தே." (நற்றிணை-சரு.)

என ஆற்றுனாயினன்; ஆற்றுனாய், நீயிர்பெரியீர் யாஞ் சிறியே மென்பதன்றே சொல்லியது; யானும் அத்தன்மை யனுக எய்தலாமன்றே என்று ஆற்றுமென்பது. இனி இவ்வாறுஞ் சொல்லும். அதற்குச் செய்யுள்:

---

* 'தொல்குல மாமதி பெற்றபன் முத்திலங்கு' என்பதும் பாடம்.
† 'உயர்செல்வர்' என்பதும் பாடம்.
‡ 'களிறுக' என்பதும் பாடம்.
$ 'கடுந்தேர்ச் செம்மல்' என்பதும் பாடம்.

கங. குறையுறு புணர்ச்சி தோழி தேஎத்துக்
கிழவிக் கில்லை தலைப்பெய லான.

என்பதென்னுதலிற்றோ வெனின், தலைமகளது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: குறையுறுபுணர்ச்சி—*குறையுறவினாற் புணரும் புணர்ச்சி; தோழி தேஎத்து—தோழிமாட்டு; கிழவிக்கு இல்லை—தலைமகட்கு இல்லை; தலைப்பெயல் ஆன—†தலைப்பெய்தற்கண் என்றவாறு.

தோழிபக்கம் நின்ற குறையுறவினானாய கூட்டந் தலைமகட்கில்லை என்றவாறு.

அஃதியாங்ஙனமோவெனின், ஈங்கு வந்து ஒழுகாநின்றான் ஒரு தோன்றல் உளன், அவன் என்னினுவதோர் குறையுடையான் போலும்; அக்குறை இன்றியமையாமையான், அக்குறை முடித்தருளாயாயின் என்னைக்குற்றேவல் இழத்தியென, அவளை யிழப்பதற்கஞ்சிக் குறைநேர்ந்து தலைமகள் தலைமகனை ஏற்றுக்கொண்டு கூடுங் கூட்டமில்லை, வழக்கினுட்போல என்பது.

"அவ்வியல் பல்லது கூட்டக் கூட
லெவ்விடத் தானுங் களவிற் கில்லை" (இறையனார்-ச.)

என அமையாதோவெனின், அதுசொல்லிப் போந்து,

"உள்ளத் துணர்ச்சி தெள்ளிதிற் கரந்து
கிழவோ டேஎத்துக் குறையுறாஉ முளவே
குறிப்பறி வுறாஉங் காலை யான" (இறையனார்-கo.)

என்றது சொல்லவே, இவ்வகை தோழியாற் குறையுறப் புணரும் புணர்ச்சி உண்டுகொல்லோவென்று ஐயமா

* 'குறையுறவினையுணரும் புணர்ச்சி' என்பதும் பாடம்.
† 'தலைப்பெய்தற்கு இலக்கணம்'என்பதும் பாடம்.

மென்று மேலதனையே வலியுறுத்தற்கு இச்சூத்திரம் வேண்டிற்றென்பது.

இனி ஒருசாரார் சொல்லுமாறு: 'குறையுறுபுணர்ச்சி தோழிதேஎத்துக் கிழவிக்கில்லை' யென அமையாதோ? 'தலைப் பெயலான' என்றது எற்றிற்கோவெனின், தோழி கூட்டந்தான் தலை இடை கடையென மூன்றுவகைப்பட்டது அவற்றுள் *தலைக்கண்ணேயில்லாது இடையாந் தரத்தும் இறுதிக்கண்ணும் எல்லாம் இவள் கூட்டவே கூடுகின்றேன் என்பது அறிந்தே கூடும். †இங்ஙனமல்லா விடத்து,

"அருள்புரி நெஞ்சமோ டெஃகு துணையாக
வந்தோன் கொடியனு மல்லன் றந்த
நீதவ றுடையையு மல்லை நின்வயி
ஞெ வரும்படர் செய்த
யானே தோழி தவறுடை யேனே."

என்னுமாறு உண்டோவென்பது. மற்றும் எங்கும் இப்பெற்றியே வந்தனவெல்லாங் கொள்க. (கங)

கச. தோழிக் குரியவை கோடாய் தேஎத்து
மாறுகோ ளில்லா மொழியுமா ருளவே.

என்பதென்னுதலிற்றோவெனின், ‡போய்அறத்தொடு நிலை உணர்த்துவார் அவ்வறத்தொடு நிற்கும் முறைமை யுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: தோழிக்கு உரியவை—தோழி சொல்லுதற்கு உரிய; கோடாய் தேஎத்து—செவிலித்தாய்மாட்டு;

* 'தலைக்கண்ணே அறியநில்லாது' என்பதும் பாடம்.
† 'இங்ஙனமில்லாவிட்ட விடத்து' என்பதும் பாடம்.
‡ 'பெயர்த்தொருநிலை' என்பதும் பாடம்.

மாறுகோள் இல்லா மொழியுமார் உளவே—மாறுகொள்ளாமைச் சொல்லுஞ் சொற்களும் உள என்றவாறு.

[ஏற்றினொடு மாறுகொள்ளாமையோவெனின், தாயறிவினொடு மாறுகொள்ளாமையுந், தலைமகள்பெருமையொடு மாறுகொள்ளாமையுந், தலைமகளது கற்பினொடு மாறுகொள்ளாமையுந், தோழிதனது காவலொடு மாறுகொள்ளாமையும், நாணினொடு மாறுகொள்ளாமையும், உலகினொடு மாறுகொள்ளாமையுமெனக்கொள்க.] என்னைத்துக்கண்ணேயெனின், "காப்புக் கைம்மிக்குக் காமம் பெருகினும்" (இறை-உ௧) என்னுஞ் சூத்திரத்துட் சொல்லப்பட்ட நான்கு இடத்தும் வேறுபாடுண்டாம். அஃது எப்பொழுதுண்டாயிற்று அப்பொழுதே தோழிக்குப் புலனாம்: என்னை? தான் அவள் என்னும் வேற்றுமையிலளாகலான். அவ்வாறாயினவிடத்துத் தோழி எனக்குப் புலனாயினவாறேபோல யாய்க்கும் புலனாயினளான்று வாளா ஒழியாள், அறிவாரை வினவும்; வினவின இடத்து வினவப்பட்டார் தெய்வத்தினான் ஆயிற்றென்ப; * என்னை? பிறிதொன்று சுட்டி உணருந் தன்மைத்தன்று இக்குலமாகலானும் அதுவே சொல்லுதற்பயத்தது தங்கருமமாகலானும். அறியாதேயுஞ் சொல்லுப. சொல்ல, இவள் தெய்வத்திற்கு வழிபாடு செய்விக்கும்; செய்விக்கத் தலைமகட்குக் கற்பழியும்; என்னை? தன் தலைமகனையன்றிப் பிறிதோர் தெய்வம் வணங்கார் பத்தினியாராகலின். தெய்வத்தை வணங்கக் கற்பழியுமென்று தலைமகள் ஆற்றாளாம்.

அல்லதூஉம் ஒழுக்கக்குற்றக்குறைபாடு நீங்கி ஓங்கி வாராநின்ற தொல்குலம் மணிக்கலங் கதுவாய்ப்பட்டது

* இதுமுதல் ஐந்துவரிகள் வேறோர் ஏட்டுப்பிரதியிற் காணப்படவில்லை.

போல யான் தோன்றி இவ்வகை அணங்காட்டு அறியாது அணங்காட்டு எடுத்துக்கொள்ளப்பட்டதெனவும், யாம் உற்றது *நிரம்பற்பாட்டினும் வேலன்றனது வெறியாட்டு வலத்தினும் எம்பெருமானை அவ்வெறிக்களத்துக் கொண்டுவருங்கொல்லோ என்னும் பேரச்சத்தினும், எம்பெருமானை அவ்வெறிக்களத்துக் கொண்டுவருகல்லாது என்கண்நின்ற வேறுபாட்டைப் புறத்தார்க்குப் புலனாகாமை மறைப்பதுகொல்லோ எனவும், அங்ஙனம் மறைத்ததனைக்கேட்ட எம்பெருமான் என்னுடைய வேறுபாடு பிறிதொன்றினும் நீங்கும்போலுமென்று உட்கொள்ளுமெனவுந் தலைமகள் ஆற்றாளாமென்று தோழி ஆற்றாளாம்.

ஆற்றாளாயினுளது ஆற்றாமை ஆற்றுவதொன்றனைப் பற்றும்; ஆற்றுவது பிறிதின்மையின் யாய் † அறிவாரை வினவுமிடத்து என்னை வினவும்; வினவ, யான் அறியேனென்றதன் புறத்தாம் பிறரை வினவுவது; அங்ஙனம் என்னை வினவினவிடத்து இனி யாது சொல்லுவேனென்று கூட்டமில் நாட்டவகையாற் சிந்தித்துக்கொண்டிருந்தாள்; இருந்த நிலைமைக்கண் தாய் பிற்றைஞான்று சிறுகாலையே படிமக்கலத்தொடும் புக்காள், மகளை அடியிற்கொண்டு முடிகாறும் நோக்கினாள்; நோக்கி, அன்னாய்! என் மகள் பண்டையளல்லளால், இவ்வேறுபாடு எற்றினாயிற்று, நின்னால் அறியப்படுவதுண்டோவென்னும்; என்றவிடத்து இவள் அன்றுகொண்டு என்னாலுஞ் சிறிதுண்டு அறியப்படுவது; யாதோவெனின், எம்மைக்கூழைக்கற்றைக் குழவிப்பிராயத்து மாழைகலந்த ஏழைநீர்மையாரொடு

* 'நிரப்பப்பாட்டானும்' என்பதும் பாடம்.

† 'இவர்றை வினவுமிடத்து' என்பதும் பாடம்.

நாட்கோலஞ்செய்து விளையாடிவம்மினென்று போக்கினாய்; போக்கினவழி, யாம்போய் ஒரு வெண்மணல் பரந்த தண் *மலர்ப் பொழிலிடை விளையாடிநின்றேமாக, ஒருதோன்றல் †ஒரு சுனைக்குவளைப்பூக்கொண்டு அவ்வழியே போந்தான்; போதர, நின்மகள் அவனை நோக்கி அப்பூவினை என் பாவைக்கு அணியத் தம்மினென்றாள்; அவனும் பிறிது சிந்தியாது கொடுத்து நீங்கினான்; இஃது அறிவது அறியாக்காலத்து நிகழ்ந்ததென்னும். அதற்குச் செய்யுள்:

அறத்தொடு நிற்றல்.

கந்தார் களிறு கடாய்ச்செந் நிலத்தைக் கறுத்தெதிர்ந்து
வந்தா ரவியவை வேல்கொண்ட கோன்‡கன்னி வார்துறைவாய்ப்
பந்தார் விரலிதன் பாவைக்கு வேண்டப்$பைம் போதொருவர்
தந்தார் தரவவை கொண்டணிந் தாளித் தடங்கண்ணியே. (கரு0)

திண்போ ரரசரைச் சேவூ ரழிவித்த தென்னனன்னீர்
மண்போ யழிக்குஞ்செங் கோன்மன்னன் வையைநன் னாடனையாள்
கண்போற் குவளையம் போதங்கோர் காளையைக் கண்டிரப்பத்
தண்போ தவன்கொடுத் தானணிந் தாளித் தடங்கண்ணியே.

இஃது அறிவது அறியாக்காலத்து நிகழ்ந்ததனை அறிவதறிந்து, கொண்டார்க்குரியர் கொடுத்தாரென்பதும் உற்றார்க்குரியர் பொற்றொடிமகளிரென்பதும் நினைந்து அவனை வழிபடாது பிறிதோராறு ஆவதாயின், இக்குலத்துக்கு வடுவாங்கொல்லோ எனக் கருதினமையான் நின்மகள் வேறுபட்டதென்னும். எனவே, தாயறிவினொடு மாறுகொள்ளாதாயிற்று; என்னை? விளையாடிவம்மினென்றமையின். இனிப் பெருமையொடு மாறுகொள்ளாதாயிற்று, அக்காலத்து நற்

---

* 'மணப்பொழில்' என்பதும் பாடம்.

† 'இரண்டுசுனைக்குவளைப்பூ' என்பதும் பாடம்.

‡ 'சென்னிவார் பொழில்வாய்' என்பதும் பாடம்.

$ 'பனிக்குவளை' என்பதும் பாடம்.

செய்கை செய்ததனை இக்காலத்து நினைந்தமையின். இனிக் கற்பினொடு மாறுகொள்ளாதாயிற்று, இவ்வாறன்றிப் பிறிதோராறு ஆயின இடத்துக் குடிக்கு *வடுவாமெனக் கருதினமையின். இனித் தன் காவலொடு மாறுகொள்ளாதாயிற்று, இருவரும் இருந்த நிலைமைக்கண் நிகழ்ந்ததென்றமையின். இனி நாணினொடு மாறுகொள்ளாதாயிற்று, அறிவதறியாக்காலத்து நிகழ்ந்ததென்றமையின். இனி உலகினொடுமாறு கொள்ளாதாயிற்று, உற்றூர்க்குரியர் பொற்றொடிமகளிரென்றமையின். இது மாறுகோள் இல்லா மொழியாய் நிகழ்ந்தவாறு. இது பூத்தருபுணர்ச்சி.

இனிக் களிறுதருபுணர்ச்சிக்குச் செய்யுள்:

உறுகற் புடைமையி னுள்ளுமிப் பேதை யுசிதனென்னோர்
மறுகத் திறலுரு மேந்திய கோன்கொல்லி மால்வரைவாய்த்
துறுகற் புனமுஞ் சிதைத்தெங்க டம்மையுந் துன்னவந்த
சிறுகட் களிறு கடிந்திடர் தீர்த்த சிலம்பனையே. (கநஉ)

கனஞ்சேர் முலைமங்கை யுள்ளுமிப் போதுங் கடையலொன்னோர்
மனஞ்சேர் துயர்கண்ட வானவன்மாறன்மை தோய்பொதியிற்
புனஞ்சேர் தினையுங் கவர்ந்தெம்மைப் போகா வகைபுகுந்த
சினஞ்சேர் களிறு கடிந்திடர் தீர்த்த சிலம்பனையே. (கநந)

இவையும் அவ்வாறே யுரைத்துக்கொள்க.

இனிப் புனல் தருபுணர்ச்சிக்குச் செய்யுள்:

ஓங்கிய வெண்குடைப் பைங்கழற் செங்கோ லுசிதன்வையை
வீங்கிய தண்புன லாடி விளையாட் டயர்பொழுதிற்
றேங்கிய தெண்டிரை வாங்க வொழுகிநின் சேயிழையா
ணீங்கிய போதருள் செய்தனன் வந்தோர் நெடுந்தகையே. (கநச)

* 'வழு' என்பதும் பாடம்.

சின்னாண் மறந்திலம் யாமுந்தென் சேவூர்ச் செருமலைந்த
மன்னாள் செலச்செற்ற வானவன் மாறன்வை யைத்துறைவாய்ப்
பொன்னார் புனலெம்மை வாங்கும் பொழுதங்கொர் பூங்கணவே
லன்னா ளொருவ னணைந்தெமக் குச்செய்த வாரருளே. (கஙரு)

இவையும் அவ்வாறே உரைத்துக் கொள்க.

சாமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவா
டாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலா
னீணாக *நறும்பைந்தார் தயங்கப்பாய்ந் தருளினாற்
பூணாக முறத்தழீஇப் போதந்தா னகனகலம்
வருமுலை புணர்ந்தன வென்பதனா லென்றோழி
யருமறை தரல்வேண்டிற் றருகிற்கும் பெருமையளே. (கலி-39:)

என இதுவும் புனல்தருபுணர்ச்சி.

இனி உம்மையான் மாறுகோளில்லாக் குறிப்பும் உள வெனக்கொள்க. அக்குறிப்பு நிகழுமாறு: இவளை வினவாதே அறிவாரை வினவினவிடத்து அறிவோர் தெய்வத்தினான் ஆயிற்றென்ப. என்றக்கால் தெய்வத்திற்கு வழிபாடு செய்விப்பான் வேலனைக் கூவி வெறியாட்டெடுத்துக் கொண்டு வெறியாடுமிடத்து வேலற்குச் சொல்லுவாளாய்ச் சொல்லும். அதற்குச் செய்யுள்:

வண்டா ரிரும்பொழில் வல்லத்துத் தென்னற்கு மாறெதிர்ந்த
விண்டா ருடலின் மறியறுத் தூட்டி வெறியயர்ந்து
தண்டார் முருகற் றருகின்ற வேலதண் பூஞ்சிலம்ப
ணொண்டா ரகலமு முண்ணுங் கொலோநின் னுறுபலியே. (கஙசு)

“முருகயர்ந்து வந்த முதுவாய் வேல
சினவ லோம்புமதி வினவுவ துடையேன்
பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு
சிறுமறி கொன்றிவ ணறுநுத னீவி
வணங்கினை கொடுத்தி யாயி னணங்கிய

* ‘நறுந்தண்டார்’ என்பதும் பாடம்.

விண்டோய் மாமலைச் சிலம்பன்
*றண்டா ரகலமு முண்ணுமோ பலியே." (குறுங் - நஙஉ.)

என்பனவற்ருல் சொல்லப்பட்டது: சிலம்பன் தண்டாரகலமும் பலியுண்ணுமேல் தக்கது நின்ருற் செய்யப்படுகின்றதென்றவாறு. அதுகேட்ட தாய் என்சொல்லியவாறே என்னும் அவள் குறிப்பறிதற்கு. என்ற இடத்து, மேற்சொல்லியவாறே அறத்தொடு நிற்பாளாம் என்பது.

இனித் தெய்வம் ஏறியது கண்டு அதனை நோக்கி அருகு நின்ருர்க்கு உரைப்பாளாய் உரைக்கும். அதற்குச் செய்யுள்:

வாரணங் குங்கழல் வானவன் மாறன்வண் கூடலன்ன
வேரணங் கும்மிள மென்முலை யாட்கிருந் தண்சிலம்பன்
ருரணங் சாவ தறிந்தும் வெறியின்கட் டாழ்ந்தமையா
லாரணங் காயினு மாகவிச் செவ்வே ளறிவிலனே. (கஙஎ)

பொன்னணங் கிரம்புனற் பூலந்தை யொன்ஞர் புலாலளைந்த
மின்னணங் கிலை வேற்றென்னர் கோன்விய ருட்டவர்முன்
றன்னணங் கன்மை யறிந்தும் வெறியின்கட் டாழ்ந்தமையான்
மன்னணங் காயினு மாகவிச் செவ்வேண் மதியிலனே. (கஙஅ)

"கடவுட் கற்சுனை யடையிறந் தவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தட்
குருதி யொண்பூ வுருகெழக் கட்டிப்
பெருவரை யடுக்கம் பொற்பச் சூர்மக
ளருவி யின்னியத் தாடு நாடன்
மார்புதர வந்த படர்மலி யருநோய்
நின்னணங் கன்மை யறிந்து †மண்ணுந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி

* 'ஒண்டாரகலமும்' என்பதும் பாடம்.
† 'மாணுது' என்பதும் பாடம்.

வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினு மாக
மடவை மன்ற வாழிய முருகே." (நற்றிணை - நச.)

என இவைகேட்ட தாய் என் சொல்லியவாறோ வென்னும், அவள் குறிப்பறிதற்கு. என்றவிடத்து, மேற்சொல்லியவாறே அறத்தொடு நிற்பாளாம். (கச)

கரு. முற்ப டப்புண ராதசொல் லின்மையிற்
கற்பெனப் படுவது களவின் வழித்தே.

என்பதென்னுதலிற்றோ வெனின், கற்புக்கு இலக்கணமாமாறுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: 'முற்படப் புணராத சொல் இன்மையின்' என்றது, மொழிமாற்றுச் சூத்திரம்; அதனைப் புணராத முற்படச் சொல் இன்மையினென்று மொழிமாற்றிக் கொள்க: கற்பு எனப்படுவது களவின் வழித்தே—கற்பென்பதற்குச் சிறப்புடையது களவின் வழித்து என்றவாறு.

என்னை? புணராத முன் சொல்இன்மையிற் கற்பென்று சிறப்பிக்கப்பட்ட ஒழுக்கங் களவென்னும் ஒழுக்கத்தின் வழித்தென்றவாறு. *களவின்கட் புணராதமுன் சொல் இல்லையெனவே புணராதமுன் சொல் நிகழுமென்பாரை மறுத்தாராம். இனிப் புணராத முன் சொல் இல்லையெனவே புணர்ச்சியுள்ளும் புணர்ச்சிப்பின்னும் சொல் உளவெனப்பட்டதாம். ஆயினும் புணர்ச்சியுட் புலனல்ல †அவர்க்குத் துப்பாயினல்லதென்பது. இனிப் புணர்ச்சியின்

* 'கற்பினில்' என்பதும் பாடம்.

† 'அவர்கருத்துப்பாயினவல்லது' என்பதம் படாம்.

பின் *சொற்கள் புலனும்; அவை யாவையோவெனின், நயப்புணர்த்தினவும் பிரிவச்சமும் வன்புறையும் எனக்கொள்க. அப்பெற்றிப்பட்ட களவொழுக்கத்தின்வழி நிகழ்ந்து பின்னைத் தமராற் பெற்றெய்துவது கற்பெனக்கொள்க. எனவே, இவ்வாற்றானும் உலகக்களவன்று என்பது பெற்றாம்; என்னை? உலகக்களவு புணராத முன்னுஞ் சொன்னிகழ்ச்சியுடைமையின் என்பது. கற்புக் களவின்வழித்தென்றது எனப்படுவதென்றது எற்றிற்கோவெனின், களவின்வழி நிகழாதேயும் உண்டு உலகக்கற்பு; அஃது இத்துணைச் சிறப்பின்றென்றற்குச் சொல்லப்பட்டது. எனவே, இச்சூத்திரப்பொருள் களவினையுங் கற்பினையுந் தழீஇயிற்றென்பது.

கசு. களவினுட் டவிர்ச்சி காப்புமிகி னுரித்தே
வரைவிடை வைத்த காலை யான.

என்பதென்னுதலிற்றோ வெனின், களவுகாலத்துச் சென்றொழுகாநின்ற தலைமகற்கு இடையிடும் இடையீடு இவையென்பதுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: களவினுள் தவிர்ச்சி—களவுகாலத்துத் தலைமகள் புணராது இடையிடும் இடையீடு; தலைமகளை எய்தாத நாளெனினும் ஒக்கும்; காப்பு மிகின் உரித்தே—காப்பு மிக்கவழியும் உரித்து; வரைவிடை வைத்த காலை ஆன—வரைவிடைவைத்த காலத்துக் கண்ணும் உரித்து, என்றவாறு.

களவினுள் தவிர்ச்சி காப்பு மிக்கவழியும் உரித்து, வரைவிடைவைத்த காலத்துக் கண்ணும் உரித்தென்றவாறு. காப்பென்பது தாய்துஞ்சாமை, நாய் துஞ்சாமை,

* 'நிகழுஞ்சொல்லுப்புலனும்' என்பதும் பாடம்.

ஊர்துஞ்சாமை, காவலர்கடுகுதல், நிலவுவெளிப்படுதல், கூகைகுழறல், கோழிகுரற்காட்டல் என இவை. மிகுத லென்பது பெருகுதல்; அஃது ஒன்று பன்னாளும் வருத லும், பல மயங்கி வருதலும், முறையிற்றோன்றலு மென இத்திறத்தான் ஆமென்பது.

அவற்றுள், தாய்துஞ்சாமையென்பது தலைமகன் இர வுக்குறிவந்து ஒழுகாநின்றகாலத்து ஒருநாள் தாய் கண்படா ளாகி மகளை அறிவும் ஆசாரமுங் கற்பித்தற்பொருட் டாக இருக்கும்; இருந்தகாலத்தும் இடையீடாமென்பது. நாய்துஞ்சாமையென்பது வழியறிஞமலி பட்டதற்கெல்லம் எப்பொழுதுங் குரைத்தக்கால் அதுவு மாகாதன்றே, என்னைகொல்லோ இவ்விடத்துப் பல்காலுங் குரையாநின்ற தென ஆராய்ச்சிவரும், அதனால் இதுவும் இடையீடா மென்பது. இனி, ஊர்துஞ்சாமை என்பது ஊர்கொண்ட பெருவிழாநாளாய்க் கண்பாடில்லையாமாகவும் இடையீடா மென்பது. அவை மதுரை ஆவணி யவிட்டமே உறை யூர்ப் பங்குனியுத்திரமே கருவூர் உள்ளிவிழாவேயென இவையும், இவைபோல்வன பிறவும் எல்லாம் அப்பெற்றி யானபொழுது இடையீடாமென்பது. காவலர்கடுகுதலென் பது காவலரென்பார் காப்பாளர். ஊர்காத்தல் இடங்காத்த லென இவற்றைக் கடிதுகாத்துமென்று காவலாளர் ஏமஞ் சூழ்ந்து கைவிளக்கினொடு திரிவாரன்றே ? அப்பெற்றியான பொழுதும் இடையீடாமென்பது. நிலவு வெளிப்படுத லென்பது நிலாப் பகல்போலும் பெற்றித்தாய் அன்று ஞாயிறு பட்டவாறே எழுந்து ஞாயிறெழுந்துணையும் இடை யீடாமென்பது. பிறவு மன்ன. இவற்றுக்கெல்லாம் செய்யுள் "காமமிக்க கழிபடர்கிளவி" (இறையனார்-௩௦) என்னுஞ் சூத்திரத்துட்சொல்லுதும். 'வரைவிடைவைத்த காலையான'

என்பதே சூத்திரமாயிற், காப்புமிகினும் வரைவிடைவைத்த காலையுங் களவின் இடையீடாமென்பது பொருந்தாது, வரைவிடை வைத்தகாலைக் காப்புமிகினும் இடையீடா மென்பதன்றியெனின், அஃதே வரைவிடைவைத்த காலை யானுமென்னும் உம்மை இறுதிதிரிந்து வரைவிடைவைத்த காலையான வென நின்றது. உம்மை இடைச்சொல்லாகலின் இறுதிதிரியும்; என்னை ?

"தம்மீறு திரிதலும் பிறிதவ ணிலைபலு
மன்னவை யெல்லா முரியவென்ப." (தொல்-சொல்-இடை-ந.)

என்பது இலக்கணமாதலால் என்பது. (கசு)

கஎ. அல்லகுறிப் படுதலு மவ்வயி னுரித்தே
யவன்வர வறியுங் குறிப்பி னான.

என்பதென்னுதலிற்றோ வெனின், இதுவுங் களவினுள் இடையீடாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: அல்ல குறிப்படுதலும்—குறியல்ல ததனைக் குறியாகக் கருதலும்; குறியாமாறு போக்கிச் சொல்லுதும்: அவ்வயின் உரித்தே—இதுவுங் களவினுள் இடையீடாதற்கு உரித்து; அவன்வரவு அறியுங் குறிப்பின் ஆன — அவன் வரவினை அறிவிக்குங் குறிப்பு அவனானன்றிப் பிறிதின் நிகழ்ந்து சென்றவிடத்து, என்றவாறு.

அஃதாமாறு: தலைமகன் இரவுக்குறிவந்து ஒழுகா நின்ற காலத்து ஒருநாள் தலைமகன் செல்லாமே அவனாற் செய்யப்படுங் குறிப்புக்கள் தாமே வெளிப்பட்டன. அவை புன்னைக்காய் நீரிலிடுதலும், புள்ளெழுப்புதலுமென இவை. அவை வேறானும் நிகழுமாறு: புன்னைக்காய் மூக்கு ஊழ்த்தும் விழும், வளி எறியவும் விழும், புள்துளக்கவும் விழும்;

புள் எழுமிடத்து வெருவியும் எழும், வேற்றுப்புள்வரவும் எழும். இவை கண்டு இவனான் ஆயினவெனக் கொண்டு போந்து அவ்விடம் புகுந்து அவனிலாகாமை உணர்ந்து போந்து மனையகம் புக்க பின்னை அவன் வந்து அக்குறி செய்யும்; செய்தக்கால் இரண்டாவது கொண்டுபோகல் ஆகாதன்றே, என்னை? சிறிது முன்னாகப் போனானன்றே, அக்கை புடைபெயராமைப் போகின்றாரென்று உற்றார் பின் னின்று ஆராய்தலா னென்பது. அகத்தினின்று நின்னின் ஆகாதன கண்டு வந்து *நின்றுபெயர்ந்தேம் என்பதனை அவனுக்கு †உணர்த்துந் திங்கண்மே விட்டானும் அன் னத்தின் மேலிட்டானும் ‡ஓதத்தின்மே விட்டானுமென் பது. அதற்குச் செய்யுள்:

அறைவா யதிர்கழல் வேந்திக லாற்றுக் குடியழித்த
கறைவா யிலங்கிலை வேன்மன்னன் கன்னியங் கானலின்வா
யிறைவா யணிவளை யாயென்னை கொல்லோ விரவினெல்லாந்
துறைவா யிளம்புன்னை மேலன்னமொன்றுந் துயின்றிலவே. (கஙக)

பூநின்ற வேன்மன்னன் பூலந்தை வான்புகப் பூட்டழித்த
வேனின்ற வெஞ்சிலை வேந்த னிரணந் தகனறியும்
பானின்ற வின்றமி ழன்னநல் லாய்நம்பைங் கானலின்வாய்த்
தூநின்ற மென்சிறை யன்னமின் றொன்றுந் துயின்றிலவே. (கசய)

புன்னை நனைப்பினும் பூஞ்சினை தோயினும்
பின்னிருங் கூந்தலென் றோழி நடையொக்கு
மன்ன நனையாதி வாழி கடலோதம்.
அரவளை மென்றோ ளனுங்கத் துறந்து
கரவல மேன்றொரைக் கண்ட திலையா
விரவெலா நின்றாயா லீர்ங்கதிர்த் திங்காள்.

---

* 'நின்று போந்தேம்' என்பதும் பாடம்.

† 'உரைக்கும்' என்பதும் பாடம்.

‡ இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை.

இவற்றுள் யாதானும் ஒன்றன்மேல் வைத்துச் சொல்லும்; சொல்ல, இவ்விரவேயாம் என்பாலராய்நின்று துயிலாராயினுர் போலும். என்னை ? தாந் துயிலாது நின்றாரன்றே துயிலாதன அறிவார்; இவற்றின் துயிலெழு வினையேன் குறியென்று வந்து பெயர்ந்தார்போலுமென ஆற்றுணுப் பெயரும். பெயர்வான் இறந்துபடானுயிற்று, எற்றிற்கோவெனின், இறந்துபடானன்றே யான் இறந்துபடின் இவளும் இறந்துபடுமெனக் கருதியென்பது. அவ்வகைப் பெயர்வான் தன் நெஞ்சினை நெருங்கியதற்குச் செய்யுள்:

ஒளியார் திருநுத லாளை யெளியளென் றுன்னிவந்து
விளியா வருந்துயர் செய்தமை யால்விழி ஞத்துவென்ற
களியார் களிற்றுக் கழனெடு மாறன் கடிமுனைமேற்
றெளியா வயவரிற் றேய்வா யளியவென் சிந்தனையே. (கசுக)

*ஏரார் குழன்மட வாளை யெளியளென் றுன்னிவந்து
தீரா விழுமந்தந் தாய்தென்னன் சேவூர்ச் செருவடர்த்த
காரார் களிற்றுக் கழன்மன்னன் மாறன் கழல்பணிந்து
சேரா வயவரிற் றேய்வா யளியவென் சிந்தனையே. (கசுஉ)

"குணகடற் றிரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் றொண்டி முன்றுறை
யயிரை யாரிரைக் கணவந் தாங்குச்
சேய ளரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே." (குறுங்-கஉஅ.)

எனக் கண்டுகொள்க.

---

* இச் செய்யுள் முன் அச்சுப்பிரதியிலில்லை; வேறோர் ஏட்டுப் பிரதியிற் கண்டமையின் இங்கெடுத்துச் சேர்க்கப்பட்டது.

கஅ. குறியெனப் படுவ திரவினும் பகலினு
மறியக் கிளந்த விடமென மொழிப.

என்பதென்னுதலிற்றோவெனின், குறியாமாறுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: குறியெனப்படுவது—குறியென்று சொல்லப்படுவது; இரவினும் பகலினும் என்றாராயினும் மொழிமாற்றிப் பகலின்கண்ணும் இரவின்கண்ணுமெனக் கொள்க, என்னை? பகற்குறி நிகழ்ந்தபின்னை இரவுக்குறி நிகழற்பாலதாகலான். அவ்வொழுக்கம் நிகழ்ந்தமுறையான் நோக்கி மொழிமாற்றுச் சூத்திரமாகப் பொருளை உரைக்கப்படும். அஃதேயெனின், 'குறியெனப்படுவது பகலினும் இரவினு' மென அமையாதோ வென்பது கடா; அதற்கு விடை, அவ்வொழுக்கம் மறைத்தலைத் தனக்கு *இலக்கணமாக உடைத்தாகலான் இரவுக்குறி பொருந்தியதுணைப் பகற்குறி † பொருந்திற்றன்று என்பதனை உணர்த்துதற் பொருட்டுச் சூத்திரத்துள் இரவினும் பகலினுமென இரவுக்குறி முன்வைக்கப்பட்டது. 'அறியக்கிளந்த இடமென மொழிப'—உணரச் சொல்லப்பட்ட இடமென்ப ஆசிரியர், என்றவாறு.

யார்க்கு யார் சொல்லிற்றோவெனின், தோழி தலைமகற்குச் சொல்லுமென்றவாறு. அஃதாமாறு, தலைமகன் தோழியை இரந்துகுறையுற்றுப் பின்னின்ற இடத்து அவனை ஆற்றுவிக்குஞ் சில சொற் சொல்லி ஆற்றுவித்துத் ‡ தலைமக

* 'அணிகலமாக' என்னும் முன் அச்சுப்பிரதியில் உள்ள பாடம் சிறப்புடைத்தன்று

† 'பொருந்திற்று' என்னும் முன் அச்சுப்பிரதியில் உள்ள பாடம் பொருட்பொருத்தமின்று.

‡ இங்கே பொருட்கு இன்றியமையாத இச்சொல்லும் வேறு சிலவும் முன் அச்சுப்பிரதியில் விடுபட்டன.

னைக் குறைநயப்பித்தவாற்றான் நின்றதோழியைப் பின்னுந் தலைமகன் எதிர்ப்படும்; எதிர்ப்பட்டானை இன்ன இடத்து வா என்று குறிப்பினான் உணர்த்தும். அதற்குச் செய்யுள்:

மருள்போற் சிறைவண்டு பாட நிலவன்ன வார்மணன்மே
லிருள்போற் கொழுநிழற் பாயறிந் தார்கட்கின் றீந்தமிழின்
பொருள்போ லினிதாய்ப் புகழ்மன்னன் மாறன் பொதியிலின்கோ
னருள்போற் *குளிர்ந்தன்ன முந்துன்னு நீர்த்தெங்க ளாடடமே.

காவியந் தண்டுறை சூழ்ந்து கடையற் கறுத்தவர்மேற்
றூவியம் பெய்தவன் றெண்டிவண் டார்புன்னைத் தூமலர்க
டாவிய வெண்மணற் றாயறிந் தார்கட்குத் தண்டமிழி
னாவியும் போல வினிதா யுளதெங்க ளாடடமே. (கசச)

அதுகேட்டு இவ்விடத்துக்கண் வா என்றாள் என்பதனை உணர்ந்து அவ்விடத்திற்குச் செல்லும். செல்லத், தலைமகனது வரவு உணர்ந்து, தோழி தலைமகளைக் குறியிடத்துக் கொண்டுசென்று, யான் செங்காந்தட்பூக் கொய்து கொடு வருவன், அவ்விடம் தெய்வமுடைத்து, நின்னால் வரப்படாது, நீ அவ்வளவும் இப்பொழிலிடத்தே நில்லென்று நிறீஇ நீங்கும். அதற்குச் செய்யுள்:

அஞ்சிறை வண்டறை காந்தளம் போதுசென் றியான்றருவேன்
பஞ்சுறை தேரல்கு லாய்வரற் பாற்றன்று பாழியொன்னார்
நெஞ்சுறை யாச்செற்ற வேன்மன்ன னேரி நெடுவரைவாய்
மஞ்சுறை சோலை வளாய்த்தெய்வ மேவும் வரையகமே. (கசரு)

நீவிரி கோதையிங் கேநினின் னல்வரற் பாலதன்று
தீவிரி காந்தள்சென் றியான்றரு வேன்றெய்வ மங்குடைத்தாற்
பூவிரி வார்பொழிற் பூலந்தை வானவன் பூவழித்த
மாவிரி தானையெங் கோன்கொல்லி சூழ்ந்த வரையகமே. (கசசு)

---

* 'சுரந்து' என்பதும் பாடம்.

"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானைக்
*கழறொடிஇ சேஎய குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே." (குறுந்-௧.)

இவ்வாறு நீடு சொல்லி நீங்கும். நீங்கத், தலைமகள் பொழிலிடத்து நிற்கும்; நின்றாளைத் தலைமகன் எதிர்ப்பட்டுப் புணரும். புணர்ச்சியிறுதிக்கண் தோழி வந்து நின் கை போலக் காந்தண்மலர்ந்தன கொண்டுவந்தேன், எம்பெருமாட்டி! நீட்டித்தாளென்று சீறியருளாது போந்தருளென்று அவளைக் கொண்டுபோய் †ஆயவெள்ளத்தொடு கூடும். இது பகற்குறியாமாறு.

இவ்வகை பகற்குறிவந்து ஒழுகாநின்ற தலைமகனைக் காணும்பொழுதிற் காணப்பொழுது பெரிதாகலான் ஆற்றாளாய் நெஞ்சு மிக்கது வாய்சோர்ந்து கடலிற்காணுங், கானலிற்காணும், புள்ளிற்காணும், நெஞ்சிற்காணும் வறிதே குழவி அழுதாற்போல யாதானும் ஒருசொற் சொல்லும். அவ்வகை சொல்லுமதற்குச் செய்யுள்:

பொருமா மணிமுடி மன்னரைப் பூலந்தைப் பூவழித்த
குருமா மணிவண்ணன் கோனெடு மாறன் குமரிமுந்நீ
ரருமா மணிதிகழ் கானலின் வாய்வந் தகன்றகொண்கன்
றிருமா மணிநெடுந் தேரொடு சென்றதென் சிந்தனையே. (௧௬௭)

தலைமகள் அவ்வாறு சொல்லி, அவ்விடத்துத் தலைமகன் கேட்பின் வரைந்துபுகுவானும், தோழி கேட்பின் தலைமகனை வரைவுகடாவுவாளாம். யாருங் கேட்பார் இல்லையாயின் தலைமகள் சொல்லி ஆற்றுவாளாம். மூடியிருந்து

*'கழறொடிச் சேஎய் குன்றம்' எனப் பாடம் ஓதி இதனை வேறு துறையாக்குவாருமுளர்.

† 'ஆயவெள்ளத் தோடுங் கூட்டும்' என்பதும் பாடம்.

வேவதோர் கொள்கலம் *மூய் திறந்த் இடத்து ஆவி எழுந்து முன் நின்ற வெப்பம் நீங்கினாற்போல அச்சொற் சொல்ல ஆற்றாமை பண்டையிற் சிறிதளவுபடுவதாம்.

இனிப் பகற்குறிவந்து ஒழுகாநின்ற தலைமகனைக்காணும் பொழுதிற் காணப்பொழுது பெரிதாகலான் தலைமகள் ஆற்றாளாயின் இடத்துத் தோழி அவளது ஆற்றாமைக்குப் பரிந்து உடனாயிருந்த புள்ளைநோக்கி இவை கண்டு ஆற்றிச் செல்வாட்கு இவையும் நீங்கின, இனி எங்ஙனம் ஆற்றுங் கொல்லோவெனத் தலைமகற்குச்சிறைப்புறனாகச்சொல்லும். அதற்குச் செய்யுள் :

அன்னம் புரையு நடையாள் புலம்பெய்த வத்தமென்னும்
பொன்னஞ் சிலம்பு கதிரோன் மறைதலும் போயினவாற்
றென்னன் றிருமால் கழனெடு மாறன் றிருந்துசெங்கோன்
மன்னன் குமரிக் கருங்கழி மேய்ந்தவண் டானங்களே. (கசஅ)

†பொருங்கழன் மாறன்புல் லாமன்னர் பூலந்தைப் பூங்குருதி
மருங்கழி நீர்மூழ்கக்கண்டவெங் கோன்றெண்டிக்கானல்வண்டார்
கருங்கழி மேய்ந்தசெங் கால்வெள்ளை யன்னங் கதிரொடுந்தம்
பெருங்கழி காதன்மை நீங்கி ‡யிவணிற் பிரிந்தனவே. (கசகூ)

மேயின தம்படை யோடுமெம் மெல்லிய லாளைவெந்தீப்
பாயின மாலைக்குக் காட்டிக் கொடுத்துப் பரந்துமண்மே
லாயின சீரரி கேசரிக் கன்றளை நாட்டுடைந்து
போயின தெவ்வரிற் போயின கானலிற் புள்ளினமே. (கருய)

இவ்வகை சொல்லக்கேட்ட தலைமகன் யான் வந்து ஒழுகாநின்ற இவ்வொழுகலாறுதான் இவர்க்கு ஆற்றாமைக் குக் காரணமாயிற்றுப் போலுமென அவ்வாறு வந்தொழு

* 'மூடிதிறந்த' என்பதும் பாடம்.
† 'பொருங்கழிமான' என்பதும் பாடம்.
‡ 'இவளைப் பிரிந்தனவே' என்பதும் பாடம்.

காது வரைந்துபுகுவானாவது. இவையெல்லாம் பகற்குறி யுள்ளே அடங்குமெனக்கொள்க.

இனி இரவுக்குறியாமாறு: பகற்குறிவந்து ஒழுகாநின்ற தலைமகன் இன்று தெருளும் நாளைத் தெருளுமெனத் தெருளானாய் நெடுங்காலமும் வந்தொழுக இவ்வொழுக்கம் புறத்தார்க்குப்புலனாயதறிந்தவிடத்து இவள் இறந்துபடும், இவள் இறந்துபட இவனும் இறந்துபடுமெனஆற்றாளாய் வரைவு கடாதற்குச் செறிப்பறிவுறுக்கின்று முன்னுடைத்தாக அறிவுறாஉம். என்னை? கதுமெனத் தமர் இற்செறித்தவிடத்து எமர் எம்மை *இற்செறித்தாரென்ற ஞான்று ஆற்றானாகவும் பெறும்; அதனான் முற்படவே செறிப்பறிவுறாஉம்; என்னை? ஆற்றானாமெனிற் சொல்லுவது தெளியச்சொன்னேனெனத் தெருட்டுதற்பொருட் டென்பது. இனித் தோழி வரைவுகடாவுவகை குறிப்பினான் வரைவுகடாவுதலும் வெளிப்படையான் வரைவுகடாவுதலுமென இருதிறத்தன. அவற்றுட் குறிப்பினான் வரைவுகடாவுமாறு: யாய் எம் †உறுப்பிற் குறிக்கொண்டு நோக்கினாளென்னும். எனவே, தலைமகன், இவர் இற்புறத்துப்போய் விளையாடும் பதத்தரல்லர், இவரை இற்செறிக்க வேண்டுமென்று போலும் அவ்வாறு நோக்கியதெனத் தெருண்டு வரைந்தெய்தப் பெறும். யாய் †உறுப்பிற் குறிக்கோண்டு நோக்கினாளென்னும் அதற்குச் செய்யுள்:

நீர்வண்ணன் வெண்டிரை மேனின்ற வேந்தனெல் வேலியொன்னார்
போர்வண்ணம் வாட்டிய பூழியன் பூந்தண் குருந்தொசித்த
கார்வண்ணன் போல்வண்ணன் காவிரி நாடன்ன காரிகையா
ளோர்வண்ண நோக்கினின் றென்னையு நோக்கின ளெம்மனையே. (௫)

---

* 'இற்செறிப்ப வென்றநாள்' என்பதும் பாடம்.

† 'உறுப்பிற் கொண்டு' என்பதும் பாடம்.

*உளமலை யாமைத் திருத்திப் பொருவா னுடன்றெழுந்தார்
களமலை யாமைக் கடையல்வென் றான்கடற் றானையன்ன
வளமுலை வான்முறு வற்றைய லாகத்து வந்தரும்பு
மிளமுலை நோக்கினின் றென்னையு நோக்கின ளெம்மனையே. (கருஉ)

அல்லது இவ்வாற்றானுஞ் செறிப்பறிவுறாஉம். அதற்குச் செய்யுள்:

செயன்மன்னு மாவது சொல்லாய் சிலம்பதென் பாழிவென்ற
கயன்மன்னு வெல்பொறிக் காவலன் மாறன் கடிமுனைமே
லயன்மன்னர் போற்கொய்து மாள்கின்ற தாலணி வானுரிஞ்சும்
புயன்மன்னு கோட்ட மணிவரைச் சாரலெம் பூம்புனமே. (கருங)

என்னே ரழியா வகையென்னை வெற்ப விருஞ்சிறைவாய்
மன்னே ரழியவென் றான்முனை போற்கொய்து மாள்கின்றதான்
மின்னேர் திகழு மழைகால் கழிய வியலறைவாய்ப்
பொன்னேர் திகழு மணிவரைச் சாரற் புனத்தினையே. (கருச)

இனி இவ்விடத்து வரப்பெறும் என்பதுபடத் தலைமகற்குத் தோழி முன்னின்று சொல்லவும்பெறும். இனி முன்னிலைப்புறமொழியாகத் தலைமகனது வரவு உணர்ந்து வேங்கைக்கு உரைப்பாளாய்த் தலைமகன்கேட்ப இவ்வாறு சொல்லியுஞ் செறிப்பறிவுறுத்தும். அதற்குச் செய்யுள்:

திரையார் குருதிப் புனன்மூழ்கச் செங்நிலத் தன்றுவென்ற
வுரையார் பெரும்புகழ்ச் செங்கோ லுசிதனொன் பூம்பொதியில்
வரையார் தினைப்புனங் கால்கொய்ய நன்னாள் வரைந்துநின்ற
விரையார் மலரியல் வேங்காய் நினக்கு விடையில்லையே. (கருரு)

வானுடை யான்முடி மேல்வளை யெற்றியும் வஞ்சியர்தங்
கோனுடை யாப்படை கோட்டாற் றழிவித்துங் கொண்டவென்றி
தானுடை யான்றென்னன் சத்ரு துரந்தரன் பொன்வரைமேன்
மீனுடை யான்கொல்லி வேங்காய் நினக்கு விடையில்லையே. (கருசு)

---

* இச்செய்யுள் முன் அச்சுப்பிரதியிலில்லை; வேறோர் ஏட்டுப்பிரதியிற் கண்டமையின் இங்கெடுத்துச் சேர்க்கப்பட்டது.

இவ்வாறுஞ் சொல்லும். அதற்குச் செய்யுள்:

ஈன்றுசெய் தாமல்ல ஈன்னுத லாய்ஙறை யாற்றுவெம்போர்
நின்றுசெய் தாருந்தி வந்த நெடுங்கைக் களிற்றுடலாற்
குன்றுசெய் தான்கொல்லி வேங்கையை மெல்லரும் பாகக்கொய்த
வன்றுசெய் தாமெனி னிற்பதன் றேநம மகன்புனமே. (கருள)

இங்ஙனமுஞ் சொல்லும். அதற்குச் செய்யுள்:

உலம்புனை தோண்மன்ன ரோடவல் லத்தட் டவருரிமை
நலம்புனை கோதைய ரல்லல்கண் டான்கொல்விச் சாரனண்ணி
வலம்புனை வில்லோ டிருவிப் புனங்கண்டு வாடிநின்றாற்
சிலம்பனை நையற்க வென்னுங்கொல் வேங்கைச்செழும்பொழிலே.

இங்ஙனமுஞ் சொல்லும். அதற்குச் செய்யுள்:

பொருங்கண்ணி சூடிவந் தார்படப் பூலந்தைப் பொன்முடிமே
விருங்கண்ணி வாகை யணிந்தவெங் கோன்கொல்லி யீர்ஞ்சிலம்பிற்
கருங்கண்ணி காக்கின் றபைம்புனங் கால்கொய்ய நாள்வரைந்த[தே
பெருங்கண்ணி யாரைப்பொன் வேங்கையென் றேவின்னும்பேசுவ

இங்ஙனமுஞ் சொல்லும். அதற்குச் செய்யுள்:

பைந்நின்ற வாடர வேரல்கு லாள்செல்ல நாட்பணித்த
விந்நின்ற வேங்கை குறையா திளஞ்சந் தனங்குறைத்தார்
மெய்ந்நின்ற செங்கோல் *வினையச் சரத்தன்விண் டோய்பொதியின்
மைந்நின்ற சாரல் வரையக வாணர் மடவியரே. (கசுய)

இவ்வகை செறிப்பறிவுறுக்கப்பட்ட தலைமகன்தெருள்வானாயின், இந்நாள் வரைவல், அத்துணையும் இவளை ஆற்றுவித்துக்கொண்டிரு, நினக்கு அடைக்கலமெனக் கைப் பற்றும்; கைப்பற்றியதனைத் தோழி சூளுறவாகக் கருதினாள். உலகத்துச் சூளுறுவார் பசுவையும் பார்ப்பாரையும் பெண்டிரையுந் தொட்டுச் சூளுறுவராகலாற் சூளுறவாற்றாரென்

* 'விசயசரி' என்பதும் பாடம்.

பது நினைந்து நீவரைவலென்றமே அமையாதோ? சூளுற வேண்டுமோ? பொய்த்தலும் வாய்த்தலும் உடையாரன்றே சூளுறுவார்? மெய்யல்லது சொல்லாதார்க்குச் சூளுறவு வேண்டுமோ? நின்கண்ணுப் பொய்யுண்டாயின், மெய்யென் பது இவ்வுலகத்து நிலைபெற்றவழி இல்லையாகாதே என் னும். அதற்குச் செய்யுள்:

சூளுறவு மறுத்தல்.

நெய்யொன்று வேலெனடு மாறன்றென் னுடன்ன நேரிழையிம்
மையொன்று வாட்கண் மடந்தை திறத்திட் டறந்திரிந்து
பொய்யொன்று நின்கண் ணிகழுமென் ருற்பின்னைப் பூஞ்சிலம்பா
மெய்யொன்றுமின்றியொழியுங்கொல்லோவிவ்வியலிடமே. (கசுக)

திரைப்பா விரும்புனற் சேவூரெதிர்நின்ற சேரலர்சோன்
வரைப்பா லடையச்செற்ருன்வையையன்ன டிறத்துவண்டார்[ன்ப
விரைப்பானறுங்கண்ணியாய்பொய்ம்மைநீசொல்லின்மெய்ம்மையெ
துரைப்பார் பிறரினி யாவர்கொல் லோவிவ் வுலகினுள்ளே. (கசுஉ)

"வெள்ளி விழுத்தொடி மென்கருப் புலக்கை
வள்ளி நுண்ணிடை வயின்வயி னுடங்க
மீன்சினை யன்ன வெண்மணற் குவைஇக்
காஞ்சி நீழற் றமர்வளம் பாடி
யூர்க்கோ மகளிர் குறுவழி *பிறழ்ந்த
வார லருந்திய சிறுசிரன் மருதின்
ருழ்சினை யுறங்குந் தண்டுறை யூர
விழையா வுள்ளம் விழைவ தாயினும்
என்றுங் கேட்டவை தோட்டி யாக மீட்டாங்
கறனும் பொருளும் வழாஅமை நாடித்
தற்றக வுடைமை நோக்கி மற்றதன்
பின்னா கும்மே முன்னியது முடித்த
லனைய பெரியோ ரொழுக்க மதனா
லரிய பெரியோர்த் †தெருங் காலை
நும்மோ ரன்னோர் மாட்டு மின்ன
பொய்யொடு மிடைந்தவை தோன்றின்
மெய்யாண் டுளதோவிவ் வுலகத் தானே.

*'இறந்த' என்பதும் பாடம். †'தெரியும்' என்பதும் பாடம்.

என யான் தனக்கு அடைக்கலமென்று கைப்பற்றிற்றைச் சூளுறவாகக் கருதித் திரியஉணர்ந்தாளாக லான் நீட்டிக்கல் ஆகாதெனப் பிற்றைஞான்றே வரைவொடு புகுவானும். இனித் தெருளானாயின் இரவுக்குறிவாரா வரைவிலென்னும். அதுகேட்ட தோழி இரவுக்குறியது ஏதங்காட்டி மறுக்கும். யாங்ஙனம் மறுக்குமோவெனின் அரவும் உருமும் புலியும் எண்கும் வெண்கோட்டியானையு மென்று இவ்வற்றது ஏதம் உடைத்து;*ஏற்றிழிவுடைத்தாய அருவரை யிடத்து ஒருவேல் துணையாக நீயிர் ஆரிருள் நடுநாள் வரவு ஆற்று நீர்மையவோவென்னும். என்பது கேட்ட தலைமகன் ஆற்றுவானாயின், வரைந்தெய்தும். ஆற்றானாயின் இறந்துபடுமெனக் கருதி, இறந்துபாட்டு அச்சத்தினான் இரவுக்குறி நேரும். நேர்ந்தாள், தலைமகற்கு நின்னாட்டார் என்னபூவினர் என்னசாந்தினர் என்னமரத்தின்கீழ் விளையாடுவர் என்னும். அது கேட்டுத் தலைமகன் முன்னெல்லாம் எனக்கு மறுத்தாளன்றே, மறுத்தாள் இது சொல்லிற்று ஒருகாரணம் நோக்கியெனஉணர்ந்து, தானும் நின்னாட்டார் என்னபூவினர் என்னசாந்தினர் என்ன மரத்தின்கீழ் விளையாடுவது என்னும். என்றக்கால் தோழி யாங்கள் தீந்தளிர் வேங்கையுஞ் சூடுதுஞ்,சந்தனமுஞ்சாந்தும் பூசுதும், † பிண்டி மரத்தின்கீழ் விளையாடுவ தென்னும். அதற்குச் செய்யுள்:

குறியிடங்கூறல்.

‡வந்தணங் காமன்னர் தேயமுன் னாண்மழை யேயயர்த்த
கந்தணங் காமத யானைக் கழன்மன்னன் கார்ப்பொதியிற்

---

* 'ஏற்றிழிவுடைத்தாய விடத்து' என்பதும் பாடம்.

† 'வேங்கை மரத்தின்கீழ்' என்பதும் பாடம்.

‡ 'வந்திணங் காமன்னர் சாயமுன் னான்மழை யேறுயர்த்த' என்பதும் பாடம்.

சந்தனஞ் சாந்துசெங் காந்தளம் பூத்தழல் போல்விரியுங்
கொந்தணங் கீழ்ம்பிண்டி யாம்விளை யாடுங் குளிர்பொழிலே. (கசுக)
காந்தளம் போதெங் கருங்குழற் போது கடையலொன்னார்
தாந்தளர்ந் தோடவை வேல்கொண்ட வேந்தன் றண் ணம்பொதியிற்
சாந்தமெஞ் சாந்தம் விளையா டிடமுந் தளையவிழும்
பூந்தளம் பிண்டி யெரிபோல் விரியும் பொழிலகமே. (கசுச)

குறிஞ்சிநிலமாகலின் இவ்வகை சொல்லும்; அல்லா நிலத்துக்கும் அவற்றுக்குத் தக்கவாறு சொல்லும். இவை சொல்ல, ஒக்கும்; இவை செய்துவந்து நின்மினென்றவாறு போலுமென உணர்ந்து பிற்றைஞான்று அப்பூக்கொண்டு சூடி அச்சாந்து அணிந்து அம்மரத்தின்கீழ் விளையாடற்குறி செய்து நிற்கும். நின்றவிடத்து அவனது வரவு உணர்ந்து தோழி சொல்லிய அதற்குச் செய்யுள்:

வரவுணர்ந்துரைத்தல்.

அணிநிற மாப்பக டுந்திவந் தார்வல்லத் தன்றவியத் [ய்
துணிநிற வேல்கொண்ட கோன்கொல்லிச் சாரலிற் சூழ்பொழில்வா
மணிநிற மாமயி லென்னைகொல் பொன்னேர் மலர்தைதந்த
கணிநிற வேங்கையின் மேற்றுயி லாது கலங்கினவே. (கசுரு)

கயில்கொண்ட வார்கழற் போர்மன்ன ரோடக் கடையற்கண்சேந்
தயில்கொண்ட கோனரி கேசரி கொல்லி யருவரைவாய்ப் [வாய்த்
பயில்வண்டுந் தேனும்பண்*போன்முரல் வேங்கைப் பசும்பொழில்
துயில்கொண் டிலதுணை யோடு†மென் செய்தன தோகைகளே. ()

இவ்வாறு தலைமகன் வரவு உணர்ந்து, தோழி குவளை யலர்ந்தனவேற் காண்பாம், பரந்த முல்லை அரும்பினவேற் காண்பாமெனச் சொல்லித் தலைமகளைக் கொண்டுபோதும். அதற்குச் செய்யுள்:

---

* 'போல முரலும்பைம் பூம்பொழில்வாய்' என்பதும் பாடம்.
† 'என்னேசெய்ய தோகைகளே' என்பதும் பாடம்.

குறியிடத்துக்கொண்டு சேறல்.

ஆழிக் கடல்வையங் காக்கின்ற கோனரி கேசரிதன்
பாழிப் பகைசெற்ற பஞ்சவன் வஞ்சிப்பைம் பூம்புறவிற்
பூழிப் புறமஞ்ஞை யன்னநல் லாய்கொள்கம் போதுதியேற்
றூழிக் குவளைநின் கண்போல் விரியுந் தடமலரே. (கசுஎ)

விளக்கின்ற பல்புகழ் வேந்தன் விசாரிதன் விண்டெதிர்ந்து
திளககின்ற மன்னரைச் சேவூ ரழித்தவன் றீந்தமிழ்போல்
வளைக்கொன்று கைம்மங்கை யாய்சென்று கோடுநின் வாயுள்வந்து
முளைக்கின்றமுள்ளெயிற்றேர்கொண்டரும்பினமுல்லைகளே (கசுஅ)

என்று தலைமகளைக் கொண்டுபோந்து அக்குறியிடம் புகுந்து பகற்குறியின்கண் நீங்கினவாறே நீங்கித் தனியளாய் நின்ற தலைமகளை எதிர்ப்பட்டுப் புணரும். புணர்ச்சி யிறுதிக்கண் தோழி தலைமகளைக் கொண்டுபோதும். இஃது இரவுக் குறியாமாறு.

'குறி இரவினும் பகலினும்' என்றது 'எனப்படுவது' என்றது எற்றிற்கோவெனின் குறியென்றற்குச் சிறப்புடையதென்றவாறு.

வண்டுந் தும்பியும் வரிக்கடைப் பிரசமுங்
கொண்டு புணர்நரம் பென்று முரன்று

ஐந்துவாயிலானுங் கொள்ளப்படுந் துப்புரவினைத் தன்னகத்துடைத்தாய்ப், பலவகைப்பட்ட மரங்களானும் பொலிவுடைத்தாய்ப், புறத்தார் அகத்தாரைக் காண்பதரிதாய், அகத்தார் புறத்தாரைக் காண்பதெளிதாய்,

விழைவு விடுத்த விழுமி யோரையும்
விழைவு தோற்றுவிக்கும்

பண்பிற்றென்பதற்குச் சொல்லப்பட்ட தென்பது. அஃதே யெனின், அறியக் 'கிளக்கப்பட்ட இடம்' என்றது

"கிளந்த இடம்' என்றது எற்றிற்கோவெனின், வினைச் சொற்கள் நான்குவிகற்பம் உடைய; யாவை அவ்விகற்பமெனின், கருத்தன், ஏதுக்கருத்தன் கருவிக்கருத்தன், கருமக்கருத்தன் என இவை; அவற்றுட் கருத்தனென்பது தச்சன் எடுத்த மாடம், கொல்லன் செய்த வாள்; ஏதுக்கருத்தனென்பது ஏவினைக்கருத்தாவாகச் செய்வது, அரசர் தொட்டகுளம், அரசர் எடுத்த தேவகுலம் என இத்தொடக்கத்தன; இனிக் கருவிக் கருத்தனென்பது வாள் எறியும், சுரிகை குற்றும், இம்மிடா நாற்குறுணி அரிசிச் சோறு அடும் என இத்தொடக்கத்தன; இனிக் கருமக் கருத்தனென்பது திண்ணை மெழுகிற்று, கலங் கழுவிற்று, மரங் குறைத்தது என்று சொல்லுவது. அறியக்கிளந்த இடம், என்னும் அச்சொற் கருமக்கருத்தனாய் நின்றதென்பது. அஃதே யெனின், இவ்வகை கருமக்கருத்தனாகச் சொல்லுதற்கு இலக்கணமுண்டோ வெனின் உண்டு;

> "செயப்படு பொருளைச் செய்தது போலத்
> தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே"
>
> —தொல்-சொல்-வினை-சக.

என்பது. அஃதே யெனின் 'குறியெனப்படுவ' என்றாகாதே சூத்திரஞ்செயற்பாலது; என்னை? இரவுக்குறி பகற்குறி யென்று இரண்டு சொல்லுகின்றமையின். அஃதன்று; இடமென்னும் ஒருமை நோக்காற்'குறியெனப் படுவது' என்றார் என்பது. (கஅ)

## கக. இரவுக் குறியே யில்வரை யிகவாது.

என்பதென்னுதலிற்றோ வெனின், மேற்சூத்திரத்துட் குறி இரண்டென்றார்; அவற்றுள் இரவுக்குறி நிகழுமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: இரவுக்குறி—இரவின்கட் குறியிடம்; இல்வரை இகவாது—இல்லிடத்தைவிட்டு நீங்காது, என்றவாறு.

எனவே, புறத்தன்று என்றவாறும்.

"இரவுக் குறியே யில்வரை யிகவா
துணர வுரைத்த வுரையி னுள."

என்றார் பிறருமெனக்கொள்க. இரவின்கட்குறி இல்வரை இகவாதெனப் பகற்குறி இல்வரை இகக்குமென்பது சொல்லினார். இராப் புட்கள் உண்ணு என்றாற் பகற் புள் உண்ணுமென்பது முடிந்தது. இனி இராக்குறி யென்று ஆகற்பாலது இரவுக்குறியென்றாயிற்றுச் செய்யுளாகலான். என்னை?

"குறியத னிறுதிச் சினைகெட வுகர
மறிய வருதல் செய்யுளு ளுரித்தே."

—தொல்-எழுத்-உயிர்-ந௨.

என்றாராகலின். (கக)

உ௦. பகற்குறி தானே யிகப்பினும் வரையார்

என்பதென்னுதலிற்றோ வெனின், பகற்குறியிடம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: பகற் குறிதானே—பகற்குறி யிடந்தான்; இகப்பினும் வரையார்—இகந்து படினுங் குற்றங் கூறார், என்றவாறு.

இகத்தலென்பது ஒன்றின் இறத்த லென்றவாறு. இகத்தலெனினும் இறத்தலெனினும் ஒக்கும். ஒன்றின் இறத்தலென்பது பலவாதலென்றவாறு. ஒருஞான்று வேங்கைப் பொதும்பினுள் ஆம், ஒருஞான்று கோங்கம் பொதும்பினுள் ஆம், குறிஞ்சி நிலமாயின். ஒருஞான்று புன்னை

யங்கானலுள் ஆம், ஒருஞான்று கைதையங்கானலுள் ஆம், நெய்தனிலமாயின். இவ்வகை ஏனைநிலத்திற்கும் ஒக்குமாறு அறிந்து உரைக்க;

"பகற்குறிப் புணர்வுகள் பலவா கும்மே."

என்றாராகலின். 'இகப்பினும் வரையார்' என்ற உம்மையாற் பகற்குறியும் ஒன்றாகலே வலியுடைத்து. என்னையெனின், தங்குறைமுடித்தற் பொருட்டு ஒருபொழிலகத்தே கொண்டுசென்று விளையாடும் ஆயங்களுந் தன்வழிய ஆகலானென்பது. இனி யார் அறிவார், பண்டுபோலாது இப்பருவம் ஒரு கானலகத்தே கொண்டு புகுகின்றாளென்று கருதுவார்க்கு, அறிந்து பல பொழிலினுள்ளும் புகுதலிற் பலபொழிலாகவும் பெறும். (உ0)

உக. இரவுமனை யிகந்த குறியிடத் தல்லது
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை.

என்பதென்னுதலிற்றோ வெனின், இரவுக்குறி வகுக்கப்பட்ட இடம் வேறுபாடுடையதுகண்டு அவ் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று. மேல் இரவுக்குறி இல்வரை இகவாதென, இல்வரையகத்தன்றெனிற் சாரான். அவற்றுள்ளும் இரவுக்குறியாதல் சென்றது. சென்றதனை நீக்கியவாறு.

இதன்பொருள்: இரவு மனை இகந்த—இரவின்கண் மனையகத்து நீங்கிய; குறியிடத்து அல்லது—குறிக்கப்பட்ட இடத்தல்லது; கிழவோற் சேர்தல் கிழத்திக்கு இல்லை—தலைமகற் சேர்தல் தலைமகட்கு இல்லை, என்றவாறு.

எனவே, இல்வரைப்பகத்தே யாகவேண்டு மென்பதூஉம் மனையகத்தாகற்க என்பதூஉம் உணர்த்தப்பட்டது.

அட்டில், கொட்டகாரம், பண்டசாலை, கூடகாரம், பள்ளியம்பலம், உரிமையிடம், கூத்தப்பள்ளியென இவற்றுள் நீங்கிச் செய்குன்றும் இளமரக்காவும் பூம்பந்தரும் விளையாடிடமும் இவற்றைச் சார்ந்தனவற்றுள்ளும் பிறவற்றுள்ளுமாக என்றவாறு. எனவே பகற்குறியிடம் போல வேறுபட்டதாகற்க இரவிற்குறியிடமென்றவாறு. அஃதேயெனின், மனையகத் தாக அழிவதுண்டோவெனின், குரவர்கள் உறையும் இடமாதலின் தெய்வத்தானமென்று கருதப்படும். அல்லதூஉம் புகவும் போகவும் அருமையுடைமையானும் ஆகாதென்பது. என்றூர்க்குச் செய்யுள் "வாலமனையகத்துச் சார்ந்தான் றலைமகன்" எனப்பட வந்தனவெனின், அவை அகமல்ல, அகப்புறத்தே அடங்குமென்பது.

"இரவுக் குறியொன் றெய்து மதுவே
மனையோர் கிளவி கேட்கு மிடத்துச்
செலவுவர வில்லாத் தொழிலிற் றாகி
மனையிறந் தெல்லையின் மாண்புடைத் தாகு
மகப்புற மாயின் மறுதலைப் படுமே."

என்றூர் பிறரு மெனக்கொள்க. (௨க)

## ௨௨. அம்பலு மலருங் களவு.

என்ப தென்னுதலிற்றோ வெனின், களவொழுக்கினது நெடுங்காலச் செலவின்கண் இவர்க்கு நிகழும் உள்ளநிகழ்ச்சி இன்னதென் றுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: அம்பலும்அலருங் களவு—அவ்விரண்டும் நிகழ்ந்தனவென்பது தாம் அறியினல்லது யாவரும் அறிவாரில்லை; இன்மையின் அவை களவு, என்றவாறு.

களவென்பது செய்தாரே அறிந்து மற்றொருவர் அறியாததாகலான் என்பது. *அம்பலென்பது முகிழ்த்தல், அலரென்பது சொல் நிகழ்தல்; அம்பலென்பது சொல் நிகழ்தல், அலரென்பது இல் அறிதல்; அம்பலென்பது இல் அறிதல், அலரென்பது அயல் அறிதல்; அம்பலென்பது அயல் அறிதல், அலரென்பது சேரி அறிதல்; அம்பலென்பது சேரி அறிதல், அலரென்பது ஊர் அறிதல்; அம்பலென்பது ஊர் அறிதல், அலரென்பது நாடு அறிதல்; அம்பலென்பது நாடு அறிதல், அலரென்பது தேசம் அறிதல். அது பொருந்தாது; என்னை? அம்பலெனப்பட்டதே அலரும், அலரெனப்பட்டதே அம்பலுமாயின. இன்னது அம்பற்கு இலக்கணம், இன்னது அலருக்கு இலக்கணமென்று விசேடங் காட்டிற்றிலர்: இவை இரண்டால் தம்முள் வேற்றுமை பெறப்படுமாகலான் என்பது. மற்றென்னேவெனின், அம்பலென்பது சொல் நிகழாதே முகிழ் முகிழ்த்துச் சொல்வதாயிற்று; இன்னதின்கண்ணதென்பது அயல் அறியலாகாதென்பது. அலரென்பது இன்னானோடு இன்னாளிடை யதுபோலும் பட்டதென விளங்கச் சொல்லி நிற்பது. அம்பலென்பது பெரும்போதாய்ச் சிறிது நிற்க அலருமென நிற்பது. அலரென்பது அப்பெரும்போது தாதும் அல்லியும் வெளிப்பட மலர்ந்தாற்போல நிற்கும் நிலைமையென வேற்றுமை சொல்லப்பட்டதாம். தாம் நெடுங்காலம் இவ்வொழுக்கத்தை ஒழுகினாராதலான் வேறுநின்று தங் கருமம் உசாவுவாரை உணர்ந்து இத்தன்மைத்து இவர் ஆராய்வது இதுபோலுமென்று கருதுப. தம்மனத்து ஒருகோட்டமுடையார் அப்பெற்றியே கருதுவது உலகத்துத்தன்மை. இவ்வொழுக்கம் பிறர்க்குப்

* 'அம்பலென்பது முகிழ் முகிழ்த்தல்' என்பதும் பாடம்.

புலனாகாதன்றே தெய்வத்தினான் ஆயதாகலான். அம்பலும் அலரும் எவ்விடத்து நிகழுமோவெனின், காப்புக் கைம்மிக்கவிடத்து நிகழுமென்பது. களவினது நெடுங்காலத்துக்கண் இவ்வொழுக்கம் வெளிப்படுங்கொல்லோ என்னும் அயிர்ப்பினான் நிகழுமென்பது. அங்ஙனம் அயிர்ப்பினாற் களவொழுக்கம் ஒழிந்துநின்ற நிலைமை கற்பென்றுகொள்ளுவேனாயின் வரைந்துபுகுந்தின்மையிற் கற்பெனலுமாகாது, களவினகத்தென்றுகொள்ளுவேனாயின் ஒழுக்கம் நிகழ்கின்றின்மையின் களவெனலுமாகாது, என்னை கொல்லோ இதனை ஒருபாற் சார்த்துமாறென்று ஐயப்பட்டுநின்ற மாணாக்கற்கு அம்பலும் அலருமென்று நின்ற நிலைமையைக் களவின்பாலே கொள்கவென்பது. இதுபொருந்தாது; என்னை ?

"தந்தை தாயே தன்னைய ரென்றாங்
கன்னவ ரறியப் டண்பா னும்மே." (இறையனார்-உசு.)

என்றமையின், இவரறியாதமுன் எல்லாங் களவென்பது போதுமென்பது. (உஉ)

## உங. வெளிப்பட்ட பின்றையு முரிய கிளவி.

என்பதென்னுதலிற்றோ வெனின், அம்பலும் அலருமாயிற்றென்று உள்ளத்து வெளிப்பட்டபின்றை நிகழற்பாலது உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: வெளிப்பட்ட பின்றையும் உரிய கிளவி, என்றாரெனினும் வெளிப் பட்டபின்றைக் கிளவியும் உரியவென மொழிமாற்றிக்கொள்க. கிளவி என்பது, மகட் கூறுதல்; அதுவும் உரித்தென, மற்றுமொன்றுண்டு கூற்றமால் அஃதியாதோவெனின், அவனுடன் போக்கும் உரித்

தென்றவாறு. அஃதாமாறு சொல்லுதும்: இது பலராலும் அறியப்பட்டதென்னுங்கருத்தால் நிகழ்கின்ற தலைமகட்குந் தோழிக்கும் உடனே நிகழும். இருவரும் யாமே உணர்ந்தே மெனக் கருதுதலாற் கதுமென இந்நிலைமைக்கண் வரினும் வாராமைக் கொள்வேனென்னுங் கருத்தினாற் பண்டு அவன் வந்து பயின்றவிடத்தே தோழி செல்லும். செல்லத், தோழியை எதிர்ப்பட்ட தலைமகனை வலங்கொண்டு சார்ந்து முன்பு நின்று நின்னால் தலையளிக்கப்பட்ட தலையளி அலராயிற்று, பலராலும் அறியப்பட்டதென்னும்; அதற்குச் செய்யுள்:

அலரறிவுரைத்தல்.

பலரா யெதிர்நின்று பாழிப்பட் டார்தங்கள் பைந்நிணம்வாய்
புலரா வசும்புடை வேன்மன்னன் வேம்போடு போந்தணிந்த
மலரார் மணிமுடி மான்றேர் வரோதயன் வஞ்சியன்னாட்
கலராய் விளைகின்ற தாலண்ண லீசெய்த வாருளே. (கசுக)

பொருடா னெனநின்ற மானதன் பூலர்தைத் தோற்றுப்புல்லா
ரிருடா னடைகுன்ற மேறவென் றோன்கன்னி யீர்ம்பொழில்வாய்
மருடா னெனவண்டு பாடுந்தண் டாரண்ணல் வந்துசெய்த
வருடா னலராய் விளைகின்ற தான்மற்றிவ் வாயிழைக்கே. (கஎ0)

"அறிந்தோ ரறனில ரென்றலர் சிறந்த
வின்னுயிர் கழியினு நனியின் னாதே
புன்னையங் கானற் புணர்குறி வாய்த்த
பின்னீ ரோதியென் றோழிக் கன்றே
படுமணி யானைப் பசும்பூட் சோழர்
கொடிநுடங்கு மறுகி னார்க்காட் டாங்கட்
கள்ளுடைத் தடவிற் புள்ளொலித் தோவாத்
தேர்வழங்கு தெருவி னன்ன
கௌவை யாகின்ற தையநின் னருளே." (நற்றிணை-உஉஎ.)

இது சொல்லிப் பின்னும் நீ இது புகுதருந்துணையும் இவ்வாறு ஒழுகுவாயாயினாய் அறனறியாமையான்; அறி

யென்னின் இது புகுதாமை வரைந்தெய்துவாய் மன்னே; அல்லதூஉம் பிறரும் வரைந்தெய்துதற்கு முலைவிலையொடு புகுந்து பொன்னணிவான் நின்றாரும் உளரெனப் படைத்து மொழிந்து சொல்லும். அதற்குச் செய்யுள்:

மகட்பேச்சுரைத்தல்.

நீரணி வேலி நெடுங்களத் தொன்னார் நிணமளைந்த
போரணி வேன்மன்னன் கன்னியன் னாடன்னைப்பொன்னணிவான்
சாரணி வார்முர சார்ப்பப் பிறருங் கருதிவந்தார்
வாரணி பூங்கழ லண்ணலென் னாகி வலிக்கின்றதே. (௧௭௧)

வேலைத் துளைத்தகண் ணேழை திறத்தின்று விண்ணுரிஞ்சுஞ்
சோலைச் சிலம்ப துணிவொன் றறிந்து சுடருமுத்த
மாலைக் குடைமன்னன் வாளெடு மாறன்வண் கூடலின்வாய்க்
காலைத் திருமனை முற்றத் தியம்புங் கடிமுரசே. (௧௭௨)

போர்மலி தெவ்வரைப் பூலந்தை வென்றான் புகாரனைய
வார்மலி கொங்கை மடந்தையை வேறோர் மணங்கருதிக்
கார்மலி வார்முர சார்ப்பப் பிறருங் கருதிவந்தா
ரேர்மலி தாரண்ண லென்னோ விதன்றிறத் தெண்ணுவதே. (௧௭௩)

வேயும் புரையுமென் றோளி திறத்தின்றை யெல்லையுள்விண்
டோயுஞ் சிலம்ப துணிவொன் றறிந்துதொன் னூற்புலவ
ராயுந் தமிழரி கேசரி கூட லகனகர்வா
யேயுந் திருமனை முற்றத் தியம்பு மெறிமுரசே. (௧௭௪)

இங்ஙனமுஞ் சொல்லும்:

பொன்னணி வுரைத்தல்.

குன்றொத்த யானைச்செங் கோனெடு மாறன்றென் கூடலன்ன
மென்றொத் தணிகுழ லேழை திறத்து விளைவறிந்தே
யின்றொத்த தொன்று துணிநீ சிலம்பவன் றாயினெம்மூர்
மன்றத்து நின்று முழங்குங்கொ னாளை மணமுரசே. (௧௭௫)

நலம்புரி தெய்வமன் னுய்செய்வ தென்னறை யாற்றுவென்ற
வலம்புரி தோண்மன்னன் றென்புன னாட்டொரு வற்கியைந்து
குலம்புரி கோதையைக் காப்பணிந் தார்கொடி மாடமூன்றில்
வலம்புரி யோடு முழங்குங்கொ ளுளை மணமுரசே. (கஎசு)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட தலைமகன் என்னுற் செய்யப்பட்டது என்னேனென்னும். எனத், தோழி என்னை வினவற்பாலை யல்லை, நீ இதற்குத் தக்கவாறறிந்து செயற்பாலையென்னும் என்பது.

"நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும்
பெண்ணறிவென்பது பெரும்பே தைமைத்தே."

என்பதாகலான், நீ ஒருபொருளை விகற்பத்து அறியுந்துணை, யான் அறியுமாறில்லை பிற; அல்லதூஉம், யாங் குற்றேவன் மகளிர், நீராயின் அவ்வாறொழுகுவதல்லது இதுகொண்டு இது செய்மினென்றற்குத் தக்கேமல்லேம் என்னும். அதற்குச் செய்யுள்:

முலைவிலை யுரைத்தல்.

என்னு விதுசெய்கென் றென்சொல்ல லாமிகற் பாழிவென்ற
மின்னு ரயிற்படைச் செங்கோல் விசாரிதன் வீங்கொலிநீர்த்
தென்னு டெனினுங்கொள் ளார்விலை யாத்தமர் சீர்செய்வண்டு
முன்னுண்மலரென் றணையுங்கண்ணேழைமுகிழ்முலைக்கே. (கஎஎ)

இதுகேட்ட தலைமகன்உடன்கொண்டுபோவது துணிந்தே னெனினும், நிழலும் நீரும் இல்லாத அழல்வெங்கானம் ஆற்றகில்லாள்கொல்லோ வென்னும். என்ன, அன்ன வெங்கான மெனினும் எம்பெருமாட்டி நும்மொடுவரப் பெரிதும் இனியவாமென்னும். அதற்குச் செய்யுள்:

ஆதரங்கூறல்.

மால்புரை யானை மணிமுடி மாறன்மண் பாய்நிழற்றும்
பால்புரை வெண்குடைத் தென்னன் பறந்தலைக் கோடிவென்ற

வேல்புரை வெம்மையங் கான மெனினுமவ் வேந்தன்செய்ய
கோல்புரை தண்மையவா நம்மொடேகினக்கொம்பினுக்கே.(௧௭௮)

கழலணி போர்மன்னர் கானீர்க் கடையற் படக்கடந்த
தழலணி வேன்மன்னன் சத்ரு துரந்தரன் றன்முனைபோன்
றழலணி வெம்மைய வாயினுங் கான மவன்குடையி
னிழலணி தன்மைய வாநம்மொ டேகினெந் நேரிழைக்கே.(௧௭௯)

அதுகேட்டு, ஆயின் உடன்போக்கு வலித்தேன், நீ இதனை அவட்குச் சொல்லவேண்டுமென, நன்றென்று எம்பெருமான் அருளிச்செய்தது எம்பெருமாட்டிக்கு உணர்த்துவலென்று தலைமகனை வலங்கொண்டு போந்து, தலைமகளுழைச்சென்று அவள்குறிப்பறிந்து, எம்பெருமாட்டி! நம்பெருமான் நம்மைத் தம்மோடு உடன்கொண்டு செல்லக் கருதுகின்றார், நின்குறிப்பென்னை என்னும். என்றவிடத்து, உடம்படுதலும் உடம்படாதொழிதலுமென இரண் டல்லதில்லை; சென்று வழிப்படுமேயெனின் நாணிலளாயினளாம்; உடன்படாளாயிற் கற்பிலளாயினளாம்; இரண்டினுள்ளும் எத்திறத்தளாயினளோ வெனின், நாணுக்கற்பென்னும் இரண்டல்லவே அவள் கண்ணுள்ளன, அவற்றுள் நாணிற் கற்பு வலியுடைத்து; என்னை வலியுடையவாறெனின்,

"உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று"

—தொல்-பொ-களவு-௨௨.

என்பதாகலான். நாண் அழியினுங் கற்பு அழியாமை நினைக்கும். நினைத்து உடன் போக்குநேர்ந்து தலைசாய்த்து நிலங்கிளையாநிற்கும் நிலைமை இது சொல்லுவதே போன்றது. அதற்குச் செய்யுள்:

நாணிழந்து வருந்தல்.

காணு மிகலு மழிந்துதெவ் வேந்தரெல் லாமிறைஞ்சிக்
காணுங் கழனெடு மாறன்செங் கோனின்று காக்குமண்மேற்
பேணு மகலா துடனென்னொ டாடித் திரிந்துவந்த
நாணு மழியத் தகுகற்பு மேம்பட நைகின்றதே. (கஅ0)

"அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
வான்பூங் கரும்பி னோங்குமணற் சிறுசிறை
தீம்புன னெரிதர வீந்துக் காங்குத்
தாங்கு மளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைந்நில் லாதே." (குறுந்-கசக.)

இன்னும் இது சொல்லுவது போன்றது அந்நிலைமை.

"சிலரும் பலருங் கடைக்க ணோக்கி
மூக்கி னுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டி ரம்ப றாற்றச்
சிறுகோல் வலந்தன ளன்னை யலைப்ப
வலந்தனென் வாழி தோழி கானற்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவற்
கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉ மியறேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினால் யானே
யலர்சுமந் தொழிகவிவ் வழுங்க லூரே." (நற்றிணை-கசக.)

இங்ஙனம் இவள் உடன்படும். உடன்பட்டது உணர்ந்துவைத்துத் தாயுழைச்செல்லும். தாயும் மகளது வேறுபாடுகண்டு உற்றதறியாது நற்றிறம்படர்ந்து செல்கின்றகாலமன்றே! ஆதலாற் கண்டவாறே, அன்னாய்! என் மகட்கு இவ்வேறுபாடு எற்றினானாயிற்று? எனக்குச் சொல்லாயென்னும். என்ன, என்னால் அறியப்பட்டதுஞ் சிறிதுண்டென்று அறத்தொடு நிற்குமாறு 'தோழிக் குரியவை கோடாய்

தேஎத்து' (இறையனார்-கச) என்ற சூத்திரத்திற் சொல்லிப் போந்தாம்; அவ்வகை அறத்தொடுநிற்கும். நிற்கச், செவிலித் தாய் இன்புற்ற மனத்தளாய் என்மகள் பெரிது அறிவு உடையளே காணென்று அவ்வாறு நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும். நற்றாயும் இன்புற்ற மனத்தளாய்த் தந்தைக்குந் தன்னையன்மார்க்கும் அறத்தொடுநிற்கும். நிற்க, அவரும் அவளது அறிவும் ஆசாரமுங் கேட்டு இன்புற்ற மனத்த ராய்ச்சொன்மறுத்துந் தலையிறைஞ்சி நிற்பர். இங்ஙனஞ் சென்று மாட்சிப்பட்டுக் காட்டுமேயெனின், பெரிதும் மாட்சிப்பட்டுக் காட்டிற்று. காட்ட இவள் நீரில் ஆற்றி டைப்போய் வருந்துங் குறையென்னையென்று தலைமகனைச் செலவழுங்குவிக்கும். அவ்வகையாற் சொல்லும் அதற்குச் செய்யுள்:

பாயப் புரவி கடாய்வந்து பாழிப் பகைமலைந்தார்
தேயச் சிலைதொட்ட தென்னவன் றேந்தண் பொதியிலின்வாய்
வேயொத்த தோளிநம் மோடு வரவு விரும்பவுந்தன்
ஞயத் தவரை நினைந்துகண் ணீர்கொண் டலமந்தவே. (கஅக)

" விளம்பழங் கமழுங் கமஞ்சூற் குழிசிப்
பாசந் தின்ற தேய்கான் மத்த
நெய்தெரி யியக்கம் வெளின்முதன் முழங்கும்
வைகுபுலர் விடியன் மெய்கரந்து தன்கா
லரியமை சிலம்பு கழீஇப் பன்மாண்
வரிப்புனை பந்தொடு வைஇய செல்வோ
ளிவைகாண் டோறு நோவர் மாதோ
வளியரோ வளியரென் னுயத் தோரென
நம்மொடு வரவுதா னயரவுந்
தன்வரைத் தன்றியுங் கலுழ்ந்தன கண்ணே." (நற்றிணை-கஉ.)

இது கேட்ட தலைமகன் செலவழுங்கும். அழுங்க, நாளை நீ வரைந்துபுகுத நினக்கு வரைவு மாட்சிப்படுமென்று

தலைமகனைத் தவிர்த்துப், பெயர்ந்து தலைமகளுழை வந்து, நிழலும் நீரும் உடையவாய்க் கானந் தண்ணியவாறு சேறு மென்று உடன்போக்கு அழுங்குவித்தவிடத்துத், தலைமக னும் அந்நாள் வரைவொடு *விரைந்து புகுவானும். இது வெளிப்பட்டபின்றைக்கிளவியும் உரியவாயினவாறு.

இனி உம்மையால் உடன்போக்கும் உரித்தாமாறு. அவ்வாறு அறத்தொடுநிலை மாட்சிமைப்பட்டதில்லையாயின் இரவுக்குறிக்கண் தலைப்பெய்விக்குமாறுபோலத் தலைமகளை முற்படுத்து உடன்போக்க மாட்சிப்படும். படுத்து ஓம் படைசொல்லும். அதற்குச் செய்யுள்:

ஓம்படுத்துரைத்தல்.

கொங்கை தளரினுங் கூந்த னரைப்பினு மேந்தன்மற்றிவ்
வங்கை யடைக்கல மென்றே கருதி யருள்ககண்டாய்
கங்கை மணாளன் கலிமத னன்கடி மாமணற்றி
மங்கை யமரட்ட சோன்வையை நாடன்ன மாதரையே (கஅஉ)
மென்முலை வீழினுங் கூந்த னரைப்பினும் விண்ணுரிஞ்சு
நன்மலை நாட விகழல்கண் டாய்நறை யாற்றில்வென்ற
வின்மலி தானை நெடுந்தேர் விசாரிதன் வேந்தர்பெம்மான்
கொன்மலி வேனெடுங் கண்ணிணைப் பேதைக் கொடியினையே.
“அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த
நன்னெடுங் கூந்த னரையொடு முடிப்பினு
நீத்த லோம்புமதி பூக்கே ழூர
வின் கடுங் கள்ளி னிழையணி நெடுந்தேர்க்
கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட் டியானைப் பேஎர் கிழவோன்
பழையன் வேல்வாய்த் தன்னநின்
பிழையா நன்மொழி தேறிய விவட்கே.” (நற்றிணை-கo.)

---

* ‘வந்து புகுவானும்’ என்பதும் பாடம்.

"பெருநன் ருற்றிற் பேணரு முளரே
யொருநன் றுடைய ளாயினும் புரிமாண்டு
*புலவி தீர வளிமதி யிலைகவர்
பாடமையொழுகிய தண்ணறுஞ் சாரன்
மென்னடை மரையா துஞ்சு
நன்மலை நாட நின்னல திலளே.' (குறுந் - ககரு.)

"நனைமுதிர் ஞாழற் சினைமரு டிரள்வீ
நெய்தன் மாமலர்ப் பெய்த போல
வூதை தூற்று முரவுநீர்ச் சேர்ப்ப
தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட்
டன்னா யென்னுங் குழவி போல
வின்னா செயினு மினிது தலை யளிப்பினு
நின்வரைப் பினளென் றோழி
தன்னுறு விழுமங் களைஞரோ விலளே." (குறுந்-நகஎ.)

"இவளே நின்னல திலளே யாயுங்
குவளை யுண்க ணிவளல திலளே
யானு மாயிடை யேனே
மாமலை நாட மறவா தீமே."

இவ்வகை ஓம்படுத்துத் தான் தவிருமென்றவாறு. தான் தவிர்வதோ செயற்பாலது போகாளோ வெனில், தனது வருத்தத்திற்குக் கவன்று போகாதாளல்லள், இத னைப் பண்பாக உரைத்தற்பொருட்டுத் தவிருமென்பது. செவிலித்தாய்க்கு உரைத்தாளன்றே, அவள் அதனைப் பண் பாக உரையாளோவெனின், இவள் சொல்லியது தெளியு மாறு செவிலித்தாய் சொல்லியது தெளியாரென்றவாறு: என்னை? எப்பொழுதுங் கைவிடாத மரபினளாகலான் என்பது.

---

* 'புலவிதீர்வழி மதியிலைகவர' என்பதும் பாடம்.

இனித் தலைமகளைத் தலைமகன் ஆற்றுவித்துக் கொண்டு சென்றதற்குச் செய்யுள்:

மெல்லக்கொண்டேகல்.

பண்டான னையசொல் லாய்பைய வேகு பறந்தலைவாய்
விண்டார் படச்செற்ற கோன்வையை சூழ்விய நாட்டகம்போல்
வண்டார் பொழிலு மணியறல் யாறு மருங்கணைந்து
கண்டார் மகிழுந் தகைமைய தியாஞ்செல்லுங் கானகமே. (க௮௪)
சிறியபைங் கட்களி றூர்ந்துதென் பாழியிற் செற்றெதிர்ந்தார்
மறியவை வேல்கொண்ட தென்னவன் வையைநன் னாட்டகம்போன்
முறியபைம் போதுகண் மேல்வண்டு பாடி முருகுயிர்க்கு
நறியபைங் கானநை யாது நடக்கவெ னன்னுதலே. (க௮௫)

"அழிவிலர் முயலு மார்வ மாக்கள்
வழிபடு தெய்வங் கட்கண் டாஅங்
கலமரல் வருத்தந் தீர யாழநின்
னலமென் பணைத்தோ ளெய்தின மாகலிற்
பொரிப்பூம் புன்கி னெழிற்றகை யொண்முறி
சுணங்கணி வனமுலை யணங்குகொளத் திமிரி
நிழல்காண் டோறு நெடிய வைகி
மணல்காண் டோறும் வண்ட றைஇ
வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே
மாநனை கொழுதி மகிழ்குயி லாலு
நறுந்தண் பொழில கானங்
குறும்ப லூரயாஞ் செல்லு மாறே." (நற்றிணை-௯.)

எனத் தலைமகளைத் தன் ஆயத்தோடுஞ் செல்வாள் போலக் கொண்டு செல்லும். அவ்வகை போவாரை இடைச் சுரத்துக் கண்டார் சொல்லியதற்குச் செய்யுள்:

நெறிவிலக்கிக்கூறல்.

அலைமன்னு பைங்கழற் செங்கோ லரிகே சரியளியா
விலைமன்னு மாலைமுத் தக்குடை யானிகல் வேந்தரைப்போன்

மலைமன்னும் வெய்யோன் மறைந்தனன் மாதுமெய் வாடிநைந்தாள்
சிலைமன்னு தோளண்ணல் சேர்ந்தனை செல்லெஞ் சிறுகுடிக்கே.
நின்றாங் கெதிர்ந்தார் குருதியு ளாழ நெடுங்களத்து
வென்றான் விசாரிதன் கூடலன் னாளு மிகமெலிந்தாள்
குன்றூர் சுடரோன் மறைந்தனன் கூர்வேல் விடலைதங்கிச்
சென்றா லழிவதுண் டோவணித் தாலெஞ் சிறுகுடியே. (கஅஎ)

"எம்மூ ரல்ல தூர்நணி யில்லை
வெம்முரட் செல்வன் கதிரு *மூழ்த்தனன்
சேந்தனை சென்மோ பூந்தார் மார்ப
விளையண் மெல்லியண் மடந்தை
யரிய சேய பெருங்க லாறே."

இன்னும் இடைச்சுரத்துக் கண்டார் இவ்வாறுஞ் சொல்லுப:

நகரணிமை கூறல்.

நீயு மிவளுமின் றேசென்று சேர்திர்நெல் வேலியொன்னார்
தேயும் படிசெற்ற தென்னவன் றென்புன னாட்டிளையர்
வாயு முகமு மலர்ந்த கமல மணித்தடத்துப்
பாயுங் கயலவர் கண்போற் பிறழும் பழனங்களே. (அஅக)

பிற்றைஞான்று மகளது போக்கு உணர்ந்து செவிலி மயங்கிப் பெரியதோர் கவலையளாய் நெருநலை இவை செய்தது இது கருதிப்போலும் என்னும். அதற்குச் செய்யுள்:

கவன்றுரைத்தல்.

ஒண்முத்த வார்கழற் கைதந்தென் னூரா வறுமுலையின்
கண்முத்தங் கொண்டு முயங்கிற்றெல் லாங்கரு வெங்கழைபோய்
விண்முத்த நீள்சுரஞ் செல்லிய வோவிழி ஞத்துவென்ற
தண்முத்த வெண்குடை யான்றமிழ் நாடன்ன தாழ்குழலே. (கஅகூ)

* 'இழந்தனன்' என்பதும் பாடம்.

"பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனெ னென்றனள்
ளினியறிந் தேனது துனியா குதலே
கழறொடி யாஅய் மழைதவழ் பொதியின்
வேங்கையுங் காந்தளு நாறி
யாம்பன் மலரினுந் தான்றண் ணியளே." (குறுந்-அ௪.)

என்று பின்னுங் கவன்று ஆற்றாளாய் இவ்வகைப்பட்ட கானம் இவ்வகைப்பட்டாள் எவ்வகை செல்லுங்கொல்லோ என்னும். அதற்குச் செய்யுள்:

சுரத்தருமை நினைந்திரங்கல்.

வேடகஞ் சேர்ந்தவெங் கானம் விடலைபின் மெல்லடிமேற்
பாடகந் தாங்கி நடந்ததெவ் வாறுகொல் பாழிவென்ற
கோடக நீள்குடிக் கோனெடு மாறன்றென் கூடலின்வா
யாடக மாடங் கடந்தறி யாதவென் னாரணங்கே. (க௬0)

இவ்வகை மெல்லியவாகிய அடி இவ்வகை வெய்யவாகிய கானம் எவ்வகை சென்றனள் கொல்லோ என்னும். அதற்குச் செய்யுள்:

அடிநினைந்திரங்கல்.

ஙளிமுத்த வெண்மணன் மேலும் பனிப்பன நண்பன்பின்போய்
முளியுற்ற கான மிறந்தன *போலு நிறந்திகழு
மொளிமுத்த வெண்குடைச் செங்கோ லுசித னுறந்தையன்ன
தெளிமுத்த வாண்முறு வற்சிறி யாடன் சிலம்படியே. (க௬க)

இனிச் செவிலி பின்சென்றாள் சுரத்திடைக் குரவினொடு புலம்பிச் சொல்லியதற்குச் செய்யுள்:

குரவொடு வருந்தல்.

மழைகெழு கார்வண்கை வானவன் மாறன்வண் கூடலன்ன
விழைகெழு கொங்கையென் பேதையொ ரேதில னேடியைந்திக்
கழைகெழு குன்றங் கடப்பவு நீகண்டு நின்றனையே
தழைகெழு பாவை பலவும் வளர்க்கின்ற தண்குரவே. (க௬உ)

* 'போன்மொய்' என்பதும் பாடம்.

நினைப்பரும் புண்ணியஞ் செய்தாய் குரவே நெடுங்களத்து
வினைப்பொலி மால்களி றுந்திவென் றான்விய னாட்டகத்தோர்
மனைப்பொலி பாவை பயந்தேன் வருந்தவு நீகடத்து
ளெனைப்பல பாவை பயந்துமெய் தாயொ டிருந்தயரே. (கககூ)

வில்லவன் றானை நறையாற் றழிந்துவிண் ணேறவெல்ல
வல்லவன் மாறனெங் கோன்முனை போல்சுரம் வாணுதலாள்
சொல்லவன் பின்சென்ற வாறென்ற போழ்தெனக்குச்சொல்லுமே
பல்லவ மாக்கித்தன் பாவை வளர்க்கின்ற பைங்குரவே. (ககச)

சுரத்திடைச் செல்லுந் தலைமகனையுந் தலைமகளையுங் கண்டு எதிர்வருகின்றார் யார்கொல் இவ்வாறு போந்தார் எனச் சொல்லியதற்குச் செய்யுள்:

கண்டவர் கூறல்.

வில்லான் விறலடி மேலன பொற்கழல் வெண்முத்தன்ன
பல்லா ளிணையடி மேலன பாடகம் பஞ்சவற்கு
நெல்லார் கழனி நெடுங்களத் தன்று நிகர்மலைந்த
புல்லா தவரென யார்கொல் லருஞ்சுரம் போந்தவரே. (ககரு)

"வில்லோன் காலன கழலே தொடியோண்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே." (குறுந்-எ.)

இனிச் செவிலி எதிர்வருகின்ற பார்ப்பாரைக் கண்டு வினாயதற்குச் செய்யுள்:

வேதியரை வினாதல்.

நிழலார் குடையொடு தண்ணீர்க் கரக நெறிப்படக்கொண்
டழலா ருஞ்சுரத் தூடு வருகின்ற வந்தணிர்காள்
கழலா னொருவன்பின் செங்கோற் கலிமத னன்பகைபோற்
குழலா ளொருத்திசென் றாளோ வுரைமினிக்குன்றிடத்தே. (ககசு)

குடையார் நிழலுறி சேர்கர கத்தொடு குன்றிடத்து
நடையான் மெலிந்து வருகின்ற வந்தணிர் ஞாலமெல்லா
முடையா ளுெளிவே லுசிதன்றென் கூடலொண் டீந்தமிழ்போ
லிடையாள் விடலைபின் சென்றனளோவிவ் விருஞ்சுரத்தே.(கக௭)

சுரத்திடைச் செல்லாநின்ற தலைமகள் நின்ற சூழலுந் தலைமகன் எய்த வேழமுங் கண்டு செவிலி சொல்லியதற்குச் செய்யுள்:

வியந்துரைத்தல்.

செறிகழல் வேந்தரைச் சேவூ ரமர்வென்ற தென்னன்செய்ய
நெறிகெழு கோனெடு மாறன் முனைபோ னெடுஞ்சுரத்து
வெறிகமழ் கோதையிங் கேநின்ற திங்ஙதாம் விடலைதன்கைப்
பொறிகெழு திண்சிலை *வாளியி னெய்த பொருகளிறே. (கக௮)

கொடுவிற் படைமன்னர் கோட்டாற் றழியக் கணையுதைத்த
நெடுவிற் றடக்கையெங் கோனெடு மாறன்றென் னேரிமுன்னு
விடுவிற் புருவத் தவணின்ற சூழ விதுவுதுவாங்
கடுவிற் றொடுகணை யாலண்ண லெய்த கதக்களிறே. (கக௯)

பின்சென்ற செவிலித்தாய் எதிர்வருவாரைக் கண்டு வினவ, அவ்வினவப்பட்டார் தலைமகளையுந் தலைமகனையும் இன்னதோரிடஞ் சேர்வர்களென்னும். அதற்குச் செய்யுள்:

அழுங்குதாய்க் குரைத்தல்.

ஆலையுஞ் சீறுங் களிற்றரி கேசரி தெவ்வரைப்போற்
காலையுங் காரிகை யுங்கடஞ் சென்றின்று காண்பர்வெங்கேழ்
வாலையுஞ் செங்கண் வராலு மடலிளந் தெங்குகுத்த
பாலையுந் தேறல் பருகிக் களிக்கும் பழனங்களே. (உ00)

நகுவா யனபல பெய்துள்ள நட்டாற் றருவரைபோன்
றுகுவாய் மதக்களி றுந்திவென் றுன்மனம் போன்றுயர்ந்த
தொகுவா யனசுனை சேர்குன்ற நீங்கலுந் தன்னுவர்போய்ப்
பகுவா யனபல வாளைகள் பாயும் பழனங்களே. (உ0க)

* 'வில்லியின்' என்பதும் பாடம்.

இடைச்சுரத்துப் புலம்புஞ் செவிலியை எதிர்வருவார் கண்டு தெருட்டியதற்குச் செய்யுள்

உலகியல் புரைத்தல்.

கடவரை காதல னோடு கடந்த கயனெடுங்கட்
படவர வல்குலும் பாவைக் கிரங்கன்மின் பண்டுகெண்டை
வடவரை மேல்வைத்த வானவன் மாறன் மலயமென்னுந்
தடவரை தானே யணிந்தறி யாதுதண் சந்தனமே. (௨0௨)

வெந்நீ ரருஞ்சுரங் காளைபின் சென்றநும் மெல்லியன்மாட்
டிந்நீர் மையீரிரங் கன்மி னறையாற் றிகலரசர்
தந்நீ ரழிவித்த சத்రு துரந்தரன் றண்குமரி
முந்நீர் பயந்தா லணிவார் பிறரென்ப முத்தங்களே. (௨0௩)

நெருங்கடல் வேனெடு மாற னெடுங்களத் தன்று வென்றான்
பெருங்கடல் ஞாலத்துட் பெண்பிறந் தார்தம்பெற் றார்க்குதவா
ரிருங்கடல் போற்றுய ரெய்தன்மி னீன்றன வென்றுமுந்நீர்க்
கருங்கடல் வெண்சங் கணிந்தறி யாதண் கதிர்முத்தமே. (௨0௪)

"எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழ
லுறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலு
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணீர்
வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தீ ரிவ்விடை
யென்மக ளொருத்தியும் பிறண்மக னொருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய
ரன்னா ரிருவரைக் காணிரோ பெரும;
காணே மல்லேங் கண்டனங் கடத்திடை
யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய
மாணிழை மடவர லுயிர்நீர் போறிர்;
பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யு
நினையுங்கா ணும்மக ளுமக்குமாங் கனையளே;
சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை

நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுந்
தேருங்கா னும்மக னுமக்குமாங் கனையளே;
ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை.
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யுஞ்
சூழுங்கா னும்மக னுமக்குமாங் கனையளே;
எனவாங்கு, இறந்த கற்பினட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடஇச் சென்றனள்
அறந்தலை பிரியா வாறுமற் றதுவே." (கலித்தொகை - க.)

செவிலி சுரத்திடைச் செல்லாது மனையகத்திருந்து சொல்லுமென்பாரும் உளர்; அது பொருந்துமாறு அறிந்துகொள்க.

அல்லதூஉம், ஆங்ஙனம் புணர்ந்துடன்போய்ச் சில நாட்கழிந்தபின்னை,

அறத்தொடு நிலையி னஃதறிந் திருந்த
சிறப்புடை மரபிற் றெய்வ மன்ன
இருபெருங் குரவரொடு பொருவி லாற்றற்
றன்னையர் தம்மைச் சால்புடை மரபின்
மன்னிய சிறப்பின் மதியோர் தேற்றப்

பண்பாதல் விதியுளி; தெருண்டபின்,

மீண்டு வந்து வியனகர் விரும்ப
மாண்டகு சிறப்பின் வரைந்தெய் துமெனு.

அவ்வகை மறித்து வராநின்றாள் சுரத்திடை முன்னுறச் செல்வாரை என் ஆயத்தார்க்கு எனது வரவினைச் சொல்லுவீரென்னும். அதற்குச் செய்யுள்:

வழிச்செல்வோரை வரவுரைமின் என்றல்.

செம்மைத் தனிக்கோற் றிறன்மன்னன் சேவூர்ச் செருமலைந்தார்
தம்மைப் புறங்கண்ட சத்ரு துரந்தரன் றன்முனைபோல்
வெம்மைச் சுரம்வரு கின்றன ளென்று விரைந்துசெல்வீ
ரம்மைத் தடங்கண்ணென் னாயத் தவருக் கறிமின்களே. (உ0௫)

கோடரி னீண்மதிற் கோட்டாற் றரண்விட்டுக் குன்றகஞ்சேர்
காடரில் வேந்தர் செலச்செற்ற மன்னன்கை வேலின்வெய்ய
வேடரில் வெஞ்சுர மீண்டன ளென்று விரைந்துசெல்வீ
ரோடரி வாட்கணென் னையத் தவருக் குரைமின்களே. (உ0சு)

"கவிழ்மயி ரெருத்திற் செந்நா யேற்றை
குருளைப் பன்றி கொள்ளாது கழியுஞ்
சுரநனி வாரா நின்றன ளென்பது
முன்னுற *விரைந்தனி ருரைமி
னின்னகை முறுவலென் னையத் தோர்க்கே."

அல்லதூஉம், மகள் வருகின்றாளெனக் கேட்டதாய் நம் நெடுநகர்க்கே வருமோ தன்கடிமனைக்கே கொண்டுபோமோவென அவன் குறிப்பறிதற்கு வேலனை வினவும். அதற்குச் செய்யுள்:

வேலனை வினாதல்.

அங்கண் மலர்த்தா ரரிகே சரிதென்னர் கோனயில்போல்
வெங்க ணெடுஞ்சுர மீண்ட விடலை கெடலருஞ்சீர்
நங்கண் மனைக்கே வரநல்கு மோசொல்லு வேலநல்கு
தங்கண் மனைக்கே செலவுய்க்கு மோமற்றென் றையலையே. (உ0எ)

உருமினை நீள்கொடி மேற்கொண்ட செங்கோ லுசிதனெங்கோன்
செருமுனை போல்சுர மீண்ட விடலையெந் தீதில்செல்வத்
†திருமனைக் கேநல்குங் கொல்லோ வதுவை செயத்தனது
பெருமனைக் கேயுய்க்கு மோவுரை யாய்மற்றென் பேதையையே. ( )

"அருஞ்சுர மிறந்தவென் பெருந்தோட் குறுமக
டிருந்துவேல் விடலையொடு வருமெனத் தாயே
புனைமா ணிஞ்சி பூவ லூட்டி

* 'செல்வீருரைமின்' என்பதும் பாடம்.

† 'திருமனைக் கேவர நல்குங்கொலன்றாய் விடிற்றனது' எனவும் வேறுபாடமுண்டு.

மனைமண லடுத்து மாலை நாற்றி
யுவந்தினி தயரு மென்ப யானு
மான்பிணை நோக்கின் மடநல் லாளை
யீன்ற நட்பிற் கருளா னாயினு
மின்னகை முறுவ லேழையைப் பன்னாட்
கூந்தல் வாரி நுசுப்பிவர்ந் தோம்பிய
நலம்புனை யுதவியோ வுடையேன் மன்னே
யஃதறி கற்பி னன்றுமற் றில்ல
வறுவை தோயு மொருபெருங் குடுமிச்
சிறுபை னாற்றிய பஃறலைக் கருங்கோ
லாகுவ தறியு முதுவாய் வேல
கூறுக மாதோ கழங்கின் றிட்ப
மாறா வரும்பனி கலுழுங் கங்கு
லானாது துயருமெங் கண்ணினிது படீஇய
ரெம்மனை முந்துறத் தருமோ
தம்மனை யுய்க்குமோ யாதவன் குறிப்பே." (அகம்-கக௫.)

இங்ஙனம் புகுந்து பெயர்ந்த பின்றைத் தலைமகன் தன்னகத்தே வதுவைக் கலியாணஞ் செய்வான் எடுத்துக் கொண்டானென்பது கேட்ட நற்றாய் ஒழிந்த கலியாணஞ் செய்யினும் நம்மகத்தே வதுவைக் கலியாணஞ் செய்ய நேருங்கொல்லோ காளையைப் பயந்தா ளென்னும். அதற்குச் செய்யுள்:

தாளை வணங்கா தவர்படச் சங்கமங் கைத்தனது
வாளை வலங்கொண்ட மாறனிவ் வையத் தவர்மகிழ
நாளைநம் மில்லுள் வதுவை யயர்தர நல்குங்கொல்லோ
காளையை யீன்ற கடனறி நன்னெஞ்சிற் காரிகையே. (உ0௯)
மையே றியபொழின் மாநீர்க் கடையன்மன் னோடவென்றான்
மெய்யே றியசீர் மதுரை விழவினை போனமில்லு
ணெய்யேர் குழலி வதுவை யயர்தர நேருங்கொல்லோ
பொய்யே புரிந்தவக் காளையை யீன்ற பொலங்குழையே. (உ௧0)

நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினு
மெம்மனை வதுவை நன்மணங் கழிகெனச்
சொல்லி னெவனோ மற்றே வென்வேன்
மையற விளங்கிய கழலடிப்
பொய்வல் காளையை யீன்ற தாய்க்கே." (ஐங்குறு-௩௯௯.) (௨௩)

௨௪. களவு வெளிப்படா முன்னுற வரைதல்
களவு வெளிப்பட்ட பின்றை வரைதலென்
றாயிரண் டென்ப வரைத லாறே.

என்பதென்னுதலிற்றோவெனின், *'வெளிப்பட்ட பின்றைக் கிளவியு ழ்ப' என்றமையான் வெளிப்பட்டபின்றை வரைதன் முறைமையானல்லது இல்லையெனக் கொண்டு நின்ற மாணாக்கற்கு மற்று வரைதலாறு உண்டென்ப துணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: களவு வெளிப்படா முன்னுற வரைதல்—பலரானுஞ் சிலரானும் அறியப்பட்டதுஇவ்வொழுக்கமென்னுங் கருத்து எய்தாமுன்னம் வரைதல்; இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தபின்னே தெருண்டு வரைதலும் உரியன், அங்குத் தெருளானாய் விடிற் பாங்கற்கூட்டங் கூடித் தெருண்டுவரைதலும் உரியன், அங்குத்தெருளானாய்விடின் தோழியை இரந்து பின்னின்று அவள் தனையுறுத்தகைமை செய்யத் தெருண்டு வரைதலும் உரியன், அங்குத் தெருளானாய் விடின் மதியுடம்படுத்து இரந்து பின்னின்றவிடத்துக் கண் தோழி சேட்படுப்பத் தெருண்டு வரைதலும் உரியன், அங்குத்தெருளானாய்விடின் தோழியிற் கூட்டங் கூடியாதல் செறிப்பறிவுறுக்கப்பட்டாதல் இரவுக்குறியது ஏதங்காட்ட

* இறையனார்-௨௩.

வாதல் வரைவுகடாவப்பட்டாதல் தெருண்டு வரைதலும் உரியன். ஈதெல்லாங் களவு வெளிப்படாமுன்னுறவரைதல் விகற்பமெனக்கொள்க. இனி வெளிப்பட்ட பின்றை வரைதல் விகற்பமின்றெனக் கொள்க. அவற்றுட் களவு வெளிப்படாமுன்னுறவரைதல் சிறப்புடைத்து. இது தனக்காகாமையால் வரைந்தமையிற் சிறப்பின்றெனக்கொள்க. இது களவு வெளிப்பாடன்றென்று மறுத்துக் களவு வெளிப்படாமுன்னுறவரைதல் அறத்தொடுநிலை நிகழாமுன் வரைதலென்றவாறு.

களவு வெளிப்பட்ட பின்றை வரைதல்—அறத்தொடுநிலை நிகழ்ந்த பின்றை வரைதல். களவு வெளிப்படாமுன்னுறவரைதலுங் களவு வெளிப்பட்ட பின்றை வரைதலுமாமாறு முன்னே சொல்லிப்போந்தாம். அவ்வுரையே இதற்கும் உரைத்துக்கொள்க.

என்று ஆ இரண்டு என்ப வரைதலாறு—என்று இரண்டுவகை என்பர் வரைதல் முறை, என்றவாறு. (உச)

**உரு. பட்ட பின்றை வரையாக் கிழவ**
**னெட்டிடை கழிந்து பொருள்வயிற் பிரிதலும்**
**பொருள்வயிற் பிரியா தொருவழித் தணத்தலும்**
**புரைவ தென்ப கற்பா லான.**

என்பதென்னுதலிற்றோவெனின், அறத்தொடு நிலைநின்ற பின்றை வரும் விகற்பம் உணர்த்துதல் நுதலிற்று.

மேற்சூத்திரத்து *வரையும் இடம் உணர்த்தினர், அவ்வரைவிற்கு வரும் இடையீடு இவையென்பது உணர்த்துதல் நுதலிற்று.

* 'வரையுமிடத்து வரையுமிடம் உணர்த்தினர்' என்பதும் பாடம்.

இனித் தலைமகளை வரைந்தெய்தினானல்லன், அறத்தொடு நின்றவாறே பிரிந்தான், ஆகலான் அன்னாள் கற்பினாளோ களவினாளோ என்ற மாணாக்கற்கு இவள் கற்பினாளேயெனப்படும் என்றவாறு.

இதன்பொருள்: பட்ட பின்றை வரையாக் கிழவன்—அறத்தொடு நிலைநின்ற பின்றை வரைந் தெய்தாத தலைமகன்; நெட்டிடை கழிந்து பொருள்வயிற் பிரிதலும்—நாடுங் காடும் இடையிட்ட பல்காதமும் நீங்கிப் பொருட்குப் பிரியும் பிரிவும்; பொருள்வயிற் பிரியாது ஒருவழித் தணத்தலும்—பொருட்குப் பிரியாது ஓரிடத்தானாய் உறைதலும்; புரைவது என்ப கற்பால் ஆன—அவை பொருந்துங் கற்பினாளாகற்கு, என்றவாறு.

அறத்தொடு நிலைநின்றமை என்னை தலைமகன் அறியுமாறெனின், தோழியால் உணர்த்தப்பட்டு அறியுமென்பது. இதன்கருத்து, இவ்விரண்டு இடையீட்டின்கண்ணுந் தலைமகள் ஆற்றாளாய காலத்துத் தோழி ஆற்றுவித்தலும், ஆற்றுவித்து அதனெதிர்மொழிதலும், பிறவும் எல்லாங் கற்பினோடு ஒக்குமென்பது. இப்பிரிவு தலைமகள் அறியப் பிரியுமோவெனின், அறியவே பிரியும், தோழிக்குந் தலைமகட்கும் எல்லாம் உணர்த்தி யென்பது. அவ்வாறு பிரிந்தவிடத்துத் தலைமகள் வேறுபட்டாள்; வேறுபட, எம்பெருமான் இதற்கு நல்லது புரிவான் பிரிவான்: பிரிய, நீ ஆற்றாயாவதோ தகாதென்ற தோழிக்கு யான் பிரிய ஆற்றேனாயினேனல்லேன், அவர் சென்ற கானத்துத் தன்மையை நோக்கி அவர்க்குக் கவன்று நினைந்து ஆற்றேனாயினேனை ஏதிலர் அதனைத் திரிய உணர்ந்தாரென ஊர்மேல் வைத்துச் சொல்லும். அதற்குச் செய்யுள்:

ஊர்மேல் வைத்துரைத்தல்.

மின்று னனைய விளங்கொளி வேலொடு வெண்டிரைமே
னின்று னிலமன்ன னேரியன் மாற னிகன்முனைபோற்
கொன்று றலைக்குஞ் சுரமன்பர் நீங்கலுங் கோல்வளைகள்
சென்று லதுபிறி தாகவிவ் வூரவர் சிந்திப்பரே. (உகக)

இயற்பட மொழிதல். இப்பிரிவின்கண்ணே ஆற்றாளாய் வேறுபட்ட தலைமகளை இவ்வாறன்றி ஆற்றுவிக்கலாகாதெனக் கருதித் தலைமகனை இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழியும். அதற்குச் செய்யுள்:

தொல்கவின் றொலையத் தோணலஞ் சாஅய்
நல்கார் நீத்தன ராயினு நல்குவர்
நட்டனர் வாழி தோழி குட்டுவ
னகப்பா வழிய நூறிச் செம்பியன்
பகற்றீ வேட்ட ஞாட்பினு மிகப்பெரி
தலரெழச் சென்றன ராயினு மலர்கவிந்து
மாமட லவிழ்ந்த காந்தளஞ் சாரலின்
ஞால்வாய்க் களிறு பாந்தட் பட்டெனத்
துஞ்சாத் துயரத் தஞ்சுபிடிப் பூச
னெடுவரை விடரகத் தியம்புங்
கடுமான் புல்லிய காடிறந் தோரே." (நற்றிணை-கச.)

இயற்பழித்தல். அல்லதூஉம், நெட்டிடை கழிந்து பொருள்வயிற் பிரிந்தவிடத்துத் தலைமகளது ஆற்றாமை கண்டு தோழி தலைமகனை இயற்பழிக்கும்; எங்ஙனம் இயற்பழிக்குமோ வெனின், இவளை இங்ஙனம் ஆற்றாளாகப்பிரிந்த அவரினுங் கொடிய, இவளது ஆற்றாமை கண்டும் அதற்கு நல்லது புரியாது தம் நாணின்மையாற் பகலே புகுந்து இரைதேர்கின்ற நாணுப் பறவைகளென்னும். அதற்குச் செய்யுள்:

இகலே புரிந்தெதிர் நின்றதெவ் வேந்த ரிருஞ்சிறைவான்
புகலே புரியவென் றான்கன்னி யன்னாள் புலம்புறுநோய்
மிகலே புரிகின் றதுகண்டு மின்றிவ் வியன்கழிவாய்ப்
பகலே புரிந்திரை தேர்கின்ற நாரைப் பறவைகளே. (உகஉ)

என்பது கேட்ட தலைமகள் என் ஆற்றாமைகண்டன்றே இவள் இவ்வகை சொல்லுவாளாவதெனத் தனது ஆற்றாமை நீங்குவாளாவது பயன்.

இனி ஒருவழித் தணந்தவிடத்துத் தலைமகள் வேறுபட இவ்வகைப்பட்ட நிலத்தில் தலைமகன் நம்மைத் துறவான்நீ எற்றிற்கு ஆற்றாயாகின்றாயெனத் தோழி சொல்லியதற்குச் செய்யுள்:

அடுமலை போல்களி யானை யரிகே சரியுலகின்
வடுமலை யாதசெங் கோன்மன்னன் வஞ்சியன் னாய்மகிழ்ந்து
படுமலை போல்வண்டு பாடிச்செங் காந்தட்பைந் தேன்பருகு
நெடுமலை நாடனை நீங்குமென் றோநீ நினைக்கின்றதே. (உகங)

குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற்பாய
வழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென் றயல்வாழ்மந்தி
கலுழ்வனபோ னெஞ்சசைந்து கல்லருவி தூஉ
நிழல்வரை நன்னாட னீப்பனோ வல்லன்.

**உசு. வெளிப்படை தானே விரிக்குங் காலைத்**
**தந்தை தாயே தன்னைய ரென்றாங்**
**கன்னவ ரறியப் பண்பா கும்மே.**

என்பதென்னுதலிற்றோ வெனின், மேல் வெளிப்படையே சொல்லிப்போந்தார், அவ்வெளிப்படை இவையென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: வெளிப்படை தானே—களவு வெளிப்படைதானே; விரிக்குங் காலை—விரித்து உணர்த்துமிடத்து; தந்தை தாயே தன்னையர் என்றாங்கு அன்னவர் அறியப் பண்பு ஆகும்மே—தந்தை தாயே தன்னையர் என்று அவர் அறியப் பண்பாகும் என்றவாறு.

பண்பெனினும் இலக்கணமெனினும் இயல்பெனினும் ஒக்கும். வெளிப்படையென்பது அறத்தொடு நிலையென்றவாறு. வெளிப்படையெனினும் அறத்தொடு நிலையெனினும் ஒக்கும். என இவ்விரண்டும் ஒரு பொருண்மேற் கிடந்தனவாயினுங் கருத்துவேறுபா டுடையவாம். யாவரும் அறியப்படாத களவு தந்தையுந் தாயுந் தன்னையரும் அறிய நிகழ்ந்தமையிற் களவு வெளிப்படை யெனப்பட்டது. இனித் தலைமகள் அறன் அழியாமை நிற்றலின் அறத்தொடு நிலையெனவும்பட்டது. (உசு)

உஎ. அவருட்,
டாயறி வுறுதலி னேனோரு மறிப.

என்ப தென்னுதலிற்றோ வெனின், இவர்தாம் அறியுமிடத்துத் தாய் சொல்லவன்றித் தாமாக அறிவிலரென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: அவருள்—சொல்லப்பட்ட மூவருள்ளும்; தாய் அறிவுறுதலின் ஏனோரும் அறிப—தாய் அறிவுறுக்கப்பட்டுத் தந்தைக்குந் தன்னையன்மாருக்கும் அறத்தொடு நிற்குமென்பது. செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நிற்குமென்பது. இது பெற்றவாறென்னையெனின், உரையிற்கோடலென்னுந் தந்திரவுத்தியாற் பெறுதுமென்பது. (உஎ)

உஅ. தந்தை தன்னைய ராயிரு வீற்று
முன்ன மல்லது கூற்றவ ணில்லை.

என்பதென்னுதலிற்றோ வெனின், தந்தைக்குந் தன்னையன் மார்க்கும் நற்றாய் அறத்தொடு நிற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: தந்தை தன்னையர் ஆ இருவீற்றும்—தந்தையென்றுந் தன்னையன்மாரென்றுஞ் சொல்லப் பட்ட இரண்டு கூற்றார்க்கும்; முன்னம் அல்லது கூற்று அவண் இல்லை—அவர்க்கு முன்னத்தானல்லது செவ்வனஞ் சொல்லப் பெறாள் என்றவாறு.

நற்றாய் தந்தைக்குந் தன்னையன்மார்க்கும் அறத்தொடு நிற்குமிடத்து, இன்னதொன்றுண்டால், அஃதென்னோவெனிற், குலத்தானுஞ் செல்வத்தானும் மிக்கான் ஒருவன், உலகத்தாரெல்லாம் ஒரு குறைவேண்டப்படுந் தன்மையன், ஒருவர்பால் ஒருகுறைவேண்டுஞ் சிறுமையனல்லன், இத்தன்மையானவன் நம்மை வழிபட்டு வாழலுறும், அவனை யாங் கிழமைகொள்ள அழிவதுண்டோ என்னும். என்பது கேட்டு அவர் என் கருதுவரோவெனின், இவள் கருதிச் சொல்லுகின்ற குறிப்பாவது இதுபோலுந், தன்மகள் திறத்தினைகாதேயென உணர்வாராவது.

'அவண்' என்ற மிகைவாய்பாட்டான் முன்னத்தானன்றியும் முன்னம்போலுஞ் சொல்லானுஞ் சிறுபான்மைசொல்லுமென்பது. அது வருமாறு: தலைமகன் பார்ப்பாரை முன்னிட்டு அருங்கலங்களோடு வரைவுவேண்டிவிட்டவிடத்துத் தந்தையுந் தன்னையன்மாரும் வரைவுமறுத்தார், மறுப்பார் சூழ்தலும் அருகுதலுமுடைமையான். நூற்றியாண்டைக் கற்றவரோடு எண்ணிச் செய்யப்படுமோகலாற் சூழப்படும்.

இனிக் கண்டீரே தம்மகளை வேண்டுவாரைப் பார்த்திருந் தாராகாதே, நாம் இந்நூற்றிடைக் கருமநூற்றவரே, இவர் களிடை மகட்பெறுவார் யாரெனவும் பெறுதற்கு அருமை யுடைத்தெனவுங் கருத அருகுப. இனிக் கண்டீரே தம் மகளை வேண்டுவார் உரைப்பனவும் பொய்போலும்,வேண்டு தற்கு இடையின்றியே பெற்றுராகலின் இவ்வகை விரைந்து கொடுத்தாராலென்னும் புறவுரை நோக்கியும் அருகுப. அல்லதூஉம், இறப்பச் சிறியாருந் தம்மின் மிக்கார் மகள் வேண்டிச் சென்றவிடத்தும் அருகுப. இனி உலகியலானும் அருகுப. அல்லது உலகியல்பல்லாவழி இவர் * அருகுவதற் குச் சொல்லவேண்டுமோ என்பது. எனத் தலைமகன் வரைவுமறுக்கப்பட்டா னென்பதனை உணர்ந்த தலைமகள் ஆற்றுளாமாகத் தோழி யாய்க்கு அறத்தொடு நிற்பச், செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடுநிற்ப,அவள் தந்தைக் குந் தன்னையன்மார்க்கும் அறத்தொடுநிற்கும், முன்னம் போலுஞ் சொல்லானென்றவாறு. அவ்வாறு சொல்லு மதற்குச் செய்யுள்:

அறத்தொடு நிற்றல்.

சான்ருேர் வரவும் விடுத்தவர் தந்தக வுந்நுமது
வான்ருேய் குடிமையு நோக்கினல் லால்வண் பொருள்கருதிற்
றேன்ருேய் கமழ்கண்ணிச் செம்பியன் மாறன்செங் கோன்மணந்த
மீன்ருேய் கடலிடந் தானும் விலையன்றிம் மெல்லியற்கே. (உகச)

நடையா விதுவென்று நேரினல் லானறை யாற்றுவென்ற [குஞ்
படையான் பனிமுத்த வெண்குடை வேந்தன்பைங் கொன்றைதங்
சடையான் முடிமிசைத் தண்கதிர்த் திங்கடன் ருேல்குலமா
வுடையா னுசித னுலகும் விலையன்றெம் மொண்ணுதற்கே. (உகரு)

---

* 'அருமைகூறுவது' என்பதும் பாடம்.

*"சான்றோர் வருந்திய வருத்தமு நுமது
வான்றோய் வன்ன குடிமையு நோக்கித்
திருமணி வரன்றுங் குன்றங் கொண்டிவள்
வருமுலை யாகம் வழங்கினோ நன்றே
யஃதான், றடைபொருள் கருதுவிராயிற் குடையொடு
கழுமலந் தந்த நற்றேர்ச் செம்பியன்
பங்குனி விழவின் வஞ்சியோ
டுள்ளி விழவி னுறந்தையுஞ் சிறிதே."

என இவ்வாறு நற்றாய் சொல்லக் கேட்டுக் கொடாதொழி விடின் இக்குலத்துக்கு வடுவுண்டுபோலுமென உணர்வா ராவது. அதனாற் பொருள் அறத்தொடுநிலை மாட்சிப்படு வது. (உஅ)

உகூ. காப்புக் கைமிக்குக் காமம் பெருகினு
நொதுமலர் வரையும் பருவ மாயினும்
வரைவெதிர்†கொள்ளாதுதமரவண் மறுப்பினு
மவனூ றஞ்சுங் கால மாயினு
மந்நா லிடத்து மெய்ந்நா ணொரீஇ
யறத்தொடு நிற்ற றோழிக்கு முரித்தே.

என்பது என்னுதலிற்றோ வெனின், மேல் அறத்தொடு நிற்கும் நிலை உணர்த்திப்போந்தார், இனி அறத்தொடு நிற்கும் இடங்கூறுவான் எடுத்துக்கொண்டார், அஃது உணர்த்து தல் நுதலிற்று.

---

* 'விரவும் பெருமை' எனத்துவங்கும் வேறொரு செய்யுள் வேறோர் எட்டுப் பிரதியில் இங்கே காணப்படுகின்றது; அச்செய்யு ளின் முதலடி பொருள் புலனாகாவாறு பலபடச் சிதைந்து கிடத்த லின் அஃதீண்டெடுத்துக் காட்டப்படவில்லை.

† 'கொள்ளார்' என்பதும் பாடம்.

மேற்சூத்திரத்தோடு இயைபென்னையெனின், மேல் அறத்தொடுநிலை யதிகாரம் வாராநின்றதாகலா னென்பது.

இதன் பொருள்: காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்—*காப்புக்கைமிகப்பாட்டின் வேட்கை பெருகினும்; நொதுமலர் வரையும் பருவம் ஆயினும்—அயலார் வரைந்து புகுங் காலமாயினும்; வரைவு எதிர்கொள்ளாது தமர் அவண் மறுப்பினும்—வரைவினையேற்றுக்கொள்ளாது தமர் அவ்விடத்து மறுப்பினும்; அவன் ஊறு அஞ்சும் காலம் ஆயினும்—அவற்கு நிகழும் ஏதம் அஞ்சின இடத்தும்; அந் நாலிடத்தும் மெய் நாண் ஒரீஇ—அந்நாலிடத்தும் மெய்க்க ணின்ற நாண் நீங்கி; அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே—அறத்தொடு நிற்கும் நிலைமை தோழிக்கும் உரித்து, என்றவாறு.

'காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்:என்பது: காப்பு என்பது இரண்டு வகைத்து, நிறைகாவல் சிறைகாவ லென; அவற்றுள், நிறைகாவல் என்பது காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகுமொழுக்க மென்றவாறு;

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை." (குறள் - வாழ்க் - எ.)

என்பதாகலான். இனிச் சிறைகாவல் என்பது தாய் துஞ்சா மை நாய்துஞ்சாமை ஊர்துஞ்சாமை காவலர்கடுகுதல் நிலவு வெளிப்படுதல், கூகைகுழறல், கோழிகுரற்காட்டலென இவை. அவற்றுள், ஈண்டுச் சிறைகாவல் கொள்ளப்படும். அச்சிறைகாவலது மிகவின்கண் இடையீடாயினவிடத்துத் தலைமகட்குப் பெரியதோர் வேறுபாடு உண்டாம்; உண்டா

* 'காவல்கைமிக்குப் பாட்டின்' என்பதும் பாடம்.

யினவிடத்துத் தோழிக்குப் புலனும்; புலனாயினவிடத்துத், தோழி எனக்குப் புலனாயினவாறே யாய்க்கும் புலனும், புலனாயினவிடத்து யாய் அறிவாரை வினவும்; வினவின விடத்து அறிவார் தெய்வத்தினான் ஆயிற்றென்ப; அது சொல்லுதற்பயத்தது தங்கருமமாகலானும் பிறிதொன்று சுட்டி உணருந் தன்மைத்தன்று இக்குலமாகலானுந் தெய்வத்தினான் ஆயிற்றென்ப. என்றவிடத்து, இவளை முன்னிறீஇத் தெய்வத்திற்கு வழிபாடு செய்விக்கும். செய்தவிடத்துக் கற்பழியும். இவட்குக் கற்பழிவு வந்ததென்றும், இவட்கு ஆற்றாமை தணியாதன்றே தெய்வத்தினான் ஆயிற்று என்றமையின் பெயர்த்தும் அதுகண்டு யாய்க்கு ஆற்றாமை பெருகுமென்றுந் தலைமகளது கற்பழிவுக்குந் தாய் ஆற்றாமைக்குந் தோழி தான் ஆற்றாளாம். ஆற்றாமையென்பது பிறிதெவ்வுணர்வுமின்றி ஆற்றாமை தானேயாவது. ஆற்றாமை ஆற்றுவதொன்றினைப் பற்றும். ஆற்றுவது பிறிதின்மையின் அறிவாரை வினவுமிடத்து என்னை வினவ, யான் அறியேனென்றதன் புறத்தாம் பிறரை வினவுவாளாவது; என்னை வினவினவிடத்து இது சொல்லுவனென்று கூட்டமில் நாட்டவகையாற் சிந்தித்துக்கொண்டிருக்கும். இருந்த நிலைமைக்கண் தாய் படிமக்கலத்தொடும் புக்கு, மகளை அடிகொண்டு முடிகாறு நோக்கி, அன்னாய் *நம்பெருமாட்டிக்கு இவ்வேறுபாடு எற்றினானாயிற்றென்னும். என்றவிடத்து, என்னால் அறியப்படுவதுஞ் சிறிதுண்டென்று †மேற்சொல்லியவாறே மாறுகோள் இல்லாத வகையான் அறத்தொடு நிற்கும்,

* 'என் மகட்கு' என்பதும் பாடம்.

† 'களிறுதரு புணர்ச்சியான் மாறுகோளில்லா வகையானுரைத்து அறத்தொடு நிற்கும்' என்பதும் பாடம்.

அங்ஙனம் அவள் *நற்றாய்த் தொடக்கத்தார்க்கெல்லாம் அறத்தொடு நிற்கும் என்பது.

இனி, 'நொதுமலர் வரையும் பருவம் ஆயினும்' என்பது: †நொதுமலரென்பார் ஏதிலர், அவர்தாம் வரைவொடு வந்தாரென்பது கேட்டவிடத்துத் தலைமகள் அதற்கு ஆற்றாளாம்; ஆற்றாளாயினவிடத்து, மேற்சொல்லியவாறே மாறுகோளின்றி அறத்தொடு நிற்கும் என்பது.

'வரைவெதிர்கொள்ளாது தமர் அவண் மறுப்பினும்' என்பது: தலைமகன்றமர் பார்ப்பார் சான்றோரை முன்னிட்டு அருங்கலங்களொடு வரைதற்குப் புகுவர்; புக்கவிடத்து ஒருகாலைக்கு மறுப்பர் பிற; ‡போதாக் குமரியை யுடையார் போலக் கதுமென நேர்ந்திடாரன்றே! பரியஞ் சிறிதென்றானும் இளையளாமேலோவென்றானும் நாளும்புள்ளுந் திருத்தி வாரீரோ வென்றானும் அங்ஙன மறுத்தா ரென்பதனைத் தலைமகள் கேட்டஞான்றும் ஆற்றாளாம். என்னை? எம்பெருமான் ஒருவர்க்கு ஒருகுறை முடிப்பினல்லது ஒருவரை ஒருகுறை வேண்டுந் தன்மையனல்லன். அல்லாதான் இக்குறைவேண்டியது என்கட்கிடந்த அருளாகாதே? இவற்கு இவ்விளிவரவாக்கினேன் பாவியேனெனவும், எம்பெருமாற்கு மறுத்தார் இனி மற்றொருவாற்காதே யெனவுந் தலைமகள் வேறுபடும். அவ்வேறுபாடு தோழிக்குப் புலனாம். புலனாயினவிடத்து மேற்சொல்லியவாறே அறத்தொடு நிற்குமென்பது.

---

* 'நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும், அவள் அத்தொடக்கத்தார்க்கெல்லாம் அறத்தொடு நிற்கும்' எனவும் வேறுபாடம் உண்டு.

† 'ஏதிலரானவர் வரைவொடு வந்தார்' என்பதும் பாடம்.

‡ 'போகாக்குமரி' என்பதும் பாடம்.

'அவன் ஊறு அஞ்சுங் காலமாயினும்' என்பது: தலைமகன் இரவுக்குறி வந்து ஒழுகாநின்ற நிலைமைக்கண் எம்பெருமான் வரும்வழி எண்கும் வெண்கோட்டியானையும் அரவும் உருமும் புலியும் *வானரமகளிரும் வரையரமகளிரும் உடைத்து, மற்றுந் தெய்வங்கள் வெளவும் வண்ணத்தன, ஏதம் நிகழ்வதுகொல்லோ வென வேறுபடும். அவ்வேறுபாடு தோழிக்குப் புலனும். புலனாயினவிடத்து மேற்சொல்லியவாறே அறத்தொடு நிற்கும் என்பது.

'அந்நாலிடத்தும்' என்பது: அச்சொல்லப்பட்ட நான்கிடத்தும்; 'மெய் நாண் ஒரீஇ' என்பது: †மெய்யினைய நாண் நீங்கி; நாண் உண்டாயினவிடத்துத் தாய்முன்னின்று சொல்லாளென்பது. 'அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே' என்பது: அறமென்பது தக்கது; தக்கதனைச் சொல்லிநிற்றல் தோழிக்கும் உரித்தென்றவாறு. அல்லதூஉம், பெண்டிர்க்கு அறமென்பது கற்பு, கற்பின்றலை நிற்றலென்பதூஉமாம்.

இனித்,' தோழிக்கும் உரித்து' என்ற உம்மையால் தலைமகட்கும் அறத்தொடுநிலை உரித்தென்பது. அஃதாமாறு, இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தானும் பாங்கற்கூட்டங் கூடியானுந் தெருண்டு வரைந்தெய்தலுற்றுத் தமரைவிடும், விட்டவிடத்து அவர்மறுப்ப; அஃது இலக்கணமாகலான். அங்ஙனம் மறுத்தவிடத்துத் தலைமகள் வேறுபடும். எம்பெருமான் மறுக்கப்பட்டமையான் மற்றொருவாறுங் கொல்லோ வெனக் கலங்கி வேறுபாடு எய்தின்பொழுதே தோழிக்குப் புலனும்; புலனாயினவிடத்து, எம்பெருமாட்டி! நினக்கு இவ்வேறுபாடு எற்றினானாயிற்றென்னும். என்ற

* இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை.

† 'மெய்க்கணின்ற' என்பதும் பாடம்.

விடத்து இஃதெனக்குப் பட்டது, இன்னவிடத்து ஒரு ஞான்று நீயும் ஆயங்களுந் தழையுங் கண்ணியுங்கோடற்கு *எண்ணிச் சிறிது நீங்கினுய்; யான் நின்று ஒரு மணிச்சுனை கண்டேன்; கண்ட அம்மணிச்சுனைதான் ஆம்பலே குவளையே நெய்தலே தாமரையே என்றிப்பூக்களால் மயங்கி மேதக்கது கண்டு வேட்கையான் ஆடுவான் இழிந்தேன்; இழுக்கிக் குட்டம் புக்கேன்; புக்குத் தோழியோவென, நீ அங்ஙனங் கேளாயாயினையாக, ஒரு தோன்றல் தோன்றி வந்து எனது துயர்நீக்குதற்காகத் தன் கை நீட்டினன். நீட்டினவிடத்து †மலக்கத்தான் நின்கையெனப் பற்றினேன்; பற்ற, வாங்கிக் கரைமேனிறீஇ நீங்கினன்; நீ அன்று கவலுதியெனச் சொல்லேனாயினேன்; நீ எவ்வெல்லைக்கண்ணுங் கைவிடாதாய் அஞ்ஞான்று கைவிடலினையாக்கிற்று விதியாகாதே? இனிப் பிறிதொன்றுங் கொல்லோவெனக் கலங்கி வேறுபட்டேனென்று தோழிக்குத் தலைமகள் அறத்தொடுநிற்கும். பின்னைத் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கும் மேற்சொன்னவாற்றானென்பது. அங்ஙனமாயின் தோழி காவலொடுமாறுகொள்ளாதோவெனின், கொள்ளாது. தோழிக்கு அறத்தொடு நிற்குமாகலானென்பது. காவலொடு மாறுகொள்ளினுங் காவற்குற்றப்பட்டேனென்று தோழி இறந்துபடாமைக் காக்கும் விதியென்பது. அஃதேயெனின், நிகழ்ந்த ஒழுக்கம் மறைத்துக் களைந்து படைத்து மொழிந்தமையாற் பொய்யுரைத்தவாறும் பிறவெனிற், பொய்யுரைக்கப்பட்டதாகாது; என்னை? பழியும் பாவமும் அதனல் வாராமையின்; என்னை?

---

* 'என்னிற் சிறிது நீங்கினையாக, ஈங்குநின்றேன்' என்பது முன் அச்சுப்பிரதியிற் கண்ட பாடம்.

† 'மயக்கத்தினன்' என்பதும் பாடம்.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்." (குறள் - வாய்மை - உ)

என்றாராகலிற், குற்றமின்றென்பது. அறத்தொடு நிற்கும் இடங்களைப் பெயரும் எண்ணுஞ் சொல்லின மாத்திரையே இச்சூத்திரத்துப்பொருள். அறத்தொடு நிற்கும் இலக்கணமும் அவற்றுக்குச் செய்புளும் மேலே காட்டிப் போந்தாம்.

கய. காம மிக்க கழிபடர் கிளவியுங்
காப்புச் சிறைமிக்க கையறு கிளவியு
மாறுபார்த் துற்ற வச்சக் கிளவியு
மிரவினும் பகலினு நீவரு கென்றலுங்
கிழவோன் றன்னை வார லென்றலுந்
தன்னுட் கையா றெய்திடு கிளவியு
மன்ன மரபிற் பிறவுந் தொகைஇத்
தன்னை யழிந்த கிளவி யெல்லாம்
வரைதல் வேட்கைப் பொருள வென்ப.

என்பதென்னுதலுற்றோ வெனின், வரைவுகடாவும் இலக்கணமெல்லாந் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

மேலதனோடு இயைபு என்னையோவெனின், மேலுங் களவு நீக்கிக் கற்பாயதோர் இலக்கணமுணர்த்தினார், இவ்வரைவும் அன்னதாகலான் அதன் பின்னே வைக்கப்பட்டது.

இதன் பொருள்: காமம் மிக்க கழிபடர் கிளவியும் —காமமென்பது வேட்கை, மிகுதலென்பது பெருகுதல், கழியென்பது சிறத்தல், படர் என்பது நினைத்தல், கிளவி

யென்பது சொல்; வேட்கைமிக்குச் சிறப்பச் சிந்தித்துச் சொல்லுஞ் சொல்லும்: காப்புச் சிறைமிக்க கையறு கிளவி யும்—காப்புச்சிறைமிகவினுற் கையற்றுச்சொல்லுஞ் சொற் களும்; ஆறு பார்த்துற்ற அச்சக்கிளவியும்—அவன் வரும் வழியது ஏதஞ் சிந்தித்து ஆற்ருளாய்ச் சொல்லுஞ் சொற் களும்; இரவினும்பகலினும் நீவருக என்றலும்—இரவின் கண்ணும் பகலின்கண்ணும் நீயிர் வந்து *ஒழுகுவதாகாதோ வெனச் சொல்லுஞ் சொற்களும்; கிழவோன்றன்னை வாரல் என்றலும்—தலைவனை இரவின்கண்ணும் பகலின்கண்ணும் வரவேண்டாமென்று சொல்லுஞ் சொற்களும்; தன்னுட் கையாறு எய்திடுகிளவியும்—தன்னுட்கையாற்றினை வதிலது ஒன்றின்மேலிட்டுச் சொல்லுஞ்சொற்களும்; அன்ன மரபிற் பிறவுந் தொகைஇ—அன்ன இலக்கணத்த பிறவுந் தொகுத் து; தன்னை அழிந்த கிளவி எல்லாம்—தன்னுற்ருமையாற் சொல்லுஞ் சொல்லெல்லாம்; வரைதல் வேட்கைப் பொருள என்ப—வரைதல்வேட்டுச் சொல்லுஞ் சொல் என்றவாறு.

காமமிக்க கழிபடர் கிளவி.

இனிக் காமமிக்க கழிபடர் கிளவியாமாறு: பகற் குறியானும் இரவுக்குறியானுந் தலைமகன் ஒழுகா நின்ற நிலைமைக்கண் ஒருகாற்கண்டு தரிக்குந் தன்மைத்தன்ரும் வேட்கை; என்னை? காணும் பொழுதிற் காணுப்பொழுது பெரிதாகலான். அவ்வகையளாய் நின்று புன்னைக்காணும் அன்னத்திற்காணுங் கடலிற்காணுங் கழிக்காணும் அவ் வகை பிறவற்றிற்காணுங் †கெட்டுறுகுறை தணிப்பவாகச் சிந்தித்துச் சொல்லுவதாயிற்று. அதற்குச் செய்யுள்:

---

* 'ஒழுகுமென' என்பதும் பாடம்.

† 'தன்கட்டுறுகுறை' என்பதும் பாடம்.

காதலர் நீண்முடித் தார்மன்னன் மாறன்றண் ணங்குமரிப்
போதலர் கானற் புணர்குறி வாய்த்தாள் புலம்பின்னைய
வேதிலர் நோய்செய்வ தோநின் பெருமை யென நெருங்கிக்
காதலர் தம்மைக் கழறினென் னானங் கருங்கடலே. (உகஎ)

ஒண்டுவி நாராய்நின் சேவலு நீயுமாய்
வண்டூது பூங்கானல் வைகலுஞ் சேறிராற்
பெண்டூது வந்தே மெனவுரைத்தெங் காதலரைக்
கண்டீர் கழறியக்காற் கானல் கடிபவோ.

இவை கடலுக்கும் நாரைக்குஞ் சொல்லிய எனக் கொள்க. இதனைத் தலைமகன் கேளா வருமேயெனின், இங்ஙனம் வந்தொழுக இவள் ஆற்றாளாமென்று ஒருவகை யான் முற்பட்டுப் பிற்றைஞான்று வரைவொடு புகுவானாம்; தோழி கேட்குமேயெனில் தலைமகனை முன்னின்று வரைவுகடாவுவாளாம்; யாருங் கேட்டாரில்லையெனின் ஆற்றுதலைப்பயக்கும். என்னை? * மூடிவேவாநின்ற அக் கலத்தை மூய்திறந்தவிடத்து அகத்துநின்ற வெப்பங் குறைபடும், அதுபோல, இவட்கும் அயர்வுயிர்ப்பாம் அச் சொற்கள் † புலப்படுத்தலானென்பது. இம்மூன்றினுள் ஒன்றுகாமையில்லையென்பது. தலைமகன் கேட்பின் இன்ன தொன்றாந், தோழிகேட்பின் இன்னதொன்றாம், யாருங் கேட்பாரில்லையெனினும் இன்னதொன்றாம் என்று ஒருபயனைச் சிந்தித்துச் சொல்லுமோவெனிற், சொல்லாள்; குழவி அழுதாற்போல வேட்கை மிகுதியாற் சொல்லினவிடத்து அப்பயன் நிகழும். குழவி அழுகின்றது எனக்குப் பால் தம்மின்; நீர் ஆட்டுமின் என்றழாது, துக்கம்வந்ததாக அழும். அழ, அறிவார் பயம் எய்துவிப்பரென்பது.

---

* 'மூடி வேவாநின்றதோர் பொருளை' என்பதும் பாடம்.
† 'புறப்படுத்தலான்' என்பதும் பாடம்.

'காப்புச் சிறைமிக்க கையறு கிளவியும்' என்பது: காப்புச்சிறைமிகவினாற் கையறற்றுச் சொல் காப்புச்சிறைமிக்க லுஞ்சொல். *காப்புத்தான் இருவகைய, கையறுகிளவி நிறைகாவல் சிறைகாவலென; அவற்றுள், நிறைகாவல் என்பது நிறையின் வேறுபாடு புறத்தார்க்குப் புலனாகாமைக் காப்பாள்; காத்தும், முறையின் முறையின் வேட்கை பெருகக் காணலுறவினான் ஆற்றாளாய்ச் சொல்லியதற்குச் செய்யுள்:

மின்கண் படாவடி வேனெடு மாறன்விண் டார்முனைமேன்
மன்கண் படாத மயங்கிரு †ளுள்வந்த நீர்த்துறைவற்
கென்கண் படாத நிலைமைசொல் லாதிளஞ் சேவறழீஇத்
தன்கண் படாநின்ற வன்னத்ததே யாற்ற கவின்மையே. (௨௧௮)

புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோற்
றுன்ப முழவாய் துயிலப் பெறுதியா
லின்கள்வாய் நெய்தானீ யெய்துங் கனவினுள்
வன்கண்ணார் கானல் வரக்கண் டறிதியோ (சிலப்-கானல்வரி-௩௩.)

'சிறைகாவல்' என்பது, தாய்துஞ்சாமை நாய் துஞ்சாமை ஊர்துஞ்சாமை காவலர்கடுகுதல் நிலவு வெளிப்படுதல் கோழிகுரற்காட்டல் எனவிவை. அவற்றுள், தாய்துஞ்சாமைக்குச் செய்யுள்:

ஆயுந் தமிழ்மன்னன் செங்கோ லரிகே சரிமுனைபோற்
றேயு நினைவொடு துஞ்சாண் மடந்தையிச் சேயிழையா
டாயுந் ‡துயின்மறந் தாளின்ன நாட்டனித் தாணெடுந்தேர்க்
காயுங் கதிரோன் மலைபோய் மறைந்த கனையிருளே. (௨௧௧)

* 'வேறோர் எட்டுப் பிரதிக்கு இயைய ஈண்டுப் பலதிருத்தங்கள் செய்யப்பட்டன.

† 'நாள்மலி நீர்த்துறைவற்கு' என்பதும் பாடம்.

‡ 'துயிலலுரள்' என்பதும் பாடம்.

இனி நாய் துஞ்சாமைக்குச் செய்யுள்:

வாருந்து பைங்கழற் செங்கோல் வரோதயன் வஞ்சியன்னாள்
சேருந் திறமென்னை தேன்றண் சிலம்பனைத் திங்கள்கல்சேர்ந்
தாருந் துயின்றிடங் காவலரோ டன்னை யுள்ளுறுத்தேல்
லாருந் துயிலினுந் துஞ்சா ஞமலி யரையிருளே. (௨௨௦)

இனி ஊர் துஞ்சாமைக்குச் செய்யுள்:

மாவங் களிறு மணிநெடுந் தேரும்வல் லத்துப்புல்லாக்
கோவுந் துமியவை வேல்கொண்ட கோனந்தண் கூடலன்ன
* பூவும் டகையுங் கமழ்ந்துபொன் ஞாழ ப்பர் பேருலகு
மேவும் விழவொடு துஞ்சா திரவிவ் வியனகரே. (௨௨௧)

இனிக் காவலர் கடுகுதற்குச் செய்யுள்:

அடிக்கண் ணதிருங் கழலரி கேசரி தெவ்வனுங்கக்
கொடிக்கண் ணிடியுரு மேந்திய தென்னவன் கூடலன்னாள்
வடிக்கண் ணிரண்டும் வளர்நகர் காக்கும்வை வேலிளைஞர்
துடிக்கண்ணிரண்டுங்கங்குற்றலையொன்றுந்துயின்றிலவே. (௨௨௨)

இனி நிலவுவெளிப்படுதற்குச் செய்யுள்:

சென்று செருமலைந் தார்கள்செந் தீமூழ்கச் செந்நிலத்தை
வென்று களங்கொண்ட கோன்றமிழ் நாடன்ன மெல்லியலா
யின்றிவ் விரவி னிருள்சென் றிடங்கொண்ட தெங்குக்கொல்லோ
நின்று விசும்பிற் பகல்போல் விரியு நிலாமதியே. (௨௨௩)

இனிச் சிறைகாவல் எல்லாம் வந்தசெய்யுள்:

"இரும்பிழி மகாஅரிவ் வழுங்கன் மூதூர்
விழவின் றாயினுந் துஞ்சா தாகு
மல்ல லாவண மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொ ல்லன்னை துஞ்சாள்

---

* 'பூவும் புகையும் விரையுங் கமழ்ந்து பொன்னுறுலகம்' என்பதும் பாடம்.

பிணிகொ ளருஞ்சிறை யன்னை துஞ்சிற்
றுஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவ
ரிலங்குவே லிளையர் துஞ்சின் வையெயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி மருளு
*மரவவாய் ஞமலி குரையாது மடியிற்
பகலுரு வுறழ நிலவுகான்று விசும்பி
னகல்வாய் மண்டில நின்றுவிரி யும்மே
திங்கள் கல்சேர்பு கனையிருண் மடியி
னில்லெலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும்
வளைகட் சேவல் வாளாது மடியின்
மனைச்செறி கோழி மாண்குர லியம்பு
மெல்லா மடிந்த காலத் தொருநா
ணில்லா நெஞ்சத் தவர்வா ரலரே
யதனா லரிபெய் புட்டி லார்ப்பப் பரிசிறந்
தாதி போகிய பாய்பரி நன்மா
னொச்சி வேலித் தித்த னுறந்தைக்
கன்முதிர் புறங்காட் டன்ன
பன்முட் டின்றாற் றோழிநங் களவே." (அகம்-கஉ௧.)

இனி 'ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவியும்' என்பது: தலைமகன் இரவுக்குறிவந்து ஒழுகாநின்ற நிலைமைக்கண், ஆறென்பது வழி, பார்த்துறுதல் என்பது பரிவுறுதல், அச்சமென்பது குறிப்பின்றியே தோன்றும் நடுக்கம், கிளவியென்பது சொல்; அஃதாமாறு, எம்பெருமான் வரும் வழி இறப்பவும் இன்னாது, நீருடைத்துக் கல்லுடைத்து முள்ளுடைத்து ஏற்றுடைத்து இழிவுடைத்தெனக் கவறல்; இஃதாம் ஆறுபார்த்துற்ற வச்சக்கிளவியென்ப ஒரு திறத்தார்; அவரறியார், இஃது ஆறுபார்த்துற்ற கிளவியே. இனி

---

* 'அவ்வாய் ஞமலி' என்பதும் பாடம்.

அச்சக்கிளவி யென்பது கள்ளருடைத்துப் புலியுடைத்து எண்குடைத்து வெண்கோட்டியானையுடைத்து உருமுடைத்துப் பாந்தளுடைத்தெனக் கவலுங் கவற்சியாற் சொல்லுவது. அவற்றுள் ஆறுபார்த்துற்றதற்குச் செய்யுள்:

உருடங்கு மாநெடுந் திண்டே ருசித னுலகளிக்கு
மருடங்கு செங்கோ லடன்மன்னன் கொல்லி யருவரைவாய்
மருடங்கு வண்டறை சோலைப் பொதும்பின் வழங்கற்கின்றொ
விருடங்கு மானேறி யெம்பொருட் டால்வந் தியங்கன்மினே. (உஉச)

இது கேட்ட தலைமகன் வரைவானும்.

இனி அச்சக்கிளவிக்குச் செய்யுள்:

பண்குடை சொல்லிவள் காரண மாப்பனி மூத்திலங்கும்
வெண்குடை வேந்தன் விசாரிதன் மேற்கரை யேற்றெதிர்ந்தார்
புண்குடை வேன்மன்னன் றென்னன் பொதியிற் புனவரைவா
யெண்குடை நீள்வரை *நீயரை யெல்வி யியங்கன்மினே. (உஉரு)

அன்பெதிர்ந் தாலும் வருதல்பொல் லாதைய வாரமருண்
முன்பெதிர்ந் தார்படச் சேவைவென் றான்முகி றோய்பொதியிற்
பொன்பிதிர்ந் தாலன்ன மின்மினி சூழ்புற்றின் முற்றியசோற்
றின்பிதிர் வாங்கியெண் கேறு திளைத் துண்ணு மீண்டிருளே. (உஉசு)

இன்னும் அவற்றிற்குச் செய்யுள்:

கையமை வேல்விளக் காகக் †கனையிரு ணள்ளிரவி
னையமை தோய்வெற்ப வார னறையாற் றமர்கடந்தில் [யிற்
வையமெல் லாங்கொண்ட ‡மன்னவன் மாறன்‖மை தோய்பொதி
றெய்வமெல் லாமரு விப்பிரி யாத சிறுநெறியே. (உஉஎ)

---

* 'நீயையவெல்வி' என்பதும் பாடம்.

† 'கனையிரு ணளரிவை' என்பதும் பாடம்.

‡ 'மன்னவன்' என்பதும் பாடம்.

‖ 'வண்டார் பொதியில்' என்பதும் பாடம்.

தோள்வாய் மணிநிற மங்கைக்கு வாட்டவுந் துன்னுதற்கே
நாள்வாய் வருதிவிண் டோய்சிலம் பாநறை யாற்றுநண்ணார்
வாள்வா யுகச்செற்ற வானவன் மாறன்மை தோய்பொதியிற்
கோள்வா யிளஞ்சிங்க நீங்கா திரிதருங் குன்றகமே. (உ௨அ)

காந்தண் முகையன்ன மென்விர லேழைதன் காரணமாப்
பூந்தண் சிலம்ப விரவின் வருதல்பொல் லாதுகொலாம்
வேந்தன் விசாரிதன் விண்டோய் குடுமிப் பொதியிலென்றுந்
தேந்தண் சிலம்பி னரிமா திரிதருந் தீநெறியே. (உ௨௯)

அழுது புலம்பியு நையு மிவள்பொருட் டாகவைய
தொழுதுங் குறையுற்று வேண்டுவல் வாரறுன் னூர்மிணமு
மிழுது மலிந்தசெவ் வேனெடு மாறனெங் கோன்முனைபோற்
கழுதுந் துணிந்து வழங்கல்செல் லாத கனையிருளே. (உ௩௦)

பொய்தலை வைத்த வருளொடு பூங்குழ லாள்பொருட்டா
மைதலை வைத்தவண் பூங்குன்ற நாட வரவொழிநீ
நெய்தலை வைத்தவை வேனெடு மாறனெங் கோன்முனைபோற்
கைதலை வைத்துக் கழுதுகண் சோருங் கனையிருளே. (உ௩௧)

இவை தோழிக்குரியன. இனித் தலைமகட்குரியன வருமாறு:

பணிகொண்டு வாழா தெதிர்ந்து பறந்தலைக் கோடிப்பட்டார் [யி
துணிகொண்டு பேய்துள்ள வேல்கொண்ட கோன்சுடர் தோய்பொதி
னணிகொண்ட தாரண்ணல் வாரல் விடரான் றரவுமிழ்ந்த
மணிகொண்டு கானவர் வேழங் கடியு மயங்கிருளே. (உ௩௨)

இவ்வகை சொல்லினவிடத்துத் தலைமகன் கேட்பானாயின் வரைவானும்; தோழி கேட்பின் வரைவு கடாவுவாளாம்; யாருங் கேட்பாரில்லையாயின் தானே சொல்லி ஆற்றுவாளாம். இஃது இரவுக்குறிக்கண்ணதே.

இனி, 'இரவினும் பகலினும் நீவருகென்றலும்' என்பது: பகற்குறியானும் இரவுக்குறியானும் வந்தொழுகா

நின்ற தலைமகனை இரவும் பகலும் வாவென்று சொல் லுதல். அதற்குச் செய்யுள்:

இரவினும் பகலினும் நீவருகென்றல்.

உரவுங் கடல்சூ ழுலகுடை வேந்த னுசிதனென்னும்
பரவுங் கழன்மன்னன் கன்னியங் கானற் பகலிடநீ
வரவு மகிழ்ந்தில டையல்வெய் யோன்போய் மலைமறைந்த
விரவும் வரவென்ன வூனமென் றுயின தின்னருளே. (உ௩௩)

இது கேட்டு இவ்வகை யான் வந்தொழுகப் பொறாது போலும் இவ்வகை சொல்வாளாயிற்றெனவரைந்து புகு வானும் என்பது. இனி ஒருசாராசிரியர் இரவினும் பகலி னும் நீ வருக என்றதனை இரவுவருவானைப் பகல்வருகென்ற லும், பகல்வருவானை இரவுவருகென்றலும் என்றவாறென்ப.

அவற்றுக்குச் செய்யுள் வேறு காட்டுப. அவற்றுள் இரவுவருவானைப் பகல்வருகென்றதற்குச் செய்யுள்:

பகல்வருகென்றல்.

அடிமே லகலிட மெல்லாம் வணக்கி யமரர்தங்கோன்
முடிமேல் வளைபுடைத் தோனெடு மாறன்முன் னாயுர்த்த
கொடிமே லுருமதிர் கூரிருள் வாரன்மி னீர்மகிழும்
படிமேற் பகல்வம்மின் வந்தால் விரும்புமென் பல்வளையே. (உ௩௪)

என்பதுகேட்டு யான் இரவுவந்தொழுகப் பொறு ளாய்ப் பகல் வம்மின் என்கின்றதெனக் கருதி வரைந்து புகு வானுவது.

இனிப் பகல்வருவானை இரவுவருகென்றற்குச் செய்யுள்:

இரவு வருகென்றல்.

அஞ்சா தெதிர்மலைந் தாரமர் நாட்டுட னேமடிய
நஞ்சா ரிலங்கிலை வேல்கொண்ட தென்னனன் னாடனைய
பஞ்சா ரகலல்குல் பாற்பகல் வந்தாற் பழிபெரிதாம்
மஞ்சார் சிலம்ப வரவென்ன வூன மயங்கிருளே. (உ௩௫)

என இதுசொல்லப் பகல் வருவேனை இரவு வரு கென்றது இவ்வொழுக்கம் பொருமையினுமென வரைந்து புகுவானும்.

இனிக், 'கிழவோன்றன்னை வாரலென்றலும்' என்பது: தலைமகனை இரவின்கண்ணும் பகலின்கண்ணும் வார லென்று சொல்லுதல்; அதற்குச் செய்யுள்:

இரவும் பகலும் வரவு விலக்கல்.

ஓதங் கடைந்தம ரர்க்கமு தாக்கி யுணக்கொடுத்துப்
பூதம் பணிகொண்ட பூழியன் மாறன் பொதியிலின்வா
யேதம் பழியினெ டெய்துத லாலிர வும்பகலு
மாதங் கடைந்தமென் னேக்கி திறத்தைய வாரன்மினே.()
"கறங்குவெள் ளருவி பிறங்குமலைக் கவாஅற்
றேங்கம ழிணர வேங்கை சூடித்
தொண்டகப் பறைச்சீர்ப் பெண்டிரொடு தொகைஇ
*மறுகு வாங்குஞ் சிறுகுடிப் பாக்கத்
தியன்முரு கொப்பினை †வயநாய் பிற்படப்
பகல்வரிற் கௌவை யஞ்சுது மிகல்கொள
விரும்பிடி கன்றொடு விரைஇக் கயவாய்ப்
பெருங்கை யானை கோட்பிழைத் திரீஇ
யடுபுலி வழங்கு மாரிரு ணடுநாட்
டனியை வருத லதனினு மஞ்சுது
மென்னு குவள்கொ றுனே பன்னாட்
புணர்குறி செய்த புலர்குர லேனற்
கிளிகடி பாடலு மொழிந்தன
ளளிய டானேநின் னளியல திலளே." (அகம்-117.)

ஒன்று மறுப்பின் ஒன்றின்கண்ணே நிற்குங்கொல்லோ வென்று இரண்டும் மறுத்து வரைவின்கண்ணே படுத்த வாறெனக் கொள்க.

---

* 'மறுகிற்றூங்கும்' என்பதும் பாடம்.
† 'வயமாப்பிற்பட' என்பதும் பாடம்.

'தன்னுட் கையாறு எய்திடு கிளவியும்' என்பது: தன்னுட் கையாற்றினை ஏதிலதொன்றின்மேலிட்டுச் சொல்லுதல்; அதற்குச் செய்யுள்:

தன்னுட்கையா றெய்திடுகிளவி.

தன்போற் சினத்துரு மேந்திய கோன்கன்னித் தாழ்துறைவாய்ப்
பொன்போன் மலர்ப்புன்னைக் கானலு நோக்கிப் புலம்புகொண்ட
வென்போ லிரவினெல் லாந்துயி லாதுநின் றேங்குதியா
லன்போ டொருவற் கறிவிழந் தாயோ வலைகடலே. (உ௫எ)

பொன்றான் பயப்பித்து நன்னிறங் கொண்டு புணர்ந்தகன்று
சென்றா ருளரோ நினக்குச்சொல் லாய்செந் நிலத்தைவெம்போர்
வென்றான் வியனில வேந்தன் விசாரிதன் வெல்கழல்சேர்ந்
தொன்றார் முனைபோற் கலங்கித்துஞ் சாயாலொலிகடலே.(உ௫அ)

பறைவா யொலியோதம் பந்த ருகளுந்
துறைசேர் சிறுகுடியார் துஞ்சினுந் துஞ்சாய்
நிறையின் மருண்மாலை யெம்போல நீத்த
துறைவ னுடையையோ நீவாழி வீராய்.

என்போல் இரவினெல்லாந் துயிலாய் நீயும் நின்காதலர்மாட்டு *என்போல் அறிவிழந்தாயோவென்னும்; என்றது தலைமகன் கேட்பின் வரைவானும்; தோழிகேட்பின் வரைவுகடாவுவாளாம்; யாருங்கேட்பாரில்லையாயின் தானே சொல்லி ஆற்றுவாளாம்.

† 'அன்னமரபிற் பிறவுந்தொகைஇத் தன்னை அழிந்த கிளவி எல்லாம்' என்பது அன்னமரபிற் பிறவுந் தனது ஆற்றாமையாற்சொல்லுஞ் சொல்லென்றவாறு: 'வரைதல் வேட்

* 'அன்போடறி விழந்தாயோ' என்பதும் பாடம்.

† வேறோர் ஏட்டுப்பிரதிநோக்கி ஈண்டுப் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

கைப் பொருள என்ப' என்பது, வரைதல் வேட்பவும் வரைதல் வேட்டுஞ் சொல்லுஞ் சொற்களுமென்றவாறு; வரைதல் வேட்பச் சொல்லுந் தலைமகள் சொல்லெல்லாந், தலைமகனைத் தோழி சொல்லுஞ் சொல்லெல்லாம் வரைதல்வேட்டுச்சொல்லுஞ் சொல்லென்றவாறு. 'அன்னமரபிற் பிறவும்' என்றதனாற் பகற்குறிக்கண்ணும் இரவுக்குறிக்கண்ணும் வந்தொழுகுந் தலைமகற்குத் தலைமகளுந் தோழியும் ஆற்றுத்தன்மையராய் வரைவு பயப்பச் சொல்லுஞ் சொல்லெல்லாங் கொள்க. அக்கிளவி பல; அவற்றுட் சிலவருமாறு:

நிலைகண்டுரைத்தல்.

செய்ந்நின்ற வேனெடு மாறனெங் கோனந்த ணேரியென்னு
மைந்நின்ற குன்றச் சிறுகுடி நீரைய வந்துநின்றாற்
கைந்நின்று கூப்பி வரையுறை தெய்வமென் றுதுகண்டார்
மெய்ந்நின் றுணர்ப வெனினுய்யு மோமற்றிம்மெல்லியலே. (உ௩௯)

என்பது இரவுக்குறியிடத்து வந்துநின்றாற் கண்டார் நும்மை முருகவேளென்று கருதாது மெய்ம்மை உணர்பவாயின் இவள் பெருநாணினளாகலின் இறந்துபடுமே என்னும். அதுகேட்டுத் தலைமகன் பெரியதோர் இழுக்குடைத்தாக ஒழுகினேன்காணென அன்று ஒருவகையான் முற்பட்டுப் பிற்றைஞான்று வரைவானும். இன்னும் அன்ன மரபிற் பிறவு மென்றதற்குச் செய்யுள்:

படைத்துமொழிகிளவி.

அன்னாய் நெருநனி கழ்ந்தது கேளயல் வேந்திறைஞ்சும்
பொன்னார் கழனெடு மாறன் குமரியம் பூம்பொழில்வாய்
மின்னார் மணிநெடுந் தேர்கங்குல் வந்தொன்று மீண்டதுண்டா
லென்னா முகஞ்சிவந் தெம்மையு நோக்கின ளெம்மனையே. (உ௪0)

*என்பது இரவுக்குறியின்கண் தலைமகன் சிறைப்புறத்தானாவ தறிந்து தலைமகற்குத் தோழி படைத்துமொழிந்து சொல்லியது. எங்ஙனமோவெனின், நெருநல், அன்னை நீங்கள் விளையாடுங் கானலிடத்து ஒரு தேர்வந்து போயிற்றென முனிந்து என்னையும் நோக்கிப்போயினாள் இன்னது கருதியென்பது அறியேனென்னும். என, ஒக்கும், யான்வந்து ஒழுகுகின்ற ஒழுக்கம் புறத்தார்க்குப் புலனாயிற்றுப்போலுமெனப் பிற்றைஞான்றே வரைந்து புகுவானாம். இன்னும் அன்னமரபிற் பிறவுமென்றதற்குச் செய்யுள்:

பண்ணிவர் சொல்லிகண் டாடென்னன் பாழிப் பகைதணித்த
மண்ணிவர் சீர்மன்னன் வாணெடு மாறன் மலயமென்னும்
விண்ணிவர் குன்றத் தருவிசென் றாடியோர் வேங்கையின்கீழ்க்
கண்ணிவர் காதற் பிடியொடு நின்ற கருங்களிறே. (௨௪௧)

என்பது பகற்குறிவந்து ஒழுகுந் தலைமகற்குத் தோழி படைத்துமொழிந்து வரைவுகடாயது. அவ்வகைத்தாற் களிற்றோடு ஒருபிடி வேங்கைக்கீழ் நின்றபடி, கண்டிது போல நம்பெருமானும் நமக்கு வழிப்பட முடியுங்கொல்லோ வென்றாளென்பது. இன்னும் அன்னமரபிற் பிறவுமென்றதற்குச் செய்யுள்:

தொடுத்தான் மலரும்பைங் கோதைநந் தாதாய்த் துறைவனுக்கு
வடுத்தான் படாவணஞ் சொல்லுங்கொல் வானோர்க் கமிழ்தியற்றிக்
கொடுத்தான் குலமன்னன் கோட்டாற் றழித்துத்தென் னாடுதன்
படுத்தான் பராங்குசன் கன்னியங் கானற் பறவைகளே. [கைப்

இதுவும் அப்பொருட்கு ஏற்பச்சொல்லிக்கொள்க. அஃதேயெனின், இச்சூத்திரத்துட்சொல்லப்பட்டன வெல்

* வேறோர் ஏட்டுப் பிரதியின்படி இப்பகுதியிற் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

லாந் தலைமகட்கேயுரியனவுந் தோழிக்கேயுரியனவுந் தலைமகட்கும் தோழிக்கும் உரியனவுமென மூன்றுவகைப்பட்டன. காமமிக்ககழிபடர்கிளவியுந் தன்னுட்கையாறெய்திடு கிளவியுமெல்லாந் தலைமகட்கே உரிய. இரவினும் பகலினும் நீ வருக என்றலுங் கிழவோன்றன்னை வாரலென்றலும் இவ்விரண்டுந் தோழிக்கே உரிய. ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவியுங் காப்புச்சிறைமிக்க கையறுகிளவியும் இருவர்க்கும் உரிய. உரிமையால் தம்மையழிந்த கிளவியெல்லா மென்று பன்மையாற் சொல்லாது ஒருமையாற் சொல்லியது எற்றிற்கோவெனின், தோழி, தலைமகளென இருவரையும் வேறுபடுத்துக்கருதாது ஒருவராகவே கருதற்பொருட்டாக ஒருமையாற் புணர்த்தா ரென்பது. (௯0)

௯௧. ஆறின் றுமையு மூறு மச்சமுந்
தன்னை யழிதலுங் கிழவோற் கில்லை.

என்பதென்னுதலிற்றோ வெனின், களவுகாலத்துத் தலைமகன திலக்கணமுணர்த்துதல் நுதலிற்று. மேற் சூத்திரத்தோடு இயைபென்னையோவெனின், மேற்சூத்திரத்துள் ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவியென்றார்க்குத், தலைமகன் கண்ணும் ஆறுபார்த்துறவுண்டென்று கருதுவானாயிற் கருதற்க என்றற்குச் சொல்லப்பட்டது.

இதன்பொருள்: ஆறின்னுமையும் என்பது, ஆறெனினும் வழி யெனினும் ஒருபொருட்கிளவி; வரும்வழி ஏற்றுடைத்து இழிவுடைத்து *இழுக்குடைத்துக் கல்லுடைத்து முள்ளுடைத்தென்றல்: ஊறென்பது, இடையூறு; புலியானும் யானையானுஞ் சூரரமகளிரானும் *கள்ளரானும்

* இச்சொற்றொடர்கள் முன் அச்சுப்பிரதியிலில்லை.

எண்கானும் இடையூறுடைத்தென்றல்: 'அச்சம்' என்பது, அஞ்சப்படுவன கண்டவிடத்து *மனக்குறிப்பன்றியே அஞ்சுவது; அச்சமும் இவன்கணில்லை யென்றவாறு: 'தன்னையழிதலும்' என்பது, தன்கண் ஒரு துன்பம் வந்தவிடத்து எனக்காகாததோரொழுக்கம் எடுத்துக்கொண்டேனெனத் தன்னை நெஞ்சினால் நோதலும் என்றவாறு: 'கிழவோற்கு இல்லை'யென்பது, இனையன தலைமகற்கு இல்லையென்றவாறு.

அஃதேயெனின், அவற்கு அவைஉளவாய்வைத்து நினையாமையின் இல்லையோ? இல்லையாய் இல்லையோ? வெனின், உளவேயெனின் நினையானுயினும் வந்து நிகழும். உலகத்து உயிர்வாழ்சாதிகளெல்லாந் தமது சாக்காடு நினைத்துச் செல்கின்றவளவே இல்லையன்றே? இல்லையெனினும் அவை வந்து நிகழ்ந்தேவிடும். அதுபோல இவன் நினையானுயினும் உளவாயின் நிகழவேண்டும்; இனி இல்லையாயேயில்லை யெனின் இல்லதனை இல்லையென வேண்டுவதில்லை. என்னை ? ஆகாயப்பூ இல்லையென வேண்டுவதில்லை, அதுபோலவென்பது; என்றார்க்கு இல்லதனையே இல்லையென்றார், இவன் உலகத்துத் தலைமகனல்லன், புலவரால் நாட்டப்பட்ட தலைமகனென்பதனை யாப்புறுத்தற்கு. உலகத்துத் தலைமகனுயின் இவையெல்லாம் இல்லாமையில்லையென்பது. கிழவோற்கில்லையெனவே கிழவிக்குந் தோழிக்கும் அவையுளவென்பதுபெற்றும். அவர் ஆறு இன்னுதென்றும் இடையூறுகள் உளவென்றும் அவற்றிற்கு அஞ்சுதலும் எம்பெருமான் றனக்குத் தகாத †இழிவரவொழுகுதற்குக் காரணமாயினே மாகாதேயென்று தம்மை யழிதலும் உடையரென்றவாறு.

---

* 'மக்கள் குறிப்பன்றியே' என்பதும் பாடம்.

† 'இளிவர' என்பதும் பாடம்.

அஃதேயெனின் வயிரமுடையான் ஒருவன் வயிரம் மூள எறியுமென்று அஞ்சான், அதுபோல இவரும் அஞ்சாது விடற்பாலார் பிற, அவற்கு அவையின்மையாலெனின், அதுவன்று; பெண்மை யென்பது ஒருபொருட் பட்டாங்கு அறியாமையாகலான், அவை அவற்கு இல்லையெனினும் உளவாகக் கருதுபவென்பது. அஃதேயெனின், மேல் இவனைப் பொருவிறந்தானென்று போதரப்பட்டதன்றே? பட்டமையான் அச்சமுந் தன்னையழிதலும் இல்லையெனக் கொள்ளாமோ? மனத்தான் வரும் நோயெல்லாம் உணர்வின்மையான் வரும் என்பது கடா; அதற்கு விடை, இவன் ஞானத்தையும் ஒழுக்கத்தையும் விதி இழுக்கினமையாற் சிற்றறிவினர் தன்மை புண்மையான் உளகொல்லோவென்று கருதின் அவை யில்லையென்பது போதரச் சொல்லப்பட்டது. (௧௧)

௧௨. களவினுட் டவிர்ச்சி வரைவி னீட்டந்
திங்க ளிரண்டி னகமென மொழிப.

என்பதென்னுதலிற்றோவெனின், களவினுள் தங்கி ஒழுகும் ஒழுக்கம் இத்துணைக் காலமல்லது இல்லையென்று வரையறுத்துணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: களவினுள் தவிர்ச்சி—களவினுள் தங்குதல்; வரைவின் நீட்டம்—வரைந் தெய்துந்துணை நீட்டிக்குங்காலம்; திங்கள் இரண்டின் அகமென மொழிப—இரண்டுதிங்களகமெனக்கொள்க என்றவாறு.

இவ்வாற்றானும் இஃது உலகத்து இயல்பன்றென்பது பெற்றாம். உலகத் தொழுக்கத்திற்குக் காலவரையறை இன்மையானென்பது. இயற்கைப்புணர்ச்சி புணர்ந்துவிடத்

துப் பிராயமும் ஈங்கே உரைக்கப்பட்டதாம். பதினோராண்டும் *பத்துத்திங்களும் புக்க தலைமகளோடும் பதினையாண்டும் *பத்துத் திங்களும் புக்க தலைமகனைப்போலும் புணர்தல் வேண்டிற்றென்பது பெற்றும். அவளும் இருதிங்கள் களவொழுக்கொழுகப் பன்னீராட்டைப் பிராயத்தாளாம். அது மக்கட்பேற்றுக்குக் காலம்; களவொழுக்கத்திற்குப் பொருந்தாதென விலக்கப்பட்டதாம் ஆசிரியர்களா னென்பது. இவனும் இருதிங்கள் களவொழுக்கொழுகப் பதினாறாட்டைப் பிராயத்தானும். அஃது ஆண்மை நிலைபெறுங் காலமாகலாற் களவொழுக்கிற்கு விலக்கப்பட்டதென்பது. அஃதேயெனின் இருதிங்களென்னாது அகமென்றதெற்றிற்கோவெனின், இருதிங்களுள் ஐந்தானும் ஆறானும் நாள் உளவாகக் களவொழுக்கு ஒழிந்து நின்று வரைந்து புகுவதனோடும் மறுப்பதனோடும் அத்துணை நாளும் புக்கு நிறைந்துநின்றபின்னை அதுபடின் மிகுவான் புகுமென்பது. அஃதேயெனின், இருவர்க்கு மூப்புப்பிணி சாக்காடுமில்லையென்று மேற் சொல்லியதனோடு மாறுகொண்டு காட்டிற்றும், அதுபட உரைத்தமையினென்பது. எங்ஙனமோவெனின், இருதிங்கட்புகப் பன்னீராட்டைப் பிராயத்தாளேயாயக்காற் பின்னைப் பதின் மூவாட்டைப் பிராயத்தாளாய் இவ்வகை நூற்றிருபது புக்குத் தலைமடியவேண்டுமென்பது; இவற்கும் அம்முறையேகொள்க என்பது; மூப்புப் பிணி உள்வழிச் சாக்காடுண்மையா னென்பது கடா. அதற்குவிடை எங்ஙனமோவெனின், இருதிங்கட்புக இவளும் பன்னீராட்டைப் பிராயத்தாளாய் இவனும் பதினாறாட்டைப் பிராயத்தானாய்ச் செல்வதல்லது, மற்றையன நிகழா; உலகினோடு இத்துணை மாத்திரையே யொத்து

*"பதின்றிங்களும்' என்பதும் பாடம்.

மற்றைவிகற்பமெல்லாம் ஒவ்வாவெனக்கொள்க. ஒத்தொவ்வாதா யன்றே செல்கின்றதென்பது. அஃதேயெனின்,

"அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த
நன்னெடுங் கூந்த னரையொடு முடிப்பினும்
*நீத்த லோம்புமதி பூக்கே ழூர." (நற்றிணை-க0.)

என இலக்கியம் வருவன உளவாலோவெனின், அஃதில்லைமன், ஈங்கிதேபட்டுவிடினும் என்றவாறு.

இனி ஒரு திறத்தார் திங்கள் இரண்டினகமென்பதனைச் சொல்லுமாறு:

பிறைத்திங்கள் மதித்திங்களென இரண்டு; அவற்றுட் பிறைத்திங்கள் முன்னொளியாய்ப் பின்னிருளாம்; மதித்திங்கள் பின்னொளியாய் முன்னிருளாம்; அவ்விரண்டுஞ் சந்தித்துநின்ற இருட்காலத்தாக என்றவாறு. அது பொருந்தாது; என்னோகாரணமெனின், இரவுக்குறிக்கே சொல்லினமையான். அல்லதூஉங் காலவரையறையின்றியே எஞ்ஞான்றும் †இருட்டிங்கட்கண்ணே களவொழுக்கம் வேண்டப்பட்டதா மென்பது. இனி ஒருசாரார் திங்களிரண்டினக மென்பதனை ஒரு திங்களை இரண்டுகூறிட்ட ஒரு கூறென்று பதினைந்து நாளாகச் சொல்லுப. அதுவும் பொருந்தாமை அறிந்துகொள்க. (௩உ)

௩௩. களவினுட் ‡டவிர்ச்சி கிழவோற் கில்லை.

என்பதென்னுதலிற்றோ வெனின், களவுகாலத்துத் தலைமகனது இலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

* இச்செய்யுள் முழுவதையும் ௧௧௫ ஆம் பக்கத்திற் காண்க.
† 'மதித்திங்கட் கண்ணே' என்பதும் பாடம்.
‡ 'தவிர்தல்' என்பதும் பாடம்.

களவினுள் தவிர்ச்சி கிழவோற்கு இல்லை—களவுகாலத்துத் தலைமகன் காரணமாக இடையீடு இல்லை என்றவாறு.

தலைமகற்கில்லையெனவே அருத்தாபத்தியால் தலைமகள் காரணமாக உண்டென்பது. இன்னுங் களவினுள் தவிர்ச்சி கிழவோற்கில்லை யென்பதனானே கற்பினுள் தலைமகள் காரணமாக இடையீடில்லை யென்றும். என்னை? இவன் ஒரு ஞான்று ஒருகால் அக்குறியிடத்துவந்து பெயருந் தலைமகளைச்சார்ந்த இடையூறுகள் எய்தானுமென்பது. இனி ஆண்மைமிக்க தலைமகன் பிரிவு வேண்டுவதல்லது தலைமகள் வேண்டாள் கற்பினகத்தென்றவாறு. இது சொல்லவேண்டா; என்னோகாரணமெனின்,

"களவினுட் டவிர்ச்சி காப்புமிகி னுரித்தே
வரைவிடை வைத்த காலை யான" (இறையனார்-கசு.)

"அல்லகுறிப் படுதலு மவ்வயி னுரித்தே
யவன்வர வறியுங் குறிப்பி னான." (ஷை - கஎ.)

எனவும் *இவ்வகையான் இடையீடு தலைமகளைச் சார்ந்துழியவாகலாற் பெறப்பட்டதென்பது. இனி ஓதல் காவல் பகைதணிவினை என இவை தலைமகனியல்பாதலாற் கற்பினுள் தலைமகன் இடையீடாகலும் பெறப்பட்டது; ஈங்குரைக்கல் வேண்டாவென்பது. அவ்வகை இலேசினானிது பெறப்படும். அதனையே மாணாக்கன் இனிதுணரல்வேண்டி எடுத்தோதினாரென்பது. அல்லது ஒரு திறத்தார் களவினகத்துத் தலைமகளுழைத்தங்கிப் பிற்றை ஞான்றுபோதல் தலைமகற்கு இல்லையென்றவாறென்ப. அது பொருந்தாது.

---

* 'மூன்றுவகையான்' என்பதும் பாடம்.

வந்து பெயர்வதல்லது *நீட்டிக்கில் இடையீடாம், அஃது உணரப்படுதலானென்பது. மற்றென்னோவெனின், களவி னுள் தவிர்தலென்பது தமியனாகற்றன்மை யொழிதலென்றவாறு. நோய்தவிர்ந்தது வெப்புத்தவிர்ந்ததென்ப ஒழிந்ததென்பார். இனிக் கிழவோற்கில்லை யென்பது தலைமகற்கில்லை என்றவாறு. எனவே, அவ்விருதிங்கள்காறுந் தெருளாதே வந்தொழுகுந் தலைமகனாயினவிடத்து. தலைமகளாயினவிடத்து அன்று, தெருளாளாய்ப் பின்னை நெறியன்றென்றுணருமென்பது. ஆயின் இவனாகாதே தெருளற்பாலான் பெருஞானத்தனாகலான், இவளாகாதே தெருளாதுவிடற்பாலாள் அவன்றுணைப் பேரறிவின ளன்மையானெனின், அதுவன்று. அவன்கணின்ற தமியனாதற் றன்மையை விலக்குவது இல்லை, இன்மையான் அப்பெற்றி சுட்டப்பட்டது. இவள் மாட்டு அதனை விலக்குவதுண்டன்றே, இவனது இளிவரவிற்கும் வருத்தத்திற்குங் கவன்ற கவற்சியென்பது. அதனான் இவன் தெருளாமைக்கும் இவள் தெருடற்குங் காரணம் இதுவென்பது. (௫௫)

களவு முற்றும்.

* 'நீட்டிக்கி விடைப்படாமை யுணரப்படுமாகலா னென்பது" என்றும் பாடமுண்டு.

# கற்பு.

௫௪. **கற்பினுட் டுறவே கடிவரை வின்றே.**

என்பதென்னுதலிற்றோவெனின், இங்கு நின்றுங் கற்பினது இலக்கணம் உணர்த்துதனுதலி யெடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்பொருள்: கற்பினுள் துறவே—கற்பினகத்து நீக்கம்; துறவு எனினும் நீக்கம் எனினும் பிரிவெனினும் அகற்சி எனினும் *ஒக்கும். கடிவரைவு இன்றே—கடிந்து வரையப்படாது ஆசிரியர்களால் என்றவாறு.

அஃதேயெனின், †'கற்பினுட்டுறவே கடிதலின்றே'யெனவும் 'வரைதலின்றே' யெனவுஞ் சொல்லாது 'கற்பினுட் டுறவே கடிவரை வின்றே' என்றது எற்றிற்கோவெனின் ஆசிரியர்களால் விலக்கவும்படாது இத்துணைக் காலமென்று ‡வரையறுக்கவும்படாது என்றவாறு. எனவே, களவினகத்துப் பிரியும் பிரிவு ஒருகாலல்லது இல்லை யென்றவாறு. களவினகத்துப் பகற்குறிக்கண்ணும் இரவுக்குறிக்கண்ணும் வந்து பிரியுமாகலான் அதுவும் பல்காலும் நிகழ்தலுடைத்துப்பிற எனின், அவையெல்லாம் இவ்வாசிரியராற் பிரிவென்று வேண்டப்படா, ஒரு கருமநோக்கிப் பெயர்ந்தன அன்மையின். அல்லதூஉம் அவையேயாயினும் ‖வரையறையுடைய களவுகாலம் வரையறை உடைத்தாகலானென்பது.

---

* 'ஒரு பொருட்கிளவி' என்பதும் பாடம்.

† 'கடியவும் படாது வரையவும் படாதென்றது' என்பதும் பாடம்.

‡ 'பிரியவும்படாது' என்பதும் பாடம்.

‖ இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை.

கடு. ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தர்க் குற்றுழி பொருட்பிணி பரத்தையென்
றாங்கவாறே யவ்வயிற் பிரிவே.

என்பதென்னுதலிற்றோவெனின், மேற் கற்புக்காலத்துப் பிரிவு பலவென்றார், அவையிற்றைப் பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

ஓதல்—கல்வி காரணத்துப்பிரியும் பிரிவு; காவல்—நாடு காத்தற்குப் பிரியும் பிரிவு; பகைதணிவினை—இருவர் அரசர் *தம்மிற் பொருப என்றவிடத்து அவரைச் சந்து செய்வித்தற்குப் பிரியும் பிரிவு; வேந்தர்க்குற்றுழி—வேந்தரென்பார் அரசர், அரசர்க்குற்றுழிப் பிரியும் பிரிவு; பொருட்பிணி—பொருட்குப் பிரியும் பிரிவு; பரத்தை—புறப்பெண்டிர் மாட்டுப் பிரியும் பிரிவு; பரமென்பது, புறம், அஃது ஆரியச்சொல்; என்று, எண்ணுதற்குரியதோர் வாய்பாடு; ஆங்கு, அசைச்சொல்; ஆறு, அவற்றதுதொகை; அவ்வயின்—கற்பினிடத்து; பிரிவு—நீக்கம் என்றவாறு.

ஏயென்பது ஈற்றசையேகாரம்; பெயர், சொல்லப்பட்ட பெயர்; முறை, கிடந்தமுறை; தொகை, ஆறு எனக்கொள்க.

இனி ஓதற்குப் பிரியும் பிரிவு முன்வைக்கப்பட்டது, தலைபான பிரிவாகலானும் †உயர்ந்தோர்க்கு உரித்தாகலானு மென்பது. பரத்தையிற் பிரிவு பின்வைக்கப்பட்டது, காமம் பின்வைத்தெண்ணப்படுமாகலானென்பது.

அஃதேயெனின், இவர் முன் பொருவிறந்தாரென்பத னொடு மாறுகொண்டது இச்சூத்திரம், என்னையோ

---

* 'தம்மிற் பொராநின்ற விடத்து' என்பதும் பாடம்.

† 'உயர்ந்த வருணத்தார்க்கு' என்பதும் பாடம்.

வெனின், தலைமகளை எய்தியிருந்தே இவன் ஓதுவான் பிரிவானெனின், முன் ஞானமிலனாம்; இலனாகவே, ஞானத்தின் வழியது ஒழுக்கமாகலானும் ஒழுக்கத்தின் வழித்துத் *தலைக்குலமாகலானும் இவையெல்லாங் குறைவு பட்டானாமென்பது. இனிக் காவலென்பது இவன் நாட்டைப் பிறர்புகுந்து †அலைப்பதுங் கொள்வதுஞ்செய்ய அவரை நீக்குதற்கு நீங்குமெனின் இங்ஙனம் பிறரான் இழிவந்தன செய்து நலியப்படுமேயெனின் ஆண்மையிற் குறைபட்டானாமென்பது. இனிப் பகைதணிவினையென்பது சந்துசெய்வித்தற்குப் பிரியுமேயெனின், தூதுவனாயினானாம்; தூதுவராவார் பிறர்க்குப் பணிசெய்துவாழ்வாராவர், அவரது பொருவிறப்பு என்னையோவென்பது. இனிவேந்தற்குற்றுழிப் பிரியுமேயெனின், கருமச்சேவகனாம்; கருமஞ்செய்வான் சேவகனாமென்ப, இறப்பவும் இழிவந்ததோரொழுக்கம்; பிறர் குறிப்பன்றித் தன் குறிப்பு இல்லையெனப்படும்; ஆகலின் இவரது பொருவிறப்பு என்னையோ வென்பது. இனிப் பொருள்வயிற் பிரியுமேயெனின், முன்னர்ப் பொருளிலனாயினானாம், ஆகவே எள்ளுநர்ப்பணித்தலும் இரந்தோர்க்கீதலும் ‡என்னும் இவையெல்லாம் பொருட்குறைபாடுடையார்க்கு இகழாமையின் இக்குறைபாடெல்லாம் உடையனாம்; அவையுடையானதுபொருவிறப்பு என்னையோ வென்பது. இனிப் பரத்தையர்மாட்டுப் பிரியுமேயெனின்

---

* வாளா 'குலமாதலானும்' என்றும் பாடமுண்டு.

† 'நவைப்பதுமாய்க் கொள்வதுஞ் செய்யப்பட்டு' என்பதும் பாடம். இங்கிருந்து சிலவரிகளில் வேறோர் பிரதிக்கு இணங்கப் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

‡ 'நள்ளுநர் நாட்டலும் நயவாரொழுக்கலும்' என்னும் வேறிரு சொற்றொடர் வேறொரு பிரதியில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

இவன் கண்டார்கண் தாழ்வானும், ஆகலான் தலைமகள்மாட் டே கிடந்த அன்பிலன் ஆயினானும். அல்லதூஉங் கண்டுழி யெல்லாம் உள்ளத்தைச் செலீஇ உள்ளத்தின்வழி ஓடுமாக லான் நிறையிலனும்; நிறையிலானது பொருவிறப்பு என்னை யோ வென்பது.

இவையெல்லாஞ் சொல்லப் பெரிது மாறுகொண்டு காட் டிற்றெனின், மாறுகொள்ளாது; மாறுகொள்ளாமைக்குக் காரணம் என்னையோவெனின், ஓதற்குப் பிரியுமென்பது கற் பான் பிரியுமென்பதன்று, பண்டே குரவர்களாற் கற்பிக்கப் பட்டுக் கற்றான் அறம் பொருளின்பம் வீடுபேறுகள் நுதலிய நூல்களெல்லாம்; இனிப் பரதேசங்களினும் அவை வல்லார் உளரெனிற்காண்பலென்றும், வல்லார்கள் உள்வழிச்சென்று தன்ஞானம் மேற்படுத்து அவர்கள் ஞானங் கீழ்ப்படுத்தற் குப் பிரியுமெனக்கொள்க. இனிக் காத்தற்குப் பிரியுமென் பது நலிவார் உளராக நலிவுகாத்தற்குப் பிரியுமென்பதன்று, நாட்டகத்து நின்றும் நகரகத்துந் தமக்கு உற்றது உரைக்க லாத மூத்தார்களும் பெண்டிர்களும் இருக்கைமுடவருங் கூனருங் குருடரும் பிணியுடையாரும் என இத்தொடக்கத் தார்தம் முறைக்கருமங் கேட்டுத் திருத்துதற்பொருட்டாக வுங், காட்டகத்துவாழும் உயிர்ச்சாதிகள் ஒன்றனையொன்று நலிவன உளவாயினவிடத்துத் தீதென்று அவற்றை முறை செய்தற்குங், கொடிவலைப்பட்டுக் கிடந்தனவற்றைத் துறை நீக்குதற் பொருட்டாகவும், வளன் இல்வழி வளந்தோற்று வித்தற்பொருட்டாகவுந், தேவகுலமே சாலையே அம்பலமே என்று இத்தொடக்கத்தனவற்றை ஆராய்தற்கும், அழிகுடி யோம்புதற்கும் பிரியுமென்பது. அல்லதூஉம் பிறந்த உயிர் தாயைக் கண்டு இன்புறுவதுபோலத் தன்னாற் காக்கப்படும் உயிர்வாழ்சாதிகள் தன்னைக்கண்டு இன்புறுதலின் தான்

அவர்கட்குத் தன் உருக் காட்டுதற்கும், மாற்றரசர் ஒற்று வந்தவிடத்து அவர்முன்னர்த் தனது ஊக்கங் காட்டுதற் பொருட்டாகவும் பிரியும். அதனானே மாற்றரசரும் திறை கொடுப்பரென்பது. இனிப் பகைதணிவினை யென்பது தூது வர்போலச் சந்து செய்வித்தற்குப் பிரியு மென்பதன்று, இருவர் அரசர் நாளைப்பொருதும் இன்று பொருது மென்று முரண்கொண்டு இருந்த நிலைமைக்கண் தான் அருள் அரச னாகலின் இம்மக்களும் இவ்விலங்குகளுமெல்லாம்பட இவ் விரண்டு குலத்திற்கும் ஏதம் நிகழும், அதனால் இப்போ ரொழிப்பனென்று இருவரையும் இரந்து சந்துசெய்வித்தலு மொன்று. அல்லதூஉந் தேவரும் அசுரரும் பொருதகாலத் துத் தேவரையும் அசுரரையும் *ஒருவீர் ஒருவீர் மிக்காரை ஒறுப்பல் யானெனப் பாண்டியன் மாகீர்த்தி சந்துசெய்வித் ததுபோல் இருவரின் மிகைசெய்தீரை ஒறுப்பலென்றுசந்து செய்வித்தலுமொன்று. இருவரையும் ஒறுக்குந்துணை ஆற்ற லுடைய னாகலானென்பது. அஃதேயெனின் தன்னகத்து †இருந்துவிட அமையாதோ அன்னவாற்றலனாகலான்; தான் செல்லவேண்டுமோவெனின், செல்லவேண்டும் என்பது. என் னை? காதலர்ப் பிரிந்து ஒரு கருமம் முடிப்பதனின் மிக்க ஆள் வினையில்லையென்பது. ஆதலாற் பிரிந்தே சந்துசெய்விக்கு மென்பது. இனி வேந்தர்க்குற்றுழி யென்பதற்குச் சேவக னாய்ப் பிரியுமென்பதன்று, தனக்கு நட்டான் ஓரரசன் சென்றவிடத்து ‡அவற்கு ஆய மறுதலையை வென்று நீக்கு தற்குப் பிரியுமென்றுகொள்க. இனிப் பொருட்பிணியென் பது, பொருளிலனாய்ப் பிரியுமென்பதன்று, தன் முதுகுர

---

* வாளா 'மிக்கசெய்தாரை ஒறுப்பெனென்று' என்றும்பாடமுண்டு.

† 'நின்றுவிட' என்பதும் பாடம்.

‡ 'அவற்கு ஆபதம் அறுத்தல் இனிதென்று நீக்குதற்கு' என்பது முன் அச்சுப்பிரதியிற் கண்ட பாடம்.

வராற் படைக்கப்பட்ட பலவேறு வகைப்பட்ட பொரு ளெல்லாங் கிடந்ததுமன், அது கொடு துய்ப்பது ஆண்மைத் தன்மையன்றெனத் தனது தாளாற்றலாற் படைத்த பொ ருள்கொண்டு வழங்கி வாழ்தற்குப் பிரியுமென்பது; அல்ல தூஉந் தேவர்காரியமும் பிதிரர் காரியமுந் தனது தாளாற் றலாற் படைத்த பொருளாற் செய்தன தனக்குப் பயன் படு வன; என்னை? "தாயப்பொருளாற் செய்தது தேவரும் பிதி ரருமின்புறார்." ஆதலான் அவர்களையும் இன்புறுத்தற்குப் பிரியுமென்பது. இனிப் பரத்தையென்பது, புறப்பெண்டிர் மாட்டுப் பிரிவு: இவள்கண் அன்பிலனாய்க் கண்டார்கண் தாழ்ந்து நிறையிலனாய்ப் பிரிந்தானல்லன்; என்னை? தலைமக ளின் நீங்கி ஆடல்காண்பல் பாடல்கேட்ப லெனப் பிரியும்; பிரிய, அவற்றின்கட்சென்ற உணர்வு தலைமகண்மாட்டு நின்ற உணர்வினை மறைக்கும்; என்னை? இரண்டுணர்வு உட னில்லாமையின்; இவ்வகை மறைப்ப இவர்கண்ணதே உள் ளமாமென்பது; என்னை? தாம் இயல்பாகவே பிறரையும் நயப்பிக்கப்படும் வனப்புடையார் ஆடற்றகையானும் பாடற் குரலானும் நயப்பித்துமென்று எடுத்துக்கொண் டால் ஆடவர்கள் நயப்பது சொல்லவேண்டுமோ வென்பது. அவற்றது பொருள் அறியாது கடாயினாய், இஃது அவற் றுப் பொருளென்று கொள்க வென்பது. இனிப் பிரிவுகளை வேறு உரிமை கூறுமிடத்து அவற்றுக்குச் செய்யுள் காட்டுதும். (உ)

நசு. அவற்றுள்,

ஓதலுங் காவலு முயர்ந்தோர்க் குரிய.

என்ப தென்னுதலிற்றோவெனின், மேற் சொல்லப்பட்ட பிரிவினை நிறுத்தமுறையானே முன்பிரண்டும் இன்னார்க் குரியவென்ப துணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: அவற்றுள்—மேற்சொல்லப்பட்ட அறுவகைப் பிரிவினுள்ளும்; ஓதலும் காவலும்—ஓதற்குப் பிரியும் பிரிவும் நாடுகாத்தற்குப்பிரியும் பிரிவும்; உயர்ந்தோர்க்கு உரிய—உயர்ந்தோரென்பார் பார்ப்பாரும் அரசரும், அவ்விருவர்க்கும் உரிய என்றவாறு.

ஓதற்குப் பிரியும் பார்ப்பான், நாடுகாத்தற்குப் பிரியும் அரசனென நிரனிறையாகக் கொள்க. அது பொருந்தாது; என்னை? ஓதலுங் காவலும் அந்தணர் அரசரென்று இருவர்க்கும் உரியவெனினும் நிரனிறையாவது என்றார்க்கு, அவ்வாறு சொல்லிற்றிலராயினும் *பொருள் வகையான் ஒக்குமென்பது. என்னை? உயர்ந்தோர்க்கு உரியவெனவே உயர்ந்தோராவார் பார்ப்பாரும் அரசருமேயாகலானென்பது. என்றார்க்கு, உயர்ந்தோர்க்கு உரிய வென்றதனாற் பார்ப்பார்க்கே கொள்ளேனோவெனிற் கொள்ளப்படாது, காவல் பார்ப்பார் தொழிலன்று, ஆகலின் இருவர்க்கும் உரியவென்பது பெறுதும். அல்லதூஉம் உரையிற்கோடலென்பது தந்திரவுத்தியாகலானும் இருவர்க்கும் உரியவென்பது பெறுதும். ஓதற்குப் பிரிதலுறுந் தலைமகன் தோழியால் தலைமகட்குப் பிரிவுணர்த்துவிக்கும். அதற்குச்செய்யுள்:

ஓதற்பிரிவுரைத்தல்.

மைதா னிலாததங் கல்வி மிகுத்து வருவதெண்ணிப்
பொய்தா னிலாதசொல் லார்செல்வர் போலும்புல் லாதமரே
செய்தார் படச்செந் நிலத்தைக் கணைமழை திண்சிலையாற்
பெய்தான் விசாரிதன் றென்னனன் னாட்டுறை பெண்ணணங்கே.

காத்தற்குப் பிரியலுறுந் தலைமகன் தோழியால் தலைமகட்குப் பிரிவுணர்த்துவிக்கும். அதற்குச் செய்யுள்:

---

* 'ஒருவகையான் நோக்க ஒக்குமென்பது' என்றும் பாடமுண்டு.

காவற்பிரிவுரைத்தல்.

தேக்கிய தெண்டிரை முந்நீ ரிருநிலந் தீதகலக்
காக்கிய செல்வது காதலித் தாரன்பர் காய்ந்தெதிரே
யாக்கிய வேந்த ரமர்நா டடையத் தனஞ்சுடர்வா
ளோக்கிய கோனந்தண் கூடலனைய நுடங்கிடையே. (உசச)

நஎ.

## வேந்துவினை யியற்கை பார்ப்பார்க்கு முரித்தே.

என்ப தென்னுதலிற்றோ வெனின், பார்ப்பார்க்குப் பிரி வென்றோதப்பட்டது கல்வி மிகுத்தற்குப் பிரியும் பிரி வன்றே, அதுவல்லாமலும் பிறிதும் ஒரு பிரிவு உண்டென் பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: 'வேந்து' என்பது அரசு, 'வினை' யென்பது செய்கை, 'இயற்கை' யென்பது தன்மை, 'பார்ப் பார்க்கும் உரித்தே' யென்பது பார்ப்பார்க்குங் கிழமை யுடைத்து என்றவாறு.

என்பதனாற் போந்த பொருள், வேந்து செய்வித் தற்கு உரிய சந்து பார்ப்பார்க்கும் உரித்தென்றவாறு. வேந்தர்க்குச் சந்துசெய்வித்தல் உரித்தென்று மேற்சொல் லிப் போந்தாராயினன்றே'வேந்துவினையியற்கை பார்ப்பார்க் கும் உரித்தே'யென்பது. அது மேற்சொல்லினாரே. என்னை? காவல் பகைதணிவினை யென்று இரண்டினையும் ஒருங்கு வைத்தார் அவ்விரண்டினையும் அரசர்க்கு உரியவென்றற் பொருட்டெனக் கொள்க. என்னை அரசர்க்கு உரித்தாமா றெனின், இருவர் அரசர் வேறுபட்டு மாறுகொண்டிருந்த விடத்து அவர்களைச் சந்துசெய்வித்தற்குப் பிரியாதுவிடின் அவர்களைச் சார்ந்து வாழ்வாரும் அவர்கள் நாடும் பெரிதுந் துன்பமெய்துமன்றே? அதனை நீக்கும் பெருமையுடையான்

அதனை நீக்காது உடன்பட்டிருப்பப் பழியும் பாவமும் பெரி தாகுமாகலான் அரசர்க்கும் உரித்து. அவ்வகை அவர்க்கு ஆகிய சந்து பார்ப்பார்க்கும் உரித்து; என்னை? அவரும் பெ ருமையுடையராகலின். அதற்குச் செய்யுள்:

பிரிவு கூறல்.

தாக்கிய போர்வய வேந்த ரிருவர்க்குஞ் சந்திடைநின்
றாக்கிய செல்வது காதலித் தார்நம ராரமருள்
வீக்கிய வார்கழல் வேந்தர்தம் மானம்வெண் மாத்துடனே
நீக்கிய கோனெடு நீர்வையை நாடன்ன நேரிழையே. (உசரு)

## கூஅ. அரச ரல்லா வேனை யோர்க்கும் புரைவ தென்ப வோரிடத் தான.

என்ப தென்னுதலிற்றோ வெனின், சந்துசெய்வித்தற்குப் பிரியும் பிரிவு அரசர்க்கன்றியும் வாணிகர்க்கும் வேளாளர்க்கும் உரித்தென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: அரசர் அல்லா ஏனையோர்க்கும்—அர சரல்லாத ஏனையோராவார் ஒழிந்த வணிகரும் வேளாள ரும் என்ற இருவர்க்கும்; புரைவதென்ப ஓரிடத்து ஆன— பொருந்துமென்ப அவர் இல்வழி என்றவாறு.

அரசரில்லாவழி வணிகரும் வேளாளரும் வேறு பட்டு நின்ற அரசரையுஞ் சந்து செய்வித்தற்குப் பிரியப்பெறுபவென்பது. பொருளானும் ஆள்வினையானும் அரசரோடொப்பர், வணிகரும் வேளாளருமென்னும் வேற் றுமையில்லது என்பது. அஃதேயெனின், மேற்சூத்திரம் வேண்டாஅரசரல்லா ஏனையோரெனவேபார்ப்பாரும் அடங் குவராலானென்பது; என்றார்க்கு, அதுவன்று; அரசு

ரல்லா வினையோரென்பது அரசரிற் பின்னைச்சொல்லப்படும் வணிகரையும் வேளாளரையுமே தழுவுதற்குச் சொன்னா ராகலானென்பது. அல்லாக்கால் 'வேந்துவினை யியற்கை பாப் பார்க்கும் உரித்து' என்னார்மன் என்பது. இவ்விருவர்க் குஞ் செய்யுள் மேற்காட்டிற்றே கொள்க. (௫)

## ௩௧. வேந்தர்க்குற்றுழிப்பொருட்பிணிப்பிரி வென்-றாங்க விரண்டு மிழிந்தோர்க் குரிய.

என்ப தென்னுதலிற்றோவெனின், வணிகர்க்கும் வேளா ளர்க்கும் உரியதோர் பிரிவு உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: வேந்தர்க்குற்றுழி—அரசர்க்குற்றுழி; பொருட்பிணிப் பிரிவு—பொருள்வேட்கையிற் பிரியும் பிரிவு; 'என்று' என்பது எண்ணுதற்குரியதோர் வாய்பாடு, 'ஆங்க' என்பது அசைச்சொல், 'இரண்டு' என்பது தொகை, உம்மை முற்றும்மை; இழிந்தோர்க்கு உரிய—வணிகர்க் கும் வேளாளர்க்குங் கிழமையுடைய என்றவாறு.

இழிபுபடச் சொல்லினாரால் இழிந்தாரென்பது பொரு விறப்பினொடு மாறுகொள்ளுமெனிற், கொள்ளாது; இந் நூல் உலகினோடொத்தும் ஒவ்வாதும் நடக்கின்றதாக லான் உலகியல்நோக்கிச் சாதிவகையான் இழிந்தாரெனப் பட்டது. ஒழிந்தவற்றாற் பொருவிறப்பு இவர்க்கும் ஒக்கு மென்பது. அவற்றுள், வேந்தற்குற்றுழிப் பிரியலுறுந் தலை மகன் தோழியால் தலைமகட்குப் பிரிவுணர்த்துவித்துப் பிரி யும். அதற்குச் செய்யுள்:

பிரிவுணர்த்தல்.

வாரார் முரசின் விரைசேர் மலர்முடி மன்னவற்காய்ச்
சேரார் முனைமிசைச் சேறலுற் றார்நமர் செங்கிலத்தை

யோரா தெதிர்ந்தா ருடன்மீ துலாவி யுருள்சிவந்த
தேரான் றிருவளர் தென்புன னாடன்ன சேயிழையே. (உசசு)

கன்னவி றோண்மன்னன் றெம்முனை மேற்கல வாரைவெல்வான்
வின்னவி றோளன்பர் செல்வர் விசய சரிதனென்னுந்
தென்னவன் சேரார் படநறை யாற்றுச் செருவடர்த்த
மன்னவன் கூடல்வண் டீந்தமி ழன்ன மடமொழியே. (உசஎ)

தலைமகன் வேந்தர்க்குற்றுழிப் பிரிந்தவிடத்துத் தலைமகள் வேறுபட்டு ஆற்றாளாயினாளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவ லென்பதுபடத் தலைமகள் சொல்லியதற்குச் செய்யுள்:

பிரிவாற்றாமை கார்மிசை வைத்தல்.

படலைப் பனிமலர்த் தாரவர் வைகிய பாசறைமேற்
றொடலைக் கமழ்நறுங் கண்ணியி னாய்சென்று தோன்றுங்கொல்லோ
வடலைப் புரிந்தசெவ் வேலரி கேசரி தென்குமரிக்
கடலைப் பருகி யிருவிசும் பேறிய கார்முகிலே. (உசஅ)

அதுகேட்ட தோழி இவள் பிரிவாற்றாமையானன்று வேறுபட்டது; அவர் குறித்துப் பிரிந்த கார்வரப், பிரிந்த பாசறைக்கண் தோன்றியக்கால், தாம் எடுத்துக்கொண்ட வினைமுடியாது மீள்வர்கொல்லோ வென்பதுபோலும், இவளாற்றாளாயது; யான் பிழைக்க உணர்ந்தேனென ஆற்றுவாளாவது. அதற்குச் செய்யுள்:

தோழி கூறல்.

வாமா னெடுந்தேர் வயமன்னர் வாண்முனை யார்க்கும்வண்டார்
தேமா நறுங்கண்ணி யாய்சென்று தோன்றுங்கொல் சேரலர்தங்
கோமான் கடற்படை கோட்டாற் றழியக் கணையுகைத்த
வேமாண் சிலையவன் *கன்னிநன் னீர்கொண்ட வீர்முகிலே. (உசகூ)

இதுவும் அது.

---

* 'தூண்கடல் நீர்கொண்ட' என்பதும் பாடம்.

வேந்தர்க்குற்றுழிப் பிரிந்த தலைமகன் தான் குறித்த பருவவரவின்கண் வினைமுற்றி மீளலுறுவான் தேர்ப்பாகற்குச் சொல்லியதற்குச் செய்யுள்:

நிலைமை நினைந்து கூறல்.

இன்பார்ப் பொடுங்க வலஞ்சிறை கோலி யிடஞ்சிறையா
லன்பாற் பெடைபுல்லி யன்ன நடுங்கு மரும்பனிநா
ளென்பாற் படரொடென் னுங்கொ விருஞ்சிறை யேற்றமன்னர்
தென்பாற்படச்செற்றகோன்வையை நாடன்னசேயிழையே (உருo)

அன்புடை மாதர்கண் டாற்றுங்கொ லாற்றுக் குடியடங்கா
மன்புடை வாடவென் ருன்றமிழ் நாட்டு வலஞ்சிறைக்கீ
ழின்புடை யேறிளம் பார்ப்புத் துயிற்றி யிடஞ்சிறைக்கீழ்
மென்பெடை புல்லிக் குருகு நரல்கின்ற வீழ்பனியே. (உருக)

இது கேட்ட தேர்ப்பாகன் விரைந்து போதற்கொருப்படுவானும்.

இன்னும் வேந்தர்க்குற்றுழிப் பிரிந்து வினைமுற்றிய தலைமகன் இவ்வாறுஞ் சொல்லும். அதற்குச் செய்யுள்:

வினைமுற்றி நினைதல்,

† கடியா ரிரும்பொழிற் கண்ணன்று வாட்டியின் றுங்கலவாப்
படியார் படைமா மதின்மேற் பனிவந்து பாரித்ததால்
வடியா ரயினெடு மாறனெங் கோன்கொல்லி வண்டிவர்பூங்
கொடியா ரிடைமட மான்பிணை நோக்கி குழைமுகமே. (உருஉ)

‡ கயவாய் மலர்போற் கருங்கண் பிறழவெண் டோடிலங்க
நயவார் முனைமிசைத் தோன்றின்று நட்டாற் றெதிர்ந்ததன்னை
வியவார் படையிட்டெண் காதஞ்செலச்சென்று மீன்றிளைக்கும்
வயவாள்செறித்த வெங்கோன் வஞ்சியன்னாள் மதிமுகமே. (உருஙு)

---

† 'கடியாரிரும்பொழில் வாயன்றுகாட்டி' என்பதும் பாடம்.

‡ இச்செய்யுள் முன் அச்சுப்பிரதியில் விடுபட்டது; வேறோர் ஏட்டுப்பிரதியிற் கண்டமையின் இங்கெடுத்துச் சேர்க்கப்பட்டது.

தங்கயல் வெள்ளொளி யோலைய தாய்த்தட மாமதின்மேற்
பொங்கயல் வேந்த ரெரிமூழ்கத் தோன்றின்று போதுகண்மேற்
பைங்கயல் பாய்புனற் பாழிப்பற் றூரைப் பணித்ததென்னன்
செங்கய லோடு சிலையுங் கிடந்த திருமுகமே. (உருச)

இதுகேட்ட தேர்ப்பாகன் விரைந்து *கடாவுவானுவது பயன்.

இங்ஙனம் வினைமுற்றிய பின்னையன்றி †முற்றுவிடத்துஞ் சொல்லுமோவெனிற் சொல்லான்; என்னை?

"கிழவி நிலையே வினையிடத் துரையார்
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்" (தொல்-பொ-கற்-சரு.)

என்பது சூத்திரமாகலான், வினைமுற்றிய பின்னையே சொல்லு மென்பது.

வேந்தர்க்குற்றுழிச் சென்று வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியதற்குச் செய்யுள்:

பாகற் குரைத்தல்-

வென்றே களித்தசெவ் வேனெடு மாறன்விண் டார்முனைமேற்
சென்றே வினைமுற்றி மீண்டனங் காருஞ் சிறிதிருண்ட
தின்றே புகும்வண்ண மூர்கதிண் டேரிள வஞ்சியென்ன
நின்றே வணங்கு நுடங்கிடை யேழை நெடுநகர்க்கே. (உருரு)

"உலகுட னிழற்றிய தொலையா வெண்குடைக்
கடல்போ றூனைக் கலிமா வழுதி
‡வென்றம ருழந்த வியன்பெரும் பாசறைச்
சென்றுவினை முடித்தன மாயி னின்றே
கார்பெயற் கெதிரிய காண்டகு புறவிற்
கணங்கொள் வண்டி னஞ்சிறைத் தொழுதி

* 'பண்ணுவானுவது' என்பதும் பாடம்.

† 'முற்றுதான் முன்னஞ் சொல்லுமோவெனின்' என்பதும் பாடம்.

‡ 'வேத்தமருழந்த' என்பதும் பாடம்.

*மணங்கொண் முல்லை மாலை யார்ப்ப
வுதுக்காண் வந்தன்று பொழுதே வல்விரைந்து
செல்க பாகநின் வல்வினை நெடுந்தேர்
வெண்ணெல் லரிநர் மடிவாய்த் தண்ணுமை
பன்மலர்ப் பொய்கைப் †படுபுள் ளெழுப்பும்
காய்நெற் படப்பை வாணர் சிறுகுடித்
தண்டலை கமழுங் கூந்த
லொண்டொடி மடந்தை தோளிணை பெறவே." (அகம்-உ0ந)

இன்னும் பிறவுஞ் சொல்லும். அதற்குச் செய்யுள்:

பட்டா ரகலல்குற் பாவையுங் காணுங்கொல் பாழிவெம்போ
ரட்டா னரிகே சரியைய மாயிரம் யானைமுன்னா
ளிட்டான் மருகன்றென் னாட்டிருண் மேகங்கண் டீர்ம்புறவிற்
கட்டார் கமழ்கண்ணி போன்மலர் கின்றன கார்ப்பிடவே. (உருசு)

புரிந்தமெல் லோதியை வாட்டுங்கொல் வல்லத்துப் போரெதிர்ந்தா
ரிரிந்த வகைகண்ட வாண்மன்னன் றென்னாட் டிருஞ்சுருள்போய்
விரிந்த ‡புதவங்கண் மேய்ந்துதம் மென்பிணை கையகலா
திரிந்ததிண் கோட்ட கலைமா வுகளுஞ் செழும்புறவே. (உருஎ)

‖செறிகழல் வானவன் செம்பியன் றென்ன னெனயவென்றி
வெறிகமழ் கோதைகண் வேட்கை மிகுத்தன்று வெள்ளஞ்சென்ற
நெறிகெழு வெண்மணன் மேனெய்யிற் பால்விதிர்த் தன்னவந்நுண்
பொறிசெழு வாரணம் பேடையை மேய்விக்கும் பூம்புறவே. (உருஅ)

---

* 'மணங்கமழ் முல்லையார்ப்பவுதுக்காண்' என்பதும் 'வாழி பொழுதே' என்பதும், 'நல்வினைநெடுந்தேர்' என்பதும் பாடம்.

† 'படுபுள்ளோப்பும்' என்பதும் பாடம்.

‡ புதவம்-ஒருவகைப்புல், இச்சொல் 'புதவு' எனவும் வரும்; ஐயனாரிதனார் இதனைப் 'பதவு' என வழங்குவர்.

‖ இச்செய்யுள் முன் அச்சுப்பிரதியில் விடுபட்டது; வேறோரேட்டுப் பிரதியிலிருந்தமையின் இங்கெடுத்துச் சேர்க்கப்பட்டது

ஆழித் திருமா லதிசயற் காற்றுக் குடியுடைந்தார்
சூழிக் களிற்றிற் றனைகதின் டேர்துயர் தோன்றின்றுகாண்
கோழிக் குடுமியஞ் சேவநன் பேடையைக் கால்துடையாப்
பூழித் தலையிரை யார்வித்துத் தானிற்கும் பூம்புறவே. (உருக)

கைம்மாப் புறவின் சுவடு தொடர்ந்து கனல்விழிக்கு
மொய்ம்மா மதக்களி வேழங்கள் பின்வர முன்னுகதேர்
நெய்ம்மா ணயினெடு மாற னிறைபுனற் கூடலன்ன
மைம்மாண் குழலாள் பரமன்று வானிடை வார்புயலே. (உகூ0)

மூன்று னுறத்தா வடிமூள் ளுறீஇமுடு காதுதிண்டே
ரென்று விழைத்தவற் றேடிற்றை நாளு மிழைக்குங்கொல்லா
மொன்று வயவர்தென் பாழிப் படைவொளி வேல்வலத்தால்
வென்றான் விசாரிதன் றென்புன லுடன்ன மெல்லியலே. (உகூக)

இவையெல்லாஞ் சொல்லக்கேட்ட தேர்ப்பாகன் கடிது கடாவுவானுவது பயன்.

கடிக்கண்ணி வேந்தரை யாற்றுக் குடிக்கன்னி வாகைகொண்டே
முடிக்கண்ணி யாவைத்த மும்மதில் வேந்தன் முசிறியன்ன
வடிக்கண்ணி வாட வளமணி மாளிகைச் சூளிகைமேற்
கொடிக்கண்ணி தாம்வண்ண நண்ணிவந் தார்த்தன கொண்டல்க [ளே.

இதுவும் மேலவற்றோடு ஒக்கும்.

இனி முகில் நோக்கிச் சொல்லுவாய்த் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியதற்குச் செய்யுள்:

முகிலோடு கூறல்.

பண்டேர் சிறைவண் டறைபொழிற் பாழிப்பற் றுதமன்னர்
புண்டேர் குருதி படியச்செற் றான்புன லுடனையாள்
கண்டே ரழிந்து கலங்கு மவடன் கடிநகர்க்கென்
றிண்டேர் செலவன்றி முன்செல்லல் வாழி செழுமுகிலே. (உகூஉ)

இது கேட்ட தேர்ப்பாகன் விரைந்து தேர் கடாவு வானுவது பயன்.

வேந்தர்க்குற்றுழிப் பிரிந்து வினைமுற்றிப்புகுந்த தலைமகனது வரவுணர்ந்து தோழி தலைமகட்குச் சொல்லும்; அதற்குச் செய்யுள்:

வரவேடுத் துரைத்தல்.

கொற்றங் கயின்மன்னன் கோனெடு மாறன்றென் கூடலன்ன
முற்று விளமுலை மாதே பொலிகநம் முன்கடைவாய்ச்
*செற்றார் பணிதிறை கொண்டநம் மன்பர் செழுமணித்தேர்ப்
பொற்றார்ப் புரவிக ளாலித்து வந்து புகுந்தனவே. (உகூச)

ஆரு மணியிளம் போந்தையும் வேம்பு மலர்ந்துமந்தேன்
வாருங் கமழ்கண்ணி வானவன் மாறன்றன் மாந்தையன்னாய்
காருங் கலந்து முழங்கிமின் வீசின்று காதலர்தந்
தேருஞ் சிலம்பிப் புகுந்தது நங்கள் செழுநகர்க்கே. (உகூரு)

இனித் தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி, வினைமுற்றி மீள்வார் சொல்லிய பருவந் தூதாகி வந்ததென்னும். அதற்குச் செய்யுள்:

பருவந்தூதாயிற்றெனப் பாங்கியுரைத்தல்.

முன்றான் முகிழ்முலை யார முயங்கி முறுவலுண்டு
சென்றார் வரவிற்குத் தூதா கிவந்தது தென்புலிப்பை
வென்று †விசாரிதன் வேனெடுமாறன் வியன்முடிமே
னின்றான் மணிகண்டம் போலிருள் கூர்கின்ற நீண்முகிலே. (உகூகூ)

இனித் தலைமகன் வினைமுற்றி மீண்டு புகுந்து, தலைமகளோடினிது இருந்து தோழிக்குச் சொல்லியதற்குச் செய்யுள்:

மறவாமை கூறல்.

மடையார் குவளை நெடுங்கண் பனிமல்க வந்துவஞ்சி
யிடையா ளுடனா யினிதுகழிந்தன் றிலங்குமுத்தக்
குடையான் குலமன்னன் கோனெடு மாறன் குளந்தைவென்ற
படையான் பகைமுனை போற்சென்று நீடிய பாசறையே. (உகூஎ)

* 'செற்றார் பணியத்திறங்கொண்டவன்பர்' என்பதும் பாடம்.

† 'அழிய நறையாற்றகத்துவென்றான் முடிமேல்' என்பதும்பாடம்.

இனிப் பொருட்குப் பிரியலுற்ற தலைமகன் தோழியால் தலைமகட்குப் பிரிவு உணர்த்துவித்தற்குச் செய்யுள்:

பிரிவுணர்த்தல்.

இல்லா ரிருமையு நன்மையெய் தாரென் றிருநிதிக்குக்
கல்லார் சுரஞ்செல்வ தேகினைந் தார்நமர் காய்ந்தெதிர்ந்த
புல்லா ரவியநெல் வேலிப் பொருகணை மாரிபெய்த
வில்லான் விசாரிதன் றெண்புன லூடன்ன மெல்லியலே. (உசுஅ)

அது கேட்டு ஆற்றாத்தன்மையளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியதற்குச் செய்யுள்:

ஆற்றாதுரைத்தல்.

ஊனங் கடந்த வுயர்குடை வேந்த னுசித னென்னார்
மானங் கடந்துவல் லத்தம ரோட்டிய கோனிம்மண்மே
லீனங் கடந்தசெங் கோன்மன்னன் றெம்முனை போலெரிவேய்
கானங் கடந்துசென் றேபொருள் செய்வது காதலரே. (உசுகூ)

தோழி தலைமகனிலைமை தலைமகற்குச் சொல்லியதற்குச் செய்யுள்:

ஆற்றாமை கூறல்.

விரைதங்கு நீண்முடி வேந்தன் விசாரிதன் வெம்முனைபோல்
வரைதங்கு கானமர் செல்லுப வென்றலும் வாணுதலா
ணிரைதங்கு சங்கு கழலக்கண் ணித்திலஞ் சிந்தநில்லா
வரைதங்கு மேகலை மெல்லடி மேல்வீழ்ந் தரற்றினவே. (உஎ0)

மன்னேந் தியபுகழ் வாணெடு மாறன்றன் மாந்தையன்ன
மின்னேந் தியவிடை யாய்நமர் செல்வர்வெங் கானமென்னப்
பொன்னேந் திளமுலை பூந்தடங் கண்முத்தந் தந்தனபோ
யென்னேந் தியபுக ழீரினிச் செய்யு மிரும்பொருளே. (உஎக)

இதுவும் மேலதனோடு ஒக்கும்.

இனித் தோழி தலைமகனை நீர் பிரிந்தவிடத்து நெடிய வாகிய கங்குல்களைத் தமியளாய் எவ்வகை * நீந்தி ஆற்று மென்னும். அதற்குச் செய்யுள்:

வருநெடுங் கங்குலெவ் வாறினி நீந்தும்வல் லத்துவென்ற
செருநெடுந் தானையெங் கோன்றெவ்வர்போலச்சென் றத்தமென்னு
மொருநெடுங் குன்றம் மறைந்துல கெல்லாம் வளாய்க்குணபாற்
றிருநெடுங் குன்றங் கடந்தால் வருவது செஞ்சுடரே. (௨௭௨)

படந்தாழ் பணைமுக யானைப் பராங்குசன் பாழிவென்ற
விடந்தாழ் சிலைமன்னன் வெல்களம் போல விரிந்தவந்தி
நடந்தா லிடையிருள் போய்க்கடை யாமநல் லூழிமெல்லக்
கடந்தா லதற்பின்னை யன்றே வருவது காய்கதிரே. (௨௭௩)

இதுவும் அது.

தோழி தலைமகட்குப், பிரிவுநேர்ந்து நன்றுசெய்தாய் அவர் செல்லுங் கானம் இவ்வகைப்பட்டதென்னும். அதற்குச் செய்யுள்:

கானத்தியல்பு தோழியுரைத்தல்.

தேனக்க தாரவர் †காண்பர்செல் லாரவர் செல்லவொட்டி
நானக் குழன்மங்கை நன்றுசெய் தாய்வென்று வாய்கனிந்த
மானக் கதிர்வேல் வரோதயன் கொல்லி வரையணிந்த
கானத் திடைப்பிடி கையக லாத கருங்களிறே. (௨௭௪)

இனித் தோழி தலைமகட்குப் பொருண் முடித்து வந்தான் எம்பெருமானென்னும். அதற்குச் செய்யுள்:

வரவுரைத்தல்

இருண்மன்னு மேகமுங் கார்செய் தெழுந்தன வெள்வளையாய்
மருண்மன்னு வண்டறை தாரவர் தாமுமிம் மாநிலத்தார்க்
கருண்மன்னு செங்கோ லரிகே சரியந்தண் கூடலன்ன
பொருண்மன்னு மெய்திப் புகுந்தனர் வந்துநம் பொன்னகர்க்கே.

---

* 'நின்றுற்றும்' என்பதும் பாடம்.

† 'காண்பர் சொல்லாரவர்' என்பதும் பாடம்.

மற்றும் இவ்விடத்துப், பிரிவிடை மெலிந்து ஆற்ருளாகிய தலைமகளைப் பருவம் வந்ததென்று வற்புறுப்ப வஞ்புறையெதிரழிந்து சொல்லியதற்குச் செய்யுள்:

தகரக் குழலாய் தகவில ளேசங்க மங்கைவென்ற
சிகரக் களிற்றுச்செங் கோனெடு மாறன்றென் கூடலின்வாய்
மகரக் கொடியவன் றன்னெடு வேனின் மலர்விலைக்குப்
பகரக் கொணர்ந்தில்லந் தோறுந் திரியுமிப் பல்வளையே. (உஎசு)

"அழுந்துபடு விழுப்புண் வழும்புவாய் புலரா
வெவ்வ நெஞ்சத் தெஃகெறிந் தாங்குப்
பிரிவில புலம்பி நுவலுங் குயிலினுந்
தேறுநீர் கெழீஇய யாறுநனி கொடிதே
யதனினுங் கொடிய டானே மதனின்
றுய்த்தலை யிதழ பைங்குருக் கத்தியொடு
பித்திகை விரவுமலர் கொள்ளீ ரோவென
வண்டுசூழ் வட்டிய டிரிதரூஉந்
தண்டலை யுழவர் தனிமட மகளே." (நற்றிணை-கூஎ.)

இவ்விடத்துச்செய்யுள் பலவும்வந்தன எல்லாங்கொள்க. (கூ)

சo. காதற் பரத்தை யெல்லார்க்கு முரித்தே.

என்பதென்னுதலிற்றோவெனின், மேல் எல்லாப் பிரிவுகளையுஞ் சிறப்புவகையான் உணர்த்திஞர், இனிப் பரத்தையிற் பிரிவு நால்வர்க்கும் உரித்தென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: காதற் பரத்தை—காதலிக்கப்பட்ட பரத்தை; எல்லார்க்கும் உரித்தே—எல்லாவருணத்தார்க்கும் உரித்து, என்றவாறு.

தம்மைக்கண்டு காதலித்தாரென்பது அறிவன்றே, அவர்தாம் பேரறிவினராதலான்; அன்னூர்தாம் பின்னைத்

தலையளியாது விடுவது அருளன்று; அதனால் அஃது எல்லார்க்கும் உரித்தென்பது கொள்க. இவ்வுரை பொருந்தாது. என்னை காரணமெனின், மிக்காரைக் கண்டால் இழிந்தாரும் உயர்ந்தாரும் மற்றுமெல்லாருங் காதலிப்ப, அவர்மாட்டெல்லாம் பிரியல்வேண்டும். பிரியவே, எல்லாக்குற்றமுந் தங்கித் தலைமையொடு மாறுகொள்ளும். அல்லதூஉம், அன்பினாற் பிரியார் அருளினாற் பிரிவரென்பதூஉஞ் சொல்லப்பட்டதாம். அதனாற் காதலித்தாள் மாட்டுப் பிரியும் பிரிவு அமையாதெனக்கொள்க. இனி ஒருதிறத்தார் காதலைச் செய்யும் பரத்தை யென்ப. என்னை காரணமெனின், வைகலும் பாலை துய்த்துச் செல்வான் ஒருமகன் இடையிடை *புளியுங்காடியும் உண்டக்காலாம் பிறபாலினது விசேடம் அறிவானாவது. அஃதேபோலத் தலைமகள் குணங்களைத் துய்த்துச் செல்லாநின்றான் இடையிடை சிறுகுணத்தராகிய பரத்தையர்மாட்டுப் பிரிந்துவரத் தலைமகள் மாட்டுக் காதல் பெருகும். அல்லாது விட்டக்கால் இவள்குணம் பொருவரியதென்பது அறியலாகாது. என்னை? இன்னாததொன்று உண்மையான் இனியதன் இன்பம் அறியப்படுமென்பது. இவ்வுரையும் பொருந்தாது. என்னோ காரணமெனின், அவர் ஒருத்தியைக் கொண்டே இவள் குணங்களைப்பெரிய என்பதறியுமெனின், அவர் மாட்டுப்பிரியாது விட்டவிடத்து இவடன் குணங்களை மிக்கனகொல்லோ மிக்கிலகொல்லோவென ஐயப்பட்டு நின்றானாகல்வேண்டும். அங்ஙனமாயின் தான் அவளென்னும் வேற்றுமையில்லார் என்பதனொடு மாறுகொள்ளும். என்னை? தங்குணங்களை ஐயப்படுவார் இன்மையானென்பது.

---

* 'புளிங்கறியும்' என்பதும் பாடம். இன்னும் இங்கிருந்து இப்பகுதி முடியுங்காறும் பல திருத்தங்கள் வேறொரு பிரதிக்கிணங்கச் செய்யப்பட்டன.

மற்றென்றோ உரையெனின், தலைமகனாற் காதலிக்கப் பட்ட பரத்தையெனக்கொள்க. அஃதேயெனின் இவன் கண்டாரையெல்லாங் காமுறுமாகாதோ எனின், ஆகான்: ஆகாதவாறுசொல்லுதும். தலைமகனால் தலைநின்று ஒழுகப் படுவன தருமம் அருத்தம் காமம் என மூன்று; அம்மூன் றினையும் ஒருபகலை மூன்றுகூறிட்டு முதற்கட்பத்து நாழி கையும் அறத்தொடுபடச் செல்லும்; இடையனபத்துநாழி கையும் அருத்தத்தொடுபடச் செல்லும்; கடையன பத்து நாழிகையும் காமத்தொடுபடச் செல்லும்; ஆதலான் தலை மகன் முதற்கண் நாழிகை தருமத்தொடு படுவான், தலை மகளும் வேண்டவே தானும் வேண்டிப்போந்து அத்தாணி புகுந்து அறங்கேட்பதாம் அறத்தொடுபடச் சொல்வதுஞ் செய்யும்; நாழிகை அளந்துகொண்டு இடையன பத்துநா ழிகையும் இறையும் முறையுங்கேட்டு அருத்தத்தினொடுபட் டனவேசெய்து வாழ்வானும். அவ்வருத்தத்து நீக்கத்துக் கடையன பத்துநாழிகையில் தலைமகளுழைப் போதரும். போத[illegible] அப்போ[illegible] பார்த்திருந்த பரத்தையர் குழலூதி யாழெழீஇ தண்ணுமையியக்கி முழவியம்பித் தலைமகனை இங்குக் கூத்துண்டென்பது அறிவிப்ப; என்னை?

"*குழலெழீஇ யாழெழீஇத் தண்ணுமைப் பின்னர்
முழவியம்ப லாமந் திரிகை"

என்று கூத்தநூலுடையாருஞ் சொன்னாரென்பது. அவ்வ கை அறிவிக்கப்பட்ட தலைமகன் நாம் இதனை ஒருகால் நோக் கிப் போ[illegible]ற்று செல்லும்; சென்றக்கால் அவர்கள் தங்க[illegible]ழ்விப்பரென்பது. அஃதேயெனின், இவன்பரத் தையரைத் தலைமகளை எய்தியிருந்தே உடையனாதல் எய்தா

* 'குழல்வழி' என்பதும் பாடம்.

ததன்முன் உடையனுதல் இரண்டல்லது இல்லை. அவற்றுள் எய்தியிருந்தையுடையனுயினுனேயெனின், தலைமகள் குணமேயுமன்றிப் பிறவும் இன்பஞ்செய்வன உளவாகக் கருதினுனும். ஆகவே,

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள." (குறள் - புணர் - க.)

என்பதனேடு மாறுகொள்ளுமென்பது. இனித், தலைமகளை எய்தாதமுன் உடையனுயினுனேயெனின், முன்னும் இவன் கற்ற காலமின்றிக் காமத்துக்கண்ணே கெழுமிவருகின்றுனும்; ஆகவே நெறியால் வளர்ந்தான் அல்லனுமென்பது. மற்றென்னே உரையெனின், தலைமகளை எய்தாதமுன்னே பரத்தையரை உடையனென்பது. எனவே, மேற்சொல்லப்பட்ட குறை எய்தாதோ வெனின், எய்தாது. குரவர்கள் இவனறியாமையே இவனுரிமை இது வெனவும் இவன் யானையுங் குதிரையும் இவையெனவும் மற்றுமெல்லாம் இவற்கென்று வகுத்துவைத்துத் தாம் வழங்கித் துய்ப்பவென்பது. அவ்வகையே குரவர்களான் இவனுரிமையென்றே வளர்க்கப்பட்டாராகலான் தலைமகளை எய்துவதன்முன் உளரென்பது. இவன் முன்னே தன்னுரிமையாவது அறிந்தவாறென்னேயெனின், தலைமகன் தலைமகளை நீங்கித் தருமமும் அருத்தமும் உள் பட்டுத் தலைமகள் மாட்டுப் போதருமிடத்து, அவர் முன்சொன்னவாறே குழலும் யாழுந் தண்ணுமையும் முழவும் இயம்புப. இயம்பினவிடத்து இஃதென்னையென்னும்; என்றக்கால் அது நின் உரிமையன்றேவென்ப. என்றூர்க்கு, அஃது என் உரிமையாயினவாறு என்னையென்னும், என்றவிடத்து நின்குரவர்களான் நினக்குரிமையாக வகுக்கப்பட்டாரென்ப. ஆயின் நாங் குரவர் பணி மாறு

கொள்ளலாகாதென்பதனாற் காண்டற்குச் செல்லும்; சென்றானை அவர் தங்கண் நயப்பிப்ப வென்பது. இது பரத்தையிற்பிரிவு நிகழுமாறு.

அஃதேயெனின், மற்றைப் பிரிவெல்லாம் வேண்டுக, ஆள்வினைமிகுதி உடைமையான்; இஃது எற்றிற்கோ வேண்டியதெனிற், பரத்தையிற் பிரிந்தான் தலைமகனென்றால் ஊடலே புலவியே துனியே என்றிவை நிகழும். நிகழ்ந்தால் அவை நீக்கிக் கூடினவிடத்துப் பெரியதோர் இன்பமாய் அவ்வின்பத்தன்மையை வெளிப்படுப்பன அவையெனக்கொள்க. மென்சுவைமேலே நடந்தானோர் ஆசிரியனாகலான் இப்பிரிவுவேண்டினானென்பது. அஃதேயெனின் காதற்பரத்தை எல்லார்க்கும் உரியளென்றாகாதே சூத்திரஞ் செய்தற்பாலது, உரித்தென்று அஃறிணைவாய்பாட்டாற் சொல்லிற்று எற்றிற்கோவெனின், பிரிவதிகாரம் வாராநின்றமையாற் பிரிவும் உரித்தென்று சொல்லப்பட்டது. பரத்தையர்மாட்டுப் பிரியும் பிரிவின்கட் செய்யுள்:

தோழிகூறல்.

மைவா ரிரும்பொழில் வல்லத்துத் தெவ்வர்க்கு வான்கொடுத்த
நெய்வா யயினெடு மாறன்றென் னாடன்ன நேரிழையா
யிவ்வாய் வருவர்நங் காதல ரென்னவுற் றேற்கெதிரே
செவ்வாய் துடிப்பக் கருங்கண் சிவந்தன சேயிழைக்கே. (உஎஎ)

பரத்தையிற் பிரிந்த தலைமகன் பெயர்ந்து தோழியை வேண்டத் தோழி வாயின்மறுத்தாளென்பது. எங்ஙனம் வாயின் மறுத்தாளோ வெனின், எம்பெருமானது நிலை சொல்லலுற்றேற்கு, எனது குறிப்பறிந்து இத்தன்மையினள், இதற்குத் தக்கதறிந்து செய்யென்று வாயின்மறுத்தாளென்பது.

இனிப் பரத்தையிற்பிரிந்த தலைமகற்கு வாயிலாகப் புக்க பாணன் தலைமகளால் வாயின்மறுக்கப்பட்டு முன்னின்று நீங்கியதற்குச் செய்யுள்:

பாணன் புலந்துரைத்தல்.

சென்றே யொழிக வயலணி யூரனுந் தின்னத்தந்த
கன்றே யமையுங்கல் வேண்டாபல் யாண்டு கறுத்தவரை
வென்றே விழிஞங்கொண் டான்கடன் ஞால மிகவகலி
தன்றே யடியே னடிவலங் கொள்ள வருளுகவே. (உஎஅ)

மற்றும் வாயில்பெறாது பரத்தையிற் பிரிந்த தலைமகன் மகனை வாயிலாகக் கொண்டு புக்கானைக் கண்டு பொறாமை நீங்கவேண்டித் தோழி சொல்லியதற்குச் செய்யுள்:

பொறாமை நீக்கத் தோழிசொல்லியது.

இழுது நிணந்தின் றிருஞ்சிறைத் தெம்மன்ன ரின்குருதி
கழுது படியக்கண் டான்கன்னி யன்னமின் னேரிடையா
யழுது சுவற்சென்ற வக்கரை யானொடும் வந்தமையாற்
றொழுது வழிபடற் பாலை பிழைப்பெண்ண றேன்றலையே. (உஎகூ)

வாரார் சிறுபறை பூண்டு மணிக்கா சுடுத்துத்தந்தை
பேரான் சுவலி னிருப்பவந் தான்பிழைப் பெண்ணப்பெறாய்
நேரா வயவர் நெடுங்களத் தோடநெய் வேலினைந்த
பாரார் புகழ்மன்னன் றென்புன னாடன்ன பல்வளையே. (உஅO)

இது மேலதனோடு ஒக்கும் பொருட்டு. மகன்வாயிலாகப் புக்கவிடத்துத் தலைமகள் சிவப்பாற்றினாள்; அது குறிப்பறிந்து தோழி தலைமகற்கு இந்நிலையளாயினாளென்னும்; அதற்குச் செய்யுள்:

தலைவி ஆறியது தோழிகூறல்.

மிடைமணிப் பூண்மன்ன ரோட விழிஞத்து வென்றவன்றூட்
புடைமணி யானையி னன்கன்னி யன்னாள் பொருகயற்கண்

ணுடைமணி யாரொடு நீவர வூடற் சிவப்பொழிந்து
மடைமணி நீலத் தணிநிறங் கொண்டு மலர்ந்தனவே. (உ௮௧

பரத்தையிற்பிரிந்த தலைமகன் வாயில்பெற்றுப் புகுந்த தலைமகளைப் பொருமைநீக்கத் தலைமகள் பொருமைநீங்குவாள் சொல்லியதற்குச் செய்யுள்:

புனலாட்டிய வீரம் புலர்த்தி வருகென்றல்.

பங்கயப் பூம்புன லூடன் பராங்குசன் பாழியொன்னார்
மங்கையர்க் கல்லல்கண் டான்மணி நீர்வையை வார்துறைவா
வெங்கையைத் தீம்புன லாட்டிய வீரம் புலர்த்திவந்து
மங்கையிற் சேறடி நீண்டிச்செய் யீர்செய்யு மாரருளே. (உ௮௨)

இஃது என்சொல்லியவாறோவெனின், நீர் நெருநல் உற்று நுங்காதலியைப் புனலாட்டிய ஈரம் புலர்த்திவந்து எமக்குச் செய்யும் ஆரருள் செய்யீரென்றுளென்பது. (எ)

## ௪௧. பிரிவி னீட்ட நிலம்பெயர்ந் துறைவோர்க் குரிய தன்றே யாண்டுவரை யறுத்தல்.

என்பதென்னுதலிற்றோவெனின், தலைமகன் பிரிந்துறையும் இடத்துக் காலவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: பிரிவின் நீட்டம்—பிரிவினது நெடுங்காலைச் செலவு; நிலம்பெயர்ந்து உறைவோர்க்கு—இடத்தின் நீங்கி நாடிடையிட்டுங் காடிடையிட்டும் உறைவோர்க்கு; உரியது அன்றே யாண்டு வரையறுத்தல்—உரித்தன்று யாண்டு வரையறுத்துப் பிரிதல் என்றவாறு.

என்பதனாற் போந்தபொருள் யாதோவெனின், நாளுந் திங்களும் இருதுவும் வரையறுத்துப் பிரியுமென்பது. இன்ன நாளுள் வருதும் இன்ன திங்களுள் வருதும் இன்ன இருதுள் வருதுமென்று சொல்லிப் பிரியுமென்பது. நாட்

குறித்துப் பிரியலுறுந் தலைமகன் பிரிவுணர்த்திவிட்ட தோழி சென்று தலைமகட்குச் சொல்லியதற்குச் செய்யுள்:

கேளே பெருக்கு மரும்பொருள் செய்தற்குக் கேடிறிங்க
ளேளே குறித்துப் பிரியலுற் றார்நமர் தீயவிழி
யாளே கனலுங்கொல் யானைச்செங் கோலரி கேசரிதன்
வாளே புரையுந் தடங்கண்ணி யென்னோ வலிக்கின்றதே. (உஅ௩)

திங்கள் குறித்துத் தலைமகன் பிரிய வேறு ள் தலைமகள்; வேறுபட, ஆற்றாளெனக் கவன்ற ம தோ ஆற்றுவ லென்பதுபடத் தலைமகள் சொல்லியது, செய்யுள்:

வார்ந்தார் கருமென் குழன்மங்கை மாமிதிக் கென்றகன்ற
வீர்ந்தா ரவரின்று காண்பர்கொல் லோவிக லேகருதிச்
சேர்ந்தார் புறங்கண்டு செந்நிலத் தன்றுதிண் டேர்மறித்துப்
பேர்ந்தான் றனது குலமுத லாய பிறைக்கொழுந்தே. (உஅச)

என்பது என் சொல்லினளோவெனின், யான் ஆற்றேனென்று *வேறுபடுகின்றது, அவர் குறித்த திங்களது வரவு கண்டு தாமெடுத்துக் கொண்டபொருள் முடியாது பெயர்வர் கொல்லோவென †வேறுபடுகின்றே னென்றாளென்பது.

இனிக் காரென்னும் இருதுக் குறித்துப் பிரிந்தான் தலைமகன்; பிரியப், பருவவரவினைக் கண்டு வேறுபட்டாள் தலைமகள்; வேறுபட, ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவலென்பது படச் சொல்லியதற்குச் செய்யுள்:

‡ தொழித்தார் சிறைவண் டறைகுழ லாய்கங்கை சூழ்சடைமேல்
இழித்தான் மணிகண்டம் போல விருண்டன காரிகையே

---

* 'கவல்கின்றது' என்பதும் பாடம்.

† 'ஆற்றேனயது என்றாளென்பது' எனவும் பாடம் உண்டு.

‡ இச்செய்யுள் முன் அச்சுப்பிரதியில் விடுபட்டது; வேறோர் ஏட்டுப்பிரதியிற் கண்டமையின் இங்கெடுத்துச் சேர்க்கப்பட்டது.

விழித்தார் படவிழி ஞக்கடற் கோடித்தன் வெஞ்சுடர்வாள்
கழித்தான் குமரிநன் னீர்கொண் டெழுந்த கணமுகிலே. (உஅகு)

உளங்கொண்டு வாடின்று நட்டாற் றெதிர்ந்தா ருதிரவெள்ளங்
குளங்கொண்டு *தோற்பித்த கோனெடு மாறன்கை போலுங்கொண்
களங்கொண்டு கார்செய்த காலைக் களவின் கவைமுகத்த [டல்
விளங்கண் டகம்விட நாகத்தி னுவொக்கு மீர்ம்புறவே. (உஅசு)

எனவே என்சொல்லினளோவெனின், யான் ஆற்றேனு யன்று வேறுபடுகின்றது; அவர் குறித்த பருவம் வந்தது கண்டு தா மெடுத்துக்கொண்ட பொருள் முடியாது மீள்வர் கொல்லோ என்றுறறாற்றனுயதென்று ளென்பது.

பனியென்னும் இருதுக் குறித்துத் தலைமகன் பிரிய, அப்பருவ வரவின்கண் தலைமகள் ஆற்றுளாமெனக் கவன்ற தோழி சொல்லியதற்குச் செய்யுள்:

தோழி யுரைத்தல்.

சுழலும் வரிவண் டலம்பச் சொரிமதம் வாய்ப்புகநின்
றழலுங் களிற்றரி கேசரி தென்புன னுடனையாள்
கழலும் வரிவளை காக்கவந் தின்று கனலுஞ் செந்தீத்
தழலுங் குளிர்ந்து பொடிப்படப் போர்க்கின்ற தாழ்பனியே. (உஅஎ)

தனியார் தகைநலம் வாட்டுங்கொ லாற்றுக் குடிதனது [லைக்
குனியார் சிலையொன்றி னுல்வென்ற கோன்கொங்க நாட்டகொல்
கனியார் களவி னகமுட கதிர்முத்தங் கோப்பனபோற்
பனியார் சிதர்துளி மேற்கொண்டு நிற்கும் பருவங்களே. (உஅஅ)

இளவேனிலென்னும் இருதுக் குறித்துத் தலைமகன் பிரிந்த விடத்து, அப்பருவவரவின்கண் தலைமகள் ஆற்றுளா மெனக் கவன்ற தோழி சொல்லியதற்குச் செய்யுள்:

---

* 'கோப்பித்த' என்பதும் பாடம்.

தோழி கவன்றுரைத்தல்.

வானலங் கொண்டகை யான்மன்னன் மாறன்றன் மாந்தையன்ன
டானலந் தேயப் பனியோ கழிந்தது தண்குவளைத்
தேனலம் போது வனாய்வந்து தண்டென்ற தீவிரியும்
வேனலங் காலமெவ் வாறு கழியுங்கொல் மெல்லியற்கே. (உ௮௯)

வேனிற் பருவங் குறித்துப் பிரிந்த தலைமகன் பிரியத் தலைமகள் வேறுபட, ஆற்றாளாயினாளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவலென்பதுபடத் தலைமகள் சொல்லியதற்குச் செய்யுள்:

ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குரைத்தல்.

மெல்லிய லாய்நங்கண் மேல்வெய்ய வாய்விழி ஞத்துவென்ற
மல்லியற் றேண்மன்னன் சென்னி நிலாவினன் வார்சடையோன்
வில்லியல் காமனைச் சுட்டவெந் தீச்சுடர் விண்டவன்மேற்
செல்லிய பாரித்த போன்றன பிண்டியின் றேமலரே. (உ௯௦)

எங்ஙனம் ஆற்றுவலென்பது படச் சொல்லினாளோ வெனின், இவ்வேனிலது வரவின்கண் நம்மேல் இவ்வகையே வெய்யவாகி விரியாநின்ற பிண்டிமலர் அவற்கு மிவ்வகை வெம்மையைச் செய்யுமன்றே? செய்தவிடத்துத் தாமெடுத்துக்கொண்ட பொருள்முடியாது மீள்வர்கொல்லோவென ஆற்றேனாகின்றேன் என்றாளென்பது. இச்சூத்திரந் தலைப் பாய்ச்சல்; *'வேந்தற்குற்றுழி' (இறையனார்-௩௬) என்னுஞ் சூத்திரத்துடன் நோக்குடைத்தென்பது. (அ)

சஉ. **பரத்தையிற் பிரிவே நிலத்திரி பின்றே.**

என்பதென்னுதலிற்றோவெனின், பரத்தையிற்பிரியும் பிரிவு நாடிடையிட்டுங் காடிடையிட்டும் நீங்கி உறைதல் இல்லையென்ப துணர்த்துதல் நுதலிற்று.

---

* " 'காதற்பரத்தை யெல்லார்க்கு முரித்தே' என்னுஞ் சூத்திரத்தோடு நோக்குடைத் தன்று" என்பதும் பாடம்.

மேற் சூத்திரத்திற் பிரியுங்காலத்து நாடிடையிட்டுங் காடிடையிட்டும் பிரிதல்போ லில்லை யென்றவாறு.

இதன்பொருள்: பரத்தையிற் பிரிவே—பரத்தையர் மாட்டுப் பிரியும் பிரிவு; நிலத்திரிபு இன்றே—இடத்திரி பின்று என்றவாறு.

எனவே, ஒரூரதென்பதூஉம் ஓரிடத்ததென்பதூஉம் உணர்த்தப்பட்டதாம். இனி ஒரு திறத்தார் தன்னிடத் தென்பது சொல்லுதல் பொருந்தாது; "மான்றேர் மாமணி கறங்கக் கடைகழிந்து" எனவும் "வருகதில் லம்ம வெஞ் சேரி சேர" எனவும் இவை எல்லாஞ் சான்றோர் செய்யுளும் உண்மையின். இந்நிலத்து நீங்காதெனவே ஒரூர தென்பது பெறப்பட்டது. பட்டமையால் தன்னிடத்ததாக வும் பெறுந், தன்னிடத்து நீங்கிச் சேரியதாகவும் பெறு மென்பது. இனி ஓரிடத்ததென்பதனைத் தலைமகன் இடம் பெரிதாகலான் தலைமகளது இடமும் பரத்தையர் சேரியும் வேறாய் நீங்கி இருக்கும், அதனுள்ளே செய்குன்றமும் நந் தனவனமும் வாவியும் விளையாடிடமும் எல்லாம் உடைத்தா யிருக்குமென்பது. (௧)

சஙு. பரத்தையிற் பிரிந்த கிழவோன் மனைவி
பூப்பின் புறப்பா டீரறு நாளு
நீத்தகன் றுறைத லறத்தா றன்றே.

என்பதென்னுதலிற்றோவெனின், தலைமகன் பரத்தை யிற் பிரிந்த இடத்துத் தலைமகட்குப் பூப்பு நிகழ்ந்த காலத் துத், தலைமகன் இவ்வாறு ஒழுகுமென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: பரத்தையிற் பிரிந்த கிழவோன் மனைவி—புறப்பெண்டிர்மாட்டுப் பிரிந்த தலைமகன் மனைவி; பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்—கிழத்தி பூப்புப் புறப்பட்ட நாண்முதற் பன்னிருநாளும்; நீத்து அகன்று உறைதல் அறத்தாறு அன்றே—நீத்தும் அகன்றும் உறைதல் அறநெறியன்று என்றவாறு.

எனவே, நீயாதும் அகலாதும் உறைதல் அறநெறியென்றவாறும். என்பது சொற்கேட்கும் வழியுங் கூடியும் உறைகவென்றவாறும். இவ்வாறு உறைதல் செயற்பான்மைய தென்றவாறு.

அஃதாமாறு: தலைமகன் பரத்தையிற்பிரிந்த காலத்துத் தலைமகட்குப் பூப்புத் தோன்றிற்று. தோன்றத் தலைமகன் உணரும். எங்ஙனம்உணருமோவெனின் வாயில்கள் உணர்த்தவே உணருமென்பது. என்னை வாயில்கள் உணர்த்துமாறெனின், தலைமகன் வாயில்களுந் தலைமகள் மாட்டு உளவாம்; தலைமகள் வாயில்களுந் தலைமகன்மாட்டு உளவாம்; ஆதலான் அவர்களால் உணருமென்பது. அல்லதூஉந் தலைமகள் தமரன்றே தலைமகற்கு நாளானும் படிமக்கலத்தொடு செல்வார், அற்றைநாளாற் செங்கோலத்தொடு செல்ல உணருமென்பாருமுளர். இனி ஒருதிறத்தார் பூப்பு நிகழ்ந்த நாளாலே சேடியைச் செங்கோலஞ்செய்து செப்புப்பாலிகையுட் செம்பூவும் நீருங்கொண்டு தலைமகனை வலங்கொண்டு பூவும் நீரும் அவன் அடிமேற் பெய்துபோக உணரும் என்பாருமுளர். இது மேலாயினாரிடங்களிற் பூப்பு உணர்த்துமாறென்று இவ்வகை சொல்லுவர். நல்லது அறிந்துகொள்க. இவ்வகை பூப்பு உணர்த்தப்பட்ட தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதற்குச் செய்யுள்:

நெஞ்சிற் குரைத்தல்.

* மஞ்சா ரிரும்பொழில் வல்லத்து வாண்மன்னர் போரழித்த
வஞ்சா வடுகளி யானையி னானகன் ஞாலமன்ன
பஞ்சா ரகலல்கு லாடன்மை சொல்லும் பணைமுலைமேற்
செஞ்சாந் தணிந்துவந் தான்செய்த கோலத்தின் சேயிழையே.

இவ்வகையாற் பூப்புணர்த்தப்பட்ட தலைமகன் வாயில்களோடுஞ் சென்று தலைமகளிடத்தானைப் முந்நாளுஞ் சொற்கேட்கும்வழி உறைவானாவது. உறைந்தபின்னை ஒன்பது நாளுங் கூடி உறைவானாவது. முந்நாளுஞ் சொற்கேட்கும்வழி உறைதற்குக் காரணம் என்னையெனின், தலைமகன் பரத்தையர் மாட்டானாகி முன்னின்ற பொருமை உண்டென்று எய்தும். முந்நாளுஞ் சொற்கேட்கும்வழி உறையவே நீங்கும். நீங்கிய பின்றைக் கூடும். ஆகவே கருநின்றது மாட்சிமைப்படும். அதுநோக்கி உணர்த்தப்பட்டது. அதனான் அறமெனப்பட்டது. அல்லா விடில் தலைமகண்மாட்டு ஓர் பொருமை தோன்றும், பரத்தையர்மாட்டு நின்று வந்தானெனை; அப்பொருமை ஒரு வெகுளியைத் தோற்றுவிக்கும்; அவ்வெகுளி பெரியதோர் வெம்மையைச் செய்விக்கும்; அவ்வெப்பத்தினாற் கருமாட்சிப்படாதாம்; படாதாமாகவே அறத்தின் வழூவாமென்பது. அதனான் முந்நாளுஞ் சொற்கேட்கும் வழி உறையல் வேண்டுமென்பது. பூப்புப் புறப்பட்ட முந்நாளும் உள்ளிட்ட பன்னிருநாளு மென்பது துணிவு என்னார்க்கு முந்நாளுங் கூடி உறையப்படுங் குற்றமென்னோ எனின், பூப்புப் புறப்பட்டஞான்று நின்ற கரு வயிற்றில் அழியும், இரண்டாம் நாள் நின்ற கரு வயிற்றிலே சாம்,

---

* 'மஞ்சா ரிருப்பொழில் வாண்மன்ன ரேத்தான் யார்த்தை வென்ற' என்பதும் பாடம்.

மூன்றும் நாள் நின்ற கருக் குறுவாழ்க்கைத்தாம், வாழினுந் திருவின்றாம்; அதனாற் கூடப்படாதென்பது.

"பூப்புமுதன் முந்நாட் புணரார் புணரின்
யாப்புறு மரபின் *ஐயரு மமரரும்
யாத்த காரண மழியுமென்ப."

எனப் பிறரும் ஓதினாராகலான் அமையாதென்பது. (சo)

சச.

**கற்பினுட் பிரிந்தோன் பரத்தையின் மறுத்தந்**
**தப்பொருட் படுப்பினும் வரைநிலை யின்றே.**

என்பதிதென்னுதலிற்றோவெனின், மேலைச்சூத்திரத்திற்கு உரியதோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: கற்பினுட் பிரிந்தோன்—பரத்தையர் சேரியனாய்ப் பூப்பு உணர்த்தப்பட்ட தலைமகன்; பூப்பு நிகழ்ந்தது முதன் மூன்றுநாளும் வந்து சொற்கேட்கும்வழி உறைவானாயின், தலைமகன் கற்பினுட் பிரிந்தோனெனப் படான். கற்பென்பது பூப்பு; அப்பூப்புக் கற்புக்காலத் தன்றிக் களவுக்காலத்து நிகழாமை நோக்கிப் பூப்பினையுங் கற்பென்று சொல்லினாரென்பது. பரத்தையின் மறுத்தந்து—†அம்மூன்று நாளுங் கழித்துப் பரத்தையர் சேரி நின்று நீங்கி வருவது; அப்பொருட் படுப்பினும்—அறத்தாறுபடுப்பினும்; அறத்தாறு படுத்த லென்பது தலைமகளை வாயில்களால் சிவப்பாற்றுவித்துக் கொண்டுபுக்குத் தலைமகளொடு புணர்தல். வரைநிலை இன்றே—குற்றமெனப்படாது அத்துணைச் சிறப்பின்றாயினும் என்றவாறு.

---

* 'முனிவரும்' என்பதும் பாடம்.

† 'அம் மூன்றுநாளுங் கழிந்து பரத்தையருண்ணின்று நீங்கி வருதல்' என்பதும் பாடம்.

தலைமகளை வாயில்களாற் சிவப்பாற்றுவித்தற்குச் செய்யுள்:

சிவப்பாற்றுவித்தல்.

பொன்னார் புனலணி யூரன்வந் துன்னிற் புறங்கடையா
னென்னா வளவிற் சிவந்தாள் சிவந்து மியல்வதன்று
லன்னா யெனச்சிவப் பாற்றினள் வல்லத் தரசவித்த
மின்னா ரயின்மன்னன் றென்புன னாடன்ன மெல்லியலே. (உ௬உ)

சரு. புகழுங் கொடுமையுங் கிழவோன் மேன.

என்பதென்னுதலிற்றோவெனின், தலைமகற் குரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: புகழும் கொடுமையும்—புகழென்பது, தக்கானெனப்படுதல்; கொடுமையென்பது, தகானெனப்படுதல்; கிழவோன் மேன—அவை இரண்டுந் தலைமகன் கண்ண என்றவாறு.

எனவே இத்தன்மைத்துத் தலைமகன் ஒழுகலாறும். அஃதாமாறு தலைமகண்மாட்டு உறைந்தக்கால் தக்கானெனப்படுதலும், பரத்தையர்மாட்டு உறைந்தக்கால் தகானெனப்படுதலும் என்றவாறு.

யாராலோ அவை சொல்லப்படுவதெனின் வாயில்களானெனக் கொள்க. அவர் புகழுடையனென்பதற்குச் செய்யுள்:

தக்கானென்றல்.

கோடிய நீள்புருவத்து மடந்தை கொழும்பணைத்தோள்
வாடிய வாட்ட முணர்ந்து மனையிடை வந்தமையா
லாடியல் யானை யரிகேசரிதெவ்வர் போலகன்று
நீடிய காதலர் தாமே பெரியரிந் நீணிலத்தே. (உ௬௩)

இனி அவர் தகானென்றதற்குச் செய்யுள்:

தகானென்றல்.

விண்டுறை தெவ்வர் விழிஞத் தவியவென் வேல்வலங்கைக்
கொண்டுறை நீக்கிய கோன்வையை நாடன்ன கோல்வளையிவ்
வண்டுறை கோதை வருந்தனல் லாரில்லில் வைகுதலாற்
றண்டுறை சூழ்வய லூரன் பெரிதுந் தகவிலனே. (உ௩௪)

## சசு. கொடுமை யில்லைக் கிழவி மேற்றே.

என்பதென்னுதலிற்றோ வெனின், தலைமகளது பெருமை உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: கொடுமை இல்லை—தக்காளெனப் படுதலல்லது தகாளெனப்படுதல் இல்லை; கிழவி மேற்றே—தலைமகண்மாட்டு என்றவாறு.

தலைமகள் எக்காலத்தும் ஒருதன்மையள் என்றவாறு. என்றதன் கருத்துத் தலைமகன் தன்மாட்டு வந்து உறைந்த காலத்தே தக்காளாய்ப் பரத்தையர் மாட்டுச்சென்றுஉறைந்த காலத்துத் தகாளாங்கொல்லோவெனின், ஆகாளென்றவாறு. அதற்குச் செய்யுள்:

தலைவிசிறப் புரைத்தல்.

நிரந்தாங் கெதிர்ந்தா ரவியநெல் வேலித்தன் னீள்சிலைவாய்ச்
சரந்தான் றுரந்துவென் றுன்றமிழ் நாடன்ன தாழ்குழலாள்
பரந்தார் வருபுன லூரன்றன் பண்பின்மை யெங்களையுங்
கரந்தாள் கடலிட மெல்லாம் புகழ்தருங் கற்பினளே. (உ௩௫)

தலைமகன் பரத்தையர்சேரியனாகத் தலைமகள் பக்கற் புக்க பாணன் தலைமகளது நிலைமைகண்டு தன் விறலிக்குச் சொல்லியது. (௧௩)

## சஎ. கிழவோன் முன்னர்க் கிழத்தி தற்புகழ்தல் புலவிக் காலத்துப் புரைவ தன்றே.

என்பதென்னுதலிற்றோவெனின், தலைமகள் திறத்து இன்னதோர் குணமுண் டென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: கிழவோன் முன்னர்க் கிழத்தி தற் புகழ்தல்—தலைமகன் முன்னர்த் தலைமகள் தன்னைப் புகழ்தல்; புலவிக் காலத்துப் புரைவது அன்றே—புலவிக்காலத்தன்றே அஃதுரித்தாவது அல்லாக்காலத்துத் தக்கதன்று என்றவாறு.

எனவே தலைமகள் எவ்விடத்துந் தன்னைப் புகழப் பெறுளென்பது. எனவே தலைமகளது பெருமைபெற்றும். இனிக் கிழவி தற்புகழ்தல் பெறுளெனவே பரத்தை தற்புகழப் பெறுமென்பது பெற்றும். இவ்வாறு பரத்தை தற்புகழ்தற்குச் செய்யுள்:

பரத்தை தற்புகழ்தல்.

வெஞ்சுடர் நோக்கு நெருஞ்சியி னூரனை வெண்முறுவற்
செஞ்சுடர் வாண்முகத் தாண்முன்னை யென்பாற் றிரியலனே
லஞ்சுடர் வேலரி கேசரி கோளம ணட்டுடைந்தார்
தஞ்சுடர் வாட்படை போல வுடைகவென் சங்கங்களே.

பிறவும் அன்ன கண்டுகொள்க. (கச)

சஅ. நாடு மூரு மில்லுஞ் சுட்டித்
தன்வயிற் கிளப்பிற் புலவிப் பொருட்டே.

என்பதென்னுதலிற்றோ வெனின், தலைமகள் தற்புகழ்ந் தாளாகற்க, இவ்வாறு சொல்லியக்கால் அதுவும் புலவி நிமித்தமென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: நாடும் ஊரும் இல்லுஞ் சுட்டி—நாடே ஊரே இல்லே இவற்றைக்கருதி; தன்வயிற் கிளப்பிற் புலவிப் பொருட்டே—தன்கட் சொல்லிடிற் புலவிப் பொருட்டாம் என்றவாறு.

தான் உறையும் நாட்டையுந் தன் ஊரையுந் தான் பிறந்த குடியையுஞ் சொல்லித் தலைமகள் தற்புகழ்ந்தாளாகற்க; இவ்வாறு சொல்லியக்கால் இது புலவிப் பொருட்டாமென்றவாறு. அஃதாமாறு, எந் நாடு இறப்பவுஞ் சிறியாராலே வாழப்படுவதெனவும்,

"குறும்புகு ழிருக்கை மறந்தலை மணந்து
சிறுகூழ் வல்சியிற் சில்வரை யிற்றே
யந்நாட் டுள்ளு மெம்மூ ராமே
புல்வாய் வலக்கொல் லேசிதர் பற்றி
வளாநனி குறைந்த வாரித் தன்றே
அவ்வூ ருள்ளும் பிறந்த வில்லங்
கல்லாச் சிறியோ ருள்ள மன்றே."

எனவுஞ் சொல்லுதல். அன்னசிறியோரொழுக்கம் நுமக்குத் தகாதன்றே? அல்லதூஉம் எம்பெருமாற்கெனின் இறப்பவும் பெருந்தன்மையவன்றே? அந்நீர்மையர்க்கு இவ்வாறு தலையளி பொருதன்றே எனச்சொல்லுதல். இவ்வாறு சொல்லியவிடத்துத் தலைமகன்மாட்டுப் புலவியே கொள்ளக் கருதிச் சொன்னாளா மென்பது. அதற்குச் செய்யுள்:

தலைவி தற்புகழ்தல்.

வெறிதரு பூந்தார் விசாரிதன் வேலைமுந் நீர்வரைப்பி
னெறிதரு கோல்செல்லு மெல்லையுள் ளேமல்ல நீர்மையில்லாச்
சிறியவர் வாழ்பதி யேயெம தில்லஞ் சிறிதெமக்கே
யெறிபுன லூரவெவ் வாறு மமையுநின் னின்னருளே.　　　(உகஎ)

சகூ.

## அவன்வயிற்கிளப்பின் வரைவின்பொருட்டே.

என்பதென்னுதலிற்றோவெனின், இவ்வாறு சொல்லின் வரைவின்பொருட்டா மென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: அவன் வயின் கிளப்பின்—நாடும் ஊரும் இல்லுஞ் சுட்டித் தலைமகனைச் சார்த்திச் சொல்லின்; வரைவின்பொருட்டே—வரைதலென்பது நீக்கிநிறுத்தற் பொருளவாம் என்றவாறு.

யாதனை நீக்கிநிறுத்தலோவெனின், புலவியை நீக்கி நிறுத்தல். அஃதென்னைபெறுமாறெனின், மேற் சூத்திரத்திற் புலவியென்று அதிகாரம் வாராநின்றதாகலானென்பது. பரத்தையை மறுத்தந்து வாயிலாற் புக்க தலைமகனை ஏற்று எதிர்கொண்டு வழிபட்டாள் பின்னைக் காரணத்தின்நீங்கிய பொறாமை காரணம் பெற்றுத் தோற்றிற்று. அது தோன்றத் தலைமகனை ஒன்றின் தலைக்கீடாகச் சொல்லுதல், எம்பெருமான் நீர் பெரிதாய நாட்டிற் பெரிதுமிக்க ஊரிற் *பெரிது மிக்க குலத்திற் பிறந்த பேரொழுக்கத்தினிர்க்குத் தக்கதே சிறியேமாகிய எந்திறத்துத் தலையளி எனச் சொல்லுதல். இவ்வாறு சொல்லுவாள் புலவிநீக்குவான் சொல்லிற்றாகவென்பது. அவ்வாறு சொல்லியதற்குச் செய்யுள்:

பெரியீர்க் கிது தகாதென்றல்.

வரியவண் டார்தொங்கன் மான்றேர்வரோதயன்வல்லத்தொன்னார்
கரியவை வேல்கொண்ட காவலன் காக்குங் கடலிடம்போற்
பெரியநன் னாட்டுப் பெரியநல் லூரிற் பெரியவில்விற்
குரியமிக் கீர்க்கியல் பன்றுகொ லிவ்வா றுரைப்பதுவே. (உகஅ)

இச்சூத்திரத்தைப் பருந்துவீழ்க்காடாகக் கிடந்ததென்று களவினுள் வரைவின் பொருட்டாக என்பாருமுளர். அது பொருத்தமன்று. என்னை? 'வரைதல்வேட்கைப் பொருள' (இறையனார்-௩௦.) என்ற சூத்திரத்துள்'அன்னமரபிற்பிறவுந் தொகைஇ' என்றவழி அடங்கும். அல்லதூஉங், கற்பினுட் களவுகொணர்ந்துரைத்தல் பொருந்தாது. (கசு)

---

* 'பெரிதுமிக்க இல்லத்தில்' என்பதும் பாடம்.

௩௦. உணர்ப்புவயின் வாரா வூட றோன்றிற்
புலத்த றானே கிழவற்கும் வரையார்.

என்பதென்னுதலிற்றோவெனின், தலைமகட்கே உரியதோர் இலக்கணம் ஓரிடத்துத் தலைமகற்கும் உரித்தென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: உணர்ப்புவ்யின் வாரா ஊடல் தோன்றின்—உணர்த்துதற்கு இடம்வாரா ஊடல் தலைமகட்கு வெளிப்படின்; புலத்தல் தானே கிழவற்கும் வரையார்—புலந்து சொல்லுதற்றன்மை தலைமகற்கும் வரையார் என்றவாறு.

அது தலைமகட்கே உரித்தன்று; அவை இந்நேரத்துக் கண் தலைமகற்கும் உரித்தென்றவாறு. தலைமகள் மாட்டு ஊடல் தோன்றுமிடத்து மூன்றுவகையுள் தோன்றும், செய்தான்கொல்லோவெனவுஞ் செய்யாநின்றான்கொல்லோ வெனவுஞ் செய்வான்கொல்லோவெனவும். அவற்றுட் செய் தான்கொல்லோவெனப் பிறத்தலென்பது, பரத்தையைத் தேரேற்றினான், பூச்சூட்டினான், அவளோடு ஆடினான்கொல் லோ, பிரிந்தான்கொல்லோ வெனப்பிறப்பது. இச் செய்தா னென்பது இறந்தகாலத்துத் துணிபுபற்றிநிகழ்வது. இனிச் செய்வான் கொல்லோ வென்பது எதிர்காலத்துச் செய்யுங் கொல்லோவென நிகழ்வது. அவற்றுள் இறந்தகாலத்தே தான்நிகழ்ந்தது உணர்த்துதற்கு இடனுடைத்தன்று; தெற் றென அறிந்தேன் அல்லாதேன் எம்பெருமானை வருத்து வேனோவெனவுந் தானேயும் மீண்டு நிலையுடைத்து, பிறர் சிறிது சொல்லவும் மீண்டு நிலையுடைத்து. இனி எதிர் காலத்தே நிகழ்வது மீண்டு நிலையுடைத்து, தெற்றென அறிந்தேன் அல்லாதேன் ஒருகாலத்து நிகழ்வதெனக் கரு

துதல் பொருந்தாது. என்னை? யாறு வருகின்றதென்று ஆடை தலைச்சூடாரன்றே என்பது. இனி இறந்த காலத்துத் துணிவுபற்றி நிகழ்ந்ததுண்டன்றே, அஃதெல்லாரும் உணரச் செய்தானாகலான் அஃது உணர்த்துதற்கு இடமன்று, அது செய்திலேனென்று சொல்லிவிடின் அது மறைவதன்றாகலானென்பது. இனி மறுப்பானாகிற் செய்தனமேலுஞ் செம்பூச் சிதறினாற் போலக் கொடுமை யுடைத்தாம். அதனாலஃது உணர்த்துதற்கு இடனன்றாயிற்றென்பது அவ்வூடல் தோன்றுமெனின் என்றவாறு.

எனவே, எந்நேரத்துக்கண்ணே தோன்றுவதெனிற் சொல்லுதும். பரத்தையர் சேரியினின்றும் வந்ததோழியை வாயிலாகக் கொண்டான்; கொள்ளத் தோழிபுக்குப் பல காரணமுங் காட்டினாள்; காட்டுவாள் நாம் இல்லிருந்து இறைவழிபட்டு மக்களை வளர்த்து விருந்து புறந்தருவதல்லது போகத்துள்ளாமன்றே, அல்லாதேம் ஊடலும் புலவியுந் துனியுங் கொள்ளற்பாலமல்லம், அல்லதூஉம் வண்டோரனையர் ஆடவர் பூவோரனையர் மகளிரென்பது; என்னை? *வண்டுகள் தாதூதுமிடத்து நன்மலரே ஊதுவேம் அல்லாதது ஊதேமென்னா, எல்லா மலரும் ஊதும்; இனிப் பூவாயினக்கால் எம்மையே ஊதாது எல்லாப்பூவும் ஊதினீரென்று புலவாதன்றே; அதுபோலத் தலைமகனும் எல்லாப் பெண்பால்களையுந் தலைப்பெய்தற்றன்மையாக வுடைமையான், அத்தன்மை அறிவான்; போம்பொழுது புறந்தொழுது வரும்பொழுது எதிர்தொழுது எற்றுக்கொண்டு வழிபடுதலல்லது மலைத்தற்கண்ணேமல்லம்; மலைத்து இப்பெற்றிய மாதல் தலைமையன்று; அல்லதூஉம்

* வேறோர் ஏட்டுப்பிரதி நோக்கி இப்பகுதியிற் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

இவ்வாறே வழிபடாதொழிவாமல்லாதாம் நம்பெருமா னருத்தி என்செய்துமென்று ஏற்றுக்கொண்டு வழிபடுவது பொருள்போலக்காட்டுமென்று இங்ஙனஞ் சொல்ல, அஃ தொக்கும்பிறவென்று அப்பொழுதைக்குச் சிவப்பு நீங்கிப் புகுதுகவென்றாள். என, அவன் புக்கான். புக்குப் பள்ளி யிடத்தானாக, உள்ளுடைத்தாகிய சிவப்புத்தோன்று மென் பது; தோன்றக்கண்சிவந்து நுதல்வேறுபட்டுக் காட்டினாள்; காட்டப் பெரிதும் ஆற்றானாயினான்; ஆற்றாத்தன்மையனே யாய் இறந்தகாலத்து நிகழ்ந்ததனைப் பற்றிப் புலந்து சொல் லும். என்னை? மேலைக்காலத்து நாம் ஆற்றுமாகத் தான் ஆற்றாளாய் நாம் ஆற்ற ஆற்றிவருகின்றவள் இவளே, இற் றையினாங்கு நாம் ஆற்றாமாயது அறியாமையால் இவ்வாற்றா மை * என்னையாற்றிலாமையால் இவள் நங்காதலியல்லள், அவள்போல்வதோர் தெய்வம், நீ அவளெனக் கருதினாய், நெஞ்சே நினது மடமையால் அவள் யாராகியாளென நெஞ்சிற்குச் சொல்லியதற்குச் செய்யுள்:

தலைமகன் நெஞ்சிற் குரைத்தல்.

இல்லென் றிரவலர்க் கீதல்செய் யாதவ னில்லமெனப்
புல்லென்று வாடிப் புலம்பனெஞ் சேமக் கியார்பொருந்தார்
வில்லொன்று சேர்பொறி வானவன் வாட விழிஞங்கொண்ட
கொல்லொன்று வாட்படை யான்றமிழ் நாடன்ன கோல்வளையே.

அரையணங் குந்துகி லாளல்ல ளாற்றுக் குடியில்வென்ற
வுரையணங் குந்தமிழ் வேந்த னுசிதனொண் பூம்பொதியில்
வரையணங் கோவல்லை யோவென்ன யான்மம்ம ரெய்தவுண்க
ணிரையணங் கும்பனி நீர்கொள்ள நின்றவிந் நேரிழையே. (ருOO)

என்பது, தலைமகன் நெஞ்சிற்குச் சொல்லியது. அது கேட்ட தலைமகள், மேனாள் யான் செய்த குற்றேவல் இன்று

* 'என்னாற்றிலாமையில்' என்பதும் பாடம்.

உட்கொள்வானாயிற்று என் கண்ணின்ற பேரருளினானன்றே, இவ்வகைப் பேரருளினான்திறத்து இவ்வகை சிவத்தறகா தென்று சிவப்பு நீங்குவாளாவது. (௬௭)

**௩௧. நிலம்பெயர்ந் துறையு நிலையியன் மருங்கிற் களவுறை கிளவி தோன்றுவ தாயிற் றிணைநிலைப் பெயர்க்கோள் கிழவற்கும் வரை [யார்.**

என்ப தென்னுதலிற்றோவெனின், இன்னுங் கற்புக்காலத்துத் தலைமகற்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: நிலம் பெயர்ந்து உறையும் நிலையியன் மருங்கின்—நிலம்பெயர்ந்து உறையுமென்பது உள்ளத்துக் கண் நிலைபெற்றவிடத்து; களவுறை கிளவி தோன்றுவது ஆயின்—களவுகாலத்திற்குரிய சொல் தலைமகள் மாட்டுத் தோன்றுமேயெனின்; திணைநிலைப் பெயர்க்கோள் கிழவற்கும் வரையார்—திணைநிலையைப்பெயர்த்துகொள்ளுங் கோள் தலைமகற்கும் வரையார் என்றவாறு.

அஃதாமாறு தலைமகளை எய்திக் கற்புக்காலத்து ஒழுகாநின்ற நிலைமைக்கண் நெஞ்சு பொருட்குப் பிரிதும் என்றதென்பது. நட்டாரை யாக்கலுஞ் செற்றாரைச் சிதைத்தலும் பொருட்குறைபாடு உடையார்க்கு நிகழாவாகலாற் குறைபாடு நீக்கற் பொருட்குப் பிரிதுமென்ற நெஞ்சிற்குத், தலைமகன் நாம் பொருட்குப்பிரிய இவள் ஆற்றுமேற் பிரிதும், ஆற்றாளாயின் ஒழிதுமென்று நெஞ்சினோடு ஒருப்பட்டுத் தலைமகளுழைப்புக்கான்; புக்குப் பள்ளியிடத்தானாய்ப் பெரியதோர் அருளிச் செய்கை செய்தான்; செய்யத் தலைமகள், எம்பெருமான் பண்டும் அருளிச் செய்கை

செய்தான்மன், இவைபண்டையபோலாது, பெரிதும் இழுமத்தக்கனபோலக் காட்டின, பிரியக்கருதினன் கவடுபோலும், மற்று நின்னிற்பிரியேன் பிரியின் ஆற்றேன் என்று சொல்லுஞ்சொற் பொய்படாதாம், பொய்யென்னுமொழுக்கங் குறைபாடாமது பிற வெனின் என்று ஆற்ருளாயினள். அவ்வாற்ருத்தன்மை தலைமகற்குப் புலனாயிற்ருகலான், இவள் குறிப்பினனே பிரிவுணர்ந்து ஆற்ருளாயினள், பிரியின் இறந்துபடு மென்று தலைமகன் நெஞ்சிற்குச் சொல்லியதற்குச் செய்யுள்:

நெஞ்சிற் குரைத்தல்.

துளியுந் துறந்தவெங் கானஞ் செலவின்று சொல்லுதுமே
லொளியுந் திருநுதல் வாடியுய் யாள்கொ லுசிதனென்ற
தெளியுஞ் சுடரொளி வாண்மன்னன் செங்கோ லெனச்சிறந்த
வளியும் பொழுதுநெஞ் சேனைய நின்றவிவ் வாயிழையே. (௩0௧)

இவ்வண்ணம் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியதற்குச் செய்யுள்:

செலவழுங்கல்.

மையார் தடங்கண் வரும்பனி சோர வருந்திநின்றிந்
நெய்யார் குழலா ளினைய நறையாற்று நின்றுவென்ற
கையார் கொடுஞ்சிலைச் செங்கோற் கலிமதன் காய்கலிக்கு
வெய்யான் பகையென நீங்குது மோநெஞ்சம் வெஞ்சுரமே. (௩0௨)

செருமால் கடற்படைச் சேரலர் கோனறை யாற்றழியப்
பொருமால் சிலைதொட்ட பூழியன் மாறன் பொருமுனைபோ
லருமா நெறிபொருட் கோசெல்வ தன்றுநெஞ் சேயவடன்
பெருமா மழைக்கண்ணு நித்திலந் தந்தன பேதுறவே. (௩0௩)

இவ்வாறு நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கும்.

"மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே
யரும்பிய சுணங்கி னம்பகட் டிளமுலைப்
பெருந்தோ ளுணுகிய நுசுப்பிற்
கல்கெழு கானவர் நல்குறு மகளே" (குறுந் - எக.)

இவ்வாறுமினைந்து பாலைநிலத்தானாயினான் செலவழுங்கி மருதநிலத்தா னாயினானெனக்கொள்க. இது 'திணைநிலைப் பெயர்க்கோள்' கிழவற்கு உண்டாயினவாறு. பிரிவினைவேண் டாதாள் தலைமகளாயினுந் தலைமகனும் வேண்டாதானாக லின் இந்நேரத்துக்கண் என்றவாறு.

இன்னும் 'நிலம்பெயர்ந்து உறையும் நிலையியன் மருங் கின்' என்பது உடன்கொண்டு போவேனெனத் தலைமகன் உள்ளத்தின்கண் நிலைபெற்றவிடத்தென்றவாறு.

'களவுறை கிளவி' என்பது களவுறைந்த காலத்திற்கு உரியசொல், அறத்தொடுநிலை யென்றவாறு. 'தோன்றுவதா யின்'என்பது தலைமகன்மேல் தோழிமாட்டுத் தோன்றுமே யெனின் என்றவாறு. 'திணைநிலைப்பெயர்க்கோள் கிழவற்கும் வரையார்' என்பது பாலைநிலத்தானாயினான் மருதநிலத்தா னாயினா னென்பது. கிழவற்கும் வரையாரென்ற உம்மை யாற் கிழத்திக்கும் வரையாரெனக் கொள்க. இவளும் உடன்போக்கு ஒட்டி பாலைநிலத்தாளாயினாள், இவன் ஒழிந்தமை சொல்ல மருதநிலத்தாளாயினாளெனக் கொள்க. மேல் உடன்போக்குச் சூத்திரத்துக்கண் உரைக்கும் பொ ருள் ஈதென்று கொள்க.

"பொருள்வயிற் பிரியினும் புணர்ந்துடன் போகினு
மதுபிரி வுரைப்பினும் பாலை யாகும்."

என்றாராகலின். (கஅ)

௧உ. நிலம்பெயர்ந் துறையு மெல்லாப் பிரிவு
மொழிந்தோ ரறியவு மறியா மையுங்
கழிந்துசேட் படூஉ மியற்கைய வென்ப.

என்பதென்னுதலிற்றோவெனின், இதுவும் கற்புக்காலத் துத் தலைமகன் பிரிவின்கண் உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: நிலம்பெயர்ந்து உறையும் எல்லாப் பிரிவும்—பரத்தையிற் பிரிவொழிந்த எல்லாப் பிரிவும்; ஒழிந்தோர் அறியவும் அறியாமையும்—தலைமகளுந் தோழியும் அறியவும் அறியாமையும்; கழிந்து சேட்படும் இயற்கைய என்ப—காடிடையிட்டும் நாடிடையிட்டும் அகன்று உறைதற்றன்மையவென்று சொல்லுவர் புலவர் என்றவாறு. எனவே,

'ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தற் குற்றுழிப் பொருட்பிணி' (இறையனார் - ௩௫.)

*என இவற்றிற்குப் பிரிகின்றவன் தலைமகளையுந் தோழியையும் அறியச் சொல்லிப் பிரிதலும் உடையன், அறியாமைப் பிரியவும் உடையன், இரண்டும் இலக்கணமென்பது. அவற்றுள் அறியாமைப்பிரிதல் பொருத்தமின்று. அறியப் பிரிவது யான் இன்னதோர் இடத்து இன்னதொரு கருமம் முடித்து வருவேனென அவளை உடன்படுவித்துப் பிரிவதே தக்கது. அல்லது அவன் சொல்லாது பிரிந்தவிடத்து இவ்வகை சொல்லாது பிரிதற்குக் காரணம் என்னைகொல்லோவெனவே கவல்பவாகலின் அஃது அறியாமைப்பிரிதலென்பது. சிலநாள் இடையுடைத்தாக ஓரதிகாரம்படுத்து இங்ஙனம் பிரிந்து ஒரு கருமம் முடித்துக்கொண்டு வந்தார் தலைமக்கள், தலைமகளிரும்அவர் அதுமுடித்துவருந்துணையும்ஆற்றியிருந்துவந்தார், இஃது உலகினது பண்பென்னும். என ஒக்கும்பிற, தலைமகன் பிரிந்து பொருள் முடித்து மென்றக்கால் தலைமகளிர் ஆற்றாரபவேயெனின், அவரது ஆள்வினையை இடையூறுசெய்தாராவர் பிற, அதனால் அவர் பிரிந்து பொருண்முடித்து வருந்துணையும் ஆற்றுவதேயாகாதே-

* இங்கிருந்து இரண்டு மூன்று பக்கங்கள் வரையில் ஓர் ஏட்டுப் பிரதிக்கிணங்கப் பலப்பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

செய்யப்படுவதென்னும், என ஆற்றுவேனென்றாள், இடை உடைத்தாலோவென்பதனன். என்னே? சாதலுங்கெடுதலும் எல்லா உயிரும் அறியுமேயெனினுஞ் செத்தாலோ என்பதனாற் கலங்கார்மனன். அஃது இவட்குமாமென்பது இங்ஙனம் உணர்த்திவைத்தார். பிரியும் நாளது கதுமெனக் கலங்கி ஆற்றாளாகவும் போவது சாந்தன்மையானென்பதனாற், பெற்றதே இலேசாகப் பிரிவது கருமமென்று முற்படாது பிரிதலும் உடையனென்பது. அந்நாள் ஆற்றுவெனென்றாளன்றே, ஆற்றாதற்குக் காரணமில்லை, மேற் பொய்யாத்தன்மைய ளாகலினென்று முற்பட்டாற்றுவித்துத் தோழியை ஓம்படை செப்பிப் பிரியவும் பெறுமென்றவாறு. அறியப் பிரிவதே வலியுடைத்து அறியாமைப் பிரிந்த தலைமகனையுடைய கிழத்தி சொல்லியதற்குச் செய்யுள்:

அறியாமைப் பிரிந்த தலைமகனை யுடையாள் சொல்லியது.

செல்லா ரவரென் றியானிகழ்ந் தேன்சுரஞ் செல்லத்தன்க
ணொல்லா ளவளென் றவரிகழ்ந் தார்மற் றிவையிரண்டுங்
கொல்லா ரயிற்படைக் கோனெடு மாறன் குளந்தைவென்ற
வில்லான் பகைபோ லெனதுள்ளந் தன்னை மெலிவிக்குமே. (௧0௪)

"செல்வா ரல்லரென் றியானிகழ்ந் தனனே
விடுவா ளல்லளென் றவரிகழ்ந் தனரே
யாயிடை யிருபே ராண்மை செய்த
பூசனல்லார்க் கதுவி யாங்கெ
னல்ல னெஞ்ச மலமலக் குறுமே." (குறுந் - ௪௩.)

என்பதூஉங் கொள்க.

அஃதேயெனின், நிலம்பெயர்ந்து உறையும் பிரிவும் ஒழிந்தோர் அறியவும் அறியாமையுமென அமையாதே, எல்லாமென்றது எற்றிற்கோவெனின், களவுகாலத்தும் ஒரு பிரிவு சொல்லப்பட்டதன்றே, நிலம்பெயர்ந்து உறைவது

பட்டபின்றை வரையாக்கிழவன் நெட்டிடைகழிந்து பொருள் வயிற் பிரிவதென; ஆங்கும் அறியப் பிரியவும் அறியாமற் பிரியவு மமையுமென்றதற்குச் சொல்லப்பட்டதென்பது. 'சேட்படும் இயற்கையது' என அமையாதே,'கழிந்து' என்றது எற்றிற்கோவெனின் கழிந்தபின்றைக் கழிதலேயல்லது இடைச்சுரத்தே நின்றும் அந்நிலத்தே நின்றும் பெயர்தலில்லையென்பது. என்னை? சிற்றறிவினரன்றே ஒரு கருமம் எடுத்துக்கொண்டு முடிப்பான் புக்கு, முடியாது தவிர்வரென்பது.

"ஆடிய வெறியு மழுங்கிய செலவு
நாடுங் காலை யில்லென மொழிப."

என்றார் பிறரும். (கக)

ருகூ. எல்லா வாயிலுங் கிழவோன் பிரிவயிற்
பல்லாற் றானும் வன்புறை குறித்தன்று.

என்பதென்னுதலிற்றோவெனின், பிரிவிடை ஆற்றாளாய தலைமகளை வாயில்கள் ஆற்றுவிக்குமா றுணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: எல்லா வாயிலும்—தலைமகனும் விருந்தும் ஒழிந்து எல்லாவாயில்களும்; தோழியும் பாாப்பானும் பாணனும் பாடினியுமென இவர்கள்: கிழவோன்பிரிவயின்—தலைமகன் நாடிடையிட்டுங் காடிடையிட்டும் பிரியும் பிரிவின்கண்; பல் ஆற்றானும் வன்புறை குறித்தன்று—பலநெறியானும் ஆற்றுவித்தலைக் கருதின என்றவாறு.

என்பது பருவங்குறிக்கப்பட்ட தலைமகள் பருவவரவின்கண் ஆற்றாளாயக்காற் பருவம் வர அவர் பாணிப்பாரல்லர், வந்தார் வாராநின்றார் வருவரெனவும், இத்திணைப்

பருவமன்றென்றும் பழித்து, அதனைப் பருவமெனக் கருதினையேயெனில் அவராற் குறிக்கப்பட்ட பருவமன்று; என்னை? அவர்பொய்யுரை உரையாராகலான் யாந்தெளியே மெனவுங், காலங் காட்டியுஞ், சோகினஞ் சொல்லியும், யாழ் பண்ணியும், எல்லாத் திறத்தானுந் தலைமகளை ஆற்று விக்குமென்பது. இனித் தலைமகன்றன்னை அன்பிலன் கொடியனெனவும் இத்தொடக்கத்தனவெல்லாஞ் சொல்லியும் ஆற்றுவிக்கும். அவற்றிற் பருவவரவின்கண் ஆற்றாளான தலைமகளை ஆற்றுவித்தற்குப் படைத்துமொழிந்து பருவமன்றென்றதற்குச் செய்யுள்:

பருவமன்றென்று ஆற்றுவித்தல்.

கடாவு நெடுந்தேர்க் கலிமத னன்கலி தேயச்செங்கோ
னடாவு நகைமுத்த வெண்குடை வேந்தனண் ணார்மதில்பாய்ந்
திடாவு மதமா மழைபெய்யு மோதை யெனமுழங்கப்
பிடாவு மலர்வன கண்டே மெலிவதென் பெண்ணணங்கே. (௩௦௫)

விடக்கொன்று வைவேல் விசாரிதன் மற்றிவ் வியலிடம்போய்
நடக்கின்ற செங்கோ லொருகுடை வேந்தனண் ணார்முனைபோற்
கடக்குன்றஞ் சென்றநங் காதலர் பொய்யலர் நையல்பொன்னே
மடக்கொன்றை வம்பினைக் காரென வெண்ணி மலர்ந்தனவே.

பூரித்த மென்முலை யாயன்று பூலந்தைப் போர்மலைந்த
வேரித் தொடையல் விசய சரிதன்விண் டோய்கொல்லிமேன்
மூரிக் களிறு முனிந்துகை யெற்ற முழங்குகொண்டன்
மாரிக்கு முல்லையின் வாய்நக வேநீ வருந்துவதே. (௩௦௭)

"கீரற வறந்த கிரம்பா நீளிடைத்
துகில்விரித் தன்ன வெயிலவி ருருப்பி
னஞ்சுவரப் பனிக்கும் வெஞ்சுர மிறந்தோர்
தாம்வரத் தெளித்த பருவங் காண்வர
வீதுவோ வென்றிசின் மடந்தை மதியின்று

மறந்துகடன் முகந்த கமஞ்சூன் மாமழை
பொறுத்தல் செல்லா திறுத்த வண்பெயல்
காரென் றயர்ந்த வுள்ளமொடு தேர்வில
பிடவுங் கொன்றையுங் கோடலு
மடவ வாகலின் மலர்ந்தன பலவே." (நற்றிணை - கூக.)

இவை பிரிவிடைப் பருவங்கண்டு ஆற்றாளாயின தலைமகளை இது பருவமன்று; என்னை? அவர் பொய்யுரையாராகலான்; இதுவும் வம்பு, வம்பினைப் பருவமென்று தம்மடமையாற் பிடவுங் கோடலுங் கொன்றையும் மயங்கிப் பூத்தனவென்று வற்புறுத்தாளாம்.

வருவரென்று வற்புறுத்தல்.

மையார் தடங்கண் மடந்தை வருந்தற்க வாண்முனைமே
னெய்யா ரயிலவர் காணப் பொழிந்த நெடுங்களத்து
வெய்யா ரமரிடை வீழச்செந் தூவிவெள் ளம்புகைத்த
கையார்சிலைமன்னன் கன்னிநன்னீர்கொண்டகார்முகிலே. (௧0௮)

இது பிரிவிடையாற்றாளாகிய தலைமகளைத் தோழி அவர் குறித்த பருவம் வந்ததாகலின் அவரும் பொய்யார் வருவரென்று வற்புறுத்தியது.

கொடியார் நெடுமதிற் கோட்டாற் றரசர் குழாஞ்சிதைத்த
வடியா ரயிற்படை வானவன் மாறன் வளமதுரைத்
துடியா ரிடையாய் வருந்தல் பிரிந்த துளங்கொளிசே
ரடியார் கழலா ரணுகவந் தார்த்த தகல்விசும்பே. (௧0௯)

இதுவும் அது.

ஆமா னனையமென் னோக்கி யழுங்க லகன்றுசென்ற
தேமா நறுங்கண்ணி யாரையுங் காட்டுந்தென் பாழிவென்ற
வாமா நெடுந்தேர் மழைவண்ணன் மாறன்வண் டீந்தமிழ்நர்
கோமான் கொடிமே லிடியுரு மார்க்கின்ற கார்ம்புயலே. (௧௧0)

இதுவும் அது.

* கருந்தண் புயல்வண்கைத் தென்னவன் கைம்முத் தணிந்திலங்கு
மிருந்தண் குடைநெடு மாற னிகன்முனை போனினைந்து
வருந்தன் மடந்தை வருவர்நங் காதலர் வானதிரக்
குருந்தம் பொருந்திவெண் முல்லைக ளீன்றன கூரெயிறே. (௩௧௧)

இதுவும் அது.

* புலமுற்றுந் தண்புய லேக்கிப்பொன் போலப் பசந்ததின்பா
னலமுற்றும் வந்த நலமுங்கண் டாய்நறை யாற்றெதிர்ந்தார்
குலமுற்றும் வாடவை வேல்கொண்ட மாறன் குரைகடல்சூழ்
நிலமுற்றுஞ் செங்கோ லவன்றமிழ் நாடன்ன நேரிழையே. (௩௧௨)

இதுவும் அது.

*அறையார் கழன்மன்ன னாற்றுக் குடியழ லேறவென்று
கறையா ரடர்வேல் வலங்கொண்ட கோன்கடன் ஞாலமன்னாய்
நிறையாம் வகைவைத்து நீத்தவர் தேரொடு நீபிணித்த
விறையார் வரிவளை சேரவந் தார்த்தன வேர்முகிலே. (௩௧௩)

இதுவும் அது.

இச்சூத்திரத்துள் 'எல்லாவாயிலுங் கிழவோன் பிரிவயின் வன்புறைகுறித்த' என்றது 'பல்லாற்றானும்' என்று மிகைபடக் கூறியவதனான் கற்புக்காலத்துக் கடிமனைசென்ற செவிலி தலைமகனது நிலைமையுந் தலைமகளது நிலைமையும் பார்த்துவந்து நற்றாய்க்குச் சொல்லினவுங்கொள்க. அதற்குச் செய்யுள்:

செவிலி நற்றாய்க்குரைத்தல்.

திருநெடுங் கோதையுந் தெய்வந் தொழாடெவ்வர் மேற்செலினும்
பெருநெடுந் தோளண்ணல் பேர்ந்தன்றித் தங்கான் பிறழ்வில்செங்
லருநெடுந் தானை யரிகேசரியந்தண் கூடலன்ன [கோ
கருநெடுங் கண்மட வாயன்ன தாலவர் காதன்மையே. (௩௧௪)

---

* இக்குறியிட்ட செய்யுட்கள் மூன்றும் முன் அச்சுப்பிரதியில் விடுபட்டன; வேறோர் ஏட்டுப் பிரதியிற் கண்டமையின் இங்கெடுத்துச் சேர்க்கப்பட்டன.

பார்மன்னன் செங்கோற் பராங்குசன் கொல்லிப் பனிவரைவாய்க்
கார்மன்னு கோதையன் ஞூ மருந்ததிக் கற்புடையா
டேர்மன்ன னேவச்சென் ருலு முனைமிசைச் சேர்ந்தறியா
போர்மன்னு வேலண்ணல் பொன்னெடுந் தேர்பூண் புரவிகளே.

கூரா ரயில்கொண்டு நேரார் களம்பல கொண்டவென்றித்
தேரான் வரோதயன் வஞ்சியன்னா டெய்வஞ் சேர்ந்தறியாள்
வாரார் கழன்மன்னன் ருனே பணிப்பினும் வல்லத்துத்தன்
நேரார் முனையென்றுந் தங்கி யறியா னெடுந்தகையே. (நுகசு)

பிறவுங் கொள்க.

"கானங் கோழி கவர்குரற் சேவ
லொண்பொறி யெருத்திற் றண்சித ருறைப்பப்
புதனீர் வாரும் பூநாறு புறவிற்
சீறூ ரோளே மடந்தை வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செலினுஞ்
சேர்ந்துவர லறியாது செம்மற் றேரே." (குறுந் - உசஉ.)

மற்றுங் கற்புக்காலத்துக் கிளவிகள் இது நிலமாகக் கொள்ளப் படுவனவெல்லாம் அறிந்துகொள்க. (உ0)

## ருச. வன்புறை குறித்த வாயி லெல்லா மன்புதலைப் பிரிந்த கிளவி தோன்றிற் சிறைப்புறங் குறித்தன் றென்மனூர் புலவர்.

என்பதென்னுதலிற்ருேவெனின், மேற் சூத்திரத்து ஆற்று வித்துக்கொண்டிருக்குமாறு உணர்த்திப்போந்தார், இனித் தலைமகன் பிரிவெடுத்துக்கொண்டு பிரியுமிடத்து வாயில்களுக்கு உணர்த்த, வாயில்கள் தலைமகட்குப் பிரிவுணர்த்

தத் தலைமகள் வாயில்கள் ஆமிடத்துச் சிறைப்புறத்தானாக அவன் கேட்கும் அணிமைக்கண் உணர்த்துகவென்பது உணர்த்துதல் நுதலிற்று, என்பாரும்;

இனித் தலைமகனது பிரிவின்கண் தலைமகள் ஆற்ரு ளாயின இடத்துச் சிறைப்புறங் கூறியும் ஆற்றுவிக்க வென்பது உணர்த்துதல் நுதலிற்றென்பாரும் உளர்.

இதன் பொருள்: வன்புறை குறித்தவாயிலெல்லாம்—தலைமகளை ஆற்றுவிக்கும் வகையால் ஆற்றுவித்தற்குரிய வாயிலெல்லாம்; அன்பு தலைப்பிரிந்த கிளவி தோன்றின்—தலைமகன் பிரிவின்கண் தலைமகள் ஆற்ருளாயினவிடத்து; என்பது அவ்விடத்து வாயில்கள் ஆற்றுவிக்கற்பால: ஆற்று விக்ககில்லாதவிடத்து. சிறைப்புறம் குறித்தன்று என்மனார் புலவர்—சிறைப்புறத்துக்கண்வைத்து ஆற்றுவிக்க வெனச் சொல்லுவர் கற்றுவல்லோர் என்றவாறு.

'சிறைப்புறங் குறித்தன்று' என்பது கற்பெனப்பட்ட சிறைமேல்வைத்து ஆற்றுவித்த லென்பது. அஃதாமாறு மேற்சொன்ன முறையானெல்லாம் ஆற்றுவிப்பவும் ஆற்ரு ளாய்நின்ற தலைமகளை இவ்வாற்ருனும் ஆற்றுவித்துக் காண் பனெனக் கருதி, நம்பெருமாட்டி பிறந்த குலம் மேனாள் தொட்டும் ஒழுக்கச்சிதைவின்றி விழுப்பமுடைத்தாய் ஓங்கி வாராநின்றதொரு பெருங்குலமன்றே? அக்குலத்தை நீ அழித்தல் தக்கதோ? என்றும், நாணுங்கற்புமன்றே பெண் டிர்க்கு அணிகலமாவன வென்பதனால் இக்குலத்தினவர் கற் பெனப்பட்ட சிறையழியாமே காத்துக்கொண்டொழுகினார், அதனை நீ அழிக்கின்ருயாகலின் நின்கட் பெரியதோர் பழி யாக்குகின்ருயென்றும், நம்பெருமான் தம் ஆண்மைத்

தன்மை காட்டிப் பிரிந்தார், நீயும் அவர்கருதியது முடித்து வருந்துணையுங் கற்புக்காத்திருக்க வேண்டுமென்றுஞ், சான்றோர் மகளிரென்பார் சிறியரன்றிப் பெரியராகல்வேண்டும்; அத்தன்மையென்பது தங்குலநோக்கித் தங்கற்புக்காத்து ஒழுகுதல்; அதனின் மிக்கதில்லையென்றும் இவ்வகை ஆற்றுவித்தல் சிறைப்புறங் குறித்தலென்பது. அதற்குச்செய்யுள்:

சிறைப்புறங்குறித்தல்.

உலத்திற் பொலிந்ததிண் டோண்மன்னனெண்டேருசி தன்மற்றிந்
நிலத்திற் பொலிந்தசெங் கோலவ னீள்புனற் கூடலன்ன
நலத்திற்கு நாணிற்குங் கற்பிற்கு ஞாலத்தி னல்லநங்கள்
குலத்திற்குந் தக்கதன் றுலின்னை யாகுதல் கோல்வளையே.(நகஎ)

இவ்வகை ஆற்றுவித்தல் சிறைப்புறங் குறித்த லென்றவாறு. (உக)

ருரு. சிறைப்புறங் குறியா தோன்றலு முளவே
யவற்புணர் வறியுங் குறிப்பி னான.

என்பதென்னுதலிற்றோவெனின், தலைமகன் பிரிந்தவழித் தலைமகளாற்றாளாயின இடத்துத் தலைமகனது வரவுசொல்லி ஆற்றுவிக்கவென்ப துணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: சிறைப்புறம் குறியா தோன்றலும் உளவே—மேல் தோழி கற்பெனப்பட்ட சிறையை அழிக்கின்றுமென்றன்றே ஆற்றுவித்தது, அவ்வாறன்றி வருவனவும் உள; அவன் புணர்வு அறியும் குறிப்பின் ஆன—தலைமகன் வினைமுற்றியானும் பொருண்முற்றியானும் வருங் குறிப்பின்கண் என்றவாறு.

அஃதாமாறு, மேல் அவ்வகையாற் பிரிவெடுத்துக் கொண்டு தலைமகளை ஆற்றுவித்தார்; ஆற்றுதல்கண்டு பிரிந்த

வழித் தோழி தலைமகளை ஆற்றுவித்துக்கொண்டு இருந்தா ளன்றே; இருந்த இடத்துத் தலைமகனுந் தானெடுத்துக் கொள்ளப்பட்ட வினைமுடித்தானன்றே; முடித்தவகையாற் குறித்தகாலம் வந்ததென்று மறுத்துஞ் சார்ந்தானன்றே; சார்ந்த இடத்துச் சங்கம் படகம் வந்து இசைத்தன. இசைப்பத் தோழி தலைமகனது வரவுணர்ந்து எம்பெருமாட்டி நீ இறந்துபடுவான் புக்காயாற், கண்டாயன்றே, உள்ளாரால் எய்தப்படாத பொருளில்லை, நீ ஆற்றியுளையாய் இன் று எம்பெருமானை வழிபடுவாயாயினை யென இவ்வாறு சொல்லுதல் சிறைப்புறங் குறியா தோன்றலு முளவே யென்பது. சங்கம் படகம் படச் சங்கினை வாழ்த்தியதற் குச் செய்யுள்:

சங்கிவண வாழ்த்தல்.

தேனிற வார்கண்ணிச் செம்பியன் மாறன் செழுங்குமரி
மானிற வெண்டிரை மால்கடற் றேன்றினை மண்ணளந்த
கீனிற வண்ணனு மேந்தினன் றம்மு னிறம்புரைதீம்
பானிற வெண்சங்கம் யார்நின்னின் மிக்க படிமையரே. (௩கஅ)

"புரிவளை வான்கோடு புத்தேளோ டொத்தி
திருவளர் மார்பனு மேந்தினன் றம்முன்
னுருவம் புரையுநின் கேழ்."

என்பதூஉங் கொள்க. (உஉ)

**௩௬. திணையே கைகோள் கூற்றே கேட்போ**
**ரிடனே கால மெச்ச மெய்ப்பாடு**
**பயனே கோளென் றுங்கப் பத்தே**
**யகனைந் திணையு முரைத்த லாறே.**

என்பதென்னுதலிற்றோவெனின், மேற் களவுங் கற்பும் உணர்த்திப் போந்தார், இனி அவ்விரண்டும்பற்றி வரு

கின்ற பாட்டினை இக்கூறப்பட்ட பத்திலக்கணத்தானும் உரைக்கவென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: திணையேயென்பது, பல்பொருளொரு சொல்லாய்க்கிடந்தது; நிலத்திணையுந் திணையென்ப, குலத்திணையுந் திணையென்ப, ஒழுக்கத்திணையுந் திணையென்ப, ஈண்டு ஆகுபெயராய் அவரால் ஒழுகலாறு நிகழ்ந்த இடத்தையுந் திணையென்றார். அவை குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தலெனை ஐந்துவகைப்படும். அவை அறியுமிடத்து முதல் கரு உரிப்பொருள் பற்றி அறியப்படுமென்றவாறு. அவ்விலக்கணமெல்லாம் மேல் 'அன்பினைந்திணை' (இறையனார்-க.) என்றதன்வழியே உணர்த்திப் போந்தாம். அவை திணையெனப்படுவன. அகப்பாட்டின் ஒரு பாட்டுக்கேட்ட இடத்து இவ்வைந்திணையுள்ளும் இன்னதொன்றுபற்றி வந்ததென்று சொல்லுவது.

இனிக் **கைகோள்** என்பது, களவு கற்பு என்றவாறு.

இது களவுபற்றி வந்தது, இது கற்புப்பற்றி வந்ததென்றவாறு.

இனிக் **கூற்று** என்பது, கூறுதற்கு உரியாரை அறிந்து அவருள் இன்னார்கூறினார் இப்பாட்டென்று அறிதல்; அதற்கு உரியாரைச் **செம்பூட்சேயார்** கூற்றியலுள்ளுந் **தோல்காப்பியனார்** பொருட்பாலுள்ளுங் கண்டு கொள்க.

"பார்ப்பான் பாங்கன் றோழி செவிலி
சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியோ
*டளவியன் மரபி னறுவகை யோருங்
களவினிற் கிளவிக் குரிய ரென்ப." (தொல்-பொ-செய்-கக௦.)

---

*'அவ்வியன் மருங்கின் அறுவகை யோரும்' என்பதும் பாடம்.

"பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற வறிவர் கண்டோர்
*பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த கிளவியொடு தொகைஇத்
தொன்னெறிமரபிற்கற்பிற்குரியர்." (தொல்-பொ-செய்-௧௯௧.)

என்றார் தொல்காப்பியனார். இச்சொல்லப்பட்டாருள் இன்னார் கூற்றென்று அறிவது.

இனிக் **கேட்போர்** என்பது, இன்னார்கூற இன்னார் கேட்டாரென் றறிவது; தோழிகூறத்தலைமகள்கேட்டாள், தலைமகள் கூறத் தோழிகேட்டாள், தோழிகூறத் தலைமகன் கேட்டான், தலைமகன் கூறத் தோழிகேட்டாள் என்று இவ் வகை அறிந்து உரைப்பது.

**இடம்** என்பது, அவ்வாறொருவர் கூற ஒருவர் கேட்ட இடமென்றறிவது. அவை தன்மை முன்னிலை படர்க்கை யென்பன. அவற்றுள் யானென்பது தன்மை, நீ யென்பது முன்னிலை, அவனென்பது படர்க்கை. அவற்றுள் இன்னதுபற்றி வந்ததென்றறிவது.

**காலம்** என்பது, இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலமென மூன்றுவகைப்படும். அவற்றுள் உண்டானென்பது இறந்தகாலம், உண்ணாநின்றானென்பது நிகழ்காலம், உண்பானென்பது எதிர்காலம். இவற்றுள் இன்னதுபற்றி வந்ததென்றறிவது.

**எச்சம்** என்பது ஒழிவு. அஃது இரண்டு வகைப்படுஞ், சொல்லெச்சங் குறிப்பெச்சமென. இவையாமாறு முன்னர்ச் சொல்லுதும்.

---

* 'ஏண்டகு சிறப்பிற் பார்ப்பான் முதலா-முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇ' என்பதும் பாடம்.

**மெய்ப்பாடு** என்பது எட்டு வகைப்படும். அவை: "நகை, அழுகை, இழிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி உவகையென், றப்பாலெட்டேமெய்ப்பாடென்ப" (தொல் - மெய்ப் ௩.) அவற்றுள் இன்னதோர் மெய்ப்பாடு வந்ததென்றறிவது.

**பயன்** என்பது, இது சொல்ல இன்னது பயக்குமென் றறிவது.

**கோள்** என்பது, ஒரு பாட்டினகத்துப் பொருள் கொண்டு நிற்கும் நிலை; அஃது ஐந்துவகைப்படும், விற்பூட்டு, விதலையாப்புப், பாசிநீக்குக், கொண்டுகூட்டு, ஒருசிறைநிலை யென்றவற்றுள் இன்னதோர் பொருள்கொண்டு நின்றது இப்பாட்டென்றறிவது. அவற்றுள்,

**விற்பூட்டுப்பொருள்கோள்** வருமாறு:

வருவர் வயங்கிழாய் வாட்டாற் றெதிர்நின்று வாண்மலைந்த
வுருவ மணிநெடுந் தேர்மன்னர் வீய வொளிதருமேற்
புருவ முரிவித்த தென்னவன் பொன்னங் கழலிறைஞ்சாச்
செருவெம்படைமன்னர் போலவெங்கானகஞ் சென்றவரே. (௩௧௯)

**விதலையாப்பு** வருமாறு:

பண்டா னனையசொல் லாய்பரி விட்டுப் பறந்தலைவாய்
விண்டார் படச்செற்ற கோன்கொல்லிப் பாங்கர் விரைமணந்த
வண்டார் கொடிநின் னுடங்கிடை போல வணங்குவன
கண்டாற் கடக்கிற்ப ரோகட வாரன்பர் கானகமே. (௩௨௦)

**பாசிநீக்கு** வருமாறு:

சென்றார் வருவது நன்கறிந் தேன்செருச் செந்நிலத்தை
வென்றான் பகைபோன் மெலியன் மடந்தையும் வெற்பெடுத்து
நின்றா னளந்த நிலமுங் குளிர்ந்தது நீர்புயலாற்
பொன்றான் மலர்ந்து பொலங்கொன்றை தாமும் பொலிந்தனவே.

கொண்டுகூட்டு வருமாறு:

கோவைக் குளிர்முத்த வெண்குடைக் கோனெடு மாறன் முந்நீர்
தூவைச் சுடர்வே லவர்சென்ற நாட்டினுந் துன்னுங்கொலாம்
பூவைப் புதுமலர் வண்ணன் றிரைபொரு நீர்க்குமரிப்
பாவைக் கிணையனை யாய்கொண்டு பண்டித்த பன்மூகிலே. (௩உஉ)

ஒருசிறைநிலை வருமாறு:

கோடன் மலர்ந்து குருகிலை தோன்றின கொன்றைசெம்பொன்
பாடன் மணிவண்டு பண்செயப் பாரித்த பாழிவென்ற
வாட னெடுங்கொடித் தேரரி கேசரி யந்தண்பொன்னி
நாடன் பகைபோன் மெலிகின்ற தென்செய்ய நன்னுதலே. (௩உ௩)

விற்பூட்டென்பது முதலுங் கடையும் பொருள்கொண்டு நிற்பது; விதலையாப்பென்பது தலையும் நடுவுங் கடையும் பொருள்கொண்டுநிற்பது; பாசிநீக்கென்பது சொற்றொறும் அடிதோறும் *பொருளற்று நிற்பது; கொண்டு கூட்டென்பது சொற்களைக் கொண்டுகூட்டிப் பொருள் கொள்ளுமாறறிந்து பொருள்கொண்டு கூடநிற்பது; ஒருசிறை நிலையென்பது ஒரு பாட்டினகத்துச் சொல்லப்பட்ட பொருள் ஒருவழி நிற்பது.

ஆங்கப்பத்தே அகனைந்திணையும் உரைத்தலாறே—
'ஆங்கு' என்பது அசைச்சொல்; 'பத்து' என்பது தொகை; 'ஏ' யென்பது ஈற்றசை: அகனைந்திணையும் உரைத்தலாறே—அகனைந்திணையும் அறிந்து உரைக்க அகப்பாட்டினை வல்லோர் சொல்லுமிடத்து என்றவாறு.

முளிதரு வேனற்கட் கானவ ரார்ப்ப முகிற்கணங்க
டளிதரு தண்சிலம் பாதக்க தன்று தரணிதன்மே
லளிதரு செங்கோ லரிகே சரியந்தண் கூடலன்ன
வொளிதரு வாணுத லாணைய விவ்வா றொழுகுவதே. (௩உ௪)

* 'பொருளேற்று நிற்பது' என்பதும் பாடம்.

இப்பாட்டுத் திணை - குறிஞ்சி; கைகோள் - களவு; கூற்று-தோழிகூற்று; கேட்டான் - தலைமகன்; இடம்-முன்னிலை; காலம்-எதிர்காலம், *வந்தொழுகா நின்றானுக்கு உரைத்தமையான் நிகழ்காலமாகவுங்கொள்க; எச்சம்-'நீ' யென்பது எஞ்சிநின்றது; மெய்ப்பாடு-அச்சம், என்னை? இவ்வொழுக்கம் பிறரறியின் இறந்து படுமென்னும் நினைப்பினளாகையின்; பயன்-வரைவுகடாதல்; பொருள்கோள்- 'தளிதரு தண்சிலம்பா தக்கதன்று இவள்தைய இவ்வாறு ஒழுகுவது' எனக்கொண்டமையின், இது விதலையாப்பு.

மானக் கடுஞ்சிலை மான்றேர் வரோதயன் வாண்முனைபோன்
றானப் படநினைந் தூடல்பொன் னேயுறு வெஞ்சுரத்து
நானக் குழன்மிசை நான்கொய்து கொண்டு நயந்தணிந்த
கானக் குரவினம் போதே கமழுமென் கைத்தலமே. (நூஉரு)

இப்பாட்டுத்திணை-மருதம்; கைகோள் - கற்பு; கூற்று-தலைமகன் கூற்று தலைமகன் பரத்தைதைக் கோலஞ்செய்தானென்று வேறுபடலுற்ற தலைமகள் குறிப்பறிந்து தலைமகன் சொல்லியது; கேட்டாள் - தலைமகள்; இடம்-முன்னிலை; காலம் - இறந்தகாலம்பற்றிவந்த நிகழ்காலம்; எச்சம்-'என்னோடு' என்பது எஞ்சிற்று; மெய்ப்பாடு-நடுக்கம்; பயன்-கேட்டுத் தலைமகள் ஊடல் தீர்வாளாவது; பொருள்கோள்-விதலையாப்பு, 'யான் கொய்தணிந்த குரவினம் போதே இன்னுங்கமழும் என்கைத்தலம்' என்று மூன்றிடத்தும் பொருள்கொண்டமையானென்பது. (உரு)

ருஎ. அவற்றுள்,
எச்சமுங் கோளு மின்மையு முரிய.

* 'அறியாதானுக்கு' என்பதும் பாடம்.

என்பது என்னுதலிற்றோவெனின், மேற்கூறப்பட்ட பத்தி னுள்ளும் எச்சமுங்கோளும் இன்றியும் உரியவென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: அவற்றுள்—மேற் கூறப்பட்ட பத்தினுள்ளும்; எச்சமும் கோளும் இன்மையும் உரிய—எச்சமேனுங் கோளேனும் இரண்டினுள் ஒன்றொழிந்தும் இரண்டு மொழிந்தும் நிற்கவும் பெறும், என்றவாறு.

அவற்றுள் எச்சமின்றி வந்ததற்குச் செய்யுள்:

ஆமா னனையமென் னோக்கி யழுங்க லகன்றுசென்ற
தேமா நறுங்கண்ணி யாரையுங் காட்டுந்தென் பாழிவென்ற
வாமா நெடுந்தேர் மணிவண் ணன் மாறன்வண் டீந்தமிழ்நர்
கோமான் கொடிமே லிடியுரு மார்க்கின்ற கூர்ம்புயலே. (௩உ௬)

இனிக் கோளின்றி வந்தது வருமாறு:

வாடு நிலைமையை நீக்கிமண் காத்துவல் லத்தெதிர்ந்தா
ரோடு நிலைமைகண் டான்வையை யொண்ணுதன் மங்கையரோ
டாடு நிலைமையை யல்லை யவரொடம் பூம்பொழில்வாய்
நீடு நிலைமையு மல்லைசொல் லாயென் னெடுந்தகையே. (௩உ௭)

எனக்கொள்க. (உச)

## ௫அ. சொல்லே குறிப்பே யாயிரண் டெச்சம்.

என்பது என்னுதலிற்றோ வெனின், மேற்கூறப்பட்ட எச்சம் இரண்டு வகைப்படும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: சொல்லேகுறிப்பே ஆ இரண்டு எச்சம்—சொல்லெச்சமுங் குறிப்பெச்சமுமென இரண்டு எச்சமாம், என்றவாறு.

சொல்லெச்சமென்று சொல்லப்பட்ட வாய்பாடின்றிப் பிறவாய்பாட்டால் தோன்றினும் என்றவாறு. எச்சமென்பது ஒழிபென்றவாறு.

சொல்லெச்சத்திற்குச் செய்யுள்:

பள்ளத்து நீலம் பறந்தலைக் கோடிப்பட் டார்குருதி
வெள்ளத்துச் செங்கழு நீர்வைத்த கோன்றெண்டி வண்டுமென்பூ
வள்ளத்துத் தேமகிழ் கானல்வந் தார்சென்ற தேர்வழியெம்
முள்ளத்தி னோடு சிதையவந் தாரு மொலிகடலே. (௩உஅ)

இனிக் குறிப்பெச்சம் வந்த செய்யுள்:

இடியார் முகிலுரு மேந்திய கோனிர ணேதயன்றன்
வடியா ரயிலன்ன கண்ணிதன் வாட்ட முணர்ந்துவண்பூங்
கடியார் கருங்கழி மேய்கின்ற கானற் கலந்தகன்ற
கொடியா ரினுமிகத் தாமே கொடிய குருகினமே. (௩உகூ)

ருக. முற்படக் கிளந்த பொருட்படைக் கெல்லா
மெச்ச மாகி வரும்வழி யறிந்து
கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங்
கிளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே.

என்பது என்னுதலிற்றோ வெனின், இந்நூலுள் எடுத்தோத்தே இலேசேயென்று இவற்றான் முடியாது நின்றன வெல்லாம் இது புறனடையாகத் தந்துரைக்க வென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இதன்பொருள்: முற்படக்கிளந்த பொருட் படைக்கு எல்லாம் — முன்னால் உரைக்கப்பட்ட சூத்திரத்துப்பொருட்கெல்லாம்; எச்சம் ஆகி வரும் வழி அறிந்து—ஒழிவுபட வரூஉம் இடம் ஆராய்ந்து; கிளந்த அல்ல வேறு பிற தோன்றினும்—சொல்லப்பட்ட வாய்பாடின்றிப் பிறவாய்

பாடு தோன்றினும்; கிளந்தவற்று இயலான் உணர்ந்தனர் கொளலே—அச்சொல்லப்பட்ட பத்து இலக்கணத்தானே உணர்ந்து உரைக்க என்றவாறு.

இது களவிடத் தொழிந்தது கற்பிடத்தொழிந்த தென்று அறிந்து என்ற வாறு.

தலைச்சூத்திரத்துள் 'அன்பினைந்திணை' யென்றதல்லது அன்பு உணர்த்துமாறு ஆண்டு உணர்த்தியதில்லை, இதுவே ஒத்தாக அன்பு உணர்த்தும் விகற்பமெல்லாங் கொள்க அன்பினுடைய ஐந்திணைக்குரிய இறைச்சிப்பொருள் உணர்த் திற்றில்லை; அவை "தெய்வ முணாவே மாமரம் புட்பறை, செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ" ஐவகை நிலத் தின் ஓதப்பட்ட இடனுங் காலமுந் தெய்வமும் உணவும் மாவும் மரமும் புள்ளும் பறையுஞ் செய்கையும் யாழும் ஆடூஉப்பெயரும் மகடூஉப்பெயரும் அவ்வவ நிலத்திற்கு மக் களும் பூவும் நீரும் இருதுவும் என்றித்தொடக்கத்தனவும் ஐந்திணைக்குரியன உரிப்பொருளும், அவற்றின் நிமித்தமும் ஐந்திணைக்குமுரிய விகற்பமும் அவை எல்லாம் இதுவே ஒத் தாகத் தந்துரைக்க.

இனி, எண்வகை மணத்தின் விகற்பமும் இதுவே ஒத்தாகத் தந்துகொண்டுரைக்கப்படும். இனிக் கந்தருவ வழக்கின்விகற்பமும் இதுவே ஒத்தாகத்தந்துரைக்க. இனி இயற்கைப் புணர்ச்சிக்கண்ணும் *விளையாட்டொக்கல் வே றிடம் பட்ட இருவருந்தம்முள் தலைப்பெய்யுமாறும், புண ரும் இடத்துத் தன்மையும், †அது கன்மேற் பொதும்புபட்

* இடையிலுள்ள இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை.

† 'அதுதான் மேலார் பொதும்புபட்டு' என்பதும் பாடம்.

டுக் கோட்டுப்பூவுங் கொடிப்பூவும் நிரந்து, நீர்த்துறைமேற் சித்திரப்படாம் விரித்தாலேபோன்று, வண்டுந்தும்பியும் வரிக்கடைப் பிரசமும் யாழுங்குழலும் முரன்று, கடற்கரை யுங் கானியாறும் முழவுந்துடியும் பாடியம்ப, இரவோரன்ன *கொழுநிழற்றாய், நிலவோரன்ன வெண்மணலொழுகி, அகத் தார்புறத்தாரைக் காண்டல் எளிதாய்ப், புறத்தார் அகத்தா ரைக்காண்டல் அரிதாய், வானோரும் விழைவைத்தவிர்த் தோரும் விரும்பும் பொழிலுள், இயற்கைப் புணர்ச்சியது இறுதிக்கண், தலைமகளை ஆற்றுவித்துப் பிரியும் பிரிவும் இதுவே ஒத்தாகத் தந்துரைக்க.

இனிப் பாங்கற்கூட்டத்துக்கண், தலைமகனது வேறு பாடு கண்டு பாங்கன் வினவத் தலைமகன் சொல்லினவும், அவைகேட்ட பாங்கன் கழறினவும், பாங்கற்கு எதிர்மறை யாகச் சொல்லினவும், எதிர்ப்பட்ட தலைமகனது ஆற்றுமை கண்டு பாங்கன் தலைமகற்குக் கவன்றனவுங், கவன்றபாங்கன் நின்னாற் காணப்பட்ட உரு எவ்விடத்து எத்தன்மைத்து என்னுமாறுந், தலைமகன் இன்னவிடத்து இத்தன்மைத்து என்னாற் காணப்பட்ட உருவென்னு மாறும், அதுகேட்ட பாங்கன் அவ்விடன் நோக்கிச் செல்லுமாறும், அவ்விடம் புக்க பாங்கன் தலைவியைக் கண்டு நின்று சொல்லினவும், பாங்கன் மீண்டுவந்து இடங்காட்டுமிதுவும் இதுவே ஒத்தா கத் தந்துரைக்க. 'அவ்வியல்பல்லது' (இறையனார்-௪.) என் னுஞ் சூத்திரத்துவிகற்பம் இதுவே ஒத்தாகத்தந்துரைக்க.

தலைமகன் தோழியை இரந்து குறையுறுமாறுங், குறையுறு நின்றவழித் தோழி கையுறைமறுக்குமாறும், மதியுடம்படுக்குமாறும், படுத்தவழி இருவர்குறிப்பும்பற் றிக் கூட்டமுண்மை உணருமாறும், உணர்ந்த தோழி தன்

* 'இருளிற்றாகி' என்பதும் பாடம்.

நெஞ்சிற்குச் சொல்லுமாறும், பின்னைத்தோழி தலைமகனது ஆற்றாமைக்குக் குறைநேருமாறும் நேர்ந்தாள் தலைமகளைக் குறைநயப்புக்கூறுமாறுந், தமர் இற்செறித்த வழித் தலைமகளது கற்பழிவுநோக்கி அறத்தொடு நிற்குமாறுங், குறையுறாநின்ற தலைமகனைத் தலைமகளது அருமைபெருமை கூறி தோழி சேட்படுக்குமாறுந், தோழி அறத்தொடுநிற்கும் விகற்பமும், பகற்குறிக்கண் தோழியுந் தலைமகனுஞ் சொல்லும் விகற்பமும், இரவுக்குறி யிடத்து வாவென்று சொல்லும் விகற்பமும், இரவுக்குறி நிகழுமிடம் இன்ன விட மென்று சொல்லும் விகற்பமும், இரவுக்குறிக்கண் அம்பலும் அலரும் ஆ முறை இரண்டுங் களவாமாறும், வெளிப்பட்டபின்றை நிகழுஞ் சொல்லும், புணர்ந்துடன் போக்கும், உடன் போக்கின்கண் தோழியுந் தலைமகனுஞ் சொல்லும் விகற்பமும், * இடைச்சுரஞ் செலவழுங்குமாறும், அறத்தொடு நிலை மாட்சிமைப்படாத இடத்துத் தோழி தலைமகளைக் கையடைந்தாள் ஒழியுமாறுந், தலைமகன் என்றுகொண்டு போமாறும், அவர்களை இடைச்சுரத்துக்கண்டார்சொல்லும் முறைமையுஞ், செவிலி பின்செல்லுமாறும், பின்செல்ல இடைச்சுரத்துக்கண்டார் சொல்லும் முறைமையுங், கண்டார் இடைச்சுரத்துத் தலைமகளது நிலைமையுரைத்து மீட்குமாறுந், தலைமகன் மகிழ்ச்சியாமாறுந், தலைமகன் பொருள் முதலாயினவற்றிற்கு வரைவிடைவைத்துப்பிரிந்து தலைமகளைத் தோழி ஆற்றுவிக்கு மிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவனவும், வரைவொடு

* 'இடைச்சுரத்தின் நிகழ்வும், இதுவென்று சொல்லும் விகற்பமும், உடன்போக்கு மாட்சிமைப்படாதவிடத்துச் செலவழுங்குமாறும், மாட்சிமைப்பட்டவிடத்துத் தோழி தலைமகளைக் கையெடுத்து தான்மொழியுமாறும்,மொழியத் தலைவனேற்றுக்கொண்டு போவான் நயத்தல் வண்ணமும்' என்று வேறொரு பிரதியில் உள்ளது.

புக்க வழித் தந்தையுந் தன்னையன்மாரும் மறுக்குமாறும், அவ்வழி நற்றாய் அறத்தொடு நிற்குமாறுங், கற்புக்காலத்துத் தலைமகன் தலைமகளைப் பிரியும் பிரிவென்று சொல்லப்பட்ட பிரிவும், பிரிந்தவிடத்துத் தலைமகள் ஆற்றாளாகத் தோழி வற்புறுத்தினவும், பருவங்காட்டினவுந், தலைமகன் வினைமுற்றுவித்து வந்தவாறும், அஃதுணர்ந்த தோழி சொல்லினவுந், தலைமகன் வினைமுற்றினான் தேர்ப்பாகற்குச் சொல்லினவும், முகிலுக்குச் சொல்லினவுந், தலைமகன் தலைமகளுடனுயிருந்து தோழிகேட்பச் சொல்லினவும், மற்றும் பரத்தையிற் பிரிவின்கண் துனி புலவி யூடலும் அவற்றது விகற்பமும், பரத்தையிற் பிரிந்த தலைமகற்குத் தலைமகள் வாயின் மறுத்தனவும், வாயில் வேண்டிப் பாணன் முந்துறுத்தனவும், * விருந்து முந்துறுத்தனவும், வாயில் பெற்றுப் புக்கனவும், மற்றும் பிறவுமெல்லாம் இதுவே ஓத்தாகத் தந்துரைக்க. (உகூ)

## கூ௦. †களவு கற்பெனக் கண்ணிய வீண்டையோ ருளநிக ழன்பி னுயர்ச்சி மேன.

என்பது என்னுதலிற்றோவெனின், மேல்வகுத்த களவு கற்புகட்குப் பிறிதும் ஆவதோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: களவுகற்பு எனக் கண்ணிய—களவென்றுங் கற்பென்றும் புலவோரால் வகுத்துரைக்கப்பட்ட ஒழுக்கங்கள்; ஈண்டையோர்—இவ்வுலகத்திற் பிறந்தானுஞ் சஞ்சரித்தானும் பொருந்துவோரது; உளம் நிகழ் அன்பின்

* இச்சொற்றொடர் முன் அச்சுப்பிரதியில் இல்லை.

† இச்சூத்திரத்திற்கு உரை பழைய ஏட்டுப் பிரதியில் இல்லை. இதனுரைநடையை உற்று நோக்குங்கால் இது பிற்காலத்தவரால் எழுதிச் சேர்க்கப்பட்டதென்று கருதற்கு இடந்தருகின்றது.

உயர்ச்சிமேன—உயர்குலத் தலைவன் தலைவியென்று இன்னோரது உளத்தின்கண் நிகழ்கின்ற அன்பினது உயர்வின்கண்ணவாம் என்றவாறு.

தேவர்க்கும் நாகர்க்கும் இவ்வொழுக்கம் அவர் உலகத்திலில்லை யென்பார் 'ஈண்டையோர்' என்றார். எனவே அன்னோர்க்கு அஃது ஒரோர்காலத்து இவ்வுலகத்து நிகழுமென்றாராயிற்று. அஃது இவ்வுலகிலும் இயற்கையான் நிலைபெறாது புலவரான் இல்லது இனியது நல்லதென நாட்டப்பட்டதோர் ஒழுக்கமென்பார் 'கண்ணிய' வென்றார். இனி இரட்டுறமொழிதலான் 'ஈண்டையோர்' என்பதை ஒருபெயராகக் கொள்ளாது 'ஈண்டை' 'ஓர்' எனக்கொண்டு 'தானே யவளே தமியர்' (இறையனார் - உ) என்றதனால் தானே அவள் அவளே தானென இயன்ற ஈருடலின் ஓருயிர்போல்வார் உளத்தென்று கொள்ளினும் அமையும். 'அன்பின் உயர்ச்சி' யெனவே அஃதில்லாவிடத்து இவ்வொழுக்கங்கள் நடைபெறா என்பதூஉம், அதனானே அஃது உயர்ந்தோர்மாட்டதென்பதூஉம், அவருள்ளும் அரசர்க்கே சிறந்ததென்பதூஉம் பெற்றாம். அற்றாயின் 'உயர்ந்தோர் மேன' எனப் பாடமோதலாகாதோ வெனின்,

"அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினுங்
கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்." (தொல்-அகத்-உங.)

என மற்றை வருணத்தோர்க்குஞ் சிறுபான்மை அஃதுரியதென்றுதழீஇக்கோடல் கருதப்பட்டதென்க. (உ௭)

## இறையனார் களவியல்
### மூலமும்
### தெய்வப்புலமை நக்கீரனார் செய்த
### உரையும்
### முற்றுப்பெற்றன.

இறையனாரகப்பொருள்

# சூத்திரமுதற்குறிப்பகராதி.


| முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|
| அதுவே, தானே | ௩௪ |
| அம்பலுமலரும் | ௧௫௨ |
| அரசரல்லா | ௨௧௪ |
| அல்லகுறிப்படுதல் | ௧௩௫ |
| அவ்வியல்பல்லது | ௭௮ |
| அவருட், டாயறி | ௧௭௭ |
| அவற்றுள், எச்சமும் | ௨௬௩ |
| அவற்றுள், ஓதலும் | ௨௧௧ |
| அவன்வயிற் கிளப்பின் | ௨௪௧ |
| அன்பி னைந்திணை | ௧ |
| ஆங்குணர்ந் தல்லது | ௯௮ |
| ஆங்கனம் புணர்ந்த | ௯௦ |
| ஆறின்ருமையும் | ௧௯௯ |
| இரந்து குறையுறாது | ௮௬ |
| இரவுக்குறியே | ௧௪௯ |
| இரவு மனையிகந்த | ௧௫௧ |
| உணர்ப்பு வயின்வாரா | ௨௪௩ |
| உள்ளத்துணர்ச்சி | ௧௦௩ |
| எல்லாவாயிலும் | ௨௫௧ |
| ஓதல்காவல் | ௨௦௭ |
| களவினுட்டவிர்-காப்பு | ௧௩௩ |
| களவினுட்டவிர்-வரை | ௨௦௧ |
| களவினுட்டவிர்-கிழவோற் | ௨௦௩ |
| களவுகற்பெனக் | ௨௬௯ |
| களவுவெளிப்படா | ௧௭௨ |
| கற்பினுட்டுறவே | ௨௦௬ |
| கற்பினுட் பிரிந்தோன் | ௨௩௭ |
| காதற்பரத்தை | ௨௨௪ |
| காப்புக்கைம்மிக்கு | ௧௮௦ |
| காமமிக்க | ௧௮௬ |
| கிழவோன் முன்னர்க் | ௨௩௯ |
| குறியெனப்படுவது | ௧௩௮ |
| குறையுறுங்கிழவனை | ௧௧௧ |
| குறையுறு புணர்ச்சி | ௧௨௪ |
| கொடுமையில்லை | ௨௩௯ |
| சிறைப்புறங்குறியா | ௨௫௭ |
| சொல்லேகுறிப்பே | ௨௬௪ |
| தந்தை தன்னைய | ௧௭௮ |
| தன்னுட்குறிப்பினை | ௧௦௮ |
| திணையேகைகோள் | ௨௫௮ |
| தோழிக்குரியவை | ௧௨௫ |
| நாடுமூரும் | ௨௪௦ |
| நிலம்பெயர்ந்-நிலை | ௨௪௬ |
| நிலம்பெயர்ந்-மெல்லாப் | ௨௪௮ |
| பகற்குறிதானே | ௧௫௦ |
| பட்டபின்றை | ௧௭௩ |
| பரத்தையிற்பிரிந்த | ௨௩௪ |
| பரத்தையிற் பிரிவே | ௨௩௩ |
| பிரிவினீட்ட | ௨௩௦ |
| புகழுங்கொடுமையும் | ௨௩௮ |
| புணர்ந்தபின்றை | ௮௨ |
| முற்படக்கிளந்த | ௨௬௫ |
| முற்படப்புணராத | ௧௩௨ |
| முன்னுறவுணர்தல் | ௯௧ |
| முன்னுறவுணரினும் | ௯௯ |
| வன்புறைகுறித்த | ௨௫௫ |
| வெளிப்படைதானே | ௧௭௬ |
| வெளிப்பட்டபின்றை | ௧௫௬ |
| வேந்தர்க்குற்றுழி | ௨௧௫ |
| வேந்துவினையியற்கை | ௨௧௩ |

# உதாரணச்செய்யுள் முதலியவற்றின் முதற் குறிப்பகராதி.


| முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|
| அங்கண்மலர்த்தா | கஎ௦ |
| அங்கேழலர்நறுங் | கஉங |
| அஞ்சாதெதிர்மலைந் | ககூச |
| அஞ்சிறைவண்டறை | கஙகூ |
| அடிக்கண்ணதிருங் | ககூ௦ |
| அடிமேலகலிடமெ | ககூச |
| அடியோர்பாங்கினும் | உஎ௦ |
| அடிவண்ணந்தாமரை | சுஎ |
| அடுமலைபோல்களி | கஎசு |
| அணிநிறநீண்முடி | ருசு |
| அணிநிறமாப்பக | கசஎ |
| அண்ணனெடுந்தே | க௦க |
| அண்ணுந்தேந்திய | கசுக |
| ஷை | உ௦ங |
| அந்நாவிடத்து | கக௦ |
| அம்மவாழிகேளிர் | சுரு |
| அருஞ்சுரமிறந்த | கஎ௦ |
| அரும்புடைத்தொங் | எங |
| அருள்புரிநெஞ்சமோ | கஉரு |
| அரைதருமேகலை | க௦சு |
| அரையணங்குந்துகி | உசரு |
| அலைமன்னுபைங்க | கசுங |
| அலையார்கழன்மன்ன | சுங |
| அல்லகுறிப்படுதலு | உ௦ச |
| அவ்வியல்பல்லது | கஉச |
| அழிவிலர்முயலு | கசுங |
| அழுதுபுலம்பியுரையு | ககூங |
| அழுந்துபடுவிழுப்புண் | உஉச |
| அளிதோதானேநாணே | கருகூ |
| அளையாரரவின் | சுங |
| அறத்தொடுநிலையி | கசுகூ |
| அறநிலையொப்பே | ஙக |
| அறிந்தோரறனில | கருரு |
| அறையார்கழன் | உருச |
| ஷை | அஎ |
| அறைவாயதிர்கழல் | கஙசு |
| அன்புடைமாதர் | உகஎ |
| அன்பெதிர்ந்தாலும் | ககூஉ |
| அன்னம்புரையு | கசக |
| அன்னாய்நெருந | ககூஎ |
| ஆக்கியோன்பெயரே | ங |
| ஆடியவெறியு | உருக |
| ஆடியன்மாநெடுந் | கககூ |
| ஆணெடுந்தானையை | கூங |
| ஆமாறறிபவர்யாரே | எச |
| ஆமானனையமென் | உசுச |
| ஷை | உருங |
| ஆயிரமுகத்தா | க |
| ஆயுந்தமிழ்மன்னன் | கஅகூ |
| ஆய்கின்றதீந்தமிழ் | சுச |
| ஆருமணியிளம் | உஉக |
| ஆழிக்கடல்வையங் | கசஅ |
| ஆழித்திருமாலதிசயற் | உஉ௦ |
| ஆளையுஞ்சிறுங் | கசுஎ |
| இகலேபுரிந்தெதிர் | கஎசு |
| இடிக்குங்கேளிர் | சுசு |
| இடியார்முகிலுரு | உசுரு |
| இரவுக்குறியேயில் | கரு௦ |
| இரவுக்குறியொன் | கருஉ |
| இரவோரன்ன | எக |
| இருங்கழல்வானவ | ருங |

| முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|
| இருண்மன்னுமேக | ௨௨௩ |
| இருவிலங்காரண | ௫௯ |
| இருநெடுந்தோள | ௭௦ |
| இரும்பிழிமகாஅரிவ் | ௧௯௦ |
| இருவர்நூற்கு | ௧௭ |
| இலைசூழ்செங்காந்த | ௧௦௬ |
| இல்லாரிருமையு | ௨௨௨ |
| இல்லென்றிரவலர்க் | ௨௪௫ |
| இவளேகானநண்ணிய | ௧௨௧ |
| இவளேவின்னலதிலளே | ௧௬௨ |
| இழைவளர்பூணண்ண | ௧௨௧ |
| இருதுவிணந்தின் | ௨௨௯ |
| இனைத்தெனவறிந்த | ௯௭ |
| இன்பார்ப்பொடுங்க | ௨௧௭ |
| இன்னுயிர்கண்டறி | ௬௦ |
| ஈவோன்றன்மை | ௨ |
| உயிரினுஞ்சிறந்த | ௧௫௮ |
| உரவுங்கடல் | ௧௯௪ |
| உரிப்பொருளல்லன | ௨௭ |
| உருடங்குமாநெடு | ௧௯௨ |
| உருமினைநீள்கொடி | ௧௭௦ |
| உரையுறைதீந்தமிழ் | ௪௫ |
| உலகுடனிழற்றிய | ௨௧௮ |
| உலத்திற்பொலிந்த | ௨௫௭ |
| உலம்புனைதோண் | ௧௪௪ |
| உளங்கொண்டு | ௨௩௨ |
| உளமலையாமை | ௧௪௩ |
| உள்ளத்துணர்ச்சி | ௧௨௪ |
| உறுகற்புடைமை | ௧௨௯ |
| உற்றவரேநுமக் | ௧௨௧ |
| ஊனங்கடந்தவர் | ௨௨௨ |
| எங்கிலமருங்கிற் | ௨௭, ௫௨ |
| எப்பொருளைத்தன்மை | ௪௨ |
| எம்மூரல்லதூர் | ௧௬௪ |
| ஏலுவசிறு அரேமமுறு | ௬௪ |

| முதற்குறிப்பு | பக்கம். |
|---|---|
| எறித்தருகதிர்தாங்கி | ௧௬௮ |
| என்னுலிதுசெய்சென் | ௧௫௭ |
| என்னேரழியாவகை | ௧௪௩ |
| ஏனுமிகலுமழிந்து | ௧௫௩ |
| ஏமாண்சிலைநுத | ௧௨௯ |
| ஏரார்குழன்மட | ௧௩௭ |
| ஏனல்காவலிவளு | ௯௬ |
| ஏனையிரண்டு | ௯௭ |
| ஒண்டுவிநாராய் | ௧௮௮ |
| ஒண்முத்தவார்கழற் | ௧௬௪ |
| ஒப்புமுருவும் | ௨௨ |
| ஒருநாள்வாரலனிரு | ௧௦௭ |
| ஒளியார்திருநுத | ௧௩௭ |
| ஒன்றக்கருதா | ௫௭ |
| ஓங்கியவெண்குடை | ௧௨௯ |
| ஓங்கும்பெரும்புகழ் | ௧௦௨ |
| ஓதங்கடைந்த | ௧௯௫ |
| ஓதல்காவல்பகை | ௨௪௯ |
| கூடவரைகாதல | ௧௬௮ |
| கடவுட்கற்சுனை | ௧௩௧ |
| கடாவுநெடுந்தேர் | ௨௫௨ |
| கடிக்கண்ணிவேந்த | ௨௨௦ |
| கடித்தடம்விண்ட | ௬௮ |
| கடியாரிரும்பொழிற் | ௨௧௭ |
| கணிவிறவேங்கை | ௧௦௯ |
| கண்டார்மகிழுங் | ௬௭ |
| கண்டுகேட்டுண்டு | ௨௨௭ |
| கண்ணுற்றெதிர்ந்த | ௮௯ |
| கந்தாரடுகளியானை | ௯௪ |
| கந்தார்க்களிறுகடாய் | ௧௨௮ |
| கயவாய்மலர்போற் | ௨௧௭ |
| கயில்கொண்டவார் | ௧௪௭ |
| கருத்தண்புயல்வண் | ௨௫௪ |
| கலவாவயவர் | ௧௩ |
| கவிழ்மயிரெருத்திற் | ௧௭௦ |

| முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|
| கழலணிபோர்மன்னர் | கடுஅ |
| கழுதுகுருதிபடிய | ககக |
| களவினுட்டவிர்ச்சி | உ0சு |
| களிசேர்களிற்று | க0க |
| களிமன்னுவண்டு | எக |
| கறங்குவெள்ளருவி | ககடு |
| கறையின்மலிந்த | அஎ |
| கனஞ்சேர்முலை | கஉக |
| கன்னவிரோண் | உகசு |
| காடார்கருவரை | க0உ |
| காந்தண்முகையன்ன | ககரு |
| காந்தளம்போதெங் | கசஎ |
| காமர்கடும்புனல் | கரு0 |
| காரணிசோலை | ககஎ |
| காருமாலையுமுல்லை | உசு |
| காலங்களனே | ரு |
| காவியந்தண்டுறை | கருக |
| கானங்கோழி (குறுந்தொகை.) | உடுடு |
| குடையார்நிழலுறி | ககஎ |
| குணகடற்றிரையது | கருஎ |
| குழலிசையவண்டின | கஎசு |
| குழலெழீஇயாழெழீஇ | உஉசு |
| குறியதனிறுதி | கடு0 |
| குறும்புகுழிருக்கை | உசக |
| குன்றொத்தயானை | கடுசு |
| கூராரயில்கொண்டு | உடுடு |
| கூர்முண்முள்ளி | அ0 |
| கேளேபெருக்கு | உருக |
| கைந்நிலத்துக்கணை | கஉரு |
| கைம்மாப்புறவின் | உஉ0 |
| கையமைவேல் | ககஉ |
| கையேர்சிலைமன்ன | டுக |
| கொங்குதேர்வாழ்க்கை | டுசு |
| கொங்கைதளரினும் | கசுக |
| கொடியார்நெடுமதிற்-க0டு, | உடுரு |
| கொடுவிற்படை | ககஎ |
| கொற்றங்கயின்மன்ன | உஉக |
| கோடியநீள்புருவத்து | உருஅ |
| கோடரினீண்மதில் | எ0 |
| கோடன்மலர்ந்து | உசுஉ |
| கோவைக்குளிர்முத்த | உசுஉ |
| சான்றோர்வரவும் | கஎக |
| சான்றோர்வருந்திய | கஅ0 |
| சிலரும்பலருங் | கடுக |
| சிலைமாண்படை | அஅ |
| சிலைமிசைவைத்த | ககக |
| சிலையுடைவானவன் | க0சு |
| சிறியபைங்கட்களிறூர்ந் | கசுரு |
| சிறுவெள்ளரவினவ்வரிக் | சுசு |
| சிறைகாக்கும் | கஅக |
| சினமாண்கடற் | அஅ |
| சினமுமழிந்து | சுக |
| சினவேல்வலங் | டுக |
| சின்னுண்மறந்திலம் | கரு0 |
| சூழலும்வரிவண்டலம்ப | உருஉ |
| செங்களம்பட | கசு0 |
| செம்மைத்தனி | கசுக |
| செயப்படுபொருளை | கசுக |
| செயன்மன்னுமாவது | கசுரு |
| செருமால்கடற்படை | உசஎ |
| செலவினும்வரவினும் | கூஎ |
| செல்லாரவரென்றி | உடு0 |
| செல்வாரல்லரென் | உடு0 |
| செறிகழல்வானவன் | உகக |
| செறிகழல்வேந்த | கசுஎ |
| செறிந்தார்க்கருங் | கசு |
| சென்றார்வருவது | உசுக |
| சென்றுசெருமலைந் | கக0 |
| சென்றேயொழிக | உஉக |

| முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|
| சேயேயெனநின்ற | ௧௧௫ |
| சேலங்குளர்வயற் | ௫௭ |
| சொல்விற்சொல் | ௭௪ |
| தகரக்குழலாய் | ௨௨௪ |
| தங்கயல்வெள்ளொளி | ௨௧௮ |
| தண்டாதலர்கண்ணி | ௬௯ |
| தண்டேனறைநறும் | ௬௫ |
| தந்திரஞ்சூத்திரம் | ௧௬ |
| தந்தை தாயே | ௧௫௪ |
| தம்மீறுதிரிதலும் | ௧௩௫ |
| தருசொல்வருசொ | ௯௭ |
| தலைப்புணைக்கொளினே | ௧0௨ |
| தனியார் தகைநலம் | ௨௩௨ |
| தன்கோணிறீஇ | ௧௭ |
| தன்போற்சினத்துரு | ௧௯௬ |
| தன்னும்புரையுமழை | ௮௮ |
| தாக்கியபோர்வய | ௨௧௪ |
| தாதலர்நீண்முடி | ௧௮௮ |
| தாளைவணங்காதவர் | ௧௭௧ |
| திணிநிறநீடோளரசுக | ௫௭ |
| திண்டேர்வயமன்னர் | ௧௧௪ |
| திண்பூமுகநெடு | ௯௫ |
| திண்போரரசரை | ௧௨௮ |
| திருநெடுங்கோதை | ௨௫௪ |
| திருமாமுகந்திங்கள் | ௬௮ |
| திருமாலகலஞ்செஞ் | ௯௨ |
| திரைப்பாலிரும்புனற் | ௧௬௫ |
| திரையார்குருதி | ௧௬௩ |
| திரையுறைவார் | ௭௨ |
| திளையாவெதிர் | ௧௧௬ |
| துடியாரிடைவடி | ௧௨௨ |
| துளியுந்துறந்த | ௨௪௭ |
| துறைமேய்வலம்புரி | ௭0 |
| துனிதானகலமண் | ௭௫ |
| தூவுண்டைவண்டினங் | ௫௩ |
| தெம்மாண்பழிந்து | ௧0௬ |
| தெவ்வாயெதிர்நின்ற | ௬௩ |
| தெய்வமுணுவே | ௨௫ |
| தேக்கியதெண்டிரை | ௨௧௩ |
| தேந்தண்பொழிலணி | ௭௪ |
| தேயத்தவருயிரை | ௬0 |
| தேர்மன்னுதானை | ௭௫ |
| தேர்மன்னுவாட்படை | ௯௧ |
| தேற்றமில்லாத | ௫௪ |
| தேற்றம்வினாவே | ௫0 |
| தேனக்கதாரவர்காண் | ௨௨௩ |
| தேனிறவார்கண்ணி | ௨௫௮ |
| தேனுறைபூங்கண்ணி | ௭௧ |
| தொகுத்தல்விரித்த | ௫ |
| தொடுத்தான்மலரு | ௧௯௮ |
| தொழித்தார்சிறை | ௨௩௧ |
| தொல்கவின்றொலைய | ௪௭௫ |
| தோள்வாய்மணிநிற | ௧௯௩ |
| நகுவாயனபல | ௧௬௭ |
| நடுவணைந்திணை | ௨௩ |
| நடுவுநிலைத்திணையே | ௨௪ |
| நடைமன்னுமென்றெம்மை | ௧௨0 |
| நடையாலிதுவென்று | ௧௭௯ |
| நண்ணியபோர்மன்னர் | ௧0௫ |
| நலம்புரிதெய்வமன்னாய் | ௧௫௭ |
| நளிமுத்தவெண்மணன் | ௧௬௫ |
| நனைமுதிர்ஞாழற் | ௧௬௨ |
| நன்றுசெய்தாமல்ல | ௧௪௪ |
| நாணவுநடுங்கவு | ௯௪ |
| நிணங்கொள் | ௬௮ |
| நீதியின்கிழவனிலமகள், | ௮௭ |
| நிரந்தாங்கெதிர் | ௨௩௯ |
| நிழலார்குடையொடு | ௪௬௬ |

| முதற்குறிப்பு. | பக்கம். | முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|---|
| வினைப்பரும்புண்ணிய | கசுசு | பலராயெதிர்வின்று | கருரு |
| வின்றாங்கெதிர்ந்தார் | கசுச | பள்ளத்துநீலம்பறிந்தலே | உசுரு |
| நீடியபூந்தண் | சுஉ | பறைவாயொலியோதம் | ககூசு |
| நீடுநீர்க்கானனெருநலு | கஉஉ | பனியெதிர்பருவமு | உச |
| நீயுமிவளுமின்றே | கசுச | பன்னியதீந்தமிழ் | க0ரு |
| நீரணிவேலிநெடுங் | சருசு | பாடுஞ்சிறைவண்ட | க0எ |
| நீரறவறந்தவிரம்பா | உருஉ | பாணன்கூத்தன்விறலி | உசு0 |
| நீரின்மலிந்தசெவ் | அஎ | பாமாண்டமிழுடை | க0ரு |
| நீர்வண்ணன்வெண் | கசஉ | பாயப்புரவி கடாய் | கசு0 |
| நீவிரிகோதையிங்கே | கருக | பார்ப்பான் பாங்கன் | உருக |
| நுண்ணறிவுடையோ | கருஎ | பார்மன்னன்செங் | உருரு |
| நும்மனைச்சிலம்பு | கஎஉ | பாவடியானைப் | சசு |
| நூலெனப்படுவது-பொ | கஎ | பாவணையின்றமிழ் | ருஎ |
| நூலெனப்படுவது-கா | கஅ | பாவுற்ற தீந்தமிழ் | கஉஉ |
| நெய்ங்வின்றவேனெடு | ககூஎ | பின்பனிதானு | உச |
| நெய்யொன்றவேனெடு | கசரு | புட்புலம்பும்புனற் | கஉ0 |
| நெருங்கடல்வேல் | கசுஅ | புணர்தல்பிரிதல் | உஅ |
| நெருநலுமுன்னாள் | கஉ0 | புணர்துணையோ | க0எ |
| நெறிநீரிருங்கழி | கககூ | புண்டாமருவிறத்து | கூஉ |
| நேர்ந்தநங் காதலர் | கூ0 | புரிந்தமெல்லோதி | உககூ |
| பகற்குறிப்புணர்வுகள் | கருக | புரிவளைவான்கோடு | உருரு |
| பகுவாய்வரா அற் | ருகூ, கூஎ | புரைத்தாரமர் செய்து | ககஅ |
| பங்கயப்பூம்புனலு | உகூ0 | புலமுற்றுந்தண்புய | உருச |
| படந்தாழ்பனைமுக | உஉகூ | புல்லாவயவர்நறையா | ககூ |
| படலேறியமதின் | க00 | புன்கண்கூர்மாலைப் | கஅக |
| படலைப்பனிமலர்த் | உகசு | புன்னைநனைப்பினும் | ககூசு |
| பட்டாரகலல்குற் | உககூ | பூட்டியமாநெடுந் | ககஅ |
| பணிகொண்டுவாழா | சகூகூ | பூவின்றவேன்மன்னன் | ககூசு |
| பண்குடைசொல்லி | ககூஉ | பூப்புமுதன்முந்நாட் | உகூஎ |
| பண்டானனைய-கூபய | கசுகூ | பூமருகண்ணிணை | சரு |
| பண்டானனைய-பரி | உசுக | பூரித்தமென்முலை | உருஉ |
| பண்டோர்சிறைவண் | உஉ0 | பூவலர்தண்பொழிற் | ககூ |
| பண்டிப்புனத்துப் | கூச | பெயர்த்தனென்முயங்க | கசுரு |
| பண்ணிவிர்சொல்லி | ககூஅ | பெரிடவிலைமை | எ0 |
| பலமன்னுபுள்ளினம் | க0க | பெருநன்றாற்றிற் | கசுஉ |

| முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|
| பெரும்பான்மையுமறி | எரு |
| பைந்நின்றவாடர | கசச |
| பையுண்மாலைப்பழு | கூஉ |
| பொய்தலைவைத்த | ககூரு |
| பொய்ம்மையும் வாய்மை | கஅசு |
| பொருங்கண்ணி-மே | கூO |
| பொருங்கண்ணி-தே | கசச |
| பொருங்கழல் | ருச |
| பொருங்கழன்மாறன் | கசக |
| பொருடானெனை | கருரு |
| பொருதிவ்வுலகமெ | கூச |
| பொருந்தியபூந்தண் | கூரு |
| பொருநெடுந்தானை-போர் | கOO |
| பொருநெடுந்தானை-பூ | சுரு |
| பொருமாமணிமுடி | கசO |
| பொரும்பாரரசரை | கOசு |
| பொருளதுபுரைவே | ருஉ |
| பொருள்வயிற்பிரியி | உசஅ |
| பொறிகெழுகெண்டை | ககசு |
| பொன்றாவிரிபுகழ் | கOஎ |
| பொன்றான்பயப்பித்து | ககூசு |
| பொன்னனங்கீர் | கருக |
| பொன்னயர்வேங்கை | ககஎ |
| பொன்னார்புனலணி | உருஅ |
| பொன்னார்புனைசழற் | ருசு |
| போர்மலிதெவ்வரை | கருசு |
| மஞ்சாரிரும்பொழில் | உருகூ |
| மடையார்குவளை | உஉக |
| மணங்கமழ்குழலி | எO |
| மண்கொண்டுவாழ | சுரு |
| மண்டானிறைந்த | கூரு |
| மண்ணிவர்செங்கோல் | ககரு |
| மருந்தெனின் | உசஎ |
| மருள்போற்சிறைவண்டு | சருகூ |
| மழைகெழுகார்வண் | கசுரு |
| மழையும்புரைவண் | கூரு |
| மழைவளர்தருஉ | ருரு |
| மன்னன்வரோதயன் | ககசு |
| மன்னேந்தியபுகழ் | உஉஉ |
| மாயோன்மேய | உச |
| மால்புரையானை | கருஎ |
| மாவுங்களிறுமணி | ககூO |
| மாவெனமடலூ | கOO |
| மானக்கடுஞ்சிலை | உசுரு |
| மிடைமணிப்பூண் | உஉகூ |
| மின்கண்படாவடி | கஅகூ |
| மின்றானையவிளங் | கஎரு |
| மின்னிற்பொலிந்த | ருசு |
| மின்னேரொளிமுத்த | எக |
| மின்னைமறைத்த | ககச |
| முடியுடைவேந்தரு | அகூ |
| முதலெனப்படுவது | உரு |
| முதல்கருவுரிப்பொரு | உரு |
| முதல்வழிசார்பென | கசு |
| முதல்வனூற்குப் | கசு |
| முதனிலையெண்ணி | உகூ |
| முருகயர்ந்துவந்த | கருO |
| முளிதருவேனற் | உசுஉ |
| முற்படப்புணராத | ரு |
| முற்படுபுணர்ச்சி | ககO |
| மூன்றானுறத்தாவடி | உஉO |
| மூன்றான் முகிழ்முலையார் | உஉக |
| முன்னுந்தொழ | கூரு |
| முன்னைத்தஞ்சிற்றின் | கஉஉ |
| முன்னோர் நூலின் | கசு |
| மெல்லியலாய்நங் | உருரு |
| மென்முலைவீழினு | கசுக |
| மேயினதம்படை | கசக |
| மேவியொன்றுரை | எஉ |

# முதற்குறிப்பகராதி.


| முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|
| மைதானிலாத தங்கல்வி | ௨௧௨ |
| மையார் தடங்கண் வரும் | ௨௪௭ |
| மையார் தடங்கண்மடங் | ௨௫௯ |
| மையேறிய பொழின் | ௧௭௧ |
| மைவாரிரும் பொழில் | ௨௨௮ |
| வடக்குந் தெற்கும் | ௪ |
| வடவேங்கடந்தென் | ௪ |
| வண்டாரிரும் பொழில் | ௧௯௦ |
| வண்டுந்தும்பியும் | ௧௪௮ |
| வண்டுறைவார்பொழில் | ௬௯ |
| வண்ணமலர் | ௯௬ |
| வந்தணங்காமன்னர் | ௧௪௬ |
| வரியவண்டார் | ௨௪௨ |
| வருநெடுங்கங்கு | ௨௨௯ |
| வருமால்புயல்வண் | ௮௮ |
| வருவர்வயங்கிழாய் | ௨௬௧ |
| வல்லிச்சிறுமருங் | ௬௭ |
| வன்றாட்களிறு | ௬௬ |
| வார்[illegible] | ௨௯௪ |
| வாமானெடுந்தேர் | ௨௯௬ |
| வாரணங்குங்கழல் | ௧௯௧ |
| வாரார்சிறுபறைபூண்டு | ௨௨௯ |
| வாரார்முரசின்விரை | ௨௧௫ |
| வாருந்துடைபங்கழற் | ௧௯௦ |
| வார்ந்தார் கருமென் | ௨௯௧ |
| வானலங்கொண்ட | ௨௯௯ |
| வானுடையான்முடி | ௧௪௯ |
| விடக்கொன்று | ௨௫௫ |
| விண்டலங்கெஃகொடு | ௬௫ |
| விண்டார்படவிழி | ௬௫ |
| விண்டுறைதெவ்வர் | ௨௯௯ |
| விண்டோயெதிர்ந்த | ௫௪ |
| விரைதங்கு நீண்முடி | ௨௨௨ |
| விரையாடிய கண்ணி | ௯௦ |
| விரைவளர் வேங்கை | ௧௦௯ |
| வில்லவன்றனை | ௧௬௬ |
| வில்லான்விறலடி | ௧௬௬ |
| வில்லோன்காலன | ௧௬௬ |
| விழைவுவிடுத்தவிழுமி | ௧௪௮ |
| விளம்பழங்கமழுங் | ௧௬௦ |
| விளைக்கின்றபல்புகழ் | ௧௪௮ |
| விற்றுனெழுதிப்புருவ | ௧௦௨ |
| வினையினீங்கி | ௧௬ |
| வெஞ்சுடர் நோக்கு | ௨௪௦ |
| வெந்நீரருஞ்சுரங் | ௧௬௮ |
| வெல்லுந்திறனினைந் | ௮௮ |
| வெள்ளாங்குருகின் | ௧௦௧ |
| வெள்ளிவிழுத்(அகம்-௨௮௬) | ௧௪௫ |
| வெறிதருபூந்தார் | ௨௪௧ |
| வென்றேகளித்த | ௨௧௮ |
| வேடகஞ் சேர்ந்த | ௧௬௫ |
| வேண்டிய வேண்டியாங் | ௧௪ |
| வேயும் புரையுமென் | ௧௫௪ |
| வேரித்தடந்தொங்க | ௧௨௯ |
| வேலைத் துளைத்தகண் | ௧௫௬ |
| வேழம் வினவுதிர் | ௧௨௨ |
| வேறுமெனவின் | ௪௯ |
| வேற்றுமைத்தொகை | ௫௧ |
| வேனக நீண்டகண் | ௧௨௨ |
| வைகுறுவிடியன் | ௨௪ |


---


ரீட் அண்ட் சம்பெனி 'கிச்சினர்' அச்சுக்கூடத்திலும், தாம்ஸன் கம்பெனி 'மினெர்வா' அச்சுக்கூடத்திலும் பதிப்பிக்கப்பட்டது.